# இளங்கதிர்

2014 - 2015



43வது இதழ்

தமிழ்ச்சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கக்கீதம்

புகழ் திகழ் தமிழ்மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலை விளக்காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன் பிள்ளைகள் போல்
சமத்துவமாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குலநெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க் கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மானிடம் போற்றிட வளர்க!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண்டிலங்கி மிளிர்க
இளம்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடு வுயர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க!

மெட்டு: "ஜன கன மன" எனும் இந்தியத் தேசிய கீதம்
ஆக்கம்: சக்திதாசன் (அக்கரைச்சந்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிர்

## 2014 - 2015

43வது இதழ் 2015

"தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

**இதழாசிரியர்கள்**

**செ.பிறைசில்**

**உ.நிவேதிகா**



**வெளியீடு**

**தமிழ்ச்சங்கம்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

*2014 / 2015*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **நூல்** | : | இளங்கதிர் 2015 |
| **இதழாசிரியர்கள்** | : | செ.பிறைசில் (கலைப்பீடம்)<br>உ.நிவேதிகா (விலங்கு மருத்துவ விஞ்ஞானப்பீடம்) |
| **வெளியீடு** | : | தமிழ்ச்சங்கம் (2014/2015)<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| **பிரதிகள்** | : | 150 |
| **இதழ் வடிவமைப்பு** | : | டைனமிக் அச்சகம்<br>238, பேராதனை வீதி, கண்டி |
| **அச்சுப்பதிப்பு** | : | டைனமிக் அச்சகம்<br>238, பேராதனை வீதி, கண்டி |
| **முன்அட்டை வடிவமைப்பு** | : | கனிவுமதி |

---

| | | |
|---|---|---|
| **Title** | : | Ilangathir 2015 |
| **Editors** | : | S.Braisil<br>U.Nivethika |
| **Published by** | : | Tamil Sangam (2014/2015)<br>University of Peradeniya,<br>Peradeniya. |
| **Copies** | : | 150 |
| **Page Design** | : | Dynamic Printers<br>238, Peradeniya Road, Peradeniya. |
| **Printed by** | : | Dynamic Printers<br>238, Peradeniya Road, Peradeniya. |
| **Front cover Design** | : | Kanivumathi |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ILANGATHIR
## 2014 - 2015

Editors

**S. Braisil**

**U.Nivethika**



**Published by:**

Tamil Sangam

University of Peradeniya

2014/2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Vice – Chancellor
# University of Peradeniya

It is with please that I extend my good wishes to the Tamil Society on the issue of its magazine **"Ilankathir – 2015".**

Tamil society has a long history that was constituted during the era of the university college. The society offers diverse cultural activities to its members and those interested have opportunities to share their views and opinions on matters of interest.

I strongly believe that the articles and creative writings published in this magazine by Tamil speaking staff and students have immensely added to preserve its cultural heritage in our country.

I earnestly hops that the experience gained by actively participating in social and cultural events will immensely help when you step – in to broader society.

I take this opportunity to congratulate members of the Tamil Society for making tremendous efforts towards the success of **"Ilankathir – 2015".**

**Prof. Upul .B. Dissanayake**
Vice – Chancellor
University of Peradeniya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான இளங்கதிரின் 43வது இதழுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது தமிழ்ச் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றிலே நீண்டதோர் வரலாற்றுத் தடத்தைப் பதித்த சங்கமாகும். இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வதியும் பல அறிஞர்களின் பங்களிப்பு இதற்குக் காலம் தோறும் இருந்து வந்ததை சகலரும் அறிவர். இன்று இலங்கையில் பல்கலைக்கழகங்கள் கிளைத்துவிட்டன. அவற்றில் பல தமிழ்ச்சங்கங்களும் உருவாகி இயங்கிவருகின்றன. எனினும் தாய்ச் சங்கமான எமது சங்கம் இன்றுவரையும் தன்னுடைய தனித்துவ அடையாளத்தை இழந்துவிடாமல் இயங்கிவருவது பெருமைக்குரிய விடயமாகும். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கற்ற சகல வித்தியார்த்திகளும் இதனை நினைத்துப் பெருமைப்படலாம்.

தமிழ்ச் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்பேசும் மாணவர்களை ஒன்றிணைக்கின்ற சங்கமாகவும், அவர்களுடைய தனித்துவமான ஆளுமைகளுக்குக் களமமைத்துக் கொடுக்கின்ற சங்கமாகவும் இயங்கிவருவது மகிழ்ச்சிக்குரியது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழல்களில்க்கூட தமிழ்ச்சங்கம் தன்னுடைய இயங்குவிசையை நிறுத்திக் கொள்ளவில்லை, தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டது என்பதை இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

வழமைபோலவே இம்முறையும் இவ்விதழ் புதிய மெருகுடனும், புதுப்பொலிவுடனும் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆக்கங்களைத் தாங்கி வருகின்ற இவ்விதழ் ஏனைய இதழ்களைப்போலவே காலக்கண்ணாடியாகவும், உசாத்துணை நூலாகவும் விளங்கவேண்டும் என்பது எனது பெருவிருப்பு. இறுதியாக இந்த இடத்தில், இச்செயற்பாடுகளுக்கு எல்லாம் அச்சாணியாக இருந்த 2014-2015 செயற்குழுவின் மகத்தான சேவையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குப் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**"காலம் நம்மைக் கடந்துதான் செல்லும், நாம் அந்த ஓட்டத்தில் ஏதோவொரு புள்ளியில் மடைமாற்றிகளாக இருக்கப் பழகிக்கொள்ளுவோம்."**

**பேராசிரியர் வ.மகேஸ்வரன்,**
**பெருந்தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

தமிழ்ச் சங்கத்தின் 43வது இளங்கதிர் இதழுக்கு இவ்வருடம் பெரும் பொருளாளராக இருந்து வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் பேசும் மாணவர்கள் இந்து மாணவர் சங்கமூடாகவும், தமிழ்ச் சங்கமூடாகவும், முஸ்லீம் மஜ்லித்தூடாகவும் தமது சமயம் மற்றும் மொழி சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். பல்கலைக்கழக வளாகத்தில் இயங்குகின்ற ஏனைய சங்கங்களைவிட தமிழ்ச் சங்கம் உயிர்ப்புடன் இயங்குவது யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழகத்தின் உள்ளேயே உடனுறைந்து கற்கின்ற வசதிகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருப்பதால் இங்கிருக்கும் மாணவர்களை முன்னிறுத்திப் பல நிகழ்வுகளை ஒழுங்குசெய்ய முடிகின்றது. இது ஏனைய பல்கலைக்கழகங்களுக்குக் கிடைக்காத சிறப்பான பேறாகும்.

2014-2015 தமிழ்ச் சங்கச் செயற்குழு தமது இடையறாத முயற்சிகளினால் பல்வேறு நிகழ்வுகளைப் பல்கைலைக்கழகத்திலும் அதற்கு வெளியிலும் நிகழ்த்தியதோடு மட்டுமல்லாது, இவ்வருடத்துக்கான இளங்கதிரையும் சிறப்பாக வெளிக்கொண்டு வருகின்றது. அந்தவகையில் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகள் மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. வ.தர்மதாசன்,**
**பெரும்பொருளாளர்,**
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் வாழ்த்துச்செய்தி

உலகம் போற்றும் தமிழ் மொழியை தாய் மொழியாகக்கொண்ட நாம் அதனை மகத்துவம் குன்றாமல் வாழ வைக்க கடமைப்பட்ட தனயர்கள் ஆவோம். அவ்வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற பயில வந்த நாம் தமிழ் அன்னைக்கு அணிகள் சேர்ப்பதற்கு ஆதாரமாய் அமைந்ததே எங்கள் பேராதனைத் தமிழ்ச்சங்கமாகும். மொழிகளில் மூத்ததாக தமிழ் அமைந்தது போலவே பல்கலைக்கழக தமிழ்ச் சங்கங்களில் மூத்ததாய் அமைந்தது எங்கள் தமிழ்ச்சங்கம்.

இளைஞர்கள் மத்தியில் இயல்பாய் ஊறும் அழகியல் உணர்வுகளை கலைத்துவம் எனும் அச்சில் வார்த்து வெளிப்படுத்திய அணிகளான கதை, கவிதை, நாடகம், நாட்டியம், இசை எனும் இவைகளை எங்கள் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தமிழ்த்தாய்க்கு அணிவிப்பதை ஆவணப்படுத்துவதே எமது சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான இளங்கதிரின் தலையாய கடமையாகும்.

இந்த முயற்சியினூடாக மாணவச் செல்வங்களின் கலைத்திறன்கள் வெளிப்படுவது மட்டும் அல்ல, முதல், இடை, கடை என மூவகைச்சங்கம் அமைத்து மூதாதையர் வளர்த்த தமிழ் அன்னையும் இறும்பூது எய்துகிறாள்.

பண்பட்ட நடத்தைக் கோலங்களுக்கு ஆதாரமாக இருப்பது கல்வி, கலை, கலாசாரம் என்பனவாகும். இவ்வகையில் எமது சமூகம் உலகம் போற்றத்தக்க வகையில் வளம் பெறுவதற்கு எங்களது சிறிய பங்களிப்பாக இச்சஞ்சிகை மிளிர்வதில் பெருமைப்படுகின்றோம்.

**அ. சஞ்சீவன்**
**தலைவர்**
**தமிழ்ச் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செயலாளரின் உள்ளத்திலிருந்து......

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் மிக நீண்ட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொன்டிருப்பது அனைவரும் அறிந்ததே. இத்தமிழ்ச்சங்கமானது கலைவளர்ச்சிக்கும், இலக்கிய செயற்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பினை ஆற்றிவருகின்றது. அவ்வகையில் வருடாந்தம் வெளிவரும் தமிழ்ச்சங்கத்தின் இளங்கதிர் 43வது மலராக வெளியிடுவதையிட்டு பெருமகிழ்சியடைகின்றேன்.

மேலும் இவ்இதழானது பல்கலைக்கழக மாணவர்களின் தனித்துவத்தையும், திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதற்கான களமாக இருக்கின்றது. அத்துடன் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்களுக்கான ஒரு தளமாகவும் திகழ்கின்றது. இதன் மூலம் அவர்களது திறமைகள் அடையாளம் காணப்படுவது மட்டுமல்லாது அவர்களது சிந்தனை வளர்ச்சியைத் தூண்டுவதாயும் இவ்இளங்கதிர் அமைந்துள்ளது.

இவ்இளங்கதிரானது அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் ஆக்கங்களைக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அவ்வகையில் தமிழ், அரசியல், சமூகவியல், மெய்யியல், மருத்துவம், வரலாறு சார்ந்த ஆக்கங்கள் வெளிவருவதனால் பெறுமதியானதும், முக்கியமான எழுத்தாவணமாயும் மிளிர்கின்றது.

இவ்வகையில் இவ்வருடம் இளங்கதிர் மலரை வெளியிட முடிந்தமைக்காக இறைவனுக்கு நன்றிகூறி, தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர், பெரும் பொருளாளர், கணக்காய்வாளர், குறிப்பாக இதழாசிரியர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கும், ஏனைய வழிகளில் உதவியோருக்கும் எனது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ம.கஜநேசன்**
**செயலாளர்**
**தமிழ்ச் சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளம் பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

உலக செம்மொழிகளுள் ஒன்றாகிய எம் தமிழ் மொழியின் முத்தமிழ்களாம் இயல் இசை நாடகம் எனும் முத்தமிழை வளர்த்துவரும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது தமிழ்ச் சங்கம் காலத்திற்கேற்றால்போல் தமிழையும், தமிழர்தம் பண்பாடு, கலை கலாச்சார இலக்கிய விழுமியங்களையும் பல தடைகளைத் தகர்த்தெறிந்து கட்டிக்காத்து வருகின்றது. அத்துடன் ஆண்டு தோறும் பலவகையான இலக்கிய நாட்டிய பெருவிழாக்களை வேறு வேறு மாவட்டங்களில் நடாத்தி எமது சங்கத்தின் பெருமையை பறைசாற்றி வருகின்ற விதத்தை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். இவ்வகையில் இவ்வாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலையிலே இவ் நிகழ்வை நடாத்தி எமது சங்கம் அங்கு தன்னைத் தடம்பதித்துக் கொண்டது. இதற்காக உழைத்த அத்தனை உள்ளங்களிற்கும் நன்றி பகிர்கின்றேன்.

எமது சங்கத்தின் பெருமையை விழம்பி நிற்கும் " இளங்கதிர்" இதழானது எமது பல்கலைக்கழகத்தின் பெருந்தகைகளான பேராசிரியர்களினதும், மாணவர்களினதும் படைப்புக்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. இவ் இதழ் வெளியீட்டிற்கான உதவிகளையும், நிதி உதவிகளையும் வழங்கிய விரிவுரையாளர்கள், மாணவர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கலை மீது பற்றுக்கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**த.திருவரன்**<br>**இளம் பொருளாளர்,**<br>**தமிழ்ச் சங்கம்,**<br>**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## "தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு"

வாசக உள்ளங்களுக்கு வணக்கம்........

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பழமைச் சிறப்பும், புதுமைச் செழிப்பும் மிக்கது. காலங்காலமாக அறிவுப்பயிர் வளர்க்கவரும் மாணவர்கள் மத்தியில் கலை விதை தூவ அவாக்கொண்டு நின்றது, நிற்பது. இயல், இசை, நாடகம் என முன்னோர் வளர்த்த முத்தமிழை வளர்க்கும் இத்தாய் தமிழ்ச்சங்கத்தின் இயல்சார் அறுவடையாக, சங்கத்தின் நாதமாக ஆண்டு தோறும் இளங்கதிர் இதழ் வெளிவருகின்றது. அவ்வாறே இவ்வாண்டும் இளங்கதிரை புதுப்பொலிவுடன் உங்கள் கரங்களில் தவழச்செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேம்.

**இளங்கதிரின் களம்**

இன்று பருவகாலச் செயற்பாடுகளுக்கு (Semester) மத்தியில் தமிழ்ச்சங்கத்தின் செயற்பாடுகளைப் பலர் கவனக்கலைப்பான்களாகக் கருதமுனைகின்றனர். ஒரு மனிதன் எழுதும், வாசிக்கும் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதிலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவை அவசியமானவை. நவீன தொழில்நுட்ப முறைகளும், கருவிகளும் இவ்வாற்றல்களை மழுங்கடித்து வருகின்றன. இச்சூழலிலேயே இவ்வாற்றல்களை வளர்க்கவும், மெருகூட்டவும் இளங்கதிர் களம் அமைத்துக் கொடுக்கின்றது. எழுதுபவன் எழுதிக்கொண்டே இருக்க அதை வாசிப்பவர்கள் எத்தனை பேர் என்ற வினாவைத் தாண்டி தனக்குரிய வாசகர் வட்டத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றது.

**தமிழியல் சஞ்சிகை**

இளங்கதிர் வெறுமனே ஓர் இலக்கியச் சஞ்சிகையல்ல இது ஒரு தமிழியற் சஞ்சிகையாகும். தமிழியல் என்ற பதம் கடந்த சில தசாப்தங்களாக ஆய்வுலகில் பரீச்சயமாகியுள்ளது. ஆய்வுலகில் ஏற்பட்டுள்ள புதிய பரிமாணங்களையும், அணுகுமுறைகளையம், நோக்கு நிலைகளையும் சுட்டும் வகையில் இப்பதம் அமைந்துள்ளது. தமிழ் ஆய்வு என்பது வெறுமனே இலக்கியம், இலக்கணம், மொழிவரலாறு, தருக்கம், முதலியவற்றுடன் நின்றுவிடாது தமிழுடன் தொடர்புடைய உளவியல், பொருளியல், தொல்பொருளியல், வரலாறு, அரசியல், புவியியல், மானிடவியல், சமூகவியல், மொழியியல், நாட்டாரியல் முதலிய துறைகளையும் உள்ளடக்கி நிற்கின்றது. இவை ஒருங்கிணையும் போதே தமிழியல் செழித்தோங்க முடியும் என்பார்கள். எனவே இவ்விதழும் அனைத்துத்துறைகளையும் தாங்கி வருவதை நாம் உறுதிசெய்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுநிலையும் ஆற்றலை வளர்த்தலும்**

ஒற்றுமையீனம், அசமந்தப்போக்கு, சாதாரண மேடை நிகழ்ச்சிகளை ரசிக்கும் பாங்கு குறைவு மற்றும் எம் மாணவர் மத்தியில் உள்ள பலவகைப்பட்ட அரசியல், சமுதாயக் கண்ணோட்டங்களுக்கிடையிலே நடுநிலை வகிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. இது ஒரு மொழிவழிச் சங்கம் என்பதால் அதன் இதழை தனியொரு சாராரின் இதழாக்கிவிட முடியாது. சுபீட்சமான நல்லுறவே இதன் நோக்கம் என்பதைப் பலமுறை எண்ணவேண்டியுள்ளது. இதனால் முடிந்தளவு நடுநிலையுடனும், மாணவர்களின் ஆர்வத்தை தூண்டக் கூடியவாறும், அவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்குடனும் ஆக்கங்களை இணைத்துள்ளோம்.

**நாடகப் பாரம்பரியம்**

தமிழ்ச் சங்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து தொடர்ந்து இயங்கிய ஆண்டுகள் அனைத்தும் நாடகவிழா அல்லது நாடகங்கள் அரங்கேறி வந்துள்ளன. அது தமிழ்ச் சங்கப் பாரம்பரியமும் ஆகும். சில ஆண்டுகளாக நடைபெறாத நாடகவிழா இம்முறை மீண்டும் இடம்பெற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. இது எதிர்காலத்திலும் தொடரவேண்டும். இளங்கதிர் வெளிவர ஆரம்பித்த ஆண்டில் அதாவது அதன் முதலாவது இதழில் அவ்வாண்டு மேடையேற்றப்பட்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் "பொருளோ பொருள்" என்ற நாடகம் பற்றிய கருத்துரை அவ்விதழில் இடம் பெற்றுள்ளதை அவதானிக்கமுடிகிறது. அவ்வாறே ஆண்டுதோறும் இடம்பெறும் நாடகங்கள் பற்றிய கருத்துரைகளை அந்நாடக ஆசிரியர்கள் அல்லது வேறு யாராவது இளங்கதிரில் எழுதினால் அது பேராதனை நாடக வரலாற்றையும், தமிழ்ச் சங்கத்தின் நாடகத்துக்கான பங்களிப்பையும் எடுத்துக்காட்டுவதாகவும், வரலாற்றுப் பதிவாகவும் அமையும் இவ்வாண்டு இடம்பெற்ற நாடகவிழாவின் கருத்துரையை இணைக்கமுடியாவிடினும் வெற்றி பெற்ற நாடகங்கள் தொடர்பான தகவல்களை இணைத்துள்ளோம்.

**இளங்கதிரின் தரம்**

காலங்காலமாக இளங்கதிர் உசாத்துணை நூலாக பலருக்கும் உதவி வந்துள்ளது. பேராதனையின் மிகச்சிறந்த அறிவுற்பத்திகள் அனைவரினதும் ஆரம்ப படைப்புகளும் எழுத்துக்களும் இளங்கதிரின் ஊடாகவே வெளிவந்துள்ளன. அவர்கள் நாடறிந்த உலகறிந்த அறிஞர்களான பின்பும் இளங்கதிரில் எழுதிவந்துள்ளனர், எழுதிவருகின்றனர். இதனால் இளங்கதிரின் தரநிலையில் பெரும்பாலும் குறைவு ஏற்படுவதில்லை. ஆயினும் சில ஆண்டுகள் நாட்டின் சூழல் இளங்கதிரை பாதித்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சங்கத்தின் நீண்ட வரலாற்றில் சங்கம் துடிப்புடன் இயங்கிய காலப்பகுதிகளில் வெளிவந்த இளங்கதிர்களும் சிறப்பாகவே வெளிவந்துள்ளன. இவ்வருடம் ஒரு கனதியான இளங்கதிரை வெளியிடும் மனநிறைவு எமக்குண்டு. சென்ற வருடமும் இளங்கதிர் சிறப்பாகவே வெளிவந்தது. இதற்குக் காரணம் சில ஆண்டுகளாக தமிழ்ச்சங்கம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றமையும், தமிழறிந்த பெரியோர்கள் எமக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் ஆதரவும் ஆகும். ஆகவே இதற்குக் காரணமாக அமைந்த அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**இளங்கதிரின் நன்றிகள்**

எமது விருப்பங்களை அறிந்து எம்மை ஊக்கப்படுத்தி, பல்வேறு ஆலோசனைகள் தந்து, தமது அனுபவ அறிவால் வழிநடத்தி இளங்கதிரை சிறப்பாகச் செயல்வடிவம் பெறச்செய்த தமிழ்ச்சங்க பெருந்தலைவர் பேராசிரியர். வ. மகேஸ்வரன் அவர்களுக்கு எங்கள் முதல் நன்றிகள். அத்துடன் தமிழ்ச் சங்கத்துடன் எப்போதும் இணைந்திருந்து செயற்படும் விரிவுரையாளர்களுக்கும், இளங்கதிர் இதழின் தரம் தொடர்பாக தொடர்ந்து ஆலோசனை தந்த விரிவுரையாளர் செ. சுதர்சன் அவர்களுக்கும், மாணவர்களின் ஆக்கங்களைத் தெரிவுசெய்து தந்த உதவி விரிவுரையாளர் பா.சுமன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். தமிழ்ச்சங்கத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளுக்கு நடுவர்களாகச் செயல்பட்ட விரிவுரையாளர் செ. சுதர்சன் மற்றும் உதவி விரிவுரையாளர்களான பா. சுமன், செல்வி. றிஸ்மியா, செல்வி. ஜஸ்மினா ஆகியோருக்கும் மேலும் குறிஞ்சிச் சாரல் நிகழ்வுக்கான நாடகத்தை நெறிப்படுத்திய தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி ஆன் யாழினி சதீஸ்வரன் அவர்களுக்கும் செயற்குழு சார்பில் நன்றிகள்.

**இளங்கதிரின் கட்டமைப்பு**

இவ்விதழ் இளங்கதிரின் 43வது இதழாகும். இது நான்கு இயல்களைக் கொண்டமைந்தது. வாழ்த்தியல், கட்டுரையியல், படைப்பியல், பதிவியல் என்பன அவையாகும். இந் நான்கு இயல்களும் தமிழதும் சங்கத்தினதும் பெருமையைப் பறைசாற்றுவனவாகும்.

வாழ்த்தியலில் பல்கலைக்கழகத் துணைவேந்தர், தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர், பெரும்பொருளாளர், தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம்பெற்றுள்ளன. இவை வாழ்த்துக்களாக மட்டுமன்றி சங்கத்தின் நீண்ட பயணத்தினையும், பெருமைகளையும் பேசும் பதிவுகளாகவும் அமைந்துள்ளன. அடுத்து கட்டுரையியலில் பேராதனையின் ஆய்வுப்புலனையும், அறிவுச் செழுமையையும் காட்டும் பேராசிரியர்களினதும், விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் கட்டுரைகள் அடங்கியுள்ளன. மூன்றாவதாகப் படைப்பியலில் மனிதத்தை விழிப்படையச் செய்வதும், சமூகத்தை மாற்றியமைப்பதும் கலைகளினாலேயே முடியும் என்பதையுணர்ந்த படைப்பாளிகளின் சிறுகதைகள் மற்றும் கவிதைகள் அடங்கியுள்ளன.

நான்காவது இயல் பதிவியலாகும். இம்முறை தமிழ்ச்சங்கத்தால் சங்கச் சான்றோர் விருது பெற்ற மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் பற்றிய தகவல்களும், தமிழ்ச்சங்க கல்வியலாளர் கௌரவம் பெறும் கல்வியாளர்கள் ஐவர் பற்றிய தகவல்கள் புகைப்படங்களுடன் இடம்பெறுகின்றன. அத்துடன் எழுத்தாளர் கௌரவம் பெறும் மூத்த எழுத்தாளர் மு.பொ. அவர்களினதும் வைத்திய கலாநிதி தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசேகரன் அவர்களினதும் எழுத்துக்கள் பற்றிய பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் தமிழ்ச் சங்கப் போட்டி முடிவுகள், இளங்கதிரின் அஞ்சலிகள் என்பனவும் இவ்வியலில் அடங்கியுள்ளன.

இறுதியாக ...
வாசகர்களே, இது மாணவர்களின் படைப்பு என்பதை கருத்திற் கொள்ளுங்கள். ஏதாவது தவறுகள் இருக்கலாம். கற்றற் செயற்பாடுகளுக்கு மத்தியில் கலைச்செயற்பாடுகளிலும் ஈடுபடக்கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும்பேறாகக் கருதி, எம்மால் முடிந்தளவு இவ்விதழை சிறப்பாக கட்டமைத்துள்ளோம் என நம்புகின்றோம். இவ்விதழில் இடம்பெறும் ஒவ்வொரு ஆக்கங்களும் உங்களுக்கு பயன்தரும் என்பது உறுதி. இவ்வாக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளராவார். நன்றி.

**"தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு"**

**இதழாசிரியர்கள்**
**தமிழ்ச்சங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**செ.பிறைசில்**
(கலைப்பீடம்)
**உ. நிவேதிகா**
(விலங்கு மருத்துவ விஞ்ஞானப்பீடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**1. வாழ்த்தியல்**

1. Message from the vice-chancellor iv
2. பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி v
3. பெரும்பொருளாளரின் வாழ்த்துச்செய்தி vi
4. தலைவரின் வாழ்த்துச்செய்தி vii
5. செயலாளரின் வாழ்த்துச்செய்தி viii
6. இளம்பொருளாளரின் வாழ்த்துச்செய்தி ix
7. இதழாசிரியர்கள் உள்ளத்திலிருந்து ... x

**2. கட்டுரையியல்**

1. மொழி - பண்பாடு - நெருக்கடி - திசை வெளிகளைக் கடத்தல் 01
   - பேராசிரியர் வ. மகேஸ்வரன்
2. கனேசலிங்களின் கதைத் தலைவர்கள் 06
   - பேராசிரியர் துரை மனோகரன்
3. பாரதி - பழமையில் பூத்த புதுமை 15
   - கலாநிதி ஸ்ரீபிரசாந்தன்
4. வட மாகாண பல்கலைக்கழக நுழைவு: ஓர் கண்ணோட்டம் 21
   - கலாநிதி றொஷான் ராகல், செல்வி அருட்சுதா சுப்பிரமணியம்
5. மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம் ஒரு யதார்த்தநோக்கு 28
   - கலாநிதி எஸ்.பாஸ்கரன்
6. பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நாடகப் பணிகள் 33
   - கலாநிதி திருமதி. சோதிமலர் ரவீந்திரன்
7. வெள்ளைக்குட்டி ஆலிமின் இசை ஞானப்பாடல்கள் ஒரு பார்வை 39
   - சிரேஷ்ட விரிவுரையாளர் முபிஸால் அபூபக்கர்
8. சிவசம்பு புலவர் கால ஆராய்ச்சி 49
   - விரிவுரையாளர் செல்லத்துரை சுதர்சன்
9. சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் சில குறிப்புகள் 57
   - விரிவுரையாளர் பெ.சரவணகுமார்
10. தன்வரலாற்று எழுதுகையும் சமூக வரலாற்று உருவாக்கமும் 65
    விளிம்புநிலைத் தன்வரலாறுகளை முன்வைத்து சில குறிப்புக்கள்
    - விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீலன்
11. இலங்கையில் அடிப்படை உரிமைகள் 77
    - விரிவுரையாளர் ந. சிவகுமார்
12. Is the origin of Sri lankan Moors Dravidian? 94
    - M.A.A. Beham
13. தமிழ் ஆளுமையும் தமிழியல் ஆய்வுகளும் 102
    உதவி விரிவுரையாளர் பா.சுமன்
14. அரசின் கல்வி மீதான முதலீடு ஒரு பொருளியல் நோக்கு 117
    - உதவி விரிவுரையாளர் எம்.ஏ.எப். சுமையா
15. இலங்கையில் வரட்சி நிலையும் அது தொடர்பான முகாமைத்துவ நடவடிக்கைகளும் 142
    - உதவி விரிவுரையாளர் ஜோ. யூலியற் றொசானி
16. இலங்கையில் சிறுவர் உரிமைகள் 157
    உதவி விரிவுரையாளர் கோ. விநோ
17. முரண்பாட்டு மரத்தினூடான தென்னாபிரிக்க முரண்பாடு பற்றிய ஓர் பகுப்பாய்வு 199
    - உதவி விரிவுரையாளர் லிண்டா பிரசானி எழிலரசு
18. பௌத்த மெய்யியல் சில அறிமுகக் குறிப்புகள் 210
    - உதவி விரிவுரையாளர் நிறோகரன்

**மாணவர் பகுதி**

19. கார்மேக கவிஞரின் கொங்கு மண்டல சதகம் 88
    - ர. தினுஷா
20. மூவரசர் வாசாப்பில் பக்தியும் கலையும் 110
    - ச. வினோஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பெருங்கற்கால சவ அடக்கு முறையும், பிற்காலத்தில் அதன் வளர்ச்சி நிலையும் 121
- க. ஞானசக்தி, க. கனகதுர்க்கா
22. யாழ்ப்பாண தரைக்கீழ் நீரின் மாசாக்கமும் சந்திக்கப் போகும் விபரீத விளைவுகளும் 132
- நா. சுஜீவன்
23. வள்ளுவர் காட்டும் முயற்சியாண்மை 151
- கு. தர்மேந்திரன்
24. மூன்றாம் பால் 171
- சி. கேசவன்
25. சுயநிர்ணயம் ஒரு விமர்சன நோக்கு 182
- க. சதீஸ்வரன்
26. கற்றலில் ஞாபகத்தின் முக்கியத்துவம் 193
- வே.ரவிக்குமார்
27. சமகாலத்தில் அதிகரிக்கும் சமூகசீர்கேடுகளும், அதைத் தடுப்பதற்கான தனிநபர் ஆளுமையில் சமூகமயமாக்கல் முகவர்களின் வகிபங்கும் 210
- அ.யோகேஸ்வரன்
28. சமூக உறவில் சமூக வலைத்தளங்களின் வகிபாகம் 215
- எம்.எம்.எப். நாஸீகா
29. வளர்முக நாடுகளின் பண்பாட்டம்சங்களில் உலகமயமாதலின் தாக்கம் 218
- தி. திலகராஜ்
30. மனித உரிமைகளும், கடப்பாடுகளும் 224
- தாஹிர் வசிம் அக்ரம்

## 3. படைப்பியல்

1. வெறுமைச் சுழி 53
- விரிவுரையாளர் திருமதி. ஆன்யாழினி சதீஸ்வரன்
2. கரித்துண்டு 05
- எம். வை. ரிஸ்மியா உதவி விரிவுரையாளர்
3. அநாதை 176
- எம்.என். ஜெஸ்மினா உதவி விரிவுரையாளர்

**மாணவர் பகுதி**

4. உடைந்து போன கண்ணாடி 188
- தே. தேலக்ஷன்
5. உயிர்போக முன் ஊர்போய்ச் சேர்வேனா 87
- க. கனகதுர்கா
6. மனப்புயல் 38
- ச. கமலகாந்தன்
7. எம் தேச உறவுகள் 120
- தே.கஜீவன
8. மிதித்தலும் மீதிருத்தலும் 156
- என். கேதீஸ்வரன்
9. எனக்குள்ளும் எண்ணற்ற 231
- கஸ்தூரி

## 4. பதிவியல்

4.1 சங்க கௌரவம் பெறும் பெரியோர்கள்
1. சங்கச் சான்றோர் கௌரவம் 232
2. எழுத்தாளர் கௌரவம் 233
3. தமிழ்ச் சங்க கல்வியியலாளர் கௌரவம் 235
4. இளங்கதிரின் அஞ்சலிகள் 240

4.2 தமிழ்ச்சங்கப் போட்டி முடிவுகள் 242
4.3 செயலாளர் அறிக்கை 245
4.4 சங்க செயற்பாடுகளின் நிழற் பதிவுகள்
4.5 செயற்குழு 2014-2015 248
4.6 நன்றியுரை 249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழால் முழுமதியச் சேலைகட்டி
முல்லையதாம் புனைவுகளின் பூவைச்சூட்டி
வித்தகத்து ஆய்வுகளால் அணிகள்பூட்டி
வீறுசுவைப் பாக்களினை மையாய்த்தீட்டி
எத்திறத்தும் ஏற்றமிகு இதழ்தான் என்ற
ஏற்றமதைத் தமிழர்மனம் வியந்துகூறப்
புத்தகமாய்க் கற்றவரின் உள்ளம்ஓங்கப்
பூத்துவரும் இளங்கதிராம் பெண்ணே வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி - பண்பாடு - நெருக்கடி - திசை வெளிகளைக் கடத்தல்



**பேராசிரியர் வ. மகேஸ்வரன்**
**தலைவர்**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

இன்று உலகில் ஐயாயிரத்துக்கு மேலான மொழிகள் பேசப்படுகின்றன. முன்பு பேசியவை, அண்மைக்காலத்தில் மறைந்தவை, மறைந்து கொண்டு வருபவை, கடன் வாங்கிக் கலந்தவை என்ற பட்டியலும் நம்மிடையே உண்டு. அரமைக் மொழி ஒரு காலத்தில் பேசப்பட்டது என்று அறிகின்றோம். சமஸ்கிருதம் இறந்த மொழியாகிவிட்டது. இலத்தீன் அமெரிக்க. ஆபிரிக்கப் பழங்குடிகள் பேசுகின்ற மொழிகள் மறைந்து கொண்டு வருகின்றன. தமிழைக்கூட எதிர்காலத்தில் மறைந்து போகக்கூடிய ஒரு மொழி என யுனெஸ்கோவின் அறிக்கை கூறுகின்றது. கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ் மலையாளமாக மாறிய கதை யாவரும் அறிந்ததே. இன்று திருந்தாத மொழிகள் என அடையாளங் காணப்பட்ட பழங்குடிகள் பேசுகின்ற மொழிகள் பல சொல்லாலும் எழுத்தாலும் தம்முடைய இயல்பை இழந்து போகின்ற நிலையை நாம் அவதானிக்கலாம்.

மொழிகளைக் குடும்ப மொழிகளாகப் பார்க்கின்ற பண்பாடும் உலகில் உண்டு. உலகில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகள் சில குறிப்பிட்ட தொல் மொழிகளிலிருந்து (Proto Lanuage) தோற்றம் பெற்றன என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒலி, சொல், அமைப்பு, சொற்களஞ்சியம் ஆகியவற்றினிடையே காணப்படுகின்ற ஒத்த தன்மைகள் நோக்கப்பட்டு மொழிக்குடும்பம் என்ற கருத்தியல் கட்டமைக்கப்படுகின்றது. இந்த வகையில் இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம், சீன திபெத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்குடும்பம், திராவிட மொழிக்குடும்பம், செமித்தோ அரமிக் மொழிக்குடும்பம், யூரல் அல்தாயிக் மொழிக்குடும்பம், மலாயா- பாலினேசியன் மொழிக்குடும்பம் எனப் பல்வேறு மொழிக்குடும்பங்கள் இன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இனி மொழியைப் பேசுவோர் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. சில மொழிகள் சிலர் மட்டும் பேசுமளவில் காணப்படுகின்றன. உதாரணமாக உலகெங்கிலுமுள்ள பழங்குடியினர் பேசுகின்ற மொழி, இன அளவு அல்லது ஊர் அளவிலேயே நிலைத்துக் காணப்படுகின்றது. அதேவேளை பலகோடி மக்கள் பேசுகின்ற மொழியும் உண்டு. உதாரணமாகச் சீன மொழி பல கோடி மக்களால் பேசப்படுகின்றது. இதைவிடவும் ஒரு மொழி பேசுவோர், இரு மொழி பேசுவோர், பல மொழி பேசுவோர் எனவும் மக்கள் உள்ளனர். உலகின் பல தீவுக்கூட்டங்களில் வாழ்கின்ற மக்கள் ஒரு மொழியாளர்களாகவே உள்ளனர். இலங்கை போன்ற நாடுகளில் வசிப்பவர்கள் அநேகமாக இரு மொழியாளர்களாக உள்ளனர். இந்தியா போன்ற பல மொழி பேசும் தேசமொன்றில் நாம் பல மொழியாளரைக் (Multy lingual persons) காணலாம். மேலும் ஒரு நாட்டில் பல மொழிகள் பேசப்படும் சூழலும் உண்டு. உதாரணமாக இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. சுமார் 1200 மொழிகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. அவற்றுள் திருந்திய மொழிகள் 200 என்பர். நாட்டு மொழியாகப் பதினெட்டு மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மொழி, மொழியும் பேசுவதும், மொழியும் நாடும் என பல பரிணாமங்கள் கொண்டுள்ளதை அவதானிக்கலாம்.

மொழிக்குள்ள இரு கூறுகள்.

1. மொழிதல்
2. எழுதுதல்

என்பனவாகும்.

ஒலியும் எழுத்தும் இணைந்தது தான் திருத்தமான மொழியின் பண்பாக அமைவது. ஒலிக்கும் அதன் அடையாளமாக இடப்படுகின்ற வரிவடிவத்துக்குமிடையே எந்த விதமான தர்க்க ரீதியான உறவுகளும் இல்லாத போதும் ஒலிக்கான அடையாளக் குறியீடுகளாக வரிவடிவம் அங்கீகரிக்கப்பட்டதை நாம் அறிவோம். இந்த வரிவடிவத்தின் பயணம் நீண்டது. இது மொழியை வாய்மொழிப் பண்பாடு என்ற தளத்திலிருந்து செய்யுள். எழுத்துப் பண்பாடு என்ற தளத்திற்கு மாற்றியமைத்ததை எழுத்தின் வரலாறு கூறும்.

மேற்குறித்த அடிப்படைப் பண்பாடுகளிலிருந்துதான் மொழி தொடர் கருத்துநிலைகளை மேலும் முன்வைக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் மொழி என்பது

அ. மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது

ஆ. நாகரிகத்தின் அடித்தளமாக அமைவது

இ. கலைகளின் பரிமாற்றக் கருவியாக அமைவது

ஈ. பண்பாட்டின் அடையாளமாக விளங்குவது

இவ்வாறானதொரு பின்னணியிலேதான் தமிழ் மொழி தொடர்பான பண்பாட்டுக் கோலங்களை நோக்க முடிகிறது.

மொழி என்ற கோட்பாட்டைத் தொல்காப்பியர், பண்பாட்டின் அடையாளமாகவும் இனங்காண்கின்றார். அதனால்தான் அவர் தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம் என்ற அதிகாரத்தினூடாக மொழியை எவ்வாறு ஆக்க முடியும், எவ்வாறு ஆக்கக்கூடாது, அவற்றில் முரண்பாடு ஏற்படின் அமைதி எவ்வாறு காணலாம் என்றெல்லாம் விளக்குகின்றார். கிளவியாக்கம், உயர்திணை அஃறிணைப் பாகுபாடு, பால் நிலை, திணை பால் பொருத்தப்பாடு, வழாநிலை, வழு, வழுவமைதி, வினாவிடை முறைமை, மூவிடத்துக்குரிய சொல், தகுதியும் வழக்கும், புறநடைகள் எனப் பல்வேறு விதமாக அவர் மொழியமைப்புக் கோட்பாடு பற்றி விஸ்தாரம் செய்கின்றார். இந்நிலையில் ஓர் இலக்கணகாரன் என்ற தளத்தில் நின்று கொண்டு மொழியின் அமைப்பு இவ்வாறுதான் அமைந்திருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கட்டமைக்கின்றார்.

மொழிதல் கோட்பாட்டை இலக்கியகாரனாக நின்று கொண்டு வள்ளுவர் இன்னுமொரு தளத்தில் முன் மொழிகின்றார். இன்சொல், வன்சொல், வாய்ச்சொல் என்று சொல்லுக்குப் பல்வேறு விதமான தன்மைகளைக் கொடுத்து விபரிக்கின்றார். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே எனத் தொல்காப்பியர் கூற, யாதொன்றும் தீமை இல்லாதன சொல்லலே சொல் என்பார் வள்ளுவர். சொல்லின் பிரதான கருவியாக நாவை வள்ளுவர் கருதுகின்றார். "நா காக்க" என்ற தாரக மந்திரத்தை அழுத்தமாக முன்வைக்கின்றார். சொல், இன்சொலால் ஈரம் நிறைந்து, படிறு இல்லாத, செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் என்றும், அதனைத் திறனறிந்து சொல்லுதல் கேட்டார் பிணிக்கச் சொல்லுதல், இனியவை சொல்லுதல், பயனுள்ளவை சொல்லுதல், வெல்லும் சொல் இன்மையறிந்து சொல்லுதல் என்றெல்லாம் பல்வேறு பண்பாட்டுத் தளத்தில் மொழியைப் பிரயோகிக்க வேண்டிய முறைகளை வற்புறுத்தி ஓர் இலக்கியகாரனாக மொழிதல் கோட்பாட்டை முன்னிறுத்துகின்றார்.

இவ்வாறான இரட்டைப்பண்பாட்டுத் தளத்தில்தான் நமது மொழி நீண்ட காலமாக வளர்ந்து வந்தது. அதனால் தான் அது பல்வேறு தடைகளைத் தாண்டிப் பல தளங்களில் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது. அது வாழ்வாக நிலைத்தது (சங்க இலக்கியங்கள்) அது அறமாகப் போதித்தது. (சங்க மருவிய கால இலக்கியங்கள்) அது உணர்வு பூர்வமான பக்திக்கு வாகனமாகியது. (பல்லவர் காலம்) அது பல பரிணாமத் தன்மை கொண்டதாக உருமாற்றம் பெற்றது (இடைக்காலம்) இதற்கும் மேலாக அது உணர்வின் வாகனமாகவும் அமைந்தது.

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ் மொழி இயக்கம் சார்ந்த அரசியல் செயற்பாடுகளுக்கு மொழியும் இலக்கியமும் பயன்பாட்டுக் கருவிகளாயின. குறிப்பாகத் திராவிடர் கழகத்தின் செயற்பாடுகளில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழை முன்னிறுத்தினர். இலங்கை மிதவாதக் கட்சிகளின் அரசியல் போராட்டத்திலும் தமிழரை முன்னிறுத்தினர். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா", "தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்.", "பொங்கு தமிழுக்கு இன்னல் நிகழ்ந்தால் சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு" முதலான கோசங்களின் வழி தமிழ் போராட்டக் கருவியாகவும் அரசியல் ஆயுதமாகவும் பயன்பட்டதை அறிகின்றோம். இலங்கையில் நடைபெற்ற முப்பது ஆண்டு கால யுத்தம்கூட மொழியை முன்னிறுத்திய போராட்டமாக அமைந்தது நாம் யாவரும் அறிந்ததே.

இதற்கு மேலாக மொழிக்கான கடவுள் நிலை வழங்கப்பட்டதையும் நாம் அறிவோம். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியத்தின் நீராடும் கடலுடுத்த என்ற பாடல் தமிழை எல்லையற்ற பரம்பொருள் நிலைக்கு உயர்த்தியது. இந்த உயர்துகையின் அடுத்த கட்டத்தில் பாரதியார் அத்தெய்வத்துக்கான வாழ்த்துப் பாவாக "என்றென்றும் வாழியவே" என்று பாடியிருக்கின்றார். இவ்வாறு தமிழ் மொழி பல்வேறு பண்பாட்டுத் தளங்களையும், பண்பாட்டு நெருக்கடிகளையும் தாண்டி வளர்ந்து வந்துள்ளது என நாம் அறிவோம்.

ஆனால் இந்த மொழி இன்று பல்வேறு சவால்களை எதிர்நோக்குவதை நாம் அவதானிக்கலாம். தொழில் வாண்மை தேடிய கல்வி, அந்நியமயமாதலும் அடையாள இழப்புக்களும், உலகமயமாதல் நெருக்கடிகள், அரசியல் மேலாதிக்கத்தின் நெருக்கடிகள் ஆகியவை சுய மொழி வழிச் சிந்தனையின் தேக்கத்துக்கும் பிறமொழி மயமாக்கலுக்கும் இடந்தந்து நிற்பதை அவதானிக்கலாம். இந்த நிலை நீடிக்கும் போது பாரதியாருக்கு ஒரு பேதை, "மெல்லத் தமிழினிச் சாகும்" என்று உரைத்தது போலவும், யுனெஸ்கோவின் அறிக்கை போலவும் நாம் நமது மொழியை அதன் பண்பாட்டை இழந்து விடப் போகின்றறோமோ என்ற பதட்டமான சூழலில் வாழ்கின்றோம்.

ஆகவே, இச்சவால்கள் யாவற்றையும் தாண்டி மொழியை நாம் வாழும் காலத்தில் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி அடுத்த தலைமுறைக்கும் கடத்தப்படவேண்டிய கட்டப்பாட்டில் உள்ளோம். அதனைக் பொது வாழ்விலும், பாடவிதானங்கள் வழியாகவும், வீட்டிலும் பேணுவதும், நடைமுறைப்படுத்துவதும் நமது கடமையாக உள்ளது. மொழியறிதல் என்பதையும், மொழியைக் கற்றல் என்பதையும் யாந்திரீகத் தனமான ஒரு செயற்பாடாகக் கருதாமல் அதனை உயிர்ப்புள்ள ஒரு செயற்பாடாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மொழி வழியாகப் புதிய சிந்தனைகளைத் தூண்டுவதும், புத்தாக்கம் செய்ய முயற்சிப்பதும், நமக்கென்றோர் நலியாப் பண்புடையோம் என்பதை வலியுறுத்துவதும், எங்கும் எதிலும் மொழியைப் பேணுதலும் பாதுகாத்தலும், அதனை உரிய முறையில் கடத்துவதும் திசை வெளிகளை விசாலிப்பதுவும் நமது கடமை. சிந்திப்போமாக.

## கரித்துண்டு

நேற்றைய புத்தகத்தில்
ஒரு பெண்ணைச் சந்தித்தேன்
அவள்
சூரியனோடு ஒன்றாய் பயணிப்பவள்
சந்திரனோடும் சேர்ந்து அசைபவள்

அவள்,
மஞ்சள் இடிப்பாள்
மதியம் சமைப்பாள்
நீர் இறைப்பாள்
நித்தம் துவைப்பாள்
விறகு பொறுக்குவாள்
வீட்டையே பெருக்குவாள்

அவள் வியர்வை வெகுண்டோடலாம்
அடுப்படியில் வெம்பியும் சாகலாம்
அத்தனையும் செய்வாள்
அதற்கு மேலும் செய்வாள்
இத்தனையும் செய்து
மூணு வேளைக்கும்
உடுதுணிக்கும்
கணக்கைத் தீர்ப்பாள்

ஆனால்
அவள் 'குந்தியிருக்கும்'
மூன்று நாளில்
வேலைகளில் ஓய்வாள்
வீட்டிலும் ஒதுக்கப்படுவாள்
இதை ஒரு கரிக்கோடு
நிர்ணயிக்க பார்த்தும் கிடப்பாள்

**எம். வை. றிஸ்மியா,**
**தமிழ்த்துறை.**
**உதவி விரிவுரையாளர்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேசலிங்கனின் கதைத் தலைவர்கள்



**பேராசிரியர் துரை மனோகரன்**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**நா**வல் இலக்கியத்தில் கதைக்கருவை அடுத்து முக்கியத்துவம் பெறுவது பாத்திரவார்ப்பு. நாவலின் கதையம்சம் வாசகரோடு தொடர்புபடுவதற்குப் பாத்திரப்படைப்பு இன்றியமையாதது. கதையம்சத்தில் இடம்பெறும் நாவலசிரியனின் நோக்கங்களைப் புலப்படுத்த தகுந்த கருவிகளாகப் பாத்திரங்களே விளங்குகின்றன. கதாபாத்திரங்கள் பற்றிய ஆய்வுகள் வெளிநாடுகளில் குறிப்பிடத்தக்க அளவு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தமிழில் நாவல்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் பரவலாக வெளிவந்துள்ளன. ஆனால், இக்கட்டுரையில் செ. கணேசலிங்கனின் மூன்று நாவல்களில் இடம்பெறும் மூன்று கதைத்தலைவர்கள் பற்றி நோக்கப் படுகிறது இதற்காக செ. கணேச லிங்கனின் சடங்கு, (1966) செவ்வானம், (1967) தரையும் தாரகையும் (1968) ஆகிய நாவல்களில் முறையே இடம்பெறும் பரமநாதன், நாகரத்தினம், கந்தசாமி ஆகிய கலைத்தலைவர் பாத்திரங்கள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

செ. கனேசலிங்கனின் சடங்கு நாவலின் கதைத் தலைவன் பரமநாதனாவான். இரண்டாந்தர எழுதுவினைஞனாகக் கொழும்பிற் கடமையாற்றியவன். தமக்கைக்காக மாற்றுச் சம்பந்தமாக ஈஸ்வரியை மணந்து கொண்டான். கொழும்பில் வாழ்ந்த பரமநாதன் குடும்பத்திற் பொருளாதார நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகப் பிரச்சினைகள் தலை தூக்கின. நாட்டின் அரசியல் நிலைமையைச் சாக்காக வைத்து, மனைவியை யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டுப் பொருளாதாரப் பிரச்சினையைச் சமாளிக்க விரும்பினான். குடும்பப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் இராசரத்தினம் என்பவரை பரமநாதனின் மனைவிமீது அனுதாபம் கொள்ள வைத்தன. மேற்குறிப்பிட்டது சடற்கு நாவலின் கதைச் சுருக்கமாகும்.

இந் நாவலிலே 1959ம் ஆண்டு முதல் 1961ம் ஆண்டு வரையிலான ஈழத்தின் அரசியற் பின்னணியிலேயே பாத்திர இயக்கமும், சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பரமநாதன் மத்தியதர வர்க்கத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குட்பட்ட பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். தமக்கையின் பொருட்டு அவன் மாற்றுச் சம்பந்தத்துக்கு உட்பட வேண்டியவனாகி, கிடைத்த சீதனத்தோடு திருப்தியடைய வேண்டியவனானன். இதனாலேயே அவனது எதிர்பார்ப்புகள் தலைகீழாகின. நாட்டின் அரசியல் நெருக்கடிகளும், அவன் சார்ந்துள்ள மத்தியதர வர்க்கத்தின் பொருளாதார நிலைமைகளும் அவனது குடும்ப வாழ்விலும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

அவன் அடிப்படையிற் கோழையாக அமைந்தவன். எதனையும் துணிந்து செயலாற்றும் சுபாவம் அவனிடத்து இருக்கவில்லை. அவனது இயல்பினை ஆசிரியர் தமக்கை பத்மா மூலமாகக் குறிப்பிடுகின்றார்.

> **"என்னைப் போலப் பெரியதம்பியும் துணிச்சலில்லாத ஒரு கோழை. படிச்சு இத்தனை வயதாகி உத்தியோகம் பார்த்து என்ன பயன், தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள அவனால் முடியவில்லை. என் வாழ்வு சிதைவதையும் தடுக்க அவனால் இயலவில்லை. தமது வாழ்விற்குப் பயன் படாத படிப்பாலும் அறிவாலும் என்ன பயன். வாக்கு மாறின அப்புவை ஒதுக்கிவிட்டுப் பொறுப்பை முன்னின்று ஏற்றுக் கொள்ளத் துணிச்சலில்லை."**

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் தொழிலாளனும், தொழிற்சங்கவாதியும், முற்போக்காளனுமாகிய கந்தசாமியின் (பரமநாதனின் தம்பி) வாயிலாகவும் பரமநாதனின் பாத்திரப் பண்பினை ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

> **"அன்னை எங்கடை வீட்டில நடந்தது நடக்கப்போறதெல்லாம் எனக்குத் தெரியும். சிதைந்துபோய்க் கொண்டிருக்கும் பிற்போக்குச் சமுதாயத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் நீயும் அக்காவும் பலியாகி விட்டியல். என் தங்கைகளும் நானும் உதுக்கு பலியாகாமல் பாதுகாத்துக் கொள்ளுவன்"**

தனது தம்பியிடமிருந்த தன்னம்பிக்கையும், துணிவும் நடக்கப்போறதெல்லாம் முன்னரே நிச்சயிக்கும் கூர்ந்த அவதானிப்பும் பரமநாதனிடம் இருக்கவில்லை.

பரமநாதனின் பாத்திரப் பண்பு மேற்குறிப்பிட்ட இரு பாத்திரங்களினால் மட்டுமன்றி ஈஸ்வரி, இராசரத்தினம், சண்முகம் ஆகிய வேறுசில பாத்திரங்கள் மூலமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாத்திரமும் அவனின் தவறுகளை ஏதோவொரு வகையில் கண்டிப்பதாகவே அமைந்துள்ளது. குடும்பத்தை மகிழ்ச்சிகரமானதாக நடத்திச் செல்ல முடியாதவனாகப் பரமநாதனை, மனைவி ஈஸ்வரி கருதினாள். தியாகம் என்ற பெயரிலே தனது வாழ்வையும், அவனது வாழ்வையும் வீணாக்கியவன் எனப் பத்மா தீர்மானித்தாள். பிற்போக்குச் சமுகத்தின் பிடியில் பரமநாதன் அகப்பட்டுவிட்டதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமி கருதினான். ஈஸ்வரியின் அருமை பெருமைகளை விளங்கிக்கொள்ள முடியாதவனாக அவன் இருக்கின்றானென இராசரத்தினம் முடிவு செய்தார். பரமநாதனுக்கு வர்க்க உணர்வும், அரசியலுணர்வும் இல்லையெனச் சன்முகம் குற்றம் சுமத்தினான்.

பரமநாதனின் பாத்திரத்துக்குரிய மத்தியதர இயல்பு தெளிவாக நாவலிலே இடம்பெற்றுள்ளது. மத்தியதர வர்க்கத்தினருக்குரிய அரசியலுணர்ச்சியே அவனிடமும் காணப்பட்டது. இதனைப் பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> **"பரமநாதனுக்கு நிலந்தரமான அரசியற் கொள்கை எதுவுமில்லை. அவன் அரசாங்கக் குமாஸ்தாக்கள் சங்கத்தில் அங்கத்தவனாக இருந்து மாதந்தோறும் அங்கத்துவப் பணம் செலுத்தியபோதும் சங்கத்தில் எவ்வித ஆர்வமும் எடுப்பதில்லை. ஆரம்ப காலத்தில் இடதுசாரிக் கட்சியைச் சார்ந்தவன் என்று சொல்லுவது ஒரு பாஷைனாக இருப்பதைப் பார்த்து அவனும் அவ்வாறே சொல்லித் தேர்தலின்போது அக்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு வாக்களித்து வந்தான். பின்னர் நாட்டில் வகுப்புவாத உணர்ச்சி 1956ன் பின் தலைதூக்கியதும் அவன் ஒரு தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவன் போலத் தமிழ் நண்பர்களிடம் காட்டிக்கொண்டான்."**

திருமணத்தின் இயல்புபற்றிப் பரமநாதன் தத்துவ ரீதியாக ஒரு சந்தர்ப்பத்திற் சிந்தித்துள்ளான். **"இதெல்லாம் என்ன பிணைப்பு? திருமணம் அவசியமென்று எவரோ பிணைக்கிறார்கள், நாங்கள் சூத்திரப் பாவைகளாகிறோம். எங்கள் கல்வி, உலக அனுபவங்கள் எங்கே? ஏன் அவையொன்றும் பயன்படவில்லை"** திருமணம் என்பது வெறுமனே சடங்காகவே கொள்ளப்படுகிறது.

அத்திருமணத்தின் மூலம் இணைந்து வாழப் போகிறவர்களைப் பற்றிச் சமுகம் அக்கறை செலுத்துவதில்லை என்று வேதனை கொண்டிருந்தான். தமக்கைக்காகத் தான் செய்யவிருக்கும் தியாகத்தினாலே தன் வாழ்வு பாதிக்கப்படுகின்றது என்பதனை அவன் உணர்ந்திரந்தான். சமூகமும், சட்டமும் தன்னைக் கட்டுப்படுத்துவதையிட்டுப் பலவாறாகச் சிந்தித்தும், அவனாலே ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

பரமநாதன் தான் மாற்றுச் சம்மந்தம் செய்து கொண்டது தமக்கைக்கு செய்த பொருந் தியாகமாகும் என நம்பிக்கொண்டிருந்தான். ஆனால் அத்தகைய தியாகங்கள் எத்தகைய போலியானவை என்பதைப் பத்மா ஒரு சமயம் அவனிடமே குறிப்பிடுகின்றாள். **"எனக்கு நீ நன்மை செய்ததென்டு மட்டும் நினைக்க வேண்டாம்.... நீ செய்த தியாகத்தை நான் என்டைக்காவது ஒரு நாளைக்கு உணரச் செய்வேன்."** ஏன்று கூறிய அவள் அவ்வாறே இறுதியிலே தற்கொலை செய்து விட்டாள்.

தனிமனிதப் பாத்திரத்துக்குரிய சில பண்புகளான விரக்தியுணர்வு, தனிமை நாட்டம் முதலானவை பரமநாதனிடம் காணப்பட்ட போதிலும், அவன் முற்றுமுழுதான தனிமனிதப் பாத்திரமல்லன். நாட்டின் அரசியல் நிலமைகளினாலும், மத்தியதர வர்க்கத்துக்குரிய பொருளாதாரப் பிரச்சினைகளினாலும், தான் சார்ந்த சமூகத்தின் மதிப்பீடுகளினாலும் அவன் பாதிக்கப்பட்டுள்ளான்.

நாவலின் இறுதிப் பகுதியில் பரமநாதனின் பாத்திரப்பண்பு ஓரளவு வளர்ச்சியடைந்துள்ளது. ஆரம்ப நாட்களில் சண்முகத்தின் கருத்துக்களையும், விளக்கங்களையும் தட்டிக்கழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அவன் பின்னர் சண்முகத்துடன் வேலை நிறுத்தம் பற்றிப் பேசிக் கொள்ளத் தொடங்கினான். தொழிற்சங்கக் கட்டடங்களுக்கும் இருவரும் அடிக்கடி சென்றுவரத் தொடங்கினர். சண்முகமே பரமநாதனிடத்து ஏற்பட்டு வரும் மாற்றத்துக்குக் காரணமாக இருக்கவேண்டுமென இரசரத்தினம் ஊகித்துக் கொண்டார்.

நாவலாசிரியர் பரமநாதனிடத்து ஏற்பட்டுவரும் மாற்றத்தைக் காட்டியுள்ளாரேயன்றி, அவனது ஆக்கபூர்வமான செயல்களைக் காட்டவில்லை. இதற்கான காரணம், நீண்ட காலமாகக் கோழையாகவும் துணிவு அற்றவனாகவும் அவன் வாழ்ந்த வாழ்க்கை முறையேயாகும். இத்தகையவனை நாவலின் சம்பவங்களும், நடைபெறும் காலமாகிய மூன்று வருடங்களுக்குள் (1959-1961) திடீரெனச் செயற்றிறம் கொண்டவனாகப் படைப்பின், அது உண்மைக்குப் புறம்பாக அமைந்துவிடும். இவ்வகையில் கதைத் தலைவனது பாத்திரப் பண்பில் ஆசிரியர் அக்கறை செலுத்தியுள்ளார்.

## நாகரத்தினம் - செவ்வானம்

செவ்வானம் நாவலின் கதைத்தலைவர் நாகரத்தினமாவார். தேசிய முதலாளித்துவத்தின் ஒரு பிரதிநிதியாகவும், ஐயர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவராகவும் நாகரத்தினம் படைக்கப்பட்டுள்ளார்.

இந்நாவலின் கதைச்சுருக்கம் வருமாறு: வர்த்தக நிறுவனமொன்றின் உரிமையாளரான நாகரத்தினம் ஈழத்தின் அரசியற் போக்குகளுக்கேற்பத் தமது இலாபத்தினைப் பெற்று வந்தார். அவனது மனைவி இந்திரா உயர் வர்க்க இயல்புக்கேற்ப ஆடம்பரப் பிரியையாக வாழ்ந்து வந்தாள். பத்திரிகை நிறுவனமொன்றின் இயங்குனரது செயலாலராகக் கடமையாற்றும் மாலினி அவரது பொழுதுபோக்குத் தோழியாக அமைந்தாள். நாட்டின் அரசியல் போக்குகளைப் பற்றி அவள் நாகரத்தினத்துக்கு அவ்வப்போது தகவல் கொடுத்து வந்தாள். நாகரத்தினத்தின் குடும்பத்திற் பிரச்சனைகள் தலைதூக்கின. தமது பிரச்சினைகளை அவ்வப்போது பகிர்ந்து கொள்ளவும் துன்பங்களை மறக்கவும் மாலினியிடம் நாகரத்தினம் நெருங்கிச் செல்ல, அவள் காலப்போக்கிலே அவரிடமிருந்து விலகிச் செல்லத்தொடங்கினாள்.

1964ம் ஆண்டிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் இடதுசாரிக் கட்சியினர் லங்கா சமசமாஜிக் கட்சியும், ரஷ்ய சார்புக் கம்யுனிஸ்ட கட்சியும் கூட்டுச் சேர்ந்தமை முதலாக அக்கூட்டாட்சி அரசாங்கம் நாடளுமன்றத்திலே தோற்கடிக்கப்படும் வரையிலே நடைபெற்ற அரசியற் சம்பவங்கள் நாவலுக்குப் பின்னணியாக அமைந்துள்ளன.

கதைத்தலைவரான நாகரத்தினத்தின் பாத்திரப் பண்பு சிறப்புப் பெறுவதற்கு, இதற்கு எதிரிடையான பாத்திரமாக பொன்னையாவின் பாத்திரப் பண்பு அமைந்துள்ளது. நாகரத்தினம் உயர்வர்க்கத்தைச் சேர்ந்தவன். பொன்னையா தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவன். அவ்விரண்டு பாத்திரங்களையும் இணைத்து, எதிர்மாறான அவர்களது வர்க்க இயல்புகளையும், குணங்களையும் காட்டுவதற்கு மாலினியின் பாத்திரம் பெருந் துணையாக அமைந்துள்ளது. அவள் பொன்னையாவைக் காதலிப்பவளாகவும், நாகரத்தினத்தின் பொழுதுபோக்குத் தோழியாகவும் இருந்தமையினாலே, இரு பாத்திரங்களின் பண்புகளையும் தெரிந்து கொள்வதற்கு அவள் ஒரு பயனுள்ள பாத்திரமாக அமைந்துள்ளாள். அத்தோடு மற்றய இரு பாத்திரங்களையும் போலன்றி அவள் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவளாவாள். பாத்திரப் பண்பினைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையிலே நாகரத்தினத்தின் பாத்திரம் சிறந்து விளங்குவதற்கு மற்றைய இரு பாத்திரங்களும் அனுசரணையாக அமைந்துள்ளன.

நாகரத்தினத்துடனும், பொன்னையாவுடனும் அவள் கொண்டிருந்த தொடர்புகளின் மூலமாக மட்டுமன்றி மாலினியின் சிந்தனையின் மூலமாகவும் ஆசிரியர் அவர்கள் இருவருக்குமிடையிலான வர்க்கபேதத்தைக் காட்டியுள்ளார்.

**"நாகரத்தினம் பொன்னையா. சமுதாயத்தின் இருமுனைகள் இவர்களிடையே நிலவும் முரண்பாடு எத்தனை, இம் மோதல்களில் வெற்றி பெறுபவர் யார், நான் எந்தப் பக்கம்?"**
நாகரத்தினத்துக்கும் அவர் மனைவி இந்திராவுக்கும் எவ்வகையிலும் ஒற்றுமைகள் இருக்கவில்லை. இருவரதும் ஆசைகள், விருப்பங்கள், வாழ்வு பற்றிய எண்ணங்கள், கருத்துக்கள் முதலானவற்றிலே இருவருக்குமிடையே முரண்படுகளே இருந்து வந்தன. பண விடயத்திலே நாகரத்தினம் சிக்கனமாக இருந்தான். சேர்க்கின்ற பணத்தைப் பொருத்தமாக முதலீடு செய்யவேண்டுமென்று விரும்பினான். ஆனால் இந்திராவோ தனது ஆடம்பரத்தையும், குடும்பப் பெருமையையும் நிலைநாட்டுவதனையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு பணத்தைச் செலவளித்து வந்தாள். பாலுறவு ஒன்றிலேயே அவர்கள் ஆரம்ப காலத்திலே ஒன்றுபட்டிருந்தனர். பின்னர் அவ்வுறவும் குறைந்து கொன்டே வந்தது. இதனாலேயே அவரது நாட்டம் மாலினிமீது திரும்பியது. உலக விடயங்களையும் அவரது தொழில் வியாபார சம்மந்தமான விடயங்களையும், நூல்கள், திரைப்படங்கள், நடனம், நாடகம், இசை போன்றவற்றைப் பற்றியும் மனந் திறந்து உரையாடத்தக்க துனையாக அவள் இருந்தாள். மேற்குறிப்பிட்ட இரு பெண்களும் நாகரத்தினத்துடன் கொண்டிருந்த உறவுநிலை, அவரது பாத்திரப் பண்பைத் துலக்கமாக்கியுள்ளது.

அவர் தாம் சார்ந்த உயர்வர்க்க இயல்புகளைக் கொண்டிருந்தார். வேறொரு வகையில் கூறுவதாயின் ஒரு வகையான கலப்பு நாகரிகத்தினை அவர் கொண்டிருந்தார். தம் இயல்புகளைப் பற்றி நாகரத்தினமே ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> **"சில எக்ஸ் பழக்கவழக்கங்களையே என்னிடம் காணலாம் நான் இந்த ஓட்டலில் நடைபெறும் போல்ரூம் டான்சுக்கெல்லாம் அதிகமாக வருவேன். செல்லிக்கு பரதநாட்டியம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். பத்மினி கர்நாடக சங்கீதம் படித்தாள். எனக்கு மேல்நாட்டு இசையிலே ஒரே மோகம்."**

அவர் தமது வர்க்க நிலைக்கேற்ப ஒரு வகையான கலப்பு நாகரிகத்தினைப் பின்பற்றியது போன்றே வியாபார விடயத்திலும் நிரந்தரமாக ஒரு கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. வியாபாரம் என்பது விபசாரம் போன்று ஒரு தொழில் என்பது அவரது கொள்கையாக இருந்தது. ஒழுக்கம், நீதி, நேர்மை, உண்மை என எதுவும் இல்லை. வாடிக்கையாளர்களுக்கு எங்கனமாயினும் பொருட்களை விற்றுவிட வேண்டும் அதுவே வியாபாரத்தின் முதல் தந்திரம் என்பது அவரது கருத்தாகும். எதனையும் விற்றுப் பணமாக்குவதே முதலாளித்துவத்தின் குறிக்கோளாகும். இதற்கேற்ப அவர் அரசியற் சூழ்நிலைகளிலே ஏற்பட்டு வந்த மாற்றங்களை உற்றுக் கவனித்துப் பயன்படுத்திக் கொண்டார். தேசிய முதலாளித்துவ அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பினை ஏற்றதனால் பயன்பெற்றோருள் நாகரத்தினமும் ஒருவராவார்.

**"ஒரு அரசின் தன்மையை அதன் ஆளும் வர்க்கமும் அதன் பொருளாதார அஸ்திவாரமும் நிர்ணயம் செய்கிறது. இவ்வாறு ஒரு அரசின் தரம் அதன் வர்க்க சாராம்சத்தைத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெரிவிக்கிறது. அதே சமயத்தில் அதன் வடிவம் அதன் அதிகாரத்தின் ஸ்தாபனத்தையும், நிர்வாகத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது."**
என்ற கருத்துப்படி நாகரத்தினம் தமது வர்க்க நிலைக்கேற்ப அரசாங்கத்தை ஆதரித்தார். ஆனால் அவரே பின்னர் 1964 ஆம் ஆண்டிலே அவ்வரசாங்கம் வீழ்ச்சியுற வேண்டுமென்றும் விரும்பியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் இடதுசாரிக் கட்சியினருடன் கூட்டுச்சேர்ந்தமையை தம் வர்க்கத்தினருடன் சேர்ந்து எதிர்த்தார். அவ்வரசாங்கம் நாடாளுமன்றத்திற் கொண்டுவரவிருந்த பத்திரிகை மசோதாவுக்கு பரவலாக பலத்த எதிர்ப்பு இருந்தமையை இட்டு மகிழ்ச்சி கொண்டிருந்தார். இத்தகைய சந்தர்ப்பங்கள் மூலமாக ஆசிரியர் கதைத் தலைவரின் வர்க்க இயல்புகளையும் அரசியல் நிலைமைகளினால் அவருக்கேற்படும் பாதிப்புக்களையும் உணர்த்தியுள்ளார்.

முதலாளித்துவம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து தன் வர்க்க நலனையே காப்பாற்றிக் கொள்ளும் என்பதற்கு ஒரு சான்றாக நாகரத்தினம் அமைந்துள்ளார். ஒரு சந்தர்ப்பத்திலே **"அப்படி எத்தனை புரட்சிகளை எல்லாம் நான் அடக்கி பழகியிருக்கிறேன். அந்தஸ்தை உயர்த்தி விட்டு தொழிலாளரிடம் இவர்களையே வேலைவாங்க விட வேண்டும்."** என மாலினியிடம் குறிப்பிடுவதனின்றும் இதனை விளங்கிக் கொள்ளலாம். ஆயினும் காலகதியிலே மேலோங்கி வந்த தொழிலாளரின் கோரிக்கைகளை இலகுவிலே தட்டிக்கழிக்க முடியாதென்பதையும் அவர் உணரத் தொடங்கியிருந்தார். **"அப்படியா, கஸ்டமாகிவிட்டது பாவம் என்று வேலை கொடுத்த தொழிலாளிகளே இன்று பங்கு கேட்கிறார்கள்."** என்று அவர் வேறொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளமை இதற்குச் சான்றாகின்றது.

## கந்தசாமி (தரையும் தாரகையும்)

தரையும் தாரகையம் நாவலின் கதைத் தலைவன் கந்தசாமி ஆவான். அவன் மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதியாக படைக்கப்பட்டுள்ளான். படித்துவிட்டு வேலையற்றிருந்த அவனை ஆரம்பத்தில் காதலிலே ஏற்பட்ட தோல்வி வாட்டியது. காலப்போக்கிலே இத்தகைய தோல்விகளை மறந்துவிட்டு வர்க்க பேதம் பற்றிய தெளிவு பெறத் தொடங்கினான். மத்தியதர வர்க்கத்தினர் தமக்கு மேலுள்ள உயர்வர்க்கத்தினரைப் பார்த்து ஏங்குவதை விட்டு தமக்குக் கீழ்ப்பட்ட வர்க்கத்தினருடன் இணைந்து அவர்களது போராட்ட உணர்வில் பங்குகொள்ள வேண்டுமென்பதனை உணரத்தொடங்கினான்.

1956 ஆம் ஆண்டுக்கும் 1959 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை முக்கிய பின்னணியாக இந்நாவல் கொண்டுள்ளது. கந்தசாமி காலகட்ட ரீதியிலே வளர்ச்சியடையும் கதைத்தலைவன் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளான். ஆரம்ப காலத்திலே திலகத்தின் மீது கொண்ட காதலே உலகத்தில் நிச்சயமானது என்றும் அதனை இழந்ததன் பின் வாழ்வுக்குப் பொருளே இல்லை என நினைத்திருந்தான். ஆயினும் காலப்போக்கிலே வர்க்கங்களின் இயல்புபற்றியும் பாலசிங்கத்தின் போதனைகளும் குடும்ப வாழ்விலே ஏற்பட்ட பிரச்சினைகளும் அவனுக்கு மனமாறுதல்களை ஏற்படுத்தின. காதலிலே தோல்வியடைந்திருந்த ஆரம்ப காலகட்டத்தில் பாலசிங்கத்துடன் உரையாடும் போது அவன் பின்வருமாறு விரக்தியுடன் கூறியிருந்தான்.

**"நீங்கள் சொல்வதொன்றும் எனக்குப் புரியவில்லை. என்னைப்போல் காதலித்து நேற்றும் இன்றும் நான்படும் வேதனையை நீங்களும் அனுபவித்திருந்தால்தான் உங்களுக்குக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதல் என்றால் என்னவென்று தெரியும், காதல் தெய்வீகமானது. காதல் இல்லை என்பது கடவுள் இல்லை என்று சொல்வதைப் போன்றது".** இவ்வாறு பாலசிங்கத்திடம் கூறிய கந்தசாமி வர்க்க உறவுகளைப் பெற்றதன் பின் கீழ் கண்டவாறு மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டான்.

> **"நான் காதல் என்ற கற்பனைக் கோட்டையில் எத்தனை காலம் மயங்கியிருந்தேன். என்ன ஏமாளித்தனம் பொருள், உறவு வர்க்க, சுபாவம் இவற்றை ஒருகணமும் மறந்துவிடவே முடியாது. பாலசிங்கம் சொல்வதெல்லாம் உண்மை."**

இவ்வாறு மனோவளர்ச்சியடைவதற்கு இடைப்பட்ட காலத்திலே மனதுக்குள்ளேயே வினாக்களை எழுப்பி விடைகளைத் தெரிந்துகொள்ள முயன்றுள்ளான். அந்த விடைகளே அவன் தன்னை விளக்கிக் கொள்ளத் தொடங்கியுள்ளான் என்பதைக் காட்டுகின்றன. **"நான் கற்பனையில் வாழப்பார்க்கிறேன். அதுதான் என் குறைபாடு என் மனத்தின் குறைபாடு"** என்று தன் மனதுக்குள்ளே தீர்மானிப்பதை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம். கந்தசாமிதான் காதலிலே தோல்வியடைந்திருந்த காலகட்டத்திலே ஒரு சபதமெடுத்துக் கொண்டான். திலகம் பெருமைப்படக்கூடியதாகத் தான் வாழவேண்டும். உயர்ந்த வேலைபெற்று அவனை விட அழகானவளும், கல்வி கற்றவளும் செல்வமுடையவளுமான பெண்ணைத் திருமணம் செய்து காட்ட வேண்டும். எங்காவது திலகத்தைச் சந்திக்க நேருகின்ற போது அவள் தலைகுனியுமாறு தன் மனைவியை அவளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டான். ஆயினும் அவன் எதிர்பார்த்திருந்தமைக்கு மாறாகவே சம்பவங்கள் நடைபெற்றுவந்தன. திலகத்தின் பின் ராணியைக் காதலித்தும் அக்காதல் திருமணத்திலே முடியவில்லை. எதிர்பாராத வகையிலே திலகத்தைச் சந்திக்க நேர்ந்து அவளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து கொடுத்தான். அவள் ஒரு குழந்தைக்கு தாயாக வேண்டிய நிலைமைக்கு அவளோடு பழகினான். பின்னர் திலகத்தை விட அழகிலும், கல்வியிலும் செல்வத்திலும் குறைந்த முத்தம்மாவை மணம்புரிய நேர்ந்தது. அவனது குடும்ப வாழ்க்கை அவன் எதிர்பார்த்திருந்தமை போன்று மகிழ்ச்சிகரமாக அமையவில்லை. தான் முன்னர் தீர்மானித்திருந்தமை போன்று திலகம் தலைகுனியுமாறு தன் மனைவியை அவனாலே அறிமுகப்படுத்த முடியவில்லை. இத்தகைய நிலைமைகள் அனைத்தும் கந்தசாமியை ஒரு பிரச்சினைக்குரிய பாத்திரமாகவே அமைத்து விட்டன.

சடங்கு நாவலின் கதைத்தலைவன் பரமநாதன் தன் மனைவி கர்ப்பமுற்றிருந்த வேளைகளிலே வேதனையுற்றமை போன்று தரையும் தாரகையும் நாவலின் கதைத் தலைவன் கந்தசாமியும் மனைவி கர்ப்பமுற்றபோது மகிழ்ச்சியுறுவதற்கு மாறாக வேதனையுற்றான். இதற்குக் காரணம் அவனது மத்தியதர வர்க்கத்து பொருளாதார நிலைமைகளே ஆகும்.

முன்னர் கல்லூரி நண்பனாகவிருந்து பின்னர் வைத்தியத் துறையில் பட்டம் பெற்று வெளிநாட்டுக்குச் சென்று வந்தவனான தியாகராசாவின் திருமணத்திற்கு அவனால் சமூகமளிக்க முடியவில்லை. இதற்கான தனது பொருளாதார நிலைமை பற்றி மனதுள் சிந்தித்துப் பார்த்துள்ளான். தியாகராசாவுக்கும் தனக்குமிடையேயிருந்த இடைவெளிபற்றி அவனுக்கு விளங்கியது. எம்மையறியாமலே நாம் பிரிந்து சென்றுகொண்டிருக்கிறோம். இதுதான் பாலசிங்கம் கூறும் வர்க்கப்பிரிவா என்று அவன் மனதுக்குள்ளே வினாவிக் கொண்டான். இத்தகைய சிந்தனைப் போக்கு சிறிது சிறிதாக அவன் வர்க்க பேதத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய விளக்கம் பெற்று வருவதனைத் தெளிவாக்குகிறது.

இந்நாவலின் முக்கிய பின்னணியாகக் கொள்ளப்பட்ட காலப்பகுதியிலே (1956 – 1959) ஈழத்தில் ஏற்பட்ட தேசிய முதலாளித்துவத்தின் எழுச்சியும் பெரும்பான்மைச் சமூகத்தவருக்கு வேலைவாய்ப்புகள் அதிகம் கிடைக்கத் தொடங்கியமையும் இனக்கலவரமும் கந்தசாமியைப் பாதித்துள்ளன. தேசிய முதலாளித்தவத்தின் எழுச்சியினால் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த அவன் பொருளாதார ரீதியிலே துன்பங்களை அனுபவிக்க நேரிட்டது. பெரும்பான்மைச் சமூகத்தவருக்கே வேலைவாய்ப்புக்கள் கிடைக்கத் தொடங்கியமையினாலே தொழில் பெறுவதில் கஷ்டங்களை அனுபவித்தான். இனக்கலவரத்தினாலே அவனும் அகதிகளில் ஒருவனாகி சொந்த ஊருக்கு திரும்ப வேண்டியிருந்தது. 1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் மத்தியதர வர்க்கத்தினர் எங்ஙனம் பாதிக்கப்பட்டனர் என்பதனைக் கந்தசாமியின் பாத்திரம் மூலமாக ஆசிரியர் காட்டியுள்ளார்.

மத்தியதர வர்க்கத்தினர் எப்போதுமே தமது வர்க்க நிலை பற்றி உணர்வதில்லை. கோழைகளாகவே நடந்து கொள்கின்றனர் என்பதை கந்தசாமி விளங்கிக் கொள்ளத்தக்க சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. ஒரு நாள் கடையொன்றிலே "நெஸ்ப்றே"யை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கினான். அதே வேளை ரணசிங்கா என்ற தொழிலாளி கடை முதலாளியை அச்சுறுத்தி கட்டுப்பாட்டு விலைக்கே அப்பொருளை வாங்கிச் சென்றான். அதனைக் கவனித்த கந்தசாமி பின்வருமாறு சிந்தித்தான்.

> **"நல்ல பிள்ளையாக நான் ஏமாந்து திரும்புகிறேன். முதலாளியை எதிர்த்து ரணசிங்கா போல கேட்க எனக்கு ஏன் துணிச்சலில்லை. இப்படி ஒவ்வொருவனும் அவன் போல் கேட்க தொடங்கினால் பிளாக் மார்க்கட் இருக்க முடியுமா? எமது வகுப்பினர் தான் வர்க்க உணர்வில்லா கோழைகள். ஏழைத் தொழிலாளர்கள்தான் வர்க்க உணர்வு பெற்று எதிர்த்து நிற்கிறார்கள். நானோ அவர்களோடு கைகோர்த்தே நிற்க வேண்டும். நாம் அடிக்கடி வர்க்க நிலையை மறந்து விடுகிறோம்."**

இது தொடர்பாக லி. பொடோஸெட்னிக், எஸ்பிர்கின் ஆகிய ஆசிரியர்களின் கருத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

> **"முதலாளித்துவத்தை எதிர்க்கிற வர்க்கங்கள் அனைத்திலும் பாட்டாளி மக்கள்தான் அதிகமாக வர்க்க உணர்வு படைத்தவர்கள். அது பெரிய அளவில் உற்பத்தி செய்வதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இது சமூகப்பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்த வடிவமாக இருக்கிறது. ஏராளமான தொழிலாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்யும் பெரிய தொழிற்சாலைகளில் வேலை நிலைமைகள் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடுத்தி கட்டுப்பாடுடையவர்களாகச் செய்து பாட்டாளி மக்களுக்குக் கூட்டுணர்வைக் கற்றுக்கொடுத்து மற்ற எந்த வர்க்கத்தைக் காட்டினாலும் அதிகமான சக்தியோடு உணர்வுப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடும்படி செய்கிறது."**

மத்தியதர வர்க்கத்தினர் தரையில் காலூன்றாமல் தாரகைகளை பற்றி வாழவே விரும்புகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு கந்தசாமியின் பாத்திரப்பண்பு அமைந்துள்ளது. இவ்வர்க்கத்தினரின் "திரிசங்கு சுவர்க்கம்" போன்ற நிலையை கதைத்தலைவனின் சிந்தனை மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விரக்தி, சோகம், கோழைத்தனம் ஆகிய தனிமனித கதைத்தலைவர்களின் சில பண்புகள் அவனிடம் சிறிதுகாலம் வரையிலே இருந்து வந்தன. காதலிலே தோல்வியடைந்த கந்தசாமி தான் மகிழ்ச்சியாக வாழ முடியாமைக்குத் திலகமே காரணம் எனச் சிந்தித்தான். தன்னைத் திலகம் மட்டுமன்றி உலகமே ஒருமித்து ஏமாற்றி விட்டதாகவே உணர்ந்தான். அவ் வேளையில் அவனிடம் கோழைத்தனம் அல்லது துணிவில்லாமையும் ஆரம்பத்தில் காணப்பட்டது. **"உழைப்பில்லை, தொழிலில்லை, பணமில்லை என்னிடம் என்ன துணிச்சல் ஏற்பட முடியும்"** என அதற்காகச் சமூக ரீதியிலான காரணத்தை அவன் சிந்தித்துள்ளான். இத்தகைய வகையில் சிந்தித்து முடிவு செய்யும் திறம் தனிமனித கதைத் தலைவர்களிடம் இருக்கவில்லை. இதற்குக் காரணம் கந்தசாமியின் பாத்திரம் சமூகச்சார்பு கொண்டதாக படைக்கப்பட்டமை ஆகும். தனிமனித கதைத்தலைவர்கள் சமூகத்தினின்றும் தம்மைப் பிரித்துக் கொண்டு தொடர்பின்றி வாழ்ந்தவர்களாவர். எனவே கந்தசாமிக்கும் அவர்களுக்குமிடையே பாத்திரப் பண்பின் அடிப்படையிலே வேறுபாடு உண்டு.

தனிமனித கதைத் தலைவர்களில் சிலர் கதையின் முடிவிலே வாழ்க்கையில் விரக்தியுற்று தம்போக்கிலே எங்கோ செல்வதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கந்தசாமியின் பாத்திரப் பண்பு இத்தகையதாக அமையவில்லை. இந்நாவலின் இறுதியிலே **"கந்தசாமி பஸ்நிலையத்தை நோக்கி நடக்கிறான். சிந்தனையிலே புதிய நம்பிக்கை. கண்களிலே புதிய ஒளி, நெஞ்சிலே நெருப்பு"** எனக் குறிப்பிட்டு ஆசிரியர் நாவலை முடித்துள்ளார். இங்ஙனம் கூறுவதன் மூலமாக கந்தசாமியிடம் முன்னர் காணப்பட்ட தனிமனிதக் குறைகள் அற்று அகன்ற எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கும் பாத்திரமாக வளர்ச்சி எய்தியுள்ளான் என்பதை குறிப்பாகச் சுட்டியுள்ளார்.

கந்தசாமியும் தனிமனித கதைத் தலைவர்களைப் போன்று எப்போதும் சிந்தனை வயப்பட்டவனாக இருந்துள்ளான். ஆயினும் அவனது சிந்தனைகள் காலப்போக்கிலே ஆக்க பூர்வமான சிந்தனைகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய அவனது மனோ வளர்ச்சிக்கு முற்போக்குக் கொள்கைகள் கொண்ட பாலசிங்கத்தின் போதனைகளே காரணமாகும். கந்தசாமியுடன் ஓரளவிற்கு செ.யோகநாதனின் திருச்சிற்றம்பலம் குறுநாவலின் கதைத்தலைவனான திருச்சிற்றம்பலத்தை ஒப்பிடலாம். ஆரம்பத்திலே தனிமனிதப் பாத்திரமாக இருந்த திருச்சிற்றம்பலம் மன விரக்தியுற்று தற்கொலை செய்யப்புறப்பட்டவன் பின்னர் மனம்மாறி நம்பிக்கையுடன் புதுவாழ்க்கையைத் தொடங்கினான். "திருச்சிற்றம்பலத்தின் முகத்திலே புதிய ஒளி துலங்கிற்று. லேசான புன்முறுவல் முகத்தை மலர்த்திற்று" என ஆசிரியர் நாவலை முடித்துள்ளார். ஆயினும் ஒப்பீட்டு ரீதியிலே நோக்குமிடத்து கந்தசாமியின் பாத்திரப் பண்பில் காணப்படும் வளர்ச்சி நிலையினை திருச்சிற்றம்பலத்தின் பாத்திரப்பண்பில் காண்பதற்கில்லை.

செ. கணேலிங்கம் பரமநாதன், (சடங்கு) நாகரத்தினம், (செவ்வானம்), கந்தசாமி (தரையும் தாரகையும்) ஆகிய கதைத்தலைவர்கள் தமிழ் நாவல் இலக்கியத்துக்கு புதியவர்கள் நாவலாசிரியரின் படைப்பாற்றல் இவர்கள் மூலம் புலப்படுத்துகின்றது. அதேவேளை இலங்கையின் தமிழ் நாவல் இலக்கியத்தின் போக்கினையும் இக்கதைத்தலைவர்களின் பாத்திரவார்ப்பு உணர்த்துகின்றது. ஆயினும் இக்கதைத்தலைவர்களின் பேச்சுமொழிப் பிரயோகம் குறித்து நாவலாசிரியர் போதிய அக்கறை செலுத்தவில்லை. இத்தகைய குறை இருந்தபோதிலும் இப்பாத்திரங்கள் தமிழ் நாவல் உலகில் தனித்துவமான சமுதாயச் சார்பு கொண்ட கதைத்தலைவர்களாக விளங்குகின்றனர் என்பது தவறாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி - பழமையில் பூத்த புதுமை



கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

நெடிய வரலாறு கொண்ட தமிழ்க்கவிதை, கண்டுகொண்ட மிக முக்கிய ஆளுமைகளில் பாரதியாரும் ஒருவர். அவர், தமிழ்க்கவிதை வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம், அவரால் தமிழிலக்கியத்துக்கு அறிமுகமான நவீன சிந்தனையே என்றால் மிகையில்லை. கவிதையின் உள்ளடக்கப் பொருண்மையிலும் உருவ அமைப்பிலும் அவர் பல மாற்றங்களை ஏற்படுத்தினார். சிலருக்கு மட்டுமாக இருந்த தமிழ் இலக்கியத்தை ஜனநாயகப்படுத்தி, பலருக்கும் உரியதாக்கினார். இதற்காக எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு ஆகிய இவற்றைக் கொண்டு ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ள மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படியாக எழுதினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக விஞ்ஞானத் துறைகளிலும் அதன் தொடர்ச்சியாகக் கலை இலக்கியத் துறைகளிலும் ஏற்பட்ட நவீன மாற்றங்கள், காலனித்துவ ஆட்சி காரணமாக இந்திய தேசத்துள் நுழைந்தபோது, தமிழிலக்கியப்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரப்பிற் கவிஞராக இயங்கத் தொடங்கியிருந்தவர், பாரதியார். எனவே, நவீன மாற்றமானது, அவர் வாழ்ந்த காலப்பகுதி அவருக்கு இன்றியமையாமல் வழங்கிய வரலாற்றுக் கடமையாயிற்று. இவ்வரலாற்றுக் கடமையைத் தமது தீர்க்கதரிசன நோக்கோடும், முற்போக்கு எண்ணத்தோடும் நிறைவேற்றியமையாலேயே பாரதியார் தமது சமகாலக் கவிஞர் பிறர் எவரைக் காட்டிலும் மிகுந்த முக்கியத்துவமுடையவரானார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்துப் படைப்பாளிகள் மற்றும் அறிஞர்கள் பலரும் பாரதியளவுக்குத் தெளிந்த சிந்தனையோடு நவீனகாலத்தை வரவேற்கவில்லை. இதற்குக் காரணம், இம் மாற்றம் இந்தியாவுக்கு வந்த முறையேயாகும். நிலவுடைமைச் சமுதாய அமைப்பு நிலவிக்கொண்டிருந்த இந்தியாவில் திடீரென ஏகாதிபத்திய ஆட்சியாளர்களாலே திணிக்கப்பட்டதே முதலாளித்துவ சமூக அமைப்பாகும். அதுவும் அது வழங்கிய நவீனத்துவமும் இந்தியா இயல்பாக ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் வந்தடையவில்லை. இதனை, **"தமிழில் நவீனத்துவம் இயல்பாய்த் தோன்றவில்லை. பார்ப்பனியச் சிந்தனை மரபும், சாதிய உற்பத்தி முறையும், குடியேற்ற ஆட்சி முறையும், நவீனத்துவக் கூறுகள் பலவற்றை இங்கே வலிந்து புகுத்தியது"** எனக் குறிப்பர் ஆய்வாளர்.

இதனால், ஒரு தருக்கரீதியான வளர்ச்சிப்பாதையும், முன்னேற்றமும் இந்தியாவில் ஏற்பட வாய்ப்பில்லாமற் போய்விட்டது. முதிர்ச்சியின்றியிருந்த சமுதாயத்துக்குக் கிடைத்த நவீன மாற்றத்தைக் குறித்த குழப்பவுணர்வே, அப்போது தமிழகத்துப் படைப்பாளிகள் பலரிடமும் இருந்தது. இக்குழப்பவுணர்வால் புதிய வரவுகளை - அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து சரியாகக் கணிப்பிட அவர்களிற் பலராலும் இயலவில்லை. ஆனால், பாரதியோ வந்துகொண்டிருந்த மாற்றங்களை புத்திபூர்வமாக ஆராய்ந்து அவற்றுள் தேவையானவற்றை வரவேற்கக்கூடிய அறிவாளுமையோடு இயங்கிக்கொண்டார். ஸ்ரீ அரவிந்தர் போன்ற பாரதத்தின் அதிமுக்கிய ஆளுமைகளின் கருத்துக்களை அறிந்த வண்ணம் இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கு பார்த்தாலும் மாறுதல், அரசாட்சியிலே மாறுதல், நமது ஜனங்களிலே மாறுதல். புதிய பிரச்சினைகள், புதிய சிந்தனைகள் - எல்லாச் செயல்களிலும் புதிய வழிகள்" [2] எனும் அரவிந்தரின் பேட்டியை தமது "விஜயாவில்" பிரசுரித்தார். இவ்வாறு, மாற்றங்களை பிரக்ஞையோடு ஏற்றுக் கொள்வதற்கு பிற சமகாலக் கவிஞர்களிடம் இல்லாதிருந்த காலவுணர்வு பாரதியாரிடம் மிகுதியாகவிருந்தது ஒரு முக்கியமான காரணமாகும்.

**"மனிதர் எண்ணத்தை மீறியும் காலசக்தி வேலை செய்வதுண்டு. அப்படிப்பட்ட காலம் இப்போது உலகமெங்கும் தோன்றியிருக்கிறது"** [3]

"மேலும் நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாறமாற பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களை வழங்க வேண்டும்" [4]

என்பன பாரதி கூற்றுகள்.

**"காலத்திற்கேற்ற வகைகள் அவ்வக்**
**காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்**
**ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் எந்த**
**நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றும் இல்லை"** [5]

என்பது அவரது பிரசித்தமான "உயிர்பெற்ற தமிழர்பாட்டு" எனும் கவிதையின் ஒரு பகுதி. இம்மேற்கோள்கள் அவருடைய காலவுணர்வை எடுத்துக்காட்டப் போதுமான பதச்சான்றுகளாக விளங்குகின்றன.

இவ்வாறு, கால உணர்வோடு நவீன மாற்றங்களை வரவேற்ற பாரதியார், ஐரோப்பாவின் நவீன போக்கை அப்படியே வழிமொழிந்தவர் அல்லர். இம் மாற்றங்களுள் பாரத மக்களுக்கும் தமிழ் நாட்டு சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய மாற்றங்கள் என, தாம் கருதியவற்றையே ஏற்றுக் கொண்டார் அவர். ஐரோப்பிய நாகரிகத்திற் கலந்துகிடந்த மறுதலிக்க வேண்டிய பண்புகளை இனங்காண அவர் தவறினாரல்லர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**"ஐரோப்பிய நாகரீகத்தின் புறத்தோற்றங்களிலே ஆட்சேபத்துக்கிடமான அம்சங்கள் பலவும் இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை"** 'என்பது பாரதி கூற்று. இதை உணராமல் ஐரோப்பிய நாகரிகத்தையும், நவீன மாற்றங்களையும் அப்படியே பின்பற்ற விரும்பி நின்ற சுதேசிகளை அவர், **"நம்முடைய உடைகள் சுகாதார முறைக்கு விரோதமில்லாமல் தான் ஏற்படுத்தியிருக்கின்றன. அதை நம்மவர்கள் சிலர் விட்டுவிட்டு துரையாய் விடவேண்டுமென்று அநாவசியமாக சட்டையின் பேரில் சட்டை போட்டுக் கொள்கிறார்கள். இந்த உஷ்ண பூமிக்கு இது வெப்பத்தைக் கொடுப்பதால் தாம் இருக்கும் இடத்திற்கு பங்கா போடவேண்டியதாய் இருக்கிறது. இவைகளெல்லாம் செய்து கொண்டால்தான் பெரிய மனுசத்தனம் என்று எண்ணுகிறார்கள்."** [7]

எனக் கண்டிக்கிறார். மேலும் "தமிழச்சாதி" எனும் கவிதையில்,

**"மேற்றிசை வாழும் வெண்நிற மக்களின்**
**செய்கையும் நடையும் தீனியும் உடையும்**
**கொள்கையும் மதமும் குறிகளும் நம்முடை**
**யவற்றினும் சிறந்தன ஆதலின் அவற்றை**
**முழுதுமே தழுவி மூழ்கடின் அல்லால்**
**தமிழச்சாதி தரணி மீதிராது"** [8]

என மேலைத்தேயத்தின் அனைத்து மாற்றங்களையும் உயர்வானவை எனக்கருதி, அவற்றை அப்படியே பின்பற்ற நினைக்கும் மக்களைக் கடிந்துரைக்கிறார்.

**"ஓர் நவீன உண்மை வரும்போது, அதை ஆவலோடு அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்"[9] என்பதே பாரதியார் கொள்கை. இதனை ஊன்றி அவதானிப்பவர்கள், அவர் நவீன மாற்றங்களை வரவேற்றிருக்கின்றபொழுதும், அவை உண்மைச் சார்புடையதாய் இருக்கவேண்டும் என்பதையும் சேர்த்தே வலியுறுத்தியிருக்கக் காணலாம்.**

மேலைப்புலத்தின் நவீனத்தை எதிர்கொள்ளும்போது ஏற்படவல்ல பாதக அம்சம் ஒன்றைக் குறித்து பாரதியார் மிகுந்த கவனமாக இருந்துள்ளமையையும் இவ்விடத்தில் நோக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானதாகும். பெரும்பாலும் நவீனத்தின் வசீகரம் மரபை முற்றாகக் கைவிடத்தூண்டி தன்பின்னே கீழைநாடுகளை அழைத்துவிடவல்லதாக இருந்தது. இதனால், கீழை நாடுகள் இதுவரை காலமும் தமது தனித்தன்மைகளாகப் பேணிய கலாசார, விழுமியங்களைத் தொலைத்து விடுகின்ற ஒரு பேராபத்துத் தோன்றிற்று.

"ஒவ்வொரு மொழிக்குரிய மரபும் செவ்வியல் தன்மையும், நிகராகரிக்கப்பட்டு ஐரோப்பிய பாணியிலான கதை கூறும் முறையை மையப்படுத்தியது. உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆயிரக்கணக்கான இனக்குழுவிற்கு இருந்து வந்த பாரம்பரியமான கதைகூறும் மரபு வழியிலான வடிவங்களை நவீனத்துவம் அழித்து ஒற்றைக் கதையாடலாக அமைத்தது." [10]

இது தொடர்பில் பாரதி மிகுந்த விழிப்போடு இருந்துள்ளார். பாரதத்தினதும், தமிழினதும் மரபின் செழுமையான அம்சங்களை நன்கு உணர்ந்திருந்தவர் அவர். எனவே அவற்றின் உன்னத விடயங்களைக் கைவிடுதல் அவருக்கு உவப்பானதன்று. எனவே, தாம் தோன்றிய மரபில் உள்ள ஆரோக்கிய விடயங்களையும் அவர் தொடர்ந்து முன்னெடுக்கவே செய்தார். சங்கச்சான்றோர், உபநிடத முனிவர்கள், வள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலிய பலரிடமிருந்தும் ஆரோக்கியமான விடயங்களைத் திரட்டிய ஒரு கூட்டுமேதையாக விளங்கிய பாரதி [11] இந்திய மரபுச் செல்வங்களிலுள்ள பயன்மிக்க விடயங்களை இழக்காமலேயே நவீன மாற்றங்களை இந்தியா வரவேற்க வேண்டுமென விரும்பினார்.

இவற்றைத் தொகுத்து நோக்கும்பொழுது, பாரதியார், மேலைப்புலத்திருந்து வந்த நவீனமாற்றங்களை எவ்வித ஆராய்ச்சியும் இல்லாமல் அப்படியே ஏற்றுக்கொண்டவரல்லர் என்பது புலனாகின்றது. தமது காலத்தில் உலகளாவி ஏற்பட்ட நவீன மாற்றங்களுள் தமது தேசத்துக்கும், தமது மொழிக்கும், தமது சமூகத்துக்கும், பயன்தரக்கூடிய - உண்மையான - மாற்றங்களையே அவர் வரவேற்றார். நன்மை தரமாட்டாதெனத் தாம் கருதிய மாற்றங்களையும் பொய்ம்மைச் சார்புடைய நவீனங்களையும் துணிந்து நிராகரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு விடயங்களை அப்படியே கண்மூடித்தனமாக அவர் ஏற்கவோ, நிராகரிக்கவோ இல்லை. மரபிலிருந்து வேண்டாதனவற்றை விலக்கி, வேண்டுவனவற்றைத் தொடர்ந்து பின்பற்றத்தூண்டி, நவீனத்திலிருந்து அவசியமானவற்றை வரவேற்றமையிலேயே அவரின் தனித்துவம் துலங்கியது.

மரபில் காலாவதியாகாதவற்றைக் கிரகிக்கக்கூடிய திறனும், நவீனத்தில் அவசியமானவற்றை உள்ளுணர்ந்து கொள்ளவல்ல தீர்க்கதரிசனமும் அவரிடம் சங்கமமாயிருந்தன. இதனால், நவீனவாதிகள் தமது தொடக்கமாகவும், பழமைபேண் இலக்கியவாதிகள் தம் முன்னோரின் தொடர்ச்சியாகவும் பாரதியாரை இனங்கண்டு போற்றினர், போற்றி வருகின்றனர். இதனையே இன்னொரு விதமாக, “பழமையில் வேரூன்றிப் புதுமையில் பூத்துக்குலுங்கும் தரு மகாகவி பாரதி”[12] என, முதலாவது பாரதியியல் திறனாய்வாளரான விபுலானந்தர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, நவீன சிந்தனைகளதும், பாரத மரபினதும் ஆரோக்கியமான விடயங்கள் ஒருமித்து, சமகாலத்திற்கு ஏற்றவிதத்திலே சிறந்த கவிதா ஆளுமையோடு வெளிப்பட்டபோது பாரதியின் கவிதைகள் ஒரு புதிய சகாப்தத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் உருவாக்கி அழியாப்புகழ் பெற்றன.

சான்றெண் விளக்கம்


1. மார்க்ஸ், அ., **உடைபடும் புனிதங்கள்,** பார்க்க: இலக்கியக் கோட்பாடுகள் நோக்கில் பாரதி படைப்புக்கள், (2013) சென்னை: பாவை, பக். 50.
2. வேங்கடாசலபதி, ஆ. இரா. (தொ.ஆ.), **பாரதி விஜயா கட்டுரைகள்** (2004). சென்னை: காலச்சுவடு பதிப்பகம், பக். 142.
3. பாரதியார், **பாரதியார் கட்டுரைகள்,** (2003), சென்னை: கவிதா பப்ளிகே'ன், பக்.433.
4. வேங்கடாசலபதி, ஆ. இரா. (தொ.ஆ.), **பாரதி விஜயா கட்டுரைகள்** , மு.கு.நூ., பக். 142.
5. பாரதியார், **பாரதியார் கவிதைகள்**, (1998) சென்னை: வானதி பதிப்பகம், பக். 466.
6. பாரதியார், **பாரதியார் கட்டுரைகள்,** மு.கு.நூ., பக். 127.
7. வேங்கடாசலபதி, ஆ. இரா. (தொ.ஆ.), **பாரதி விஜயா கட்டுரைகள்** , மு.கு.நூ., பக். 133.
8. பாரதியார், **பாரதியார் கவிதைகள்,** மு.கு.நூ., பக். 48.
9. பாரதியார், **பாரதியார் கட்டுரைகள்,** மு.கு.நூ., பக். 128
10. பார்க்க: **இலக்கியக் கோட்பாடுகள் நோக்கில் பாரதி படைப்புக்கள்,** மு.கு.நூ., பக். 113.
11. ஜீவானந்தம், ப., (2000), **“பாரதியின் பொதுஉடைமை,”** பாரதியைப் பற்றி ஜீவா, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், பக்.50.
12. மணி, பெ.சு., (1995), தமிழ்ப்புலவர் மரபும் பாரதிமரபும், சென்னை: பூங்கொடி பதிப்பகம், பக்.199.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண பல்கலைக்கழக நுழைவு: ஓர் கண்ணோட்டம்



கலாநிதி ரொஷான் ராகல்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

செல்வி அருட்சுதா சுப்பிரமணியம்
விரிவுரையாளர்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## 1. அறிமுகம்

சமீப ஆண்டுகளில் இலங்கை பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி மிகவும் போட்டிக்குரியது என்பது கடந்த கால புள்ளி விபரங்களில் இருந்து தெளிவாகிறது. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளை கொண்டிருப்பினும், விகிதாசாரப்படி உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மொத்த மாணவர் எண்ணிக்கையில் ஏறக்குறைய 10% வரையினர் மட்டுமே பல்கலைக்கழகங்களிற்குள் நுழையும் வாய்ப்பை பெறுகின்றனர்[1]. இந்த பின்னணியில் எமது கடந்த ஆய்வில்[2] வடக்கு-கிழக்கு மாகாண மாணவர்கள் கடந்த தசாப்தங்களில் எவ்வாறு இப்போட்டித்தன்மை வாய்ந்த பரீட்சையை எதிர்கொண்டனர் என்று ஆராய்ந்தோம். அதன் தொடர்சியாக இவ்வாய்வுக்கட்டுரையானது கடந்த தசாப்தங்களில் வட மாகாணம் மற்றும் யாழ் மாவட்ட பல்கலைக்கழக அனுமதி நிலவரங்களில் ஏற்பட்ட மாற்றங்களை ஏனைய மாகாணங்கள், மாவட்டங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக அமைந்துள்ளது.

## 2. பல்கலைக்கழக அனுமதியின் பின்புலம்

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர் அனுமதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அரசாங்கத்தின் உடன்பாட்டுடன் வரையறுக்கப்படும் அனுமதிக் கொள்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. குறித்த கல்வியாண்டிற்கான தெரிவு அவ்வாண்டில் நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் தர வரிசை அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகள் (தற்போதுள்ள பாடவிதானப்படி): 1) சகல மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் குறைந்தது சாதாரண சித்தி (S) கொண்டிருத்தல் 2) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள் பெற்றிருத்தல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட தகைமைகளை கொண்டிருப்பினும் மிக குறைவானவர்களே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படுகிறார்கள். அத்துடன் கலைப்பிரிவு கற்கை நெறிகள் தவிர்ந்த ஏனைய சகல கற்கை நெறிகளுக்கு இரட்டைத் தகுதி அடிப்படையில் அனுமதி மேற்கொள்ளப்படுவதுடன் கலைப்பிரிவு சார்ந்த கற்கை நெறிகளுக்கு தீவளாவிய திறமை அடிப்படையில் மட்டும் அனுமதி மேற்கொள்ளப்படுகிறது. இரட்டைத் தகுதி முறையானது தீவளாவிய திறமை (All Island Merit criteria) மற்றும் மாவட்ட அடிப்படையிலான திறமை (Under District Merit Criteria) என்பவற்றை கொண்டதாகும். இரட்டை தகுதி முறைமையின் கீழ் ஒவ்வொரு கற்கை நெறிக்குமுள்ள 40% வரையான ஒதுக்கீடுகள் நாடளாவிய ரீதியில் பெறுபேறுகளின் தர வரிசைப்படியும், மீதமுள்ள இடங்கள் மொத்த குடிசனத்தொகை விகிதாசாரப்படி 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்படுகிறது.

## 3. ஆய்வின் வரையறை

இவ்வாய்வு இரு படிநிலைகளில் முன்னெடுக்கப்பட்டது. முதற்படியில் வட மாகாணத்துடன் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் தீவளாவிய திறமை அடிப்படையில் அதிக மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்ற இரு மாகாணங்கள் ஒப்பிட்டு ஆராயப்பட்டது. இரண்டாம்படியில் முதற்படியில் தெரிவுசெய்யப்பட்ட மாகாணங்களுக்குட்பட்ட மாவட்டங்கள் கருத்திலெடுக்கப் பட்டது.

ஆய்விற்கான தரவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கடந்த ஆண்டுகளில் வெளியிடப்பட்ட "Statistics on Higher Education in Sri Lanka" மற்றும் "Sri Lanka University Statistics" ஆகிய வெளியீடுகளில் இருந்து பெறப்பட்டவை. கடந்த மூன்று தசாப்தங்களில் (80s, 90s, 2000s) ஒன்பது கல்வியாண்டுகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டது. அவையாவன 85/6, 86/7, 87/8, 93/4, 94/5, 95/6 மற்றும் 2009/10, 10/11, 11/12. மேலும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதிக விஞ்ஞானப் பிரிவு மற்றும் வணிகவியல் பிரிவு மாணவர்களின் பிரபல தெரிவுகளான முறையே மருத்துவம், இயந்திரவியல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகள் ஆய்விற்குட்படுத்தபட்டது. கலைப்பிரிவு சார்ந்த கற்கை நெறிகளுக்கு மாவட்ட அடிப்படையிலான திறமைப் பயன்படுத்தபடுவதில்லை என்பதால் அவை இங்கு ஆராயப்படவில்லை.

## 4. சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி

இந்த ஆய்வில் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி அளவுகோலாக பாவிக்கப்படுகிறது. பகுதி 2ல் குறிப்பிடப்பட்டதைப் போன்று 40% வரையான ஒதுக்கீடுகள் நாடளாவிய ரீதியில் பெறுபேறுகளின் தர வரிசைப்படி தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே இது ஓர் குறிப்பிட்ட இடத்தின் கல்வித்தரத்தை மதிப்பிட பொருத்தமானது. எனினும் இப்பெறுமதியை அக்குறிப்பிட்ட பிரதேசத்தின் குடிசனத்தொகையின் விகிதாசாரப்படி கணிப்பது சாலப் பொருத்தமானதாக இருக்கும். அத்துடன் மாவட்ட அடிப்படையிலான திறமை அம்மாவட்டத்தின் சனத்தொகையின் விகிதாசாரப்படி கணிக்கப்படுகிறது. ஆகையால் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதியானது ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் இருந்து குறிப்பிட்ட கற்கை நெறிக்கு தீவளாவிய திறமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் அம்மாவட்டத்தில் இருந்து மாவட்ட அடிப்படையிலான திறமையில் அக்கற்கை நெறிக்கு அனுமதி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும். குடிசன மதிப்பீட்டில் ஏற்படும் தாமதங்களால் மேற்குறிப்பிட்ட முறை சிறந்த முறையாக இல்லாவிடினும் எமது ஆய்வுக்கு ஒரு நியாயமான துல்லியமான அளவீடாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நம்புகிறோம். மேலும் இப்புதிய பெறுமானம் ஒன்று எனில் அக்குறிப்பிட்ட மாவட்டத்தில் இருந்து தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் மாவட்ட அடிப்படையிலான திறமையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் சமம் என்பதுடன் அம்மாவட்டம் கல்வித்தரத்தில் உயர்ந்து நிற்கிறதென்பது வெளிப்படை உண்மையாகும்[3].

## 5. முடிவுகளும் அவற்றின் பகுப்பாய்வும்

பிரிவு 3ல் குறிப்பிடப்பட்டதைப் போன்று இவ்வாய்வு மாகாண மட்டம் மற்றும் மாவட்ட அளவு ஆகிய இரண்டு வேறுபட்ட படிநிலைகளில் மேற்கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் மூன்று கற்கை நெறிகளுக்கும் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி கணிக்கப்பட்டது.

## 5.1 மாகாண மட்டம்

தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கற்கை நெறிகளுக்கும் மாகாண மட்ட பகுப்பு ஒன்பது மாகாணங்கள் (CP-மத்திய மாகாணம், EP-கிழக்கு மாகாணம், NC-வடமத்திய மாகாணம், NP-வடக்கு மாகாணம், NW-வடமேல் மாகாணம், SB-சப்ரகமுவா மாகாணம், SP-தெற்கு மாகாணம், UP-ஊவா மாகாணம், மற்றும் WP-மேற்கு மாகாணம்) மத்தியில் நிகழ்த்தப்பட்டது.


வரைபு 1 கடந்த மூன்று தசாப்தங்களில் மருத்துவ கற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதியை அனைத்து மாகாணங்களுக்கும் உருப்படுத்திக்காட்டுகிறது. எண்பதுகளில் முதல் மூன்று இடங்களில் இருந்த மாகாணங்களாவன முறையே NP, WP மற்றும் SP. எனினும் அடுத்த இரு தசாப்தங்களில் வடக்கு மாகாணம் தனது நிலையை இழந்ததுடன் தெற்கு மாகாணம் உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. இது வரைபில் வரையப்பட்ட புள்ளியிட்ட கோடுகளை உற்று நோக்குவதன் மூலம் தெளிவாகிறது. அத்துடன் மேற்கு மாகாணம் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காட்டவில்லை.

எண்பதுகளில் வடக்கு மாகாணங்களில் இருந்து மருத்துவ கற்கை நெறிக்கு தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை சராசரி எண்ணிக்கையின் இரட்டிப்பாகும். இன்று இந்த எண்ணிக்கை சராசரியின் அரை மடங்காகும். இதற்கான விவாதங்களை வாசகர்களிடம் விட்டு விடுகிறோம். தெற்கு மாகாணத்தின் போக்கு இதற்கு எதிர்மாறானதாக சராசரியின் அரை மடங்கிலும் குறைவாக எண்பதுகளில் காணப்பட்டதுடன் தற்போது சராசரி எண்ணிக்கையின் இரு மடங்காகியுள்ளது. மேற்கு மாகாணம் அண்ணளவாக உறுதி நிலையில் இருப்பதுடன் சாதகமான கல்வித்தரத்தைக் கொண்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு 1: அனைத்து மாகாணங்களுக்குமான மருத்துவ கற்கை நெறியின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி





வரைபு 2: இயந்திரவியல் கற்கை நெறிக்கான சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு 3: முகாமைத்துவ கற்கை நெறிக்கான சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி




வரைபு 2 அனைத்து மாகாணங்களுக்குமான இயந்திரவியல் கற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதியை விரித்துரைக்கிறது. வடக்கு மாகாணங்களில் இருந்து இயந்திரவியல் கற்கை நெறிக்கு தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை ஆரம்பகாலங்களில் சராசரி எண்ணிக்கையின் மூன்று மடங்காக இருந்து தற்போது சராசரிக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. தெற்கு மாகாணம் சராசரியின் அரை மடங்கில் எண்பதுகளில் காணப்பட்டதுடன் தற்போது மும்மடங்கு சராசரியை அடைந்துள்ளது. மேற்கு மாகாணம் சராசரிக்கு மேல் உள்ளதுடன் அண்ணளவாக சிறு அதிகரிப்பை காட்டுகிறது.

வரைபு 3ல் முகாமைத்துவ கற்கை நெறிக்கான பெறுமதி தரப்பட்டுள்ளது. மீண்டும் மருத்துவம், இயந்திரவியல் கற்கை நெறிகளின் போக்கே இங்கும் காணக்கூடியதாக உள்ளது. வடக்கு மாகாணம் இரண்டு மடங்கிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ளது. தெற்கு மாகாணம் சராசரியின் அரை மடங்கிலிருந்து தற்போது இரண்டு மடங்கு சராசரியை அடைந்துள்ளது. மேற்கு மாகாணம் இரண்டு மடங்கு சராசரியில் மாறாதுள்ளது.

எனவே மாகாண மட்ட ஆய்வு முக்கிய மூன்று மாகாணங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட மூன்று கற்கை நெறிகளும் ஓரே போக்கைக் கொண்டுள்ளதைக் காட்டுகிறது.

## 1.1 மாவட்ட மட்டம்


இரண்டாவது கட்ட ஆய்வு மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் 25 மாவட்டங்கள் இருப்பினும் எமது ஆய்வுக்கு முக்கிய மூன்று மாகாணங்களுக்குட்பட்ட மொத்தம் 11 மாவட்டங்கள் கருத்தில் எடுக்கப்பட்டது. அவையாவன வடக்கு மாகாண மாவட்டங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா, தெற்கு மாகாண மாவட்டங்கள் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மற்றும் மேற்கு மாகாண மாவட்டங்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை.

வரைபு 4, 5 மற்றும் 6ல் முறையே மருத்துவம், இயந்திரவியல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளுக்கான தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ கற்கை நெறிகளுக்கான வரைபிலிருந்து யாழ்ப்பாணம், காலி, (மற்றும் மாத்தறை), கொழும்பு ஆகியன மாகாண மட்ட போக்கை காட்டுவதைக் காணக் கூடியதாக உள்ளது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு 4 மாவட்டங்களுக்கான மருத்துவ கற்கை நெறியின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி




வரைபு 5 மாவட்டங்களுக்கான இயந்திரவியல் கற்கை நெறியின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு 5லிருந்து யாழ்ப்பாணம், மாத்தறை (மற்றும் காலி), கொழும்பு மீண்டும் அதே போக்கை காட்டுவதைக் காணக் கூடியதாக உள்ளது

வரைபு 6 மாவட்டங்களுக்கான முகாமைத்துவ கற்கை நெறியின் சீராக்கப்பட்ட திறமை அடிப்படையிலான பெறுமதி




வரைபு 6ல் முகாமைத்துவ கற்கை நெறிகளுக்கான தரவுகளில் இருந்து யாழ்ப்பாணம், காலி, கொழும்பு அதே போக்கை காட்டுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

## 1. ஆய்வு முடிவு

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி மிகவும் சவாலான ஒன்றாக காணப்படுகிற இவ்வேளையில் வட மாகாணம் மற்றும் யாழ் மாவட்ட பல்கலைக்கழக அனுமதியின் போக்கை ஏனைய மாகாணங்கள், மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சில மாவட்டங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளோம். வட மாகாணம் மற்றும் யாழ் மாவட்ட கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் தெற்கு மாகாணம் மற்றும் முக்கிய மாவட்டங்களான காலி, மாத்தறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை காட்டியுள்ளது. எனினும் சற்றும் எதிர்பாராத விதமாக மேற்கு மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டம் எந்தவித குறிப்பிடத்தக்க கல்வி வளர்ச்சியையும் காட்டாததுடன் நிலையான தரத்தில் உள்ளது.

## மேற்கோள்கள்

1.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புள்ளிவிபரப்படி அண்மைக்காலங்களில் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மொத்த மாணவர் எண்ணிக்கை ஏறத்தாழ 200000. இதில் சுமார் 120000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுகிற போதிலும் அவர்களுள் ஏறக்குறைய 20000 பேர் மட்டுமே அனுமதி பெறுகின்றனர்.

2. Ragel and Sivanathan, "The State of Higher Education in the North and the East of Sri Lanka" in Geethavani, Sydney Australia, June 2013, pp. 52-56. [இதன் தமிழாக்கம் இளங்கதிர் -2013 இதழில் பிரசுரிக்கப்பட்டது.

3. 40% வரையான ஒதுக்கீடுகள் நாடளாவிய ரீதியில் பெறுபேறுகளின் தர வரிசைப்படி இவ்வேளையில் ஒரு பிரதேசத்திற்கான சராசரி 0.66. (இவ்வாய்வுக்கட்டுரையின் மூலப்பிரதி ஆங்கிலப்பதிவாக கீதவாணி விருதுகள்-2014 இதழில் வெளியாகியது)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம் : ஒரு யதார்த்த நோக்கு
## (Democracy in Third World Countries: A Realist Perspective)



கலாநிதி எஸ். பாஸ்கரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசறிவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இன்றைய உலகின் மகத்தான விழுமியங்களாகக் கருதப்படுபவைகளில் மிக முக்கியமான ஒன்று ஜனநாயகம். இது நல்லாட்சிக்கான அடிப்படைகளில் ஒன்றாகவும், சிறந்த ஆட்சி முறைகளில் ஒன்றாகவும் குறிப்பிடப்படுகின்றது. இன்று உலகை ஆக்கிரமித்திருக்கின்ற ஒரு சிறந்த தத்துவமாகவும் ஜனநாயகம் இருக்கின்றது. பொதுவாக உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் அனைத்தும் ஜனநாயக நாடுகளாகவே இருக்கின்றன. ஒரு நாட்டை அளவிடும் அளவுகோலாகக் கூட இது இருக்கின்றது. ஒரு நாட்டிற்கான சர்வதேச அங்கீகாரம் என்பது கூட அந்த நாட்டில் ஜனநாயகம் எந்தளவில் இருக்கின்றது என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இந்தவகையில் ஜனநாயகம் என்பது தற்காலத்தில் உலகைத் தீர்மானிக்கின்ற முக்கியமான ஒரு தத்துவமாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. உண்மையில் இந்த ஜனநாயகம் நன்மையானதா, இது உலகப் பொதுவான தத்துவமாகக் கொள்ளப் படக்கூடியதா, எல்லா நாடுகளுக்கும் பொதுவானதா, பொருத்தமானதா, போன்ற கேள்விகள் நிறையவே இருக்கின்றன. இதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகத்தின் பொருத்தப்பாடு

ஜனநாயகம் என்ற தத்துவத்தின் மிக முக்கியமான அடிப்படை மக்கள். மக்களை மையமாக வைத்து மக்களாட்சி என்ற அடிப்படையிலேதான் ஜனநாயகத் தத்துவமே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பெரும்பான்மையான மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகத்தின் சிறப்பம்சம். உண்மையில் இவை நல்ல விடயங்கள். ஆனால் பிரச்சனை என்னவென்றால் எல்லா நாடுகளுக்கும் இந்த ஜனநாயகம் பொருத்தமானதா என்பதே. முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளுக்கு இது பொருத்தமானதா என்பது. ஜனநாயகம் என்ற சிந்தனை மேற்குலகில் இருந்து தோற்றம் பெற்று முழு உலகுக்கும் பரவிய ஒன்று. இன்று இந்த ஜனநாயக முறை மேற்கத்தைய நாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் இது சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறதா என்பது கேள்விக்குரியது.

ஜனநாயகம் என்ற தத்துவம் கருத்தளவில் பயனுடையதாக இருந்தாலும் செயற்பாட்டளவில் பயனுடையதாக இருக்கும்போதே அது சிறப்பாகச் செயற்பட முடியும். அந்தவகையில் நோக்குகின்ற போது இந்த ஜனநாயகத் தத்துவம் கருத்தளவிலும் செயற்பாட்டளவிலும் மேற்குலக நாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கின்ற போதும் மூன்றாம் உலகநாடுகளுக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பெரும்பான்மை மக்களது விருப்பம் அல்லது தெரிவு என்பதே ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால் இந்தப் பெரும்பான்மை மக்கள் என்பது அளவினடிப்படியிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இது குறைபாடுடையது. உண்மையில் பெரும்பான்மை மக்கள் என்பது அளவினடிப்படையிலும் தரத்தினடிப்படியிலும் தீர்மானிக்கப்படவேண்டும். அப்போதே அது சிறப்பானதாக அமையமுடியும். உதாரணமாக தரமற்ற ஆயிரம் மக்களின் தெரிவை விட, தரமுள்ள நூறு பேரின் தெரிவு சிறப்பானதாகவும், பயனுடையதாகவும் இருக்கமுடியும். ஆனால் துரதிஸ்டவசமாக இங்கு தரமுள்ள நூறு பேரின் தெரிவை விட தரமற்ற ஆயிரம் பேரின் தெரிவே ஜனநாயகமாகக் கொள்ளப்படுகின்றது. இது பொருத்தமற்றது. உண்மையில் இதுவே ஜனநாயகத் தத்துவம் எதிர்கொள்கின்ற மிகமுக்கியமான பிரச்சனை.

## மூன்றாம் உலக நாடுகளில் ஜனநாயகம்

குறிப்பாக மேற்குலகை எடுத்துக்கொள்கின்ற போது இந்தப் பிரச்சனை மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஏனெனில் அங்கு பொதுவாகவே கல்வியறிவின் மேம்பாடும், அபிவிருத்தியடைந்த தன்மையும் மக்களின் தரத்தை அதிகரித்திருக்கிறது. எனவே மேற்குலகில் பெரும்பான்மை மக்களது விருப்பம் அல்லது தெரிவு என்கின்றபோது அது அளவினடிப்படையினதாக மட்டுமன்றி தரத்தினடிப்படையினதாகவும் இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் நிலைமை அவ்வாறில்லை. இந்த நாடுகள் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளாக இருக்கின்றமை மற்றும் இந்நாடுகளில் கல்வியறிவு பெற்றவர்களது எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமை போன்ற காரணங்களால் இங்கு பெரும்பான்மை மக்களது விருப்பம் அல்லது தெரிவு என்பது பெருமளவுக்கு அளவினடிப்படையினதாக மட்டுமே காணப்படுகின்றது. இதைச் சிறந்த ஜனநாயகம் என்று குறிப்பிட முடியாது. அத்துடன் இத்தகைய ஜனநாயகம் மூலம் இந்த நாடுகளில் ஆட்சியாளர் தெரிவு இடம்பெறுகின்றபோது தவிர்க்கமுடியாதவாறு அந்த ஆட்சிமுறையும் தரமற்ற ஆட்சிமுறையாகவே அமைய வாய்ப்புண்டு.

குறிப்பாகத் தேர்தல் முறையும், தேர்தல் முறை மூலம் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யும் முறையும் ஜனநாயகத்தின் மிக முக்கியமான இரு அம்சங்கள். தேர்தல் முறை மூலமாக எவ்வாறு ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பதைப் பொறுத்தே ஒரு நாட்டினுடைய ஆட்சிமுறை தீர்மானிக்கப்படுகின்றது. இங்கும் பெரும்பான்மை வாக்குகள் என்ற அடிப்படையிலேயே ஆட்சியாளர்கள் தெரிவு இடம்பெறுகின்றது. எனவே அரசியல் கட்சிகளும், அரசியல் கட்சி வேட்பாளர்களும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்காக அனைத்து முயற்சிகளையும் செய்கின்றார்கள். இந்த முயற்சிகள் முறையானதாகவும் இருக்கலாம், முறையற்றதாகவும் இருக்கலாம். அனேகமாக சிலசமயங்களில் வாக்காளர்கள் விலைக்கு வாங்கப்படுகின்றார்கள். உணர்வு ரீதியான விடயங்களால் அவர்கள் தூண்டப்படுகின்றார்கள். அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. எனவே இவ்வாறு முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற ஆட்சியாளர் சிறந்த ஆட்சியை வழங்குவார் என்று எதிர்பார்க்க முடியாது. பெருமளவுக்கு இத்தகைய சம்பவங்கள் மூன்றாம் உலக நாடுகளிலேயே இடம்பெறுகின்றன. வாக்காளர்களின் தரம் இதில் பிரதானமான பங்கு வகிக்கின்றது. இதனாலேதான் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமா, அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படாவிட்டால் அதை ஜனநாயகமின்மை என்று கொள்ளலாமா? என்பது போன்ற விவாதங்கள் அண்மையில் முக்கியம் பெற்றிருக்கின்றன. இதற்கு சீனாவை ஒரு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

சீனாவில் அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படவில்லை. அங்கு அனைத்து சமூக அமைப்பிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட பிரதிநிதிகளே ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்வர். ஆயினும் மேற்குலக நாடுகள் சீனாவின் இந்த செயற்பாட்டை ஜனநாயகத்திற்கு விரோதமான விடயமாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் சீனா தமது நாடு ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்து வருகின்ற மூன்றாம் உலக நாடு என்றும் அங்கு வாழ்கின்ற அனைத்து மக்களும் தரமானவர்கள் இல்லை என்றும் குறிப்பிட்டு, தெரிவுசெய்யப்பட்ட தரமான பிரதிநிதிகள் மூலம் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதாகக் கூறுகின்றது. உண்மையில் சீனா அடைந்துள்ள பொருளாதார அபிவிருத்தியைப் பார்க்கின்ற போது இதில் நியாயம் உள்ளது போன்றே தோன்றுகின்றது. எனவே ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்று குறிப்பிடப்பட்டாலும் அது தனியே எண்ணிக்கை ரீதியான, பெரும்பான்மையான விருப்பமாக அன்றி தரஅடிப்படையிலான பெரும்பான்மையாகவும் இருக்க வேண்டும் என்பதே இங்கு முக்கியமானது. ஆகவேதான் மூன்றாம் உலக நாடுகளுக்கான ஜனநாயகம் என்பது மேற்குலக நாடுகளுக்கான ஜனநாயகத்தோடு ஒன்றாக வைத்து நோக்கப்படாமல் தனியாகப் பார்க்கப்படவேண்டும் என்ற கருத்து அண்மைக்காலமாக வலுத்து வருகின்றது.

## ஜனநாயகமும் சிறுபான்மையினரின் கருத்துக்களும்

ஜனநாயகம் தொடர்பாகக் குறிப்பிடப்படுகின்ற மற்றுமொரு முக்கியமான பிரச்சனை பெரும்பான்மை என்ற வட்டத்துள் சிறுபான்மையினரது கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்படாமை ஆகும். இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று உண்மையில் பெரும்பான்மை என்ற பெயரில் சிறுபான்மையினரின் கருத்துக்கள் மறுக்கப்படுவது. இரண்டாவது பலர் போட்டியிடுகின்றபோது ஒருவருக்குக் கிடைக்கப்பெறுகின்ற ஆகக்கூடிய பெரும்பான்மை என்பது சில சமயங்களில் தோல்வியடைந்த ஏனையவர்களின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிடுகின்ற போது சிறுபான்மையாக இருக்கின்றமையாகும். இங்கு பெரும்பான்மை என்ற பெயரில் பெரும்பான்மையோரின் கருத்துக்களும் மறுக்கப்படுகின்றது. ஆகவேதான் அண்மைக்காலத்தில் ஜனநாயகம் பற்றிய மறுவாசிப்பின் அவசியம் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது.

## முடிவுரை

ஜனநாயகம் என்ற கருத்தியல் நன்மையானது. ஆயினும் நடைமுறை ரீதியாக யதார்த்தமாக நோக்குகின்றபோது சிலசமயங்களில் தற்காலத்திற்குப் பொருத்தமில்லாது இருக்கின்றது. குறிப்பாக மேற்குலகிற்கு பொருத்தமாக இருக்கின்ற போதும் மூன்றாம் உலகநாடுகளுக்குப் பொருத்தமில்லாது இருக்கின்றது. அத்தோடு ஜனநாயகக் கருத்தியலிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே ஜனநாயகம் உலகத்திற்குப் பொதுவான தத்துவம் என்று பேசுவதை விடுத்து காலமாற்றத்திற்கேற்ப அதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும். தேவையேற்படின் மூன்றாம் உலக நாடுகளுக்குப் பொருத்தமான புதிய ஜனநாயகத் தத்துவம் பற்றி சிந்திக்கவேண்டியதும் அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1) Forbrig, Joerg. 2005. **"Democratic Practice in Europe"** Council of Europe Publishing, P.134.
2) Charrad, Mounira. 2001. **"Challenges in Democracy"**, Berkeley, CA: University of California.
3) Singleton, Lianne. 2004. **"Discovering Democracy"** Ithaca, NY: Cornell.


கோரிக்கை அற்றுக்கிடக்கு தண்ணே இங்கு

வேரிற் பழுத்த பலா – மிகக்

கொடியதென்றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்

வடிகின்ற வட்ட நிலா

சீரற்றிருக்குதையோ குளிர் தென்றல்

சிறந்திடும் பூஞ்சோலை – சீ

சீஎன் றிகழ்ந்திடப் பட்டதண்ணே நறுஞ்

சீதளப் பூ மாலை....

–பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தமிழ் நாடகப் பணிகள்



கலாநிதி (திருமதி) சோதிமலர் ரவீந்திரன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து 1950 களில் தேசிய மட்டத்திலான கலை, கலாசார, பண்பாட்டு மூலங்களைக் கண்டறியும் ஒரு தேடல் முதன்மைப்படுத்தப்பட்டது. அவ்வகையில் சிங்கள பண்பாட்டுத் தேசிய மரபுகளைத் தேடும் பணியில் பேராசிரியர் ஈ.ஆர். சரச்சந்திர போன்றோர் அதிக ஈடுபாட்டோடு செயற்பட்டனர். இது ஈழத்தமிழர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இவ்வகையில் பேராசிரியர்களான க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி போன்றோரின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை.

தேசிய மட்டத்திலான கலை, கலாசார மீட்பில் நாடகங்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தமிழ் நாடகங்களின் வழி தமிழர் கலை, கலாசாரத்தை மீட்டெடுக்கப் பெரிதும் பாடுபட்ட ஒருவராகப் பேராசிரியர் சு. வித்தியானந்தனை அடையாளப் படுத்தலாம். **"ஈழத்தமிழர்களுக்கென ஒரு நாடக வடிவம் இருக்கவேண்டுமெனில் அது நாட்டுக்கூத்து மரபுதான்"** என்ற அடிப்படையில் சு.வித்தியானந்தன் அவர்கள் தமிழர்களின் தேசிய கலை வடிவத்தின் தேடலில் ஈடுபட்டார். அப்போதுதான் முகவரியைத் தொலைத்து கிராமப்புறங்களில் ஒதுக்கப்பட்டிருந்த கூத்து வடிவங்களை மீட்டெடுத்து, நவீனப்படுத்தி, கற்றோரும் மற்றோரும் இந்நாடகங்களின் சிறப்பை அறியச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பணியில் ஈடுபட்டார்.

அதன்பொருட்டு ஈழத்தின் பல பாகங்களுக்கும் பயணம் செய்தார். கூத்து வடிவங்கள் தொடர்பாக பிரசித்தி பெற்ற இடங்களில் ஒன்றாக விளங்கும் மன்னார் மாவட்டம் மீதும் அவரது கவனம் திரும்பியது. மன்னார் மாதோட்டக் கலை, கலாசார, பண்பாட்டு வரலாறு பற்றிக் காரை செ.சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.மௌனகுரு, க. சொக்கலிங்கம் போன்றோரும் பல்வேறு விதமான ஆய்வுகளை மேற்கொண்ட போதிலும் இவர்கள் எல்லோரதும் பணிகளை விடவும் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பணியே குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க வளர்ச்சியிலும் பெரிதும் பாடுபட்டார். தமது மேற்படிப்பு ஆய்வுக்காக இலண்டன் பல்கலைக்கழகம் செல்லும் முன்னரேயே தமிழ்ச் சங்கத்தோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தார். அவர் மாணவனாக இருந்த பொழுது தமிழ்ச் சங்கச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சங்க நாடக அரங்கேற்றங்களில் திரைக்குப் பின்னால் நின்று உழைத்தார். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடக முயற்சிகளுக்கு வலது கையாக இருந்தவரும் இவரே. சங்கத்தின் பெருந்தலைவராகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை இருந்தபோது பேராசிரியர் வித்தியானந்தன் மாணவர்களுக்கும் பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக இயங்கினார். அதேவேளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களைத் தயாரிக்கும் பொறுப்பும் 1950 களில் வித்தியானந்தனுக்கே கொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வித்தியானந்தனுடைய பணிகளுள் மிகவும் முக்கியமான பணியாக விளங்கியது இளங்கதிர் இதழ் வெளியீடாகும். வித்தியானந்தனுடைய தூண்டுதலும் ஆலோசனையுமே தமிழ்ச் சங்க ஆண்டு இதழாக இளங்கதிர் வெளிவந்தது. பேராசிரியர் வெளிநாட்டுப் பயணத்திலிருந்து மீண்டதும் மீண்டும் தமிழ்ச் சங்கத்தில் பெரும் பங்காளரானார். இவரது காலப்பகுதியில் தமிழ்ச் சங்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக நாடகமும் இடம்பெறலாயிற்று. அந்நாடகங்கள் பேராதனையில் மட்டுமல்லாது கண்டி, யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களிலும் மேடையேற்றப்பட்டன.

இத்தகைய பணிகள் ஒருபுறமிருக்க, நாட்டுக்கூத்தை மீட்டெடுத்த பணியே இவரது தலையாய பணியாகச் சுட்டிக்காட்டத்தக்கது. இவரது நாட்டுக்கூத்து மீட்புப் பணியானது 1959 ஆம் ஆண்டு தொடங்கியது. அவ்வகையில், 1959, 1960 களிலே மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து கூத்துக்களைத் தருவித்தும் அவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் மேடையேற்றியும் **"துருப்பிடித்த மணிபோலக்"** காணப்பட்ட நாட்டுக்கூத்தைப் பட்டை தீட்டி அதன் மதிப்பினை உயர்த்தினார். பல நாட்டுக்கூத்துக்களையும் தயாரித்து வழங்கினார். அவ்வகையில் பேராசிரியர் சி.மௌனகுருவைக் கதாநாயகனாகக் கொண்டு 1962 இல் **"கர்ணன் போர்"** என்ற வடமோடிக் கூத்தையும் 1964 இல் **"நொண்டி நாடகம்"** என்ற தென்மோடிக் கூத்தையும் 1965 இல் **"இராவணேசன்"** என்ற வடமோடிக் கூத்தையும் தயாரித்து நெறிப்படுத்தி அளித்தார். **"வாலிவதை"** (1968) என்ற வடமோடிக் கூத்தும் இவரால் தயாரிக்கப்பட்டதேயாகும்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் நாடகங்கள் வெற்றி பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது அவரது தயாரிப்புத் திறனும், நெறியாள்கை முறையுமேயாகும். கூத்து மரபின் ஆடல், பாடல் பிசகாமலும் கூத்திற் பாவிக்கப்படும் அதே வாக்கியங்களைக் கையாண்டும் மரபு பிறழாது கூத்தைச் செம்மைப்படுத்தினார். இரவு முழுவதுமாக ஆடப்பட்ட கூத்துக்களை ஒன்றரை மணித்தியாளத்துக்குள் அமைத்தமையும் குறிப்பிடத்தக்கது. 1961 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் பேராசிரியர் வித்தியானந்தன் வி.வி. வைரமுத்துவின் **வசந்தகான சபாவையும்,** விடிய விடிய யாழ்ப்பாண கிராமப்புறங்களில் மேடையிட்டு வளர்த்த நந்தனார் **இசை நாடகத்தை**யும் ஒன்றரை மணிநேர நாடகமாகச் சுருக்கி காத்திரமான இசைநாடக மரபில் பின்னணிக் காட்சியுடன் மேடையிட்டார். மேலும் யாழ்ப்பாண இசை நாடகங்களில் **மயான காண்டம், பக்த நந்தனார்** போன்றவை முறையிற் சுருக்கி செம்மைப்படுத்தப்பட்டு அளிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளான மன்னார், முல்லைத்தீவு பகுதிகளிலும் விடிய விடிய ஆடப்படும் இசை நாடகக் கூத்துக்களைச் சுருக்கியும் இறுக்கியும் மேடையேற்ற நடவடிக்கை எடுத்தார்.

மேலும், அவ்வாறே நாடகம் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் அவர் முன்னின்று செய்தார். இவர் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுத்தலைவராகவும் கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக் குழுத் தலைவராகவும் பதவி வகித்தமையும் இப்பணிக்கு பேருதவியாக அமைந்தன. இப்பதவிகளின் உதவியுடன் 1964, 1966, 1970, 1972 ஆகிய ஆண்டுகளில் பல கருத்தரங்குகளையும் நடத்தினார். நாடக ஈடுபாடுடைய எழுத்தாளர்கள், நடிகர்கள் பலரும் இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்குகள் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், ஹட்டன் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றன. இதில் நாடக எழுத்தாளர், நாடகத் தயாரிப்பு, மேடை ஒழுங்கு, ஒப்பனை, தழுவலாக்கம், பார்வையாளர்களின் பிரச்சினை என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டன. இம்மாநாடுகளில் அண்ணாவிமார் ஊர்வலமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துவரப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நவீன நாடக அனுபவங்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதும் இக்கருத்தரங்குகளின் ஒரு நோக்கமாக அமைந்திருந்தது.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் தமிழ் நாடக எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கலைக்கழகத் தமிழ் நாடகக் குழு மூலமாக 1958, 1959, 1960 களில் நாடக எழுத்துப் போட்டியினை நடத்தினார். இதில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் அந்நூல்கள் அச்சிட்டு வெளியிடவும்பட்டன. இவ்வாறு பரிசு பெற்றவர்களில் சொக்கன், பொ.செம்பியன், முல்லைமணி, ஏ.ரி.பொன்னுத்துரை, திமிலைத் துமிலன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சு.வித்தியானந்தன் அவர்கள் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கையில் நாடகம் தொடர்பான மாணவர்களின் கருத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. ஆர்வமுள்ள மாணவரைத் தட்டிக் கொடுத்து அவர்களைத் தகுந்த வழியில் நடத்துவதற்கான வழிமுறைகளையும் சொல்லிக்கொடுத்தார். அதேவேளை, கூத்தினை நடத்துகின்ற **அண்ணாவிமார்களுக்கான மாநாட்டை** நடத்தினார். மன்னாரிலே அண்ணாவிமார்களுக்கான மாநாட்டினை நடத்துகின்றபோது சில நாடகங்களை மீளப்பதிப்பித்தார். அவ்வகையில், அவரது நாடக நூற்பதிப்புக்களும் குறிப்பிடத்தக்கவை. கலைக்கழகத்தின் ஆதரவுடன் பேராசிரியர் சு.வித்தியானந்தன் மரபுவழி நாடகங்கள் பலவற்றையும் பதிப்பித்தார். மட்டக்களப்பு தென்மோடி நாடகமான **அலங்காரரூபன்** (1960), மன்னார் நாடகமான **என்றிக் எம்பிரதோர்** (1964), **மூவிராசாக்கள் நாடகம்** (1966), **ஞானசவுந்தரி** (1967) ஆகியன பதிப்பிக்கப்பட்டன.

இவ்வாறு நாட்டுக்கூத்துக்களைப் புடம் செய்து மேடையேற்றியமை வாயிலாக ஈழத்துத் தமிழ் நாடக ஓட்டத்தை திசை திருப்பிய புலமையாளராக அவர் விளங்குகிறார். மூன்று தசாப்தங்களுக்கு முன் நாட்டுக் கூத்துக்களையும், அண்ணாவிமாரையும் சமூகம் மட்டமாகவே மதித்தது. சினிமாவின் தாக்கம், மேல்நாட்டு நாடகத்தின் தாக்கம், வசனம் பேசி நடிக்கும் நாடகங்களின் தோற்றம் என்பன காரணமாக ஆட்டக்கூத்துக்கள் பட்டிக்காட்டுத்தனமானவை என எள்ளி நகையாடினர். இத்தகைய சூழலிலேயே நாட்டுக்கூத்தினைப் புனரமைக்க வித்தியானந்தன் அவர்கள் முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. கர்ணன்போர் என்ற இவரது மட்டக்களப்புக் கூத்தானது, நாட்டுக்கூத்து முறை இக்காலத்துக்கு ஏற்றதன்று என்பதைப் பொய்யாக்கியது. இது மட்டக்களப்பு நாட்டுக்கூத்து முறையினை ஆட்ட நிலையிலிருந்து நாடகநிலைக்கு மாற்றிய முயற்சியுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நாட்டுக்கூத்தினை மெருகேற்றி, குறுகிய நேரத்தில் நடிக்கும் வகையில் திட்டமிட்டு, நாட்டுக்கூத்துக்குத் தனி மதிப்பைப் பெற்றுக்கொடுத்தார். அதாவது, நாட்டுக்கூத்தில் புரட்சியை ஏற்படுத்தி நவீனப்படுத்தினார். நாட்டுப்புறக் கலையான கூத்தை நகரமயமாக்கினார். அண்ணாவிமாரை கௌரவித்து கலைஞர்களை ஊக்குவித்தார். நவீன நாடகத்தில் புதிய உத்திகளைப் புகுத்தினார். நாட்டுக்கூத்துத் தொடர்பான ஆய்வுகளுக்கு வழிகாட்டியதுடன் நவீன நாடகத்தின் தோற்றத்துக்கும் வழி காட்டினார்.

இவரது இராவணேசன் நாடகமானது சொந்தக் குரலில், சொந்த உருவத்தை செயற்கை முறையில் அழகுபடுத்தாமல் இயற்கையின் அழகே அழகென்று மேடையில் ஆடிப்பாடி உணர்ச்சிகளில் வெளிப்படுத்திய நாடகமாகும். இராவணேசன் நாடகம் போலவே வாலிவதையிலும் வாலியை மையப் பாத்திரமாகக் காட்ட ஆசிரியர் தவறவில்லை. இந்நாடகத்தில் நாட்டுக்கூத்து மரபினை விடக் கூத்தும், நாடகமும் கலந்த கலைப்படைப்பாய் காட்ட முயற்சித்தமை பாராட்டத்தக்கதே. நாட்டுக்கூத்தை நவீனப்படுத்திய அதேவேளை பரிசோதனை முயற்சிகள் பலவற்றையும் இவர் துணிந்து புகுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் தமிழ் மாணவர்களுக்காக பரிசில்களை வழங்கவும் தயங்கவில்லை. மேடையேற்றப்பட்ட நாடகங்களிலிருந்து திரட்டிய வருமானத்தில் செலவு போக மிஞ்சிய இலாபப் பணத்தின் வட்டியினைக் கொண்டு தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்க ஏற்பாடு செய்தார். அப்பரிசில்களின் பெயர்கள் பெரியார்கள் பலரையும் நினைவு கூருவதாக அமைந்தன.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பின்பு அவரது மரபில் வந்த பலரும் இக்கூத்து மரபினைத் தொடர்ந்தும் வளர்த்துச் சென்றனர். அத்தோடு, தேவைப்பட்ட இடங்களில் மாற்றங்களையும் மேற்கொண்டனர்.

## உசாத்துணை நூல்கள்


வித்தியானந்தன், சு. (1953) **இலக்கியத் தென்றல்,** தமிழ் மன்றம் : கல்கின்னை.

<<<<< (1954) **தமிழர் சால்பு,** தமிழ் மன்றம் : கல்கின்னை.

<<<<< (1961) **கலையும் பண்பும்,** கிங்ஸ்லி அச்சகம் : கண்டி.

<<<<< (1990) நாடகம் நாட்டாரியல் சிந்தனைகள், ஆசிர்வாதம் பதிப்பகம், கண்டி.

மௌனகுரு,சி. (1998) **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்,** விபுலம் வெளியீடு :




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு.

→→→→→ (1992) **பழையதும் புதியதும்,** விபுலம் வெளியீடு : மட்டக்களப்பு.

→→→→→ (1993) **ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு**, குமரன் புத்தக இல்லம் : கொழும்பு – சென்னை.

சுந்தரலிங்கம், நா. (1980) **"அறுபதுகளின் பின் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி",** தினகரன் வெளியீடு : கொழும்பு.

பொன்னுத்துரை, ஏ.ரி. (1984) **"அரங்கு கண்ட துணைவேந்தர்"**, முத்தமிழ் மன்றம் : மாவிட்டபுரம்.

வேலுப்பிள்ளை, ஆ. (1989) **"பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம்"**, வித்தியானந்தன் நினைவுப் பேரவை, கொழும்பு தமிழ்ச் சங்கம்.

சித்திரலேகா மௌனகுரு (1985) **"மண் சுமந்த மேனியர் நாடகம் பற்றிய ஒரு விமர்சனக் குறிப்பு"**, புதுசு இதழ், யாழ்ப்பாணம்.

சுந்தரம்பிள்ளை, காரை. செ. (1976) **"யாழ்ப்பாணத்து இசை நாடக மரபு"**, கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறையில் நாடக டிப்ளோமா பட்டம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.

## மனப்புயல்

மௌனமாய் கலைகின்றன
அந்த மணித்துளிகள்
மணி முள்ளின்
டிக்..டிக் ஓசை
என் அமைதியில் எட்டிப்பார்க்க முனைகிறது.

வவ்..வவ்வ்வ்...
நாய்களின் ராத்திரிப் புலம்பல்
என் காதுத் துவாரங்களுடே
வந்து வந்து போகின்றன.

சடக் சடக்.. சடக் சடக்...
ஊ உ...
புகைவண்டியின்
உள்ளக் குமுறல்
என் உள்ளத்துள்
உறையப் பார்க்கிறது.

ம்ம்... இல்லை.
எதுவுமே இல்லை.
மயான நிசப்தம்
என் மனதினுள்
இடைவெளியின்றித் தொடர்கின்றது.

**சக்திவேல் கமலகாந்தன்**
**தமிழ் சிறப்புத்துறை,**
**விடுகை வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக்குட்டி ஆலிமின் இசை ஞானப்பாடல்கள் ஓர் பார்வை



முபிஸால் அபூபக்கர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மெய்யியல் மற்றும் உளவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

இசை என்பது அபூர்வ சக்தி கொண்டது. மக்களை தம் வசப்படுத்தும் அரிய சாதனமாகவும் காணப்படுகிறது. கிராமத்துப் பாடல்களிலிருந்து தெய்வீகப் பண்புகளால் ஆத்மாக்களை நிரப்பும் துறவு நிலை கண்ட சூபிகளின் பாடல்களுக்கும் பொருத்தமான ஒன்றாகவே இது காணப்படுகின்றது. இறைநேசர்களாகக் கருதப்படும் சூபிகள் தமது பார்வையிலும் சிந்தனையிலும் இன்னும் எல்லாப் பொருட்களிலும் இறைவனின் இயங்கும் தன்மையைக் காண்கின்றனர். நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனின் ஏகத்துவத்தை அவர்கள் அறிந்துணர்ந்து இறைவனைப் புகழ்ந்து பாடுவதுடன் அவனிடம் தம் முறையீடுகளையும் முன்வைக்கின்றனர்.

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட கல்முனைப் பிரதேச பிரபல சூபிகளில் ஒருவராக மதிக்கப்பட்டுவரும் வெள்ளைக்குட்டி ஆலிம் அவர்களின் இசைஞானப் பாடல்கள் பற்றிய முதல் கட்டுரையாக இது அமைகின்றது.

## வாழ்க்கை

அஷ்ஷெய்க் அகமது சாலிஹு ஆலிம் முகம்மது ஜெமீல் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் என அழைக்கப்படும் வெள்ளைக்குட்டி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் மாளிகைக் காடு என்ற சிறு கிராமத்தில் உதுமான்கண்டுப் போடியின் மகனாக 1878 இல் பிறந்தார். இவரது இயற் பெயர் அகமது ஸாலிஹ் என்பதாகும். மரியநாச்சி என்பவரை மணந்து 1975 ஆம் ஆண்டு தனது 97 ஆவது வயதில் இவ்வுலகை விட்டு உயிர் நீத்தார்.

ஆலிம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை தென்னிந்தியாவின் வேலூர் மற்றும் கீழைக்கரை போன்ற மதரசாக்களில் கற்று "பாகவி" என்ற பட்டம் பெற்றவர். பின்னர் சன்மார்க்க பணிகளில் ஈடுபட்ட வேளைகளில் சூபித்துவத்தின் மீது ஆசை கொண்டு தனது குருமார்களாக மலிங்கு மஸ்தான், நெருப்பு மஸ்தான் போன்றோரைத் தெரிவு செய்து அவர்களின் வழியில் தனது ஞானப்பணியை மேற்கொண்டார். ஊர்மக்களுக்கு மத்தியிலே மார்க்கத்தைச் சிறப்பாகப் போதிப்பவராகவும் தனிப்பட்ட முறையில் சூபித்துவ கருத்துக்களைத் திறன்பட்ட முறையில் பின்பற்றிய ஒருவராகவும் காணப்பட்டார். இவரின் மறைவுக்குப் பின்னர் முரீதுகள் (சீடர்கள்) தக்பீர், திக்ர் மற்றும் இசைப்பாடல்கள் மூலம் இப்பணியை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

## இசைஞானப் பாடல்கள்

வெள்ளைக் குட்டி ஆலிம் அவர்கள் காதிரியா தரிக்காவின் ஷன்னதிய்யா என்ற சூபித்துவ மரபைச் சேர்ந்தவர். இவர்கள் தமது தியான நிகழ்வுகளில் இசைப்பாடல்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கும் பிரிவினர். தமக்கான புனித நாட்களில் இவர்கள் ஒன்று கூடிப் பாடல்களை இசைப்பதன் மூலம் தமது ஞானப்பற்றை வெளிப்படுத்துவ்தோடு தமக்கான மன நிறைவையும் பெற்றுக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். பொதுவாக இவர்களால் பாடப்படும் பாடல்கள் இறைதுதிப்பாடல்கள், சீர்திருத்தப்பாடல்கள், நடைமுறைத்தத்துவப் பாடல்கள் என்று பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவை. இப்பாடல்களில் சில நேரடியாகவே ஆலிம் அவர்களால் பாடப்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் வந்த அவரது சீடர்களினாலேயே ஒழுங்கமைக்கப்பட்டு இன்றும் பாடப்பட்டு வருகின்றன. இதில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஹிதாயத்துல்லாஹ் என்பவரின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடல்கள் பெரும்பாலும் நாட்டார் இசையைத் தழுவிய அதேவேளை கும்மி, தெம்மாங்கு போன்ற இசை வடிவங்களையும் துணையாகக் கொண்ட பக்திப்பாடல்களாகும். இவை அல்லாஹ்வையும், நபிகளாரையும், இறைநேசர்களையும் மையமாக வைத்துப் பாடப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. இறைதுதிப் பாடல்கள்

அருள்வாயே, நீ அருள்வாயே!
என் கல்பு தெளிந்திட அருள்வாயே!
உன் பக்கம்வர, நினைத்தேனே இறைவா!
என் பக்கம் முகம் தருவாயே இறைவா!
உண்மையின் உருவே!
உள்ளமைப் பொருளே!
உன்பக்கம் என்னை அழைப்பாயே!

(அருள்)

பொய்யும் புறணியும் பூண்டோடு மாளவும்!
ஹசதும் கோபமும் வேரோடு சாயவும்!
ஆணவ அதிகாரம் கீழாகி வீழவும்!
பெருமை பேராசை பாழாகிப் போகவும்!

(அருள்)

சொல்லும் செயலுமே ஒன்றாக ஆகவும்!
வாக்கும் மனமுமே ஒன்றாகச் சேரவும்!
மனமும் நினைவுமே ஒன்றாகிப் போகவும்!
நினைவு எல்லாமே நீயாக ஆகவும்!

(அருள்)

பாவ தோசங்கள் பாழாகிப் போகவும்!
பந்த பாசங்கள் கீழாக ஆகவும்!
மூன்று ஆசைகள் மூற்றாக நீங்கவும்!
உலக மாயையில் மூழ்காது காக்கவும்!

(அருள்)

அல்லும் பகலுமுன் யாதாகப் போகவும்!
சொல்லும் மந்திரம் அம்பாகப் பாயவும்!
அன்பும் பாசமும் உன் மீது மாறவும்!
எண்ணும் போதுன்னைக் கண்ணாரக் காணவும்!

(அருள்)

இதயக் கறள் போயிக்கண்ணாடியாகவும்!
உனது வண்ணங்கள் தெளிவாகத் தோணவும்!
எந்த நேரமுன் அழகில் நான் மூழ்கவும்!
தாத்தும் சிபத்துமே ஒன்றாகிப் போகவும்!

(அருள்)

இப்பாடலில் அவர் இறைவனிடம் தமது குறைகளை முறையிடுகின்றார். மனதையும் வாழ்வையும் மேன்மையாக்கிக் கொள்ளவும், இறைவனிலே திளைக்கவும் அவனது உதவியினை நாடுகின்றார். பொய்களையும், புறம் கூறலையும் அடியோடு இல்லாதொழித்து மனக்கசடு. பெருமை, பொறாமை என்பவற்றை இல்லாமல் செய்ய வேண்டும். இன்னும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமெல்லாம் இறை நினைவாகவே மாற வேண்டும் என்று இறைஞ்சுகின்றார். இதன்படி தன் இதயம் தூய்மையாகி இறைவனது அருட்காட்சியை காணவேண்டும் என்பது அவரது விருப்பமாக உள்ளது. இன்னொரு பாடலில்

இறைவா என் இறைவா நீ வந்துவிடு!
நிறைவாயுன் தரிசனையை நீ தந்துவிடு!
ஒவ்வொரு யாதிலுமே உன் நினைவிருக்க!
ஓயாமல் மனமுன்னைக் கேட்கிறதே!
ஒவ்வொரு ஹாலிலுமே உனைப் பாத்திருக்க!
அழியாத வரமொன்றைத் தந்துவிடு!
உள்ளம் உருகிட வேண்டும் உன்னாவலில்!
வெள்ளம் பெருகிட வேண்டும் என் கண்களில்!

(இறைவா)

தூயவுள்ள மெப்போதும்...! உனைச் சேர தடையேது!
தோணும் பல எண்ணமெல்லாம்...! என்னை விட்டுப் போகாதா!
இந்த உலகம் பொய்யே அதுவும்...! கொஞ்ச நாளில் முடிவாகும்!
முடிவில்லாத அந்த உலகில்...! என்னைச் சேர்க்கக்கூடாதா!
இறவைா! உன் அருளைத்தானே...! தினம் தேடும் மனதிற்கு!
குறைவான அளவென்றாலும்...! மறுக்காமல் தந்துவிடு!
சோதனையின் மாறாட்டம்...! துணியாவோடு போராட்டம்!
அதில் விடிவு வந்தால்...! யாவும் விலகுமென்றால் என் ஆட்டம் முடிவாகும்!

(அருள்)

வந்த நோக்கமெப்போதும்...! மறந்து போகக்கூடாது!
தந்த அந்தமானிதத்தை...! பேணத்தவறக் கூடாது!
ஆசைபாசம் எல்லாம் மாய்தை...! இம்மையோடு முடிவாகும்!
மனிதவுடலும் மண்ணே அதுவும்...! நின்று போகுமிங்கேதான்!
இறைவா! என் வினைகள் நீக்கித்...! தனியாக ஆவேனே!
தனியான உன்னோடு நான்...! இணைவாகிப் போவேனோ!
மனிதன் தன்னை மதிக்கவில்லை...! உள்ளமையை உணரவில்லை!
நாலுமடங்குமென்றால்...! உண்மை அறியவரும் உன்னாட்டம் நிறைவேறும்!

(அருள்)

இதில் இறைவனின் தரிசனத்துக்காக ஏங்கிப்பாடும் ஆலிம், தனது எல்லா நிலைகளிலும் அவனைத் துதிக்க வேண்டும் என்றும், இவ்வுலகின் நிலையாமையையும் சுட்டிக்காட்டுகின்றார். மனிதர்களது வாழ்வில் நோக்கம் நிறைவேற அவர்கள் தம்மைத்தாமே உணர வேண்டும். ஆசாபாசங்களைத் துறக்க வேண்டும் என்பதையும் பாடல்களில் வலியுறுத்துகின்றார்.

## 2. நபிகளார் பற்றிய பாடல்கள்

இறைதூதரே...! நபிகள் நாதரே...!
கரை சேர்க்கும் தயாளகுண நீதரே!
மகுமூதரே! கியாம நாளையில்...!
கரை சேர்க்கும் தயாளகுண நீதரே!
மகுமூதரே! கரை சேர்ப்பீரோ!

வெந்தே மூளை நம்முருகும் அன்நாளில்!
நொந்தே புளுவாகத் துடிக்கின்றவேளை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுமுருக உணர்வும் மயங்கும்!
நாதியில்லா அந்த நாளையில்!

(கரை)

ஆயிரமைம்பது வருசம் ஓர் நாளாய்
நீண்ட ஓர் கடிதான மகுசர் அந்நாளில்!
ஆதவனை கடுகியே சொரியும்!
நாவரளும் அந்த நாளையில்!

(கரை)

மகுசரின் கொடுமைகள் தாங்காதுயரம்!
எமக்கது வேண்டாம் கொடுநரகென்றே!
ஆத்துமமெல்லாம் இறைவனை இறஞ்சும்!
அமளியுறும் அந்த நாளையில்!

(கரை)

யா நபுசே யென்று நபிமார்கள் தம்மை!
காக்கவே கர்தோனை மன்றாடும் நேரம்!
யா உம்மத்தென்றே! யா உம்மத்தென்றே!
அபயம் தரும் அந்த... நாளையில்!

(கரை)

ஜெகமதை வெறுத்தே இபுலிசைப் பகைத்தே!
மனஅழுக்கறுத்தே இபுலிசைப் பகைத்தே!
லிவாஉல்ஹம்தென்னும் கொடிநிழலங்கே!
தந்துதவும் அந்த நாளையில்!

(கரை)

இப்பாடல் மனிதர்கள் இறந்த பின்னர் ஏற்படவுள்ள மறுவுலகின் தன்மைகளைக் குறிப்பிடுகின்றது. இதன்படி மனித உடல் அந்நாளில் வேதனையடையும். நாட்கள் நீளமாகவும், சூரியன் மிக அண்மையில் வந்து வெப்பத்தினால் எம்மை சுட்டெரிக்கும். துன்பம் நீட்சியாகவும் எம்மைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். அவ்வேளை மனிதர்கள் உதவியை வேண்டி நிற்பர். ஏனையவர்கள் தம்மைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டிருக்கும் வேளையில் முஹம்மது நபியவர்கள் ஏனையவர்களுக்காகச் சிபாரிசு செய்வார்கள் என்பதை .இப்பாடல் குறிக்கின்றது. இன்னுமொரு பாடல் இவ்வாறு அமைகின்றது. இதில் ஆலிம் அவர்கள் முஹம்மது நபியின் பிறப்பின் மகிமையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

முந்தியதும் பிந்தியதாய்
முடிவில்லாத நித்தியமாய்!
முழுவதற்கும் கருவுமான
முஹம்மதிற் றசூலுல்லா! சூலுல்லா...!
சூலுல்லா...! யார சூலுல்லா...!
சூலுல்லா...! யார சூலுல்லா...!

((முந்தி)

எதுவுமற்ற நேரத்திலே
எம்மிறைவன் சிந்தைதனில்!
முந்தமுதல் வந்துதித்த
முத்து யாற சூலுல்லா! சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!

((முந்தி)

அஹதியத்தில் அருபமாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹ்தத்திற் சொரூபமாகி!
வாஹிதத்தில் ரூபமாகி
வந்தயாற சூலுல்லா! சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!

(முந்தி)

நாயனை வணங்கவென்று
நாட்டமுள்ள எக்கீனத்தில்!
மயிலுருவாய் வந்துதித்த
மன்னர் யாறசூலுல்லா! சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!

(முந்தி)

எக்கீனில் இருந்த போது
ஏகனின் அழைப்பையேற்று!
இறங்கிவந்த போது புறா
வான யாற சூலுல்லா...! சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!

(முந்தி)

றூஹுக்கெல்லாம் தந்தையென
அத்தனைக்கும் வித்து என!
நேர்வழியின் சத்து என!
வந்த யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!
சூலுல்லா...! யாற சூலுல்லா...!

(முந்தி)

## 3. இறைநேசர்கள் பற்றிய பாடல்கள்

இறைவனை நெருங்கி அவன் வழி நடந்து அதன் மூலம் தனது ஆழ்மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டோர் இறை நேசர்கள் (வலிமார்கள்) என அழைக்கப்படுகின்றனர். இவர்களது வழியில் தாமும் செல்ல வேண்டும் என்ற ஆசையில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

சிரம் பணிந்தேனே...! கரம் தருவீரே...!
நற்குணம்-தந்தருளும்-செய்குமுஹியித்தீனே....!

சன்மார்கம் பலமின்றி சாய்கின்றவேளை!
சாயாது கைதந்து, எழுப்பியதாலே!
தீன், தீன்முஹியித்தீனே என்று!
தீன், வழியில் நடப்பவர்களினின்று!
போற்றிப் புகழும் கண்ணின் மணி முஹியித்தீனே...!

(சிரம்)

கருவறையில் நீங்கள், இருக்கின்ற வேளை!
தாயாரே பழமொன்றைப் பறிக்கின்ற காலை!
தான், பழத்தில்மறைந்த பாம்பையெறிந்தே!
தாய், வயிற்றில் வலியுந்தந்து தடுத்தே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெற்பமிருந்தே தாயைக் காத்தீரென் கௌதே...!

(சிரம்)

மாண்புறும் றமழானில் பிறந்ததும் தாங்கள்!
பாலறுந்தாமலே நோன்பிருந்தீர்கள்!
நீங்கள், பிறந்த நேரமந்த நாட்டில்!
பெண்ணைப், பெறவுமில்லை யாரும் வீட்டில்!
பதினொரு நூறும் ஆண்கள் எல்லாமே வொலிகள்....!

(சிரம்)

எழும்பவும் இயலாத முதியோரை மெல்ல!
எழுப்பக்கை, பட அவர் இழமையுங் கொள்ள!
நீயாரென்றவரை நீங்கள், கேட்க!
நான் இசுலாமென்றவரும், நோக்கி!
நீரிசுலாத்தை உயிர்பித்த முஹியித்தீனென்றாரே!

(சிரம்)

இப்பாடல் இறைநேசர்களின் தலைவராக மதிக்கப்படும் முஹியித்தீன் அப்துல் காதர் ஜீலானியைப் பற்றிய பாடலாகும். இவ்விறைநேசர் பாவா ஆதம் மலையைத் தரிசிப்பதற்காக இலங்கைக்கான தனது விஜயத்தில் ஜெயிலானி (ஹுரகல) என்ற இடத்திற்கு வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அதுபோலவே அவரின் சீடர்களில் ஒருவர் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வந்த போது இலங்கை மன்னனான கஜபாகு மன்னனின் தீராத நோயை தீர்த்து வைத்ததினால் அதற்கான பரிசாக கிழக்கு மாகாணத்தின் கரைவாகுப் பிரதேசம் பரிசாக வழங்கப்பட்டதாகவும் அங்குள்ள பெரிய பள்ளிவாசல்கள் முஹியித்தீன் மஸ்ஜித் என அழைக்கப்பட வேண்டும் என மன்னன் கட்டளையிட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆலிம் அவர்களும் குறித்த கரைவாகுப் பிரதேசத்தைச் சேர்ந்தவரே ஆகும். அதனால் முஹியித்தீன் வலியுல்லா மீது அதிக அக்கறையுள்ளவராகப் பாடியுள்ளார். இப்பாடலில் இறைநேசர் அவர்களின் புகழ் கூறப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு, சன்மார்க்கப் பணி, பிணி தீர்க்கும் ஆற்றல் என்பன புகழ்ந்துரைக்கப்படுகின்றன. இன்னுமொரு பாடலில் கதிர்காமத்திலுள்ள பால்குடி பாவா என அழைக்கப்படும் இறைநேசர் முகம்மதலி பற்றிப் பாடப்பட்டுள்ளது.

கதிர்காமம் வாழும் எங்கள் மஸ்தான் முகம்மதலி
வீரர் அலி கோத்திரத்தில் வந்துதித்த கோடியில் ஒருத்தர்

(கதிர்)

சொல்லில் சிறந்திளங்கும் டில்லி பிறந்த அவர் :- ஆ....
அள்ளி அருள் வழங்கும் ஞானப்பள்ளி கதிர்காமமடி

(கதிர்)

அரிகில் அளப்பெரிய அற்புத மெய்ஞ்ஞானி எங்கள் :- ஆ....
பாலுகுடிபாவாவடி முகம்மதலி பாவா அவர் வாரிசடி

(கதிர்)

காடா இருந்த கதிர் காமத்தில் வந்திறங்கி :- ஆ...
வீடாக்கிக் கொண்டாரடி இறைவன் வீடாக்கி விட்டாரடி

(கதிர்)

கதிர்காமக்கடி வனத்தில் அயராக்கடி தவத்தை :- ஆ...
செய்து வரம் பெற்றாரடி அவரை புரிந்தவர்கள் அற்பமடி

(கதிர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியா மர நிழலில் பக்தரெல்லாம் நீராடும் :- ஆ...
மாணிக்கக்கெங்கையடி இரண்டு மகான்துயிலும் கதிர்காமம்

(கதிர்)

ஊர்தேசம் பாராமல் மூவினமும் ஓரினமாய் :- ஆ...
வந்துவந்து சேர்வாரடி அவர்கள் ஆசியுடன் செல்வாரம்

(கதிர்)

காடாய் மனம் படைத்த கூடாத பேரையெல்லாம் :- ஆ...
ஆனாக்கிவிட்டாரெடி அவரால் ஆனானோர் மெத்தவடி

(கதிர்)

பித்தாய் பிடித்தசனம் முத்தாய் திகழவென்று :- ஆ...
வித்தாய் இருந்தே அவர் ஆதி நொக்கத்தாய்ந்து சொன்னார்

(கதிர்)

கண்ணிரண்டின் மத்தியிலே மறைந்த அந்த முத்தொழிவை
பன்னிரெண்டு மந்திரத்தால் வெளிக்கொணரும் வல்லமை மிகுந்தோரடி

(கதிர்)

கதிர்காமம் எல்லா இன மக்களாலும் போற்றப்படுகின்ற அதேவேளை பால்குடி பாவா அவர்களின் தலத்திற்கு முஸ்லிம்கள் முன்னுரிமை வழங்கித் தரிசிப்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 4. தியானப் பாடல்கள்

இப்பாடல்கள் தியானத்தின் மகிமையையும் அதன் வழிமுறைகளையும் கூறுகின்றன. பெண்களின் இறைதியான வாழ்வு பற்றி ஆலிமவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

பக்திப்பரவச நிஸ்டையிலொன்றை, யுவப்புடனே கேளடி!
அதைப் பத்திப் பிடித்துப் பவித்திரமாயுறுப் போடப் பழகிக்கடி!
போடப்பலன் போடா, மூடர்கு மேட்சம் கிடைப்பதரிதாமடி!
போடப்பலன் போடா, மூடர்க்கு மோட்சம் கிடைப்பதரிதாமடி!
அவரை மோட்சம் பெறக்குரு தீட்சை வேணுமென்று -

வன்சரக்கும்மியடியுங்கடி!

வையமுறங்கிவசமிழந்தே, மையித்தாகுமோர் நேரமடி!
அப்போஓசையொடுங்கி, மயான அமைதி நிலவுமங் வேளையடி!
செடிகள் மரங்களசைவற்று, றெப்பைத் துதித்துமனநேரமடி!
அந்த நேரந் தியானத்துக், கேற்றதென்றே சொல்லி -

வன்சரக்கும்மியடியுங்கடி!

ஒதுக்குப்புறந்தவ, நிலைக்குத்திறனங்கு குடிசைமைத்துக்கடி!
அதி கூட வெளிச்சமே கூடாது, குப்பிவிளக்கையுமேத்திக்கடி!
அந்தரங்க நீயத்தோடு வொளுவை, ஒழுங்காகச் செய்துக்கடி!
அந்த நீய்யத்தை யொஸ்தாது, தான் தருவாரென்று -

வன்சரக்கும்மியடியுங்கடி!

பிஸ்மியுடன் குருநாதர் நினைவோடு, பிஸ்தாரைப் போட்டுக்கடி!
அஸ்டாங்க யோகத்திலொன்றைப் பிடித்து, அசையாதிருந்துக்கடி!
ஏதுமில்லை ஹக்கு அல்லாது என்றே, தக்பீரையுங் கட்டிக்கடி!
அந்தத் தக்பீரையும், தக்க பீர்த்தருவா ரென்று -

வன்சரக்கும்மியடியுங்கடி!

வத்தைக் கலைத்தீமான், பெலத்தைக் குறைக்க வருவானிபுலீசடி!
அவன் பலத்தையெழிதாக, எடை போட்டு ஏமாந்து பாழாகிப் போகாதடி!
வாவென்று சொன்னாலும், போகானவனை நீ இசுலாத்திலாக்கிக்கடி!
அவன் தாரச் செல்ல இறை, நேசம் வருமென்று -



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வன்சரக்கும்மியடியுங்கடி!

பல்லியொடு கல்பி றூஹு, சிற்றி, கபி ஐந்துயாது உண்டடி!
அதிலொன்றைப் பிடித்துச் சுவாசத்திலேத்தியிறக்கப்பழகிக்கடி!
சுற்றிச்சுழன்றது அண்டவாசல்வரை செல்லச் செலுத்திக்கடி!
அது செல்லும் வகைதனைப் பிரீடம் கேளென்று -

வன்சரக்கும்மியடியுங்கடி!

பெண்கள் தமது இறையன்பு வாழ்வில் பக்தியோடு வாழ வேண்டும். அதற்குத் தியானம் அவசியம். இரவுப் பொழுதுகளில் செய்கின்ற வணக்கங்கள் அமைதியானதாக இருக்கும் அதேவேளை இறைவனாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வணக்கங்களைச் சிறப்பாகச் செய்ய ஒரு குருநாதரைப் பின்பற்ற வேண்டும். தியான வேளைகளில் கெட்ட சாத்தான்கள் எம்மைத் திசைதிருப்ப வந்தால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் ஆலிம் அவர்கள் குறிப்பிடுகின்றார். இன்னுமொரு பாடலில் தன்னை அறிதலின் மகிமை பற்றிப் பின்வருமாறு பாடியுள்ளார்.

ஒருமையில்லை உன்னைத் துதிக்கின்றார்!
ஓ ராயிரம் நினைவோ மனதினிலே!
குல்லும் பனாவாயுன் நினைவுடனே!
தொழுதவர் உன்னருள் உள்ளவரே!

(ஒரு)

நல்மனமுள்ளவர் நல்லவரே!
அவர் - நல்லடியார்களிலுள்ளவரே!
நன்மையும் தீமையும் அவனிடத்தே!
வருவது என்றவர் நம்புவரே!

(ஒரு)

கோபம் இல்லாதவர் வல்லவரே!
அவர் - பொறுமையுள்ளோர்களிலுள்ளவரே!
துன்பங்களெத்தனை வந்திடனும்!
சோதனை என்றவர் நம்புவரே!

(ஒரு)

தன்னையறிந்தவர் உன்னதரே!
அவர் - சாதனையாளரில் உள்ளவரே!
உள்ளும்புறம் ரெண்டைறெப்பானவன்!
காண்கிறான் என்றவர் நம்புவரே!

(ஒரு)

ஹக்கையறிந்தவர் அற்புதரே!
அவர் - தன்னிலே ஆராய்தல் செய்பவரே!
குரு சொன்ன உபதேசம் உண்மையென்றே!
கண்டவர் சக்கற நம்புவரே!

(ஒரு)

இறைவனுக்கென்றே தன் சந்தோசத்தை!
இங்கு - இழந்தவறையோனால் நொந்தவரே!
நொந்தவருடனே நானிருக்கின்றேன்!
என்றிறை சொன்னதை நம்புவரே!

(ஒரு)

வந்தவழி தன்னைத் தெரிந்தவரே!
மீண்டும் - போகும் வழியைத் தெரிந்தவரே!
வாஜிபிது ரெண்டை அறிவதென்றே!
சற்குரு சொன்னதை நம்புவரே!

(ஒரு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பாடலில் இறைவனைத் துதிக்கும் போது மன ஒருமைப்பாட்டுடனும், இறைவனோடு இரண்டறக் கலந்தும் துதிக்க வேண்டும். இன்னும் தமது கோபத்தை நீக்கிப் பொறுமையை மேம்படுத்த வேண்டும். உள்ளும் புறமும் சுத்தமாக இருக்க வேண்டும். குருவின் உபதேசங்களைப் பின்பற்ற வேண்டும். இறைவனுக்காகத் தம் சந்தோசங்களை இழப்பதும் இறைவனின் நேசத்தை நெருங்கச் செய்யும் எனவும் குறிப்பிடுகின்றார்.

தியான நிகழ்வுகளிலும், வைபவங்களிலும் மேற்படி பாடல்கள் இடம்பெற்றன. அதன் போது உள்ளூர் இசைக்கருவிகளான சங்கு, சலங்கை, கின்னி, பொல்லடி போன்றவை பாவிக்கப்பட்டதுடன் தலையையும் உடலையையும் ராகத்திற்கு ஏற்ப அசைத்து ஆடும் சில ஆட்டங்களும் இடம்பெறும். இன்னும் சில இடங்களில் அமர்ந்திருந்து இப்பாடல்களைப் பாடும் முரீதுகள் இசைக்கேற்ப தமது கண்களை அசைப்பதன் மூலம் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றனர். இது கண் நடனம் (Eye Dance) என அழைக்கப்படுகிறது.

மேற்படி பாடல்களினால் இஸ்லாமிய சூபி மரபை கிழக்கிலங்கையில் பரப்பியவர்களுள் முதன்மையானவராக வெள்ளைக்குட்டி ஆலிம் அவர்கள் காணப்படுகின்றார். தமது வாழ்வின் சன்மார்கப் பணியின் போது தனது சொந்த நிலத்தை மஸ்ஜிதுல் ஸாலிஹீன் பள்ளிவாசலை நிர்மாணிக்க 1925 இல் வழங்கி அதன் முதல் கதீப்பாகவும் பணியாற்றினார். அல்குர்ஆனைச் சரியான முறையில் கற்றுக் கொடுப்பதில் பெரும்பங்காற்றினார். இறுதிக்கால கட்டத்தில் இவ்வுலகை வெறுத்து வாழ்ந்த ஒரு சூபியாக தன்னை மாற்றிக் கொண்டார். தனது அயல் கிராமமான காஸ்ரதீவில் உதித்த யானைக்குட்டிச் சித்தர் போன்ற ஆன்மீக சித்தர்களோடும் மிக நெருங்கிய உறவைப் பேணிய அவர் கிழக்கிலங்கையின் மூத்த சூபித்துவ ஆலிம்களின் ஒருவராகவும் மதிக்கப்படுகின்றார்.

## உசாத்துணைகள்


அனஸ், எம்.எஸ்.எம், 1994. சேகு **இஸ்மாயில் புலவர் ஒரு பண்பாட்டுப் பார்வை**, இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம், புத்தளம்.

நூலாக்கக் குழு, 2009. **சாய்ந்தமருது வரலாறு**, சாய்ந்தமருது.

முகம்மது கௌஸ், 2014. **இஸ்லாமும் இன்னிசையும்,** இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை.


**தகவல் தந்தோர்**

எம் ஹிதாயத்துல்லாஹ், அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசம்புப் புலவர் - கால ஆராய்ச்சி



**செல்லத்துரை சுதர்சன்**
**விரிவுரையாளர், தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**சி**வசம்புப் புலவர் காலம் தொடர்பாக ஆராய்ச்சியாளர்களிடையே மாறுபாடான கருத்துகள் நிலவுகின்றன. புலவரது நூல்கள் அச்சாகி வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்து, அச்சாகி வெளிவந்த நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதிய எழுத்துக்களில் புலவரது காலம் பற்றிய பல்வேறுபட்ட கணிப்புக்களை அவதானிக்க முடிகின்றது. புலவரின் செய்யுட்களை அவர் வாழ்ந்த காலப்பின்புலத்தில் வைத்து ஆராய்வதற்கு அவரது காலம் பற்றிய சரியான கணிப்பு அவசியமாகும். இத்தேவை கருதியே புலவரின் காலம் தொடர்பாக இச்சிறுகட்டுரை ஆராய்கிறது.

சிவசம்புப் புலவரின் காலம்பற்றிய சிக்கல் தொடர்பாக 1981 ஆம் ஆண்டு, பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட இளங்கதிரில் வெளியாகிய பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் "உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர்" என்னும் கட்டுரையில் வரும் பின்வரும் பகுதி இங்கு நோக்கத்தக்கது.

"உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் தமிழ்ப் பணியை மதிப்பிட முன்பு அவர் வாழ்ந்த காலத்தை வரையறுத்துக்கொள்ள வேண்டும். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்ககாலம் வரையில் வாழ்ந்த சிவசம்புப் புலவரின் காலமும் சுலபமாக அறிந்து கொள்ள முடியாமல், வரையறுத்து அறியவேண்டிய சிக்கலை உடையதா எனச் சிலர் கேட்கலாம். ஆங்காங்கு காணப்படும் வெகுசில மைல்கற்கள் தவிர கால ஆராய்ச்சி பிரச்சினைக்குரியதாகவே காணப்படுகின்றது. சிவசம்புப் புலவர் காலம் பற்றி இத்தகைய பிரச்சினை தோன்றுகிறது."[1]

எனவே, இச்சிக்கலைத் தீர்த்துவைப்பது ஆய்வுலகுக்குப் பயனளிக்கும்.

சிவசம்புப் புலவரின் காலம் தொடர்பாக ஆய்வாளர் பலர் குறிப்பிடும் பல்வேறுபட்ட கால வரையறைகளை அட்டவணையில் பின்வருமாறு நிரற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவசம்புப் புலவரின் காலம் - ஆய்வாளர் குறிப்பன.**

| எண் | நூலாசிரியர் | நூல் | சிவசம்புப் புலவர் காலம் |
|---|---|---|---|
| I | செவ்வந்திநாத தேசிகர் | சிவசம்புப்புலவர் பிரபந்தத்திரட்டு (1939) ப.vii,viii | கி.பி. 1830 - 1909 |
| II | அ.குமாரசாமிப் புலவர் | தமிழ்ப்புலவர் சரித்திரம் (1951) ப.126 | கி.பி. 1852 - 1910 |
| III | கு.முத்துக்குமாரசாமிப்பிள்ளை | சிவசம்புப்புலவர் சரித்திரம் (1965) ப.i | கி.பி. 1829 - 1910 |
| IV | சி.கணேசையர் | ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் (2006) ப.129,133 | கி.பி. 1830 - 1909 |
| V | ஆணல்ட் தசாசிவம்பிள்ளை | பாவலர் சரித்திர தீபகம் (2001) ப.175 | கி.பி. - 1910 |
| VI | சு.அ.இராமசாமிப்புலவர் | தமிழ்ப் புலவர் வரிசை (1995) ப.132 | கி.பி. 1850 - 1910 |
| VII | மயிலைசீனிவேங்கடசாமி | பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் (2001) ப.159 | கி.பி. 1830 - 1909 |
| VIII | க.சி.குலரத்தினம் | செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் (1989) ப.187 | கி.பி. 1829 - 1910 |
| IX | மு.கணபதிப்பிள்ளை | ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் (1976) ப.114 | கி.பி. 1852 - 1910 |
| X | க.கணபதிப்பிள்ளை | தினகரன் (1955-11-13) ப.10 | கி.பி. 1829 - 1908 |
| XI | சு.வித்தியானந்தன் | இலக்கியத் தென்றல் (2008) ப.79 | கி.பி. 1830 - |
| XII | ஆ.சதாசிவம் | ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966) ப.244 | கி.பி. 1852 - 1910 |
| XIII | ஆ.வேலுப்பிள்ளை | இளங்கதிர் (1981) ப.28 | கி.பி. 1830 - 1909 |
| XIV | க.கைலாசபதி | ஈழத்து இலக்கிய முன்னோடிகள் (2001)ப.39 | கி.பி. 1853 - 1910 |
| XV | கா.சிவத்தம்பி | ஈழத்தில் தமிழ் இலக்கியம் (2010)ப.7 | கி.பி. 1830 - 1910 |
| XVI | இரா.வை.கனகரத்தினம் | சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் (1985) ப.183 | கி.பி. - 1910 |
| XVII | துரை.மனோகரன் | இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1997) ப.103 | கி.பி. 1830 - 1910 |
| XVIII | எஸ்.சிவலிங்கராஜா | வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் (1984) ப.21 | கி.பி. 1830 - 1910 |
| XIX | சி.அப்புத்துரை | ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு (2007) ப.21 | கி.பி. 1829 - 1910 |
| XX | க.செபரத்தினம் | தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் (2002) ப.7 | கி.பி. 1829 - 1910 |

அட்டவணை 01

மேற்படி அட்டவணையிலிருந்து சிவசம்புப் புலவர் பிறந்த வருடத்தை 1829, 1830, 1852, 1853 என நான்கு விதமாகவும் மறைந்த வருடத்தை 1908, 1909, 1910 என மூன்று விதமாகவும் ஆய்வாளர்கள் குறித்துள்ளதை அறியமுடிகிறது.

பிறந்த வருடத்தை இருவரும் மறைந்த வருடத்தை ஒருவரும் குறிக்காது விடுவதையும் காணமுடிகிறது. புலவரின் காலக்கணிப்புப் பற்றிய குழப்பமும் அதைத் தீர்ப்பதற்கான சான்றுகளைப் பெறுவதில் உள்ள சிரமமுமே இதற்கான காரணங்கள்.

ஆரிய திராவிட பண்டிதர் செவ்வந்திநாத தேசிகர் அவர்களால் திரட்டப்பெற்று ஈழகேசரி அதிபர் நா.பொன்னையா அவர்களால் 1939ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட, புரவலர் மற்றும் புலவர் சிலர்மீது சிவசம்புப் புலவர் பாடிய பிரபந்தங்கள் சிலவற்றின் தொகுதியான "சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு – முதற்பாகம்" என்ற நூலில் வரும் "நூலாசிரியர் வரலாறு" என்னும் பகுதியில் புலவரது காலம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"இவர் சாலிவாகன சகாப்தம் கஎருஉ-ல் யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையைச் சார்ந்த உடுப்பிட்டியிலே பெரும் பிரபுவாயிருந்த அருளம்பல முதலியாருக்குப் புதல்வராய் அவதரித்தார்."[2]**
>
> **"இப்புலவர் பெருந்தகை சாலிவாகன சகாப்தம் கஅஙக-க்குச் சமமான சாதாரண வருஷம் புரட்டாதி மாதம் கங-ம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார்."[3]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூற்றுக்களில் சிவசம்புப்புலவரின் காலகட்டமாக சகாப்தம் 1752 – 1831 எனப் பதிவுபெற்றுள்ளது. சகாப்த வருடத்தோடு 78 அல்லது 79ஐக் கூட்டினால் கிறிஸ்தவ வருடம் வரும். ஆயினும் இங்கும் தவறு ஏற்படுகிறது.

**"சிவசம்புப் புலவர் பிறந்த ஆண்டு சகாப்தம் 1752 என்பது என்று கண்டால் அது கி.பி 1830 என்பது சரியாகும். சகாப்தம் 1752 என்பது கிறிஸ்தவ ஆண்டாக மாற்றப்பெறாத நிலையிலேயே, நூல் அச்சுக்குப் போயிருக்கக்கூடும். அச்சுப்பிழை திருத்தியவர், புலவர் 158 ஆண்டுகள் வாழ்ந்திருக்கமாட்டார் என்பதை உணர்ந்ததால், திருத்தம் செய்திருக்கிறார். பிழைதிருத்தம் பற்றி நுணுகி நோக்காது, அவசரத்திலே 1752 என்பதை 1852 என்று ஏழை எட்டாக மாற்றிவிட்டார். சிவசம்புப்புலவர் காலம் 1852 ஆம் ஆண்டுக்கு முன்பே தோன்றிவிட்டது என்பது இன்னொரு சான்றாலும் உறுதிப்படுகிறது. சிவசம்புப்புலவரின் ஆசிரியர் நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரெனப் பேராசிரியர் சதாசிவம் குறிப்பிட்டுள்ளார்."[4]**

புலவரின் ஆசிரியர் சரவணமுத்துப்புலவர் 1845ல் தேகவியோகம் அடைந்தார்.[5] எனவே 1852ஆம் ஆண்டு சிவசம்புப் புலவர் பிறந்திருந்தால் எவ்வாறு 1845ல் இறந்த தனது ஆசிரியர் சரவணமுத்துப் புலவரிடம் பாடம் கேட்டிருப்பார் என்ற வினாவும் எழும். தேசிகரது திரட்டுக் கூறும் தவறான காலத்தையே பலரும் பயன்படுத்தும் போக்கு உருவாகிவிட்டது.
சிவசம்புப் புலவர் காலம் தொடர்பான கணிப்பில் அவரது வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது பயனளிக்கும்.

நாவலரும் சிவசம்புப் புலவரும் நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடம் ஒன்றாகக் கல்விகற்றவர்கள் என்ற செய்தியும் நாவலர் புலவரிலும் ஏழுவயது மூத்தவர் என்ற செய்தியும் பல இடங்களில் பதிவாகியுள்ளன. அவற்றுள் தேவைகருதி இங்கு இரு பதிவுகளை எடுத்துக்காட்டலாம்.

**"ஆரம்பக் கல்வி நிறைவேறியதும் சிவசம்பு நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடம் ஒப்படைக்கப் பெற்றார். இவரிடம் கற்கப்போன காலத்தில் நாவலரும் அங்கே கற்றுக்கொண்டிருந்தார். நாவலர் சிவசம்புவிலும் பார்க்க ஏழு வயது மூத்தவர். நாவலர் பிறந்த ஆண்டு 1822. சிவசம்புப் புலவர் பிறந்த ஆண்டு 1829. இக்காலத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் அளந்து எடைபோட்டுக் கொண்டனர்."[6]**

**"நாவலர், புலவர் இருவரும் ஒரே காலத்தவர்கள். சகபாடிகள். நாவலரவர்கள் புலவரிலும் பார்க்க ஏழாண்டுகள் மூத்தவர். அவர்கள் பிறந்த ஆண்டு 1822. புலவர் பிறந்த ஆண்டு 1829. நாவலரவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கே உரியவர்கள். அவர்கள் மறைந்த ஆண்டு 1879. புலவர் இருபதாம் நூற்றாண்டிலும் பத்து வருடங்கள் வாழ்ந்தவர்."[7]**

நாவலர் பிறந்த வருடத்தையும் அவர் புலவரிலும் ஏழுவயது மூத்தவர் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு புலவர் பிறந்த வருடத்தை 1829 எனக் கணிப்பதே சரியானது.
புலவரின் இறப்பு வருடம் தொடர்பாகப் புலவரின் மாணவரும் கரணவாய் தெற்கு வேதாரணியக் குருக்கள் பகுதியைச் சேர்ந்தவருமான பண்டிதர் கை.திருஞானசம்பந்த தேசிகர் பாடிய "திதிநிர்ணயவெண்பா" புலவர் பற்றிய சரமகவி நூல் (கல்வெட்டு) மூலமும் மகாவித்துவான் சி.கணேசையர் அவர்களின் "ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்" எனும் நூல் மூலமும் கிடைத்துள்ளது. அவ் வெண்பா வருமாறு.

**"சாதா ரணவனிதை சாந்தன்றேய் பிற்பக்க<br>மீதாரும் பன்மூன்றின் மேதினிவிட் - டாதார<br>மன்னு சிவசம்பு மாபுலவன் சங்கரனார்<br>துன்னுலகுற் றுற்றான் சுகம்"[8]**

புலவர் இறந்த வருடம் - வெண்பா கூறும் செய்திகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பதம் | பதப்பொருள் விபரம் (தமிழ் வருடம்) | பதப்பொருள் விபரம் (ஆங்கில வருடம்) |
|---|---|---|---|
| I | சாதாரண | சாதாரண வருடம் | 1910ஆம் ஆண்டு |
| II | வனிதை | பெண் - கன்னிமாதம் - | புரட்டாதி9ஆம் மாதம் |
| III | சாந்தன் தேய் பிறபக்கம் | சந்திரன் தேய்பிறை - அபரபக்கம் - பிறபக்கத் திரயோதசித் திதி | நண்பகல் |
| IV | பன்மூன்று | பதின்மூன்று | 29ஆம் திகதி |

அட்டவணை - 2

இவ் அட்டவணை கூறும் குறிப்புகளின் அடிப்படையில் 1910 (29.09.1910 நண்பகல்) என்பதே புலவரின் இறப்பு வருடமாகும். புலவர் இருபதாம் நூற்றாண்டின் முதல்பத்து ஆண்டுகள்வரை வாழ்ந்தவர் என்ற முற்குறிப்பிட்ட செய்தியும் இவ்வெண்பாவால் மேலும் உறுதிப்படுகிறது. இதன்படி

**"பாரளையு மிசையருளம் பலமுதலியொடுநிறைசூற்**
**காரளையு மலர்க்கூந்தற் கதிராசிப் பிள்ளைசெய்த**
**சீரளையும் தவவடிவாஞ் சிவசம்புப்புலவர்"**

காலம் கி.பி. 1829 - 1910 என்று உறுதியாக முடிவு செய்யப்படுகிறது.[10] புலவர் 81 வருடங்கள் உலகில் வாழ்ந்துள்ளார் என்பதையும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அவர் வாழ்ந்துள்ளார் என்பதையும் தெளிவாக அறியமுடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. வேலுப்பிள்ளை,ஆ.(1981) **இளங்கதிர்,** 'உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர்', பேராதனைப் பல்கலைக் கழகம்: தமிழ்ச் சங்கம். ப.27.
2. செவ்வந்திநாத தேசிகர் (ப.ஆ).,(1939) **சிவசம்புப்புலவர் பிரபந்தத் திரட்டு - முதற்பாகம்,** சுன்னாகம்: திருமகள் அழுத்தகம். ப.vii.
3. மேலது. ப.viii.
4. வேலுப்பிள்ளை,ஆ. **மு.கு.க.** ப.28
5. சதாசிவம்,ஆ. (தொ.ஆ), (1966) **ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்,** கொழும்பு: சாகித்திய மண்டலம். ப.552
6. நீலகண்டன், புலவர்மணி., (2004) **தேவகீயம் - பண்டிதை தேவகி நினைவு மலர்,** 'சிவசம்புப் புலவர்', உடுப்பிட்டி: புலவரில்லம்.ப.45.
7. வேந்தன், வேல்., (1976) **செவ்வந்தி,** 'கம்பனுக்குப் பின்பொரு சம்பனல்லோ', யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம். ப.12.
8. (01)திருஞானசம்பந்த தேசிகர்,கை. (1910) **யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி வாசரும் சுப்பிரமணியசுவாமி தொண்டருமாகிய ஸ்ரீமத் அ.சிவசம்புப் புலவர் அவர்களின் தேகவியோகத்தைக் குறித்துச் சொல்லிய சரமகவிகள்.** ப.2
(02)கனேசையர்,சி. (2006) **ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்,** கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். ப.85
9. திருஞானசம்பந்த தேசிகர்,கை. (1930) **மு.கு நூ.** ப.3.

...இக் காலக்கணிப்பை மேற்குறிப்பிட்ட சான்றுகள் மட்டுமின்றிப் புலவரது மாணாக்கரும் மருகருமான (புலவரின் சகோதரியின் மகன் - புலவரின் மகளை மணம்முடித்தவர்) ஆறுமுக உபாத்தியார் உறுதிப்படுத்தியதாக அவரின் மாணவரும் புலவரின் பூட்டருமாகிய புலவர்மணி கா.நீலகண்டன் அவர்கள் ஆய்வாளருக்கு கூறினார்.(5-5-2013).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமைச் சுழி



**திருமதி ஆன்யாழினி சதீஸ்வரன்**
**விரிவுரையாளர்**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**பே**ருந்து தாண்டிக்குளத்தைத் தாண்டியதுமே நிமிர்ந்து அமர்ந்தாள், அவள். இதயத் துடிப்பின் வேகம் மெல்ல மெல்லக் கூடுவதை உணர்ந்து கொண்டாள். கண்கள் அந்த ஒற்றை வாகை மரத்துக்காய்ப் பார்வையை அலைய விட்டுக்கொண்டே வந்தன. வீதியின் இருமருங்கும் நூற்றாண்டுகளாய் மனிதர்களே வாழாத பிரதேசமாகப் புதர் சுமந்து நின்றிருந்தது அந்தப்பகுதி. இருபது ஆண்டுகளுக்கு முன்பாக அங்கேயோர் அழகிய கிராமம் இருந்தது என்பதை வேறு யாரும் கூறியிருந்தால் அவளே கூட நம்பியிருக்கமாட்டாள். ஆனால் அந்தக் கிராமத்தின் ஜீவிதத்துக்கான உயிருள்ள சாட்சியாக அவளேயல்லவா நிலைத்துவிட்டாள்.

தேடிய வாகை மரத்தைத் தூரத்திலேயே அடையாளம் கண்டுகொண்டு பேருந்து கடக்கும் வரை தெய்வ சன்னிதானத்தில் நிற்கும் பரவசத்தோடு அதனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த வாகைமரத்தின் வலதுபுறமாய்த்தான் போன ஜென்மமோ எனத்தோன்றும் ஒரு காலத்தில் அவள் வீடு இருந்தது. சுற்றிலும் மல்லிகைப் புதர்களும் பின்னே மாட்டுத் தொழுவமுமாய் இருந்த அந்த வீட்டிலேதான் அவள் பிறந்தாள். இயற்கையோடு கரங்கோர்த்துக் கொண்டு வளர்ந்தாள். நண்பர்களோடு இணைந்து மரங்களேறி, பழங்கள் பறித்து குளங்களிலே நீச்சலடித்து ஒரு குட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசியாய்த் தன்னை உணர்ந்த அவள் வாழ்க்கையையும் அந்தக் கிராமத்துடன் கூடவே கலைத்துப் போட்டது போர். அந்த வாகை மரம் மட்டும் ஒற்றையாய் எஞ்சிப்போனது.

பேருந்து கடக்க தலை திருப்பி மீளவும் மரத்தை நோக்கினாள்.
காற்றில் மெலிதாய் மல்லிகை வாசமும் பசுஞ்சாண மணமும் கலந்து வருவதாய்.....
மரத்தின் கீழே ஒரு சீருடை காற்றில் சடசடப்பதாய்....
நிஜமாய் இருக்கக் கூடாதா என ஏங்க வைக்கும் பிரமைகள்....
கண்களைத் துடைத்துக் கொண்டு முகத்தைச் சமனப்படுத்திக்கொண்டாள். மனசு மட்டும் மரம் விட்டு நகர மாட்டேன் என்று அடம் பிடித்தது.

முதன்முதலாய் அவனை அவள் அந்த வாகை மரத்தின் கீழ்த்தான் கண்டாள். வானம் கடக்கும் இயந்திரப்பறவைகள் கிராமங்களின் மேல் தாழ்ந்து கர்ப்பம் திறந்துகொண்டிருந்த காலப்பகுதி அது. பாடசாலைகளெல்லாம் பூட்டப்பட்டிருந்த நாட்களவை. மருதமரங்களின் நிழலில் குளித்துக் கிடந்த குளத்தில் அமிழ்ந்து கிடந்து விட்டு எதிரேயிருந்த பாறை கடந்து பாதையேறியபோது தான் அவன் அவள் பார்வையில் பட்டான். அவன் கண்ணில் பட்ட அதே கணம் காதில் பொம்பர் சத்தம் கேட்கவும் பதறியவள் பாதையைக்கடந்து வாகை மரத்தை மறைவாக்கிக் கொள்ளும் முனைப்போடு அவனருகில் வந்தாள். எந்தப்பதட்டமும் இல்லாது தன் கையிலிருந்த ஆயுதத்தைக் குழந்தையாய் வருடிக்கொண்டிருந்தவன் இவளை நிமிர்ந்து பார்த்தான். சிறு புன்னகை இருந்தது அவன் முகத்தில். முகாமுக்குப் புதியவன் என்பதைக் கடந்து அன்று வேறெதுவும் சிந்திக்க முடியவில்லை அவளால்.

பின்வந்த நாட்களில் ஏனைய அண்ணாமாருடன் அவனை அடிக்கடி பாதையில் கண்டாள். பரிச்சயங்கள் வார்த்தைகளாகி சொந்தமென்று மனது நினைக்கத்தொடங்கிய பின் எப்போது... எந்த நாளில் வழக்கமான இயக்கத்து அண்ணா எனும் இயல்பான பாசம் அவன் மட்டில் மேனி சிலிர்க்கச் செய்யும் நேசமாக மாறிப்போனது என்பது அவளேயறியாதது.

பதின்மங்களின் இறுதியிலும் தேடித்தேடி இவள் படிக்கும் கோகுலம், பாலமித்ரா பார்த்துக் கேலி பண்ணியதோடு நில்லாது மறுநாளே சில ரஷ்யன் நாவல்களைக் கொணர்ந்து கொடுத்துப் படிக்கச் செய்தானே அப்போதோ...
பொறுப்பாளருக்குத் தெரியாமலேயே வீட்டின் பின்புறமாய் வந்து இவள் தாயிடம் ரகசியமாய் உணவருந்திப் போவானே அப்போதோ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாலே கெஞ்சிய இவள் வேண்டுகோளைத் தட்ட முடியாது இவளும் தோழிகளும் பழம் பறிப்பதற்காய், பாலமரமேறிக் கிளைகளைத் தறித்துப் போட்டுவிட்டு மறுநாளே தண்டனையாய் பாதையோரம் புல் செதுக்கிக் கொண்டு நின்றானே அப்போதோ...
எல்லை கடக்கும் வாகனங்களை மறித்து சோதிக்க அவள் தாய்க்குத் தெரியாமலேயே தம்பியைக் கூட்டிச்சென்று விட்டு திரும்பிவந்து மாறாத புன்னகையோடு தம்பிக்கான திட்டுக்களைத் தான் வாங்கிக்கொண்டு நின்றானே அப்போதோ...
மாங்குள முற்றுகைக்காய் அவள் வீட்டில் விடைபெறாமலேயே புறப்பட்டுப் போனவன் செய்தி தெரிந்து இவள் குடும்பமே தவித்துக் கொண்டிருக்க, மீண்டு வந்ததும் முதலில் இவர்கள் வாசல் வந்து நின்று வெற்றிச் செய்தி சொல்லிச்சொல்லி பெருமிதப்பட்டானே அப்போதோ...

காற்றெங்கும் சாபங்கள் நிறைந்துகிடந்த ஒருநாளில் இவள் தம்பி எறிகணையில் சிதறிப்போக செய்திகேட்டு இவள் வீட்டுக்கு விரைந்து வந்தவன் பொட்டலமாய்க் கிடந்த தம்பி அருகிலிருந்து கதறிக்கொண்டிருந்த இவள் முகம் தவிர்த்து வன்மமும் வேதனையுமாய் வேறெங்கோ வெறித்து நின்றானே அப்போதா... தாங்க முடியாது ஓடிவந்து அவனை அணைத்து இவள் கதறி அழ சூழல் மறந்து தான் யார் என்பதை மறந்து இவள் தலைகோதிவிட்டானே அப்போதோ...
எப்போது என்றாலும் அவனிடம் அவள் கொண்ட அதே நேசத்தை அவளிடம் அவனும் கொண்டிருந்தான் என்பதை அவள் உணர்ந்து கொண்ட போது அவன் அதை மறுத்தான். சிறுபிள்ளைத்தனமென்றான் தன் இலட்சியங்கள் புரியாதவளென்றான் தேசத்துக்காய் வாழ வேண்டிய வாழ்க்கையைக் காதலுக்காய்ப் பலியிடத் தயாராயில்லையென்றான். அவன் விளக்கங்கள் கூறிக்கொண்டிருக்க அவள் விலகி நடந்தாள்.

இறுதியாய் அந்த நாள் ... அன்றும் அவனை அவள் அந்த வாகை மரத்தினடியில் தான் கண்டாள். அன்று அதிகாலையிலேயே இராணுவம் நகரிலிருந்து இவள் கிராமத்தைச் சுற்றிவளைத்து முன்னேறி நொச்சி மோட்டை வழியாய் மீளவும் உள் நோக்கி நகரத் தொடங்கியிருந்தது. போராளிகள் நொச்சிமோட்டைப் பாலத்துக்கு உட்புறமாய் நின்று மறித்துத் தாக்கிக் கொண்டிருந்தனர். புதுக்குளம் வழியாய் இடம்பெயர்ந்துவிடும் முனைப்போடு கிராமம் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டிருந்தது. ஏதோ உணர்வில் வாசல் வந்தவள் பார்வை திருப்ப வாகை மரத்தினைக் கடந்து வந்து கொண்டிருந்த சைக்கிளில் அவன் இருந்தான். ஊர் விட்டுப் போகும் முன் அவன் முகம் பார்த்த நிம்மதியில் நெடுமூச்செறிந்தவள் சில கணங்களின் பின்பே நிலைமையுணர்ந்தாள். அவனும் அவளைப் பார்த்தபடியேதான் வந்தான். அவன் முகத்தில் வழக்கமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னகையோ இலட்சியங்கள் குறித்துப் பேசும் போதான தீவிரமோ இல்லை. மாறாக, வேதனையிருந்தது. அவன் கைகள் வயிற்றை இறுக்கியிருந்தன. அந்தக் கைகள் தாண்டி வழிந்து கொண்டிருந்தது இரத்தம். சைக்கிள் தன்னைக் கடந்த பின்னே ஏனோ இனி அவனைப் பார்க்க முடியாதென்று தோன்ற, தன்னைக் கடந்த கணத்தில் அவன் தன் பெயரை உச்சரித்தான் என உணர்ந்தபடியே மயங்கிச் சரிந்தாள்.

பின்னிருந்து தாய் ஓடிவந்து தாங்கியதோ.... மயக்கம் தெளிந்து தான் அவர்களுடனே கிராமம் விட்டுப் புறப்பட்டதோ... அன்று பிழைத்துக் கொண்ட போதும் இரு நாட்களின் பின்னே நடந்த மோதலில் அவன் விழுதாகிப் போன செய்தி கேட்டு குடும்பமே அழுததோ... எதுவும் உணராமலேயே அவள் சில நாட்கள் வாழ்ந்தாள். பின்னும் மாதக்கணக்கில்... வருடக்கணக்கில் இடம் விட்டு இடம் விட்டு பெயர்ந்து...பெயர்ந்து... இறுதியாய் லண்டனை உறைதேசமாக்கிக் கொண்டபின் போர் பிய்த்துப் போட்ட சொந்தத் தேசம் நோக்கி அவள் வந்திருக்கிறாள்.

அவன் இல்லாத தேசம்...
அவன் வாழ்ந்த சுவடுகள் இல்லாத தேசம்...
அவன் துயின்ற இல்லம் கூட பிடுங்கியெறியப்பட்ட தேசம்...
மிகப் பெரும் சுழியாய் வெறுமை தன்னைச் சூழ்வதை வழமை போலவே உணரத்தொடங்கினாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னயாவினும்
புண்ணியங்கோடி
ஆங்கொரு ஏழைக்கு
எழுத்தறிவித்தல் - பாரதி

# சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் சில குறிப்புகள்



**பெருமாள் சரவணகுமார்**
**விரிவுரையாளர்**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**சோ**வியத் மண்ணையும் மக்களையும் பண்படுத்திய எழுத்தாளுமைகளுள் சிங்கிஸ் ஐத்மாத்தவ் மிக முக்கியமானவர். அவரது அன்னைவயல், குல்சாரி, ஜமிலா போன்ற நாவல்கள் மகத்தான உலகப் படைப்புகளாக விளங்குகின்றன. சோவியத் நாட்டின் தொழிலாளர் போராட்ட வாழ்க்கையையும், அப்போராட்டத்தினூடாகக் கட்டியெழுப்பப்பட்ட சமூக அரசியல் வரலாற்றையும் பதிவுசெய்யும் படைப்புகளாக சிங்கிஸ் ஐத்மாத்தவின் பெரும்பாலான படைப்புகள் திகழ்கின்றன. சோவியத் மக்கள் ஜார் மன்னனின் ஆட்சிக் காலத்தில் மிகக் கொடூரமாகச் சிதைக்கப்பட்டார்கள். 1917 இல் ஏற்பட்ட ஜார் மன்னனின் வீழ்ச்சி உலக மக்களது விடுதலைக்கான முதல் திறவுகோலாக அமையலாயிற்று. ஜார் மன்னனின் ஆட்சியின் கொடுமையையும் வீழ்ச்சியின் பின்னரான சோவியத் நாட்டின் நிலைமையினையும் தமிழில் முதன் முதல் பதிவுசெய்த பெருங் கவிஞன் பாரதியே எனலாம். அவ்வகையில், பாரதியின் "புதிய ருஷ்யா" என்ற கவிதை வரலாற்றுச் சிறப்புமிக்கது. இக்கட்டுரையின் தேவை கருதி சில வரிகளை இங்கு பதிவுசெய்யலாம்:

..............................................................

**இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்**
**ஜாரரசன் இவனைச் சூழ்ந்து**
**சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி**
**அறங்கொன்று சதிகள் செய்த**
**சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்**
**புயற்காற்றுச் சூறை தன்னில்**
**திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விறகான செய்தி போலே!**
**குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு**
**மேன்மையுறக் குடிமை நீதி**
**கடியொற்றி லெழுந்ததுபார் குடியரசென்று**
**உலகரிய கூறிவிட்டார்**
**அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது**
**அடிமையில்லை அறிக என்றார்**
**இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்**
**கிருத யுகம் எழுக மாதோ!**



ஜார் மன்னனின் வீழ்ச்சியின் பின்னர் சோவியத் நாடு பல வழிகளிலும் மாற்றங்களை சந்திக்கத் தொடங்கியது. சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் துறைகளிலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. உலக சோசலிச நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் முன்னுதாரணமாகவும் அது அமையலாயிற்று. ஜார் மன்னனின் வீழ்ச்சியின் பின்னரான சோவியத் நாடு பொதுஜனங்களை மையப்படுத்திய சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டது. பண்ணையடிமைகளாகவும், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவும் காணப்பட்ட பின்தங்கிய கிராம மக்களுக்காகப் பல கல்வித் திட்டங்களை சோசலிச சோவியத் நாடு அமுலாக்கியது. அவ்வாறு அமுலாக்கப்பட்ட கல்விச் சிந்தனைகள் எவ்வாறு பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த சமூக வழக்கங்களை மாற்றியமைத்தது என்பது பற்றியும், எழுத்து வாசனையே கண்டிராத பின்தங்கிய கிராம மக்கள் எவ்வாறு புதிய சமூக மாறுதல்களுக்கு உள்ளாகிறார்கள் .என்பது பற்றியும் விபரிக்கும் இலக்கியப் படைப்புகள் பல வெளிவந்துள்ளன. அவ்வாறான மகத்தான படைப்புகளுள் சிங்கிஸ் ஐத்மாத்தவின் 'என் முதல் ஆசிரியர்' என்ற நாவல் தனித்துவம் மிக்கது.

சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் என்ற நாவல் சோவியத் நாட்டில் 1924 களில் ஏற்பட்டுக்கொண்டிருந்த கல்வி ரீதியிலான எழுச்சியை மையப்படுத்தியது. அன்றைய சோவியத் நாட்டின் கிர்கீஸியப் பகுதியின் அருகே ஒரு மலையடிவாரத்தில் அமைந்திருந்த சிற்றூரே குர்கூரெவு எனும் கிராமம். வறுமையின் மிகக் கொடூரக்கரங்களுக்குள் அச்சிற்றூர் சிக்குண்டுக் கிடந்தது. பல நாடோடிக் குடும்பங்களின் வாழ்க்கைத் தளமாகவே அது விளங்கியது. எவ்விதமான வெளித்தொடர்புகளும் இன்றி மலைகளால் இறுக்கிப் பிடிக்கப்பட்ட இயற்கைக் கைதிகளாகவே அம்மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தவகையான சூழ்நிலையில், அந்த ஊருக்குச் சோவியத் அரசால் அனுப்பிவைக்கப்பட்டவனே தூய்ஷன் என்ற இளைஞன். கம்யூனிஸ சிந்தனையை வரித்துக்கொண்டான். அவனும் குர்கூரெவு ஊரைச் சேர்ந்தவன்தான். ஜார் மன்னனின் ஆட்சிக் காலத்தில் பஞ்சம் பிழைப்பதற்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஊருக்குச் சென்றவன். இப்போது ஓர் ஆசிரியனாக குர்கூரெவுக்கு வந்திருக்கிறான். பண்ணையடிமைகளாகவும், விவசாயிகளாகவும் காணப்படும் மக்களின் அறியாமை எனும் இருளை அகற்றுவதற்காக அறிவெனும் சாகரத்தின் நுழைவாயிலான கல்வியைப் பரப்ப வந்தவன்தான் தூய்ஷேன் என்ற இளைஞன். விவசாயிகளாக இருக்கும் தமக்குக் கல்வி எதற்கு என அவ்வூர் மக்கள் அவனை இகழ்கின்றனர். விடாமுயற்சியோடு கல்வியின் அவசியத்தை வலியுறுத்திய தூய்ஷேன் சோவியத் அரசின் இலட்சியக் கனவை அடையமுற்படுகின்றான்.

**"நீ முதலில் இதைச் சொல்! எங்களுக்கு எதற்காகப் பள்ளிக்கூடம் வேண்டும்?" என்று சாதிம்குல் கேட்டான்.**

**திகைத்துப்போன தூய்ஷேன், " எதற்காகப் பள்ளிக்கூடம் வேண்டுமா? என்று அதே கேள்வியைத் திரும்பச் சொன்னான்....**

**"ஆம் அது சரிதான். எங்களுக்கு எதற்காகப் பள்ளிக்கூடம் வேண்டும்?"** என்று குரல் உரக்கக் கேட்டது.

கல்வியின் மகத்துவம் தெரியாத சமூகமாகவே குர்கூரெவு கிராம மக்கள் இருந்தனர். இன்னொரு வகையில் கூறுவதாயின் அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த மக்களிடமே தூய்ஷேன் கல்வியைப் பரப்பமுற்பட்டான்.

குர்கூரெவு எனும் அந்த ஊரின் மலையின் உச்சியிலிருந்த பாழடைந்துபோன ஒரு குதிரைக் கொட்டிலை சீர்படுத்தி கல்வி கற்பதற்கான இடமாக மாற்றுகின்றான். கல்வி கற்பதற்காக சிறுவர்களை அழைத்துவர பெரும்பாடுபடுகின்றான். அந்த ஊரிலுள்ள பெற்றோரோடு பேசியும், சோவியத் அரசின் உத்தரவைக் காட்டியும் ஒருவாறு சம்மதம் பெறுகின்றான். அதுவரைகாலமும் வயலுக்குத் தேவையான சாணத்தைப் பொறுக்கிக்கொண்டிருந்த அந்த ஊர் சிறார்கள் முதன்முறையாக தூய்ஷேனின் உதவியோடு புது உலகையே தரிசிக்கத் தொடங்குகிறார்கள். ஆரம்பக் கல்வியைக் கூட பெற்றிருக்காத தூய்ஷேன் சமூக அர்ப்பணிப்போடு பல விடயங்களை எடுத்துக்கூறி கல்வியெனும் சாளரத்தைத் திறந்துவிடுகின்றான். அவ்வாறு அவனிடம் கல்வி கற்று உயர்ந்தவர்கள் பலர். அவர்களுள் அல்தினாய் சுலைமானவ்னா என்ற மாணவியைச் சுற்றியே நாவலின் பெரும்பகுதி நகரத்தொடங்குகின்றது.

மக்களின் விடுதலையை அவாவி நிற்கும் படைப்பாளன் இயற்கையின் தத்துவத்தை உணர்ந்தனவாய் இருப்பது அவசியம். சதா மாறிக்கொண்டிருக்கும் இயற்கை வாழ்வுப் பற்றிய உணர்த்திறன் அவனிடம் ஆழமாக இருத்தல் வேண்டும். இயற்கையைப் பற்றிய அவனது சித்திரிப்பு மனித வாழ்வுக்கும், மானுடத் தத்துவத்துக்கும் நம்பிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டுவதாக அமையவேண்டும். மகத்தான மக்கள் இலக்கியப் படைப்புகளில் இத்தத்துவம் மிகச் சிறப்பாக வெளிப்படுவதைக் காணமுடியும். சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் நாவலிலும் இதனைப் பரக்கக் காணலாம்.

**மரத்து இலைகளின் கிசுகிசுச் சத்தத்தையும் கேட்பேன். அப்பொழுதெல்லாம் இந்த பாப்ளார் மரங்களை யார் கைத்திருக்கக்கூடும்? என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. என்பது இப்பொழுதும் ஞாபகத்தில் இருக்கிறது. இனம் தெரியாத அந்த மனிதன் என்ன கனவு கண்டிருக்கக்கூடும்? இளம் மரச்செடிகளின் வேர்களை பூமியின் மண்ணிலே ஊன்றியபோது அவன் என்ன நினைத்திருப்பான்? என்ன நினைவுகளோடும் நம்பிக்கையோடும் இவற்றைக் காத்து வளர்த்திருந்திருப்பான்?**

அல்தினாய் சுலைமானவ்னா இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தவள். உறவினரின் பராமரிப்பிலே வளர்ந்து வருகின்றாள். கற்றலில் ஆர்வம் மிக்கவளாகவும் தூய்ஷனின் அன்புக்குரிய மாணவர்களுள் ஒருவராகவும் விளங்குகின்றாள். பெற்றோரை இழந்து அனாதையாக இருக்கும் அவளுக்குக் கல்வி எதற்கு என்றுகூறி அவளது வளர்ப்புத் தாய் வயதான ஒரு கிழவனுக்கு இரண்டாம் தாரமாக மணம்முடிக்க அல்தினாவை வலியுறுத்துகின்றாள். கல்வியில் ஆர்வமிக்க அவளை அவளது வளர்ப்புத் தாயின் பிடியிலிருந்து மீட்டெடுத்து அவளின் பாட்டியின் பராமரிப்பில் இருக்கச் செய்கிறான் தூய்ஷன். அல்தினாய் சுலைமானவ்வைத் தேடி கொடுமைக்காரியான அவளது சித்தி குண்டர்களோடு பள்ளிக்கூடத்துக்கே வந்து அவளைத் தூக்கிச் சென்றுவிடுகின்றாள். மிகுந்த துணிச்சலோடும் சோவியத் செம்படைகளின் உதவியோடும் அல்தினாய் சுலைமானவ்வை அக்கொடுமைக்காரக் கும்பலிலிருந்து மீட்டெடுக்கிறான், தூய்ஷன். பின்னர் அவளின் பாதுகாப்புக்கருதியும் கல்வியின் மீது அவளுக்கிருந்த ஆர்வத்தினாலும், மேற்படிப்புக்காகவும் அல்தினாவை அக்கிராமத்திலிருந்து மீட்டு நகரத்துக்கு அனுப்பிவைக்கிறான், தூய்'ன்.

குர்கூரெவு கிராமத்தின் கொடியகரங்களில் சிக்குண்டு தவித்த அல்தினாய் சோவியத் அரசின் ஆதரவோடும் தனது விடாமுயற்சியின் துணையோடும் கல்வி கற்று மிக உயர்ந்த நிலையை அடைந்துவிடுகிறாள். உயர்கல்வியைப் பெற்ற அல்தினாய் இப்போது ஒரு பல்கலைக்கழகத்தினது துறைத்தலைவராகவும், தத்துவ விரிவுரையாளராகவும் உயர்நிலையை அடைகின்றாள். அல்தினாவின் குக்கூரெவு கிராமம் இப்போது கல்வியிலும் சமூக அபிவிருத்தியிலும் சிறந்து விளங்குகின்றது. குதிரைக் கொட்டிலுக்குள்ளிருந்து தொடங்கிய குர்கூரெவு கிராமத்தின் கல்வி வளர்ச்சி இன்று அக்கிராம மக்களினாலேயே ஒரு பள்ளிக்கூடம் கட்டும் அளவுக்கு முன்னேறியுள்ளது. அந்தப் பள்ளிக்கூடத் திறப்புவிழாவுக்குச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுபவராக, அக்கிராமத்திலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கியெரியப்பட்டவளான அல்தினாய் சுலைமானவ்னா விளங்குகின்றாள். அத்திறப்பு விழாவில் கலந்துகொண்டிருக்கும் போது, அவ்விழாவில் தூய்ஷன் பற்றிப் பேசப்படுகின்றது. அவன் இப்போது தபாற்காரனாக அவ்வூரில் பணியாற்றிக்கொண்டிருக்கிறான். இதனை கேள்வியுற்ற அல்தினாய் மிகுந்த மனவருத்தத்துக்கு ஆளாகின்றார். கல்வியெனும் சாளரத்தை அவ்வூரில் திறந்து வைத்த அந்த தூய்ஷனைக் கௌரவிக்க மறந்துவிட்டோமே என்ற கவலையும் வேதனையும் அல்தினாவின் மனதில் அப்பிக்கொள்கின்றது. ஸ்டெப்பிப் புல்வெளிகளில் அலைந்து திரிந்த அக்கிராமத்து சிறுவர்களுக்குக் கல்வியின் விதையை விதைத்து, புது உலகையே தரிசிக்கவைத்த தூய்ஷனின் நினைவுகளாகவும் அல்தினாய் சுலைமானவ்னா பற்றிய நினைவுகளாகவும் விரிகிறது, சிங்கிஸ் ஐத்மாத்தாவின் என் முதல் ஆசிரியர் என்ற இந்நாவல்.

கல்வி வாசனையே இல்லாத குர்கூரெவு கிராமத்தைக் கல்வியைக் கொண்டாடும் சமூகமாக உருவாக்கி வெற்றி பெறுகிறான், தூய்ஷன். எதிர்ப்புகள் வந்தபோதெல்லாம் அதற்கு முகங்கொண்டு, சோர்ந்து போகாமல் தனது நோக்கத்தில் மட்டுமே மனங்கொண்டு பல போராட்டங்களைச் சந்தித்து மகத்தான பாத்திரமாகத் தூய்ஷனைப் படைத்திருக்கிறார், சிங்கிஸ் ஐத்மாத்தவ்.




ஜார் மன்னனின் ஆட்சியில் சோவியத் நாட்டு மக்கள் எவ்வாறெல்லாம் சிதைக்கப்பட்டார்களோ அதுபோலவே காலனித்துவக் காலத்தில் பெருந்தோட்ட மக்களும் சொல்லென்னாத் துயரங்களை அனுபவித்தனர். இவ்வகையான சமூக வரலாற்று ஓட்டத்தில் சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் என்ற படைப்பு முன்னிறுத்துகின்ற கருத்தியல் இன்றைய பெருந்தோட்டச் சூழலுக்கும் பொருந்தக்கூடியதாக அமைகின்றது. சோவியத் நாட்டின் குர்கூரெவு கிராமத்துப் போராட்ட வாழ்வும் பிரச்சினைகளும் எமது வாழ்வுப் புலத்தோடும் நெருங்கிய தொடர்புடையது. எமது சமூக வரலாற்றையும் கல்வி வரலாற்றையும் மீட்டுப்பார்ப்பதற்கான ஓர் உந்துதலையும் இந்நாவல் தருகின்றது.

காலனித்துவக் காலத்திலிருந்து இலங்கையின் கல்வி வரலாறு தொடங்குகின்றதாயினும் பெருந்தோட்டப் பகுதிகள் அக்காலப்பகுதியில் இருந்தே புறக்கணிக்கப்பட்டன. தொழிலாளர் படையாக இருக்கும் பெருந்தோட்ட மக்களுக்குக் கல்வி தேவையில்லை என்ற மனப்பாங்கு காலனித்துவ மனப்பாங்காக இருந்தது. 1832 இல் கொண்டுவரப்பட்ட கோல்புருக் அறிக்கையிலும் பெருந்தோட்டப் பகுதியின் கல்வி குறித்து எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்புகளையும் எடுக்கவில்லை என்பதே வரலாறு.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஓரளவுக்குப் பெருந்தோட்டக் கல்வித்துறை பற்றிய சிந்தனைகள் முளைவிடத் தொடங்கியது. ஒரு கையில் கொடுத்து மறுகையில் பறிப்பது போலவும் அச்சிந்தனை அமைந்தது. லயன் காம்பரா பள்ளிக்கூடங்களை உருவாக்கும் திட்டம் முன்மொழியப்பட்டு அமுலாக்கவும்பட்டது. தோட்ட நிருவாகத்தின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் லயன் காம்பரா பள்ளிக்கூடங்கள் இயங்கின. 1904 ஆம் ஆண்டின் அரசாங்கப் பதிவின்படி 179 லயன் காம்பரா பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவற்றுள் 60 பள்ளிக்கூடங்களே அரச உதவியைப் பெற்றவை. சோவியத் நாட்டின் குர்கூரெவு கிராமத்தின் கல்வி வரலாறு குதிரைக் கொட்டிலுக்குள்ளிருந்து தொடங்குகிறதென்றால் மலையகத்தின் கல்வி வரலாறு லயத்து காம்பிராவுக்குள்ளிருந்து தொடங்குகிறது எனலாம். 1905 ஆம் ஆண்டு வேஸ் ஆணைக்குழு இலங்கையின் பொதுவான கல்வி அமைப்பின் கீழ் தோட்டப்புறக் கல்வி அமையக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தியது. இந்த ஆணைக்குழுவின் இத்திட்டமே பெருந்தோட்டக் கல்விமுறை தேசிய கல்விமுறையிலிருந்து 40 ஆண்டுகள் பின்தங்கியிருப்பதற்கு அடிப்படைக் காரணமாகவும் அமைந்தது. பெருந்தோட்ட நிருவாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிய பெரும்பாலான லயத்துப் பாடசாலைகள் பெரிய கங்காணிமாரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டிருந்தது. இதனால் பெரும்பாலான தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டார்கள். எழுத்து வாசனையே இல்லாமல் தொழிலாளியாகவே வாழ்ந்து மடிந்தவர்கள் ஏராளம். இவ்வகையான சோக வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்டக் கல்வி வரலாற்றில் 1960 களுக்குப் பின்னர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. ஆயினும் அம்மாற்றங்கள் சில வரம்புகளுக்கு உட்பட்டவையாகவே இருந்தது.

இவ்வகையான வரலாற்றைக் கொண்டு வளர்ந்து வந்த மலையகக் கல்விப்பண்பாட்டிலிருந்து கல்வி கற்று பல்கலைக்கழகம்வரை சென்று உயர்கல்வியைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக 1960களில் கல்வி வாசனையே கிடைக்காதிருந்த பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து விரல்விட்டு எண்ணக்கூடியவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிய முதல் ஆசிரியர்கள் பலர் இருந்தார்கள். இக்காலப்பகுதியில் சமூக அர்ப்பணிப்போடு சேவையாற்றிய ஆசிரியர்களை இருவகைப் படுத்திநோக்கலாம். ஒன்று பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களின் பணிகள் இரண்டாவது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் பணிகள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் பணிகள் பெருந்தோட்டக் கல்வி வரலாற்றில் மிக முக்கியமானவை. இவர்களால் உருவாக்கப்பட்டவர்களே பெருந்தோட்டப் பகுதியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கல்விகற்ற சமூகமாக மேற்கிளம்பினார்கள். சமூக ஈடுபாட்டோடு இணைந்தவகையில் அவர்களது பங்களிப்புகள் தொடர்ந்தும் காணப்படுவதையும் அவதானிக்கலாம். இவ்வகையான மாணவர் படையணியை நாம் இன்று உருவாக்கி இருக்கிறோமா என்று சிந்திப்பது மலையகக் கல்வியை சரியான வழித்தடத்துக்குக் கொண்டு வருவதற்கு வழிவகுக்கும்.

1970 இல் பெருந்தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் படிப்படியாக கையேற்றது. இதனால் அரச பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அரச பாடசாலைகளாக அவைகள் தோற்றம் பெற்றாலும் இடப்பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறையென கல்வி ரீதியிலான பிரச்சினைகள் தொடர்ந்தும் நீடித்தது. பெருந்தோட்டப் பாடசாலைகளை அரசு கையேற்று பெருந்தொகையான வெளிநாட்டு முதலீடுகளை அபகரித்துக் கொண்ட சோக வரலாறே தொடர்ந்தது. அரச பாடசாலைகளில் கற்கமுடியாமல் பெருந்தொகையான தோட்டப்புற மாணவர்கள் "பெருந்தோட்ட உற்பத்திக் கூலிகளாகவே" உருவாக்கப்பட்டனர்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் மிகக் கடுமையான போராட்ட வடிவங்களுடாக செப்பனிடப்பட்ட பெருந்தோட்டக் கல்வி இன்று பெருந்தோட்ட சமூக அமைப்பிலிருந்து விலகிச்செல்வதைக் காணமுடிகின்றது. பாடசாலைகளுக்குள் அரசியல் தலையீடுகளும் அரசியல் பழிவாங்களும் நிறைய இடம்பெற்று வருகின்றன. குறிப்பிட்ட ஒரு சில பாடசாலைத் தலைமைகளும் ஆசிரியர்களும் பிற்போக்கு அரசியல் சாக்கடைக்குள் சிக்குண்டவர்களாக விளங்குகின்றனர். பாடசாலைகள் அரசியல் நிகழ்வுகள் நடக்கும் களமாக மாறியுள்ளது. பாடசாலைகள் சுமுகமாக இயங்கமுடியாத வகையில் பிற்போக்கு அரசியல் மேலோங்கியுள்ள அதேவேளை அரசியல் மையங்களாகவும் மாறிவருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சிங்கிஸ் ஐத்மாத்தவ் என் முதல் ஆசிரியர் மூலம் முன்வைக்கின்ற கருத்தியல் சட்டகம் எமக்கு ஒரு வழிகாட்டியாக அமையமுடியும்.

மலையகச் சூழலில் எழுத்து வாசனையே கிடைக்காத சிறுவர்கள் நிறைய பேர் இன்றும் இருக்கிறார்கள். சிறந்த வழிப்படுத்தல் இல்லாமல் பல மாணவர்கள் பாடசாலையை விட்டு, இடையிலேயே விலகிவிடுகின்றார்கள். இதற்குப் பல சமூக, பண்பாட்டு, அரசியற் காரணங்கள் உண்டு. எந்தவகையான காரணங்கள் கூறப்பட்டாலும் கல்வியே அவர்களது விடுதலைக்கான முதல் மார்க்கமாக அமையமுடியும். அத்தோடு, கருத்தியல் ரீதியான மாணவர்களை உருவாக்க முடியாத வகையில் அரசியலும் பின்னப்பட்டுள்ள இன்றைய காலப்பகுதிக்குச் சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் முன்வைக்கின்ற பார்வை சிறந்த முன்னுதாரணமாக விளங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கிஸ் ஐத்மாத்தவின் என் முதல் ஆசிரியர் என்ற நாவலின் மூலம் சித்திரித்துக் காட்டியுள்ள பாத்திரங்கள் இன்றைய எமது சமூக அமைப்புக்கு வேண்டியவர்களாக உள்ளனர். இன்றைய எமது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாகவும், வலிமையூட்டுவதாகவும் அப்பாத்திரங்கள் திகழ்கின்றன. தூய்ஷன் போன்ற ஆசிரியர்களும் அல்தினாய் சுலைமானவ்னா போன்ற மாணவர்களும் உருவாக வேண்டியதும், உருவாக்கப்பட வேண்டியதும் வரலாற்றுத் தேவையாக உள்ளது. அவ்வாறான வரலாற்றுத் தேவையை உணர்ந்து செயற்பட எமக்கான சமூக நோக்கையும் சிந்தனைத் தெளிவையும் உருப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இவ்விடத்தில் பொதுக் கல்வி குறித்து லெனின் கூறிய பின்வரும் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

> **அநேக கல்வி நிறுவனங்களின் வெளிப்படையான வீழ்ச்சியும் நாசவேலைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அறிவுஜீவிகளின் எக்களிப்பும் இருந்த போதிலும் போராட்டத்தில் கிட்டிய அனுபவம் மக்கள் தமது விதியை தம் சொந்தக்கரங்களில் எடுத்துக்கொள்ளும்படி கற்றுக் கொடுத்திருப்பதை நாம் காண்கிறோம். மக்களிடம் உண்மையில் அனுதாபம் காட்டும் எல்லோரும் எல்லா சிறந்த ஆசிரியர்களும் நம்முடைய உதவிக்கு வருவார்கள். சோசலிசத்தின் லட்சியம் வெற்றி பெறும் என்பதற்கு அதுவே நிச்சயமான உறுதி. (1918 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி நடைபெற்ற கல்வியைப் பற்றிய அகில ரஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து)**

மேற்கூறிய லெனினின் கருத்தையே சிங்கிஸ் ஐத்மாத்தவ் தம் படைப்புகள் ஊடாக முன்னிறுத்துகின்றார். என் முதல் ஆசிரியர் நாவல் அதனையே வலியுறுத்துகின்றது. இலக்கியப் படைப்பென்பது சுயம்புவான பொருள் அல்ல. அது ஒவ்வொரு சமூகத்தினதும் சமூக, பண்பாட்டு, அரசியல் அசைவியக்கத்தின் பின்புலத்திலிருந்தே தோற்றம் பெறுகின்றது. இந்தப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு எமக்கான சமூகத்தையும் இலக்கியத்தையும் படைப்போமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்வரலாற்று எழுதுகையும் சமூக வரலாற்று உருவாக்கமும்

## விளிம்புநிலைத் தன்வரலாறுகளை முன்வைத்து சில குறிப்புக்கள்




**எம்.எம். ஜெயசீலன்,**
**விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைகழகம்**


**த**மிழ் இலக்கிய வரலாற்றில் அண்மைக் காலங்களிலேயே தன்வரலாற்று எழுத்துக்கள் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றன. நீண்டகாலமாகச் சாதித்தவற்றைச் சொல்லி, வரலாற்றில் தம் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்குப் பயன்பட்டுவந்த தன்வரலாற்று எழுதுகை, 1990களிலிருந்து அடக்கியொடுக்கப்பட்ட வரலாற்றைச் சொல்லி, இழந்தவற்றைப் பேசும் வடிவமாகவும் மாற்றம் பெற்றுள்ளது. இம்மடைமாற்றத்திற்கு அக்காலத்தில் எழுச்சி பெற்ற தலித்திய, பெண்ணிய சிந்தனைகளும் பின்நவீனத்துவ கோட்பாடுகளின் பரவலாக்கமும் அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. பின்நவீனத்துவத்தின் பரவலாக்கமும் தலித்திய, பெண்ணிய செயற்பாடுகளின் எழுச்சியும் அதிகார மையங்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தி விளிம்புகளை முன்னிலைப்படுத்தின. இதனால் தமிழ்ச் சூழலில் விளிம்புநிலை மக்கள் குறித்த தேடலும் எழுதுகையும் பெருகத் தொடங்கின. அதன் ஓரங்கமாகப் பிறமொழிகளிலிருந்து விளிம்புநிலைக் கோட்பாடுகளும், படைப்புக்களும் மொழிபெயர்க்கப்பட்டன.

**"சமூக அமைப்பில் மையம் X விளிம்பு என்ற முரண்பட்ட நிலைகள் இருப்பதாகக் கூறும் பின்நவீனத்துவம், மையம் என்பது அதிகார அமைப்பு, உயர்சாதி, மேலாதிக்கம், நிறுவனத்தன்மை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகியவற்றைக் கொண்டது என்றும் விளிம்பு என்பது இதற்கு மாறானது, ஓரத்தில், ஒடுக்கப்பட்ட நிலையில் இருப்பது என்றும் வரையறுகின்றது.”** (மேற்கோள்: நடராசன், தி.சு, 2006: 162) இங்கு **“விளிம்பு என்பது ஒருபடித்தானதல்ல, ஒற்றைக் கருத்தியல் கொண்டதும் அல்ல. விளிம்பு என்பது ஓர் ஒப்பீட்டான கருத்தாக்கம். ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கும் ஒன்றானது அதனினும் விளிம்புடன் ஒப்பிடும்போது மையமாகச் செயற்படுகின்ற வாய்ப்புண்டு. விளிம்பில் இத்தகைய வேறுபாடு இருப்பினும் மையத்தை எதிர்ப்பது, மையத்திலிருந்து விலகுவது என்கிற அடிப்படையில் விளிம்பின் பொதுக்கூறு அமைகின்றது.”**

என்பதும் குறிப்பிடத்தக்கது. (மார்க்ஸ், அ, வேல்சாமி, பொ (ப.ஆ) 1998: 21)

இந்திய மற்றும் தமிழகச் சூழலில், தலித்துக்கள், பெண்கள், அரவாணிகள், நிறுவனத்தன்மை பெறாத உதிரித்தொழிலாளர்கள், விபச்சாரிகள், பிச்சைக்காரர்கள், பைத்தியக்காரர்கள், திருடர்கள், பூம்பூம் மாட்டுக்காரர்கள், நாடோடிகள், பழங்குடியினர், ஒருபாற்புணர்ச்சியாளர்கள், நிரந்தர நோயாளிகள் போன்ற பல திறத்தினர் விளிம்புநிலை மனிதர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். அவர்களுள்ளும் தலித்துக்கள், பெண்கள், அரவாணிகள் குறித்த உரையாடல்களே இன்று பரந்த அளவில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

விளிம்புநிலைப் படைப்புக்கள் பெரும்பாலும் அவ்வவச் சமுதாய விடுதலையினை இலக்காகக் கொண்ட சமுதாய விழிப்புணர்வு, அணிதிரட்டல் முதலிய போராட்டச் செயற்பாடுகளில் அக்கறை செலுத்துவதால் விளிம்புநிலைப் படைப்பாளிகள் யதார்த்த நிலைமைகளை அம்பலப்படுத்துவதற்காகவும், நியாயாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும், தம் சுய அனுபவங்களைப் படைப்பாக்குவதிலேயே தீவிர ஈடுபாட்டினைச் செலுத்திவருகின்றனர். அத்தோடு ஒடுக்கப்பட்டவர்கள் பேசத் தொடங்கும்போது அவர்களுடைய “நான்” மிக இயல்பாகவே அழுத்தம் பெற்றுவிடுகிறது. அவர்களுக்கு மறுக்கப்பட்ட **“நான்”** (Subjectivity) வலுவோடு கட்டி எழுப்பப்படுகிறது. “நான்” ஐப் பெறுவது ஒடுக்கப்பட்டவர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். (ராஜ்கௌதமன், 2010: 46) இதனால் விளிம்புநிலைசார் எழுத்துக்களில் தன்வரலாற்றுத் தன்மை மிகுதியாகவே வெளிப்படுகின்றது. அம்மிகுதிப்பாட்டினால் பல தளங்களிலும் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் எழுதப்படும் போக்கு மேற்கிளம்பியதோடு பிறமொழி விளிம்புநிலைத் தன்வரலாறுகளை மொழிபெயர்த்தலும் பெருகத்தொடங்கின. அவ்வகை மொழிபெயர்ப்புக்களே தமிழ்ச்சூழலில் தன்வரலாற்று எழுத்துக்களின் வீரியத்தை வெளிக்காட்டி, தன்வரலாற்று எழுதுகைக்கும் அது குறித்த ஆய்வுகளுக்கும் புத்துயிர்ப்பு அளித்தன எனலாம். இத்தகைய போக்கினால் தமிழில் தன்வரலாற்று எழுத்துக்கள் புதிய திசைகளை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வரலாற்று எழுத்துக்களின் முக்கியத்துவம் இன்று பல்வேறு தளங்களிலும் உணரப்படலாயிற்று. அவற்றுள் சமூக வரலாற்று ஆவணங்களில் ஒன்றாக தன்வரலாற்றைக் கொண்டு, சமூக வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சியும் அடங்கும். அவ்வகையில் விளிம்புநிலைச் சமூகங்களின் வரலாற்றினைக் கட்டமைப்பதில் அச்சமூகங்களில் இருந்து வெளிவரும் தன்வரலாறுகள் பெறுகின்ற முக்கியத்துவத்தினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தன்வரலாற்று எழுதுகையும், வாழ்க்கை வரலாற்று வாசிப்பும் தனிமனித நிலையிலும் சமூக வரலாற்றுத் தளத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே விளங்குகிறது. ஏனெனில் தன்வரலாறென்பது தான் வாழ்ந்த வாழ்க்கையை உலகுக்கு சொல்லல் என்றளவில் மட்டும் மட்டுப்பட்டதல்ல. அது ஒரு மீள்படைப்பு, ஒரு கண்டுபிடிப்பாகும். அக் கண்டுபிடிப்பிலிருந்து நாம் நம்மைக் கண்டறியலாம். அதாவது வாழ்க்கை மிகவும் சூட்சுமம் மிக்கது, புதிர்கள் நிறைந்தது. அதன் வெற்றிகரமான பயணத்திற்கு இலட்சியங்களும், முன்மாதிரிகளும் துணைபுரிகின்றன. வெற்றியடைந்த பெரும்பாலான மனிதர்களின் வாழ்வில் ஏதாவது ஒரு புள்ளியிலாவது முன்மாதிரிகள் யாராவது திசைகாட்டுதலை நிகழ்வித்திருப்பதைக் காணலாம். எனவே, வாழ்வை வெற்றிகரமாக்கும் அகத்தூண்டலுக்கும், அதனை நோக்கிய பயணத்திற்கும் தன்வரலாறுகளும் உந்துசக்தியாக அமைகின்றன. அதேவேளை தன்வரலாறுகள் ஒரு தனிப்பட்ட நபரின் குழந்தைப் பருவம் முதலான வாழ்க்கை, அனுபவம், ஆளுமை, வெற்றி, தோல்வி என்பனவற்றையெல்லாம் தாண்டி அக்காலகட்டத்து சமூக வரலாற்றம்சங்களை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. அந்தவகையில் தன்வரலாறுகளுக்கு சமூக வரலாற்று முக்கியத்துவமும் உளதாகின்றது. அதிலும் சாதாரண மக்களிடமிருந்து வெளிவரும் தன்வரலாறுகள் அச்சமூக வரலாற்றின் இடைவெளிகளை நிரப்புவதற்கும், வரலாற்று மௌனங்களை உடைத்தெறிவதற்கும் பெரிதும் துணைபுரிகின்றன.

**“அடித்தள மக்கள் பிரிவின் வரலாற்றை எழுதும் பொழுது மரபு வழிச் சான்றுகள் ஓரளவிற்கே கிட்டுகின்றன. ஏனெனில் பண்பாட்டடையாளங்கள் பறிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வாழ்ந்த ஒரு குழுவானது வரலாற்றுச் சான்றுகளை கொண்டிருக்க இயலாது.”** (சிவசுப்பிரமணியன், ஆ, 2011 : 08) அத்தோடு இதுவரையிலான வரலாறுகள் யாவும் பெரும்பாலும் ஆளுவோரின் வரலாறாகவும், அவர்களினால் உருவாக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையிலான வரலாறாகவும் ஒற்றைத் தளத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் சாதாரண மக்களின் வாழ்க்கைப் போக்குகளும், வரலாறுகளும் கவனிக்கப் பெறாமலும் பேசப்படாமலும் விடுபட்டுள்ளதைக் காணலாம்.

**“காலனிய வரலாறு, தேசிய வரலாறு, மார்க்சிய வரலாறு என்கிற ஒன்றையொன்று மறுத்துக்கொள்ளும் (இதுவரையிலான இந்திய) வரலாறு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுதும் நெறிகள் மூன்றுமே அதிகார மையங்களின் மீதே கவனத்தைக் குவித்தன. மையங்களின் புகழ் பாடுதல் அல்லது அவற்றின் ஒடுக்குமுறைகளைப் பேசுதல் என்பதாக இது வெளிப்பட்டது. மையங்களிலிருந்து ஒப்பீட்டளவில் விலகி நின்று சுயேச்சையாக இயங்கிய விளிம்புகளைப் பற்றி அவை கவலை கொள்ளவில்லை. "வளர்ச்சி", அல்லது "தன்னுரிமை", அல்லது "உற்பத்திமுறை" என்கிற ஏதோவொரு அடித்தளத்தை அடிப்படையாகக் கொண்ட பெருங்கதையாடல்களாக இத்தகைய வரலாறு எழுதுநெறிகள் அமைந்தன. இதன் விளைவாகவே விளிம்புகளில் இருந்த தனித்துவம் நிறைந்த அடித்தள மக்கள், மையங்களை ஒட்டியும், வெட்டியும், விலகியும், நெருங்கியும் இயங்கிய விதிகளை அவை பதிவு செய்யத் தவறின."**
(மார்க்ஸ், அ, வேல்சாமி, பொ (ப.ஆ) 1998)

என்ற இதுவரையிலான இந்திய வரலாற்றெழுதியல்களின் தன்மை குறித்த நிறப்பிரிகைக் குழுவினரின் பிரகடனம் அதனை மேலும் தெளிவுபடுத்துவதாக அமைகிறது. ஆனால், இங்கு மார்க்சிய வரலாறுகளும் விளிம்புநிலை மக்களின் வரலாற்றைப் பதிவு செய்யத்தவறின என்று கூறுவதில் சில முரண்கள் உண்டு. ஏனெனில் காலனிய மற்றும் தேசிய வரலாற்று எழுதுகைகளில் இருந்து மார்க்சிய வரலாறுகள் பெரிதும் வேறுபட்டவையாகும். அவை காலனிய மற்றும் தேசிய வரலாற்று எழுதுகைகளைப் போல அதிகார மையங்களுடன் மாத்திரம் முடங்கிப்போனவை அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். மார்க்சிய வரலாற்று எழுதுகைகள் சமுதாயத்தின் பல தளங்களிலும் விளிம்பில் வாழ்ந்த மக்களைக் குறித்துத் தனித்தனியே பெரிதாக அக்கறை செலுத்தாவிட்டாலும் அடித்தள மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் முதன்முதல் பதிவு செய்ததில் அவற்றுக்கே மிகமுக்கிய இடமுண்டு. உழைக்கும் அடித்தட்டு மக்கள் குறித்தும் பெண்கள் குறித்தும் மார்க்சிய வரலாற்று எழுதுகைகள் பரவலான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளன. ஆகவே, விளிம்புநிலை மக்களின் வரலாற்று எழுதுகையில் மார்க்சிய வரலாறுகளை முற்றிலும் புறமொதுக்குவது நியாயமற்றதாகும்.

மேற்கூறியவகையிலான, மையங்களில் மாத்திரம் கவனம்கொண்ட வரலாற்று எழுதுகைகளிலிருந்து விடுபட்டும், அடித்தள மக்கள் குழுக்களின் வரலாற்றை மொத்தத்துவப்படுத்திக் கலந்துரையாடிய மார்க்சிய வரலாறுகளிலிருந்து விலகியும், விளிம்புநிலை குழுக்களின் வரலாற்றை முழுமையாக மீட்டெடுக்கும் மாற்று வரலாற்று எழுதுகைகளின் தேவை இன்று பரவலாக உணரப்பட்டுள்ளது. அத்தேவையை நிறைவுசெய்வதில் "அடித்தளத்திலிருந்து வரலாறு என்ற கருத்துநிலையின் தாக்கத்தால் உருவான, **"அடித்தள மக்கள் வரலாறு"**, சமூகவியல், மானிடவியல், பொருளாதாரம், உளவியல் போன்ற அறிவுத்துறைகளின் துணையுடன் வரலாற்றைக் காணத்தொடங்கிய "புதிய வரலாறு" ஆகிய வரலாற்று எழுதுநெறிகள் பெருந்துணைபுரிகின்றன."
(சிவசுப்பிரமணியன், ஆ, 2011 : V)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளத்திலிருந்து வரலாற்றை எழுதுவோர், மேட்டுமைச் சமூகம் கட்டமைத்துள்ள வரலாற்று ஆவணங்களை மறுதலித்து மாற்று ஆவணங்களின் துணையுடன் வரலாற்று மீட்டுருவாக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். அவற்றுள் மிக முக்கியமானதாக வாய்மொழி வழக்காறுகள் அமைகின்றன.

**"ஒரு சமூகத்தின் தொன்மை, தொழில், பண்பாடு ஆகியன குறித்த தரவுகளை வாய்மொழி வழக்காறுகள் கொண்டுள்ளன. ஓர் இனத்தின் வரலாறும் வாய்மொழி வழக்காறுகளை உள்ளடக்கிய நாட்டார் வழக்காறும் ஒன்றோடொன்று நெருங்கிய பிணைப்பைக் கொண்டவை. சுருங்கக்கூறின் இன வரலாற்றின் (Ethno History) ஓர் அங்கம் நாட்டார் வழக்காறுதான். இவையிரண்டும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. ஓர் இனத்தின் வாய்மொழி வழக்காறுகளிலும், சடங்குகளிலும், பழக்கவழக்கங்கள் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களிலும் அதன் சமூகப் பண்பாட்டு வரலாற்றுக்கான சான்றுகள் காணப்படுகின்றன"** (மேலது : 09)

என்று கூறி, அடித்தள மக்கள் வரலாற்று எழுதுகைக்கான முதன்மைச் சான்றாக வாய்மொழி வழக்காறுகளைக் கொள்கின்றனர். அவ்வாறே விளிம்புநிலையிலிருந்து வெளிவரும் தன்வரலாறுகளும் ஒரு மாற்றுச் சமூக வரலாற்றைக் கட்டமைக்கும் வல்லமை கொண்டவையாகவே விளங்குகின்றன.

தன்வரலாற்றுப் பதிவுகளினூடே தத்தமது நோக்குநிலைக்கேற்ப தம்காலத்திய சமூக வரலாற்றுப் போக்குகளையும் பதிவுசெய்யும் விளிம்புநிலைத் தன்வரலாறுகள், "மையத்தை" குவிமையப்படுத்திய வரலாற்று எழுதியல்கள் கவனிக்காத, கவனத்தைப் பெறாத பல சமூக வரலாற்றுப் போக்குகளை வெளிப்படுத்திவருவதை அவதானிக்க முடிகின்றது.

சமூக வரலாறென்பது மிகவும் பரந்துபட்டதும் பல உட்பிரிவுகளைக் கொண்டதுமாகும். ஹாப்ஸ்பாம் என்ற சமூக வரலாற்றறிஞர் சமூக வரலாற்றின் ஆய்வுக்களங்களாக பின்வருவனவற்றைக் கூறுகின்றார்:

01. மக்கள் தொகையியலும் உறவுகளும் (Demography and Kinship)
02. நகர்ப்புறம் குறித்த ஆய்வுகள் (Urban Studies)
03. வர்க்கங்களும் சமூகக் குழுமங்களும் (Classes and Social groups)
04. மனப்பாங்கு குறித்த வரலாறு அல்லது நனவரைவு அல்லது மானிடவியலாளனின் நோக்கில் பண்பாடு (The History of 'mentalities' or collective consciousness or of 'culture' in the anthropologists sense)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. சமூகங்களின் மாற்றம் (The Transformation of Societies)

06. சமூக இயக்கங்களும் சமூக எதிர்ப்பு நிகழ்வுகளும் (Social Movements and phenomena of social protests) (மேற்கோள்: மேலது : VI)

இதனால் மிகச்சிறிய செய்திகள் கூட சமூக வரலாற்றாவணமாக அமையலாம். உதாரணமாக, **"குடும்பப் புகைப்படத் தொகுப்புக்களும், சுவரில் மாட்டப்பட்டிருக்கும் மூதாதையரின் படங்களும்கூடச் சமூக வரலாற்று ஆவணமாக அமையலாம். அப்புகைப்படங்களில் இருப்போர் அணிந்துள்ள ஆடை அணிகலன்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திய ஆடை அணியும் முறையையும், அணிகலன்களின் அமைப்பையும் எடுத்துரைக்கும் ஆவணமாக அமைகின்றன."** (சிவசுப்பிரமணியன், ஆ, 1998: 05) எனவே, தன்வரலாற்று எழுத்துக்களிலும் வரலாற்று எழுதுகைக்குத் துணைபுரியும் பல்வேறு தகவல்களைக் கண்டறியலாம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் பாரதியுடன் (பாரதியின் சுயசரிதை - 1910) ஆரம்பிக்கும் தன்வரலாற்று எழுதுகையானது, ரெட்டைமலை சீனிவாசன், திரு.வி.க, நாமக்கல் வெ. இராமலிங்கப்பிள்ளை, வ.உ.சி, தி.சே.சௌ. ராஜன், உ.வே.சா, சுத்தானந்தபாரதியார் போன்றவர்களின் தன்வரலாற்று எழுதுகைகளால் ஒரு தனித்த கலைவடிவமாக உருப்பெற்றதோடு ஏதாவது ஒரு துறையில் முன்நின்று செயற்படுபவர்கள், அல்லது அதில் உச்சமடைந்தவர்கள் தன்வரலாற்றினை எழுதுவது மரபாக நிலைபெற்றுவிட்டது. இதனுடைய தொடர் வளர்ச்சியாகவே கண்ணதாசன், பம்பல் சம்பந்த முதலியார், ம.பொ.சி, கருணாநிதி போன்ற பலரது தன்வரலாறுகள் அமைந்தன. **"அத் தன்வரலாறுகள் பெரும்பாலும் தாம் தேர்ந்தெடுத்துகொண்ட துறைகளில் சாதித்தவர்களின் தன் அனுபவ வெளிப்பாடுகளாகவும், தம் அனுபவங்களை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்ளக்கூடியனவாகவும், வரலாற்றில் தம் பங்கு இத்தகையது என்பதை நிலைநாட்டுவதற்குமான வரலாறுகளாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்".** (குணசேகரன், அ, 2009) இதன்படி சாதனையாளர்களே தன்வரலாறு எழுதுவதற்கு தகுதியுடையோர் எனும் நிலைப்பாடு நிலவியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. இதனை நாமக்கல். வெ. இராமலிங்கப்பிள்ளையின் பின்வரும் கூற்றும் உறுதிப்படுத்துகிறது,

> **"என்னுடைய சுயசரிதத்தை நான் எழுத வேண்டும் என்று சில நண்பர்கள் பலநாட்களாக என்னை வற்புறுத்திக்கொண்டே வந்தார்கள். நான் சுயசரிதம் என எதையும் எழுத நாணப்பட்டேன். ஏனென்றால் சுயசரிதம் என்று எழுதுவதற்கு மற்ற மக்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்ந்து, செயற்கரிய காரியங்களைச் செய்த மகான்களுக்குத் தான் தகும் என்பது என்னுடைய மனப்பழக்கம். உலகத்தில் எந்தப் பகுதியிலும் "சுயசரிதம்" எழுதினவர்களில் அநேகமாக எல்லோரும் அப்படிப்பட்ட அசாதாரண மனிதர்கள்தான்."** (இராமலிங்கப்பிள்ளை, வெ, 2006: 12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் எழுதாத விதி 1990களிலேயே உடைக்கப்பட்டது. செயற்கரிய காரியங்கள், சாதனைகளுக்கு மாற்றாக அடக்கப்பட்ட, அமுக்கப்பட்ட வாழ்வு தன்வரலாறுகளாக வெளிப்பட்டன. மேலெழுந்து வந்த விளிம்புநிலை மக்களின் குரலும், அரசியலும் இதற்கு அடிப்படையாக அமைந்தன.

தமிழில் தோற்றம் பெற்றுள்ள விளிம்புநிலைத் தன்வரலாறுகளில் பாமாவின் கருக்கு மற்றும் சங்கதி, ராஜ்கௌதமனின் சிலுவைராஜ் சரித்திரம் மற்றும் காலச்சுமை, கே. ஏ. குணசேகரனின் வடு, விடிவெள்ளியின் கலக்கல், அழகியநாயகி அம்மாளின் கவலை, திருநங்கை லிவிங்ஸ்மைல் வித்யாவின் நான் சரவணன் வித்யா, முத்துமீனாளின் முள், மகாராசன் தொகுத்த அரவாணிகள் என்ற நூலில் உள்ள அரவாணிகள் பலரின் தன்வரலாற்றுப் பதிவுகள் போன்றன குறிப்பிட்டுக் கூறத்தக்கனவாகும். இவற்றுடன் பிற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவற்றுள் சித்தலிங்கையாவின் ஊரும் சேரியும், அரவிந்த மாளகத்தியின் கவரன்மெண்ட் பிராமணன், லட்சமண்கெய்க்வாட்டின் உச்சாலியா பழிக்கப்பட்டவன், இலட்சுமண்ணின் எச்சரிக்கை, மயிலம்மாவின் போராட்டமே வாழ்க்கை, பேபி காம்ப்ளியின் சுதந்திரக்காற்று, நளினி ஜமிலாவின் முன்னாள் பாலியல் தொழிலாளியின் கதை, வினயாவின் ஒரு பெண் காவலாளியின் கதை, பேபி ஹால்தரின் விடியலை நோக்கி, புக்கர் டி வாசிங்டனின் அடிமையின் மீட்சி, சைனா கெய்றெட்சியின் குழந்தைப் போராளி போன்றனவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இத்தன்வரலாறுகள் ஒவ்வொன்றும் அடக்கி ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைப் பேசுவதினூடு இதுவரையிலான வரலாற்று எழுதியல்கள் பதிவுசெய்யத் தவறிய, தவிர்த்த ஏராளமான சமூக வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கியுள்ளன. அத்தரவுகளை ஒன்று திரட்டி, ஏனைய வரலாற்று ஆதாரங்களுடன் ஒப்புநோக்கி, சமூக வரலாற்றினை மீட்டெடுப்போமானால் இதுவரை பேணப்பட்டுவந்த சமூக வரலாற்று இடைவெளிகளை நிரப்பக் கூடிய வாய்ப்பேற்படலாம். உதாரணமாக, இந்திய சமூக வரலாற்றினை அல்லது தலித்திய சமூக வரலாற்றினை பூரணப்படுத்துவதற்குத் தலித்தியத் தன்வரலாறுகளில் அடங்கியுள்ள சில தகவல்கள் வருமாறு:

- தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு "ஹரிஜனன்", "பஞ்சமர்", "தலித்" என்ற தனித்த அடையாளங்களை வழங்குவதில் மாத்திரம் அச்சமூகத்தின் மீட்சி அடங்கியில்லை. இந்திய சமூக அமைப்பில் ஆழமாகப் பதிந்துள்ள சாதியத்தை ஒழிப்பதும் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதுமே தாழ்த்தப்பட்ட சாதிகளின் மீட்சியாக கருக்கு, கவர்ன்மெண்ட் பிராமணன், ஊரும் சேரியும், வடு, எச்சரிக்கை முதலிய தன்வரலாறுகளில் மீள மீள வலியுறுத்தப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதுவரையிலான தலித்துக்கள் பற்றிய பதிவுகளில் மாறாவுருநிலைப் படிவுகளாகக் கூறப்பட்டுவந்த, "தலித்துக்கள் என்றால் இழிவு", "தலித்துக்கள் மலிவான கூலிகள்'', "நாகரிகமற்றவர்கள்'', "கல்வியறிவற்றவர்கள்'', "ஒழுக்கமற்றவர்கள்'', "அழுக்கானவர்கள்'', "முன்னேற விரும்பாதவர்கள்'', "அடிமை வாழ்வை விரும்புவர்கள்'' முதலியயாவும் தகர்த்தெறியப்பட்டுள்ளன. அவை யாவும் போலியானவை, மேல்சாதிக்காரர்களால் திட்டமிட்டுச் சோடிக்கப்பட்டவை என்பதைப் பாமாவின் கருக்கு, சங்கதி, ராஜ்கௌதமனின் சிலுவைராஜ் சரித்திரம், கே. ஏ. குணசேகரனின் வடு, சித்தலிங்கையாவின் ஊரும் சேரியும், அரவிந்த மாளகத்தியின் கவரன்மென்ட் பிராமணன் போன்ற தலித்தியத் தன்வரலாறுகள் காட்டுகின்றன.

- தலித்துக்களின் இனவரைவியல் கூறுகளையும் நாட்டார் வழக்காற்றுத் தரவுகளையும் அத்தன்வரலாறுகளின் வழி கண்டுகொள்ள முடிகின்றது. அத்துடன் அத்தன்வரலாறுகளின் மொழி, சமுதாய மொழியியல் ஆய்வுக்கானச் சான்றுகளாகவும் அமைந்துள்ளன.

- இந்திய சமூக அமைப்பில் எல்லா நிலையிலும் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சாதிகளாகக் கருதப்படுகின்றவர் களிடையேயும் இந்நிலை தொடர்கிறது. இதனால் சிலர் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்குள்ளேயும் உள்முகமான சாதிய ஏற்றத்தாழ்வு பேணப்படுவதால் உயர்சாதியினரை மாத்திரம் குற்றம் சொல்லக்கூடாது என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர். ஆனால், தாழ்த்தப்பட்ட சாதிகள் என்ற அடையாளமும் அச்சாதிகளுக்குள்ளேயான உள்முகமான படிநிலையமைப்பும் மேல்சாதிக்காரர்களாலே உருவாக்கப்பட்டு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் அப்படிநிலையமைப்பை நுட்பமாகப் பேணுவதில் மேல்சாதிக்காரர்களால் உருவாக்கப்பட்டுள்ள கருத்துருவங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதையும் இத்தன்வரலாறுகள் வெளிச்சமிட்டுக்காட்டுகின்றன. அத்துடன் மேல் சாதியினர் அனுசரிக்கும் தீண்டாமைக்கும், விலக்கல்களுக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பின்பற்றும் தீண்டாமைக்கும் விலக்கல்களுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் உள்ளன என்பதையும் அத்தன்வரலாறுகளில் கண்டுகொள்ளமுடிகின்றது.

- காலங்காலமாக அடக்கியொடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஐரோப்பியர் வருகையும் அவர்கள் இங்கு நடைமுறைப்படுத்திய அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தம், கல்விமுறை, தொழில்முறை ஆகியனவும் கிறிஸ்தவ மதமும் மீட்சிக்கான வழிவகைகளைத் திறந்துவிட்டன. அச்சமூகத்தின் அசைவியக்கத்திலே பாரிய அதிர்வுகளை அவை ஏற்படுத்தின. ஆனால், வெகுவிரைவிலே கிறிஸ்தவ மதமானது, இந்தியக் கிறிஸ்தவமாகி சாதி பேதங்களைப் பேணத்தொடங்கியது. இதனால், கிறிஸ்தவ மதத்திற்குள்ளேயும் தலித்துக்கள் ஓரங்கட்டப்பட்டனர். இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக பாமாவின் கருக்கு அமைகிறது. கன்னியர் மடத்தில் சில ஆண்டுகள் துறவியாக வாழ்ந்த பாமா அங்கு நிலவிய சாதிய ஒடுக்குமுறைகளையும் ஓரங்கட்டல்களையும் பதிவு செய்துள்ளதோடு கிறிஸ்தவ மதத்திலிருந்தே விடுபட்டு வந்ததையும் உருக்கமாகப் பதிவு செய்துள்ளார்.

- தலித்துக்களின் மீட்சிக்குக் கல்வி மிகப் பெரும் ஆயுதமாக விளங்குவதைப் பலரும் பதிவு செய்துள்ளனர். கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பொருளாதாரக் க்டங்கள், சாதிய ஓரங்கட்டல்கள் எனப் பல தடைகள் இருந்தாலும் முட்டிமோதி அவற்றினை உடைத்து மீண்டு எழுந்தவர்களாகவே தன்வரலாறுகளைப் படைத்துள்ள சித்தலிங்கையா, அரவிந்த மாளகத்தி, ராஜ்கொதமன், கே. எ. குணசேகரன், பாமா, இலட்சுமண் போன்றவர்கள் விளங்குகின்றனர். இவர்கள் யாவரும் கல்வியால் உயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- தலித்திய சமூக அமைப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை கண்டுகொள்ளமுடிகின்றது. குறிப்பாக, முன்னைய தலைமுறையினரின் அறியாமையும், இன்றைய தலைமுறையினரின் எழுச்சியையும் இத்தன்வரலாறுகள் பதிவுசெய்துள்ளன.

- தலித்துக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள், அவற்றுக்கான தலித்துக்களின் எதிர்வினைகள், அவற்றின் வெற்றி-தோல்வி போன்ற பல அம்சங்களை இத்தன்வரலாறுகளில் காணலாம்.

- தலித் பெண்களின் வாழ்வியல், அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைகள் போன்றவற்றை அடையாளங்காண முடிகின்றது. குறிப்பாக, பாமாவின் கருக்கு, சங்கதி ஆகியவற்றில் தலித் பெண் ஒருத்தி முகங்கொடுகின்ற துன்பங்களும், ஒடுக்குமுறைகளும், சுரண்டல்களும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஒரு தலித் பெண் எடுக்கின்ற முயற்சிகளையும் காணமுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ உடல் உழைப்பாளர்களான தலித்துக்களின் உழைப்பும் அவற்றினை மேல்சாதிக்காரர்கள் எவ்வாறு சுரண்டிக் கொழுக்கின்றனர் என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- ➢ தீண்டாமையின் கொடூரம், அதனை இயக்கும் அக, புறக் காரணிகள் அதனால் ஏற்படுகின்ற உடல், உள தாக்கங்கள் போன்றன அப்பட்டமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

- ➢ ஆரம்பகட்ட தலித்திய இயக்கங்களின் விடுதலைச் செயற்பாடுகள், அதனால் தலித்திய சமுதாயத்தில் ஏற்பட்ட எழுச்சி போன்றவற்றையும் பிற்காலத்தில் அத்தலித்திய இயக்கங்கள் எதிர்கொண்ட பின்னடைவுகள், அவற்றுக்கான காரணங்கள், தலித்திய இயக்கச் செயற்பாட்டாளர்களிடத்தில் மேலோங்கத் தொடங்கிய சமரச அரசியல் போன்றவற்றையும் கண்டுகொள்ள முடிகின்றது. குறிப்பாக, இலட்சுமண் தனது எச்சரிக்கையில் கர்நாடகாவில் ஆரம்ப காலத்தில் செயற்பட்ட தலித் போராட்ட சமிதியின் வீறார்ந்த செயற்பாடுகளையும் அதனால் விளைந்த சமூக மாற்றங்களையும் பதிவுசெய்துள்ளதோடு இன்றைய தலித்திய போராட்டங்கள் செல்லாக்காசுகளாக அமைவதையும், போராட்டச் செயற்பாட்டாளர்கள் சமரச வலையில் சிக்கியவர்களாக, தன்னலம் மிக்கவர்களாக விளங்குவதையும், சங்கம் மற்றும் தலித்துக்களின் பெயரைச் சொல்லி தலித்துக்களையே மோசம் செய்து பிடுங்கிக்கொள்ளும் சம்பவங்களையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

இச்சமூக வரலாற்று அம்சங்களை இதுவரைக்குமான இந்திய சமூக வரலாற்று எழுதுகைகளோ, தமிழ்ச் சமூக வரலாற்று எழுதுகைகளோ பெரிதாக கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. அவை உன்னதமான இந்தியப் பண்பாடு, மேலான தமிழ்ப் பண்பாடு என்று கற்பிதம் செய்யப்பட்டவற்றையே ஒட்டுமொத்த இந்தியப் பண்பாடாக, தமிழ்ப் பண்பாடாக முன்நிறுத்தியுள்ளன. அம்மைய நீரோட்டத்தை ஒட்டியும், வெட்டியும், விலகியும் இயங்கிய தனித்துவங்கள் நிறைந்த குழுமங்களை தாங்கள் கட்டமைத்த பொதுப்பண்பாடு என்ற போர்வைக்குள் மூடிமறைத்ததோடு தம் பண்பாட்டு மேலாண்மையை நிலைநிறுத்த அக்குழுமங்களின் பண்பாட்டை இழிவானவையாகக் கட்டமைத்தன. இதனால் அத்தனித்துவங்கள் நிறைந்த குழுமங்களின் சமூக வரலாற்றம்சங்கள் பேசாப் பொருளாகி, ஆங்காங்கு புழக்கத்தில் மட்டுமே நிலவின. அவ்வகையான பல சமூக வரலாற்றம்சங்களை விளிம்புநிலை தன்வரலாறுகள் பதிவுசெய்துள்ளன. எனவே, அவற்றைக் கொண்டு மீட்டெடுக்கப்படும் மாற்று வரலாறே இவ்வளவு காலமும் மறைக்கப்பட்டுவந்த இந்திய சமூகத்தின் மறுபுறத்தைக் காட்டுவதாக அமையும்.

சமூக வரலாற்றுத் தளத்தில் மட்டுமன்றி தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளிம்புநிலை தன்வரலாறுகள் பல புதிய பாய்ச்சல்களை நிகழ்த்தியுள்ளன. குறிப்பாக, தமிழில் தன்வரலாற்று எழுத்தாக்கத்தின் பொருளிலும் வடிவிலும் பல புதிய போக்குகளை விளிப்புநிலைத் தன்வரலாறுகள் தோற்றுவித்துள்ளன. அவ்வகையில் பின்வருவன குறிப்பிடத்தக்கன:

01. தன்வரலாறு எழுதுவதற்கு தலை நரைத்திருக்க வேண்டும், பழுத்த அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற எழுதாத விதிகள் யாவும் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

02. தன்வரலாற்றுக்களின் பொருண்மையாக பேணப்பட்டுவந்த செயற்கரிய காரியங்கள், சாதனைகள், அசாதாரண தன்மைகள் போன்றவற்றுக்கு மாறாக அடக்கி ஒடுக்கப்பட்ட வாழ்வு பேசுபொருளாக்கப்பட்டுள்ளது.

03. பிறப்பு, வளர்ப்பு, கல்வி, செயற்கரிய செயல், வரலாற்றில் தன் பங்கு எனப் பேணப்பட்டுவந்த ஒழுங்குகள் யாவும் கலைத்துப் போடப்பட்டு, தன்னை அழுத்தமாகப் பாதித்த அம்சங்களை மட்டுமே முன்னிறுத்துதல். இதனால் தன்வரலாற்று எழுத்துக்களுக்கு காலவொழுங்கு அவசியமற்றதாகியுள்ளன.

04. நீண்ட கட்டுரைகளாக, நினைவுக் குறிப்புக்களாக தன்வரலாறுகளை எழுதுதல் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கதைகளாக தன்வரலாற்றை வெளிப்படுத்தல் என்ற வடிவ மாற்றம் விளிம்புநிலை தன்வரலாறுகளுடனேயே பெருகத்தொடங்கின.

05. தன்வரலாறுகள் ஆண்மைய வாதத்திலிருந்து விடுபட்டுள்ளன. பாமா, விடிவெள்ளி, அழகிய நாயகி அம்மாள், முத்துமீனாள் எனப் பல பெண்கள் தன்வரலாறுகளை எழுதியுள்ளதோடு திருநங்கைகளும் தன்வரலாறுகளைத் தந்துள்ளனர்.

06. இவ்வளவு காலமும் சாதித்தவற்றைப் பறைசாற்றி, வருங்கால சந்ததியினரிடம் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்குப் பயன்பட்ட தன்வரலாறுகள், சமுதாய விடுதலைக்கான கருவியாக மாற்றமடைந்துள்ளன. இதனால் அனுபவங்களை நினைவுகூர்தல் என்ற நிலையிலிருந்து விடுபட்டுக் கலகத்தை விளைவித்தல் விளிம்புநிலைத் தன்வரலாறுகளின் முக்கிய நோக்காக அமைந்துள்ளது.

07. இதுவரையிலான வரலாற்று எழுதியல்கள் மறந்த, மறைத்த பல தகவல்கள் அத்தன்வரலாறுகளில் பொதிந்து கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, விளிம்புநிலைத் தன்வரலாறுகள், தமிழில் தன்வரலாற்று எழுதுகையில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்தியிருப்பதோடு இவ்வளவு காலமும் அதிக கவனத்தைப் பெறாதிருந்த தன்வரலாற்று எழுத்துக்களின் சமூக வரலாற்று முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி, அவை தொடர்பான மாற்று உரையாடல்களை முன்னெடுப்பதற்கான வாயில்களையும் திறந்துள்ளன. இருப்பினும் தன்வரலாற்று எழுத்துக்கள் தற்சார்புடன் எழுதப்படுவதால் அவற்றின் மெய்மைத் தன்மை குறித்த ஐயங்கள் தோன்றுவது தவிர்க்கமுடியாத பிரச்சினையாக அமைகின்றது. குறிப்பாக,

> **"பெரும்பாலான தன்வரலாறுகளில் தன்வரலாற்றாசிரியரின் செயற்பாடுகளுக்கு அமைதி கற்பிக்கின்ற போக்கினையும், தமக்குப் பிடிக்காதவற்றை நிராகரித்து உகந்தவற்றை முன்நிறுத்தித் தமது நோக்குக்கும், போக்குக்கும் இசைவான அம்சங்களுக்கு மட்டும் அழுத்தம் கொடுக்கும் தன்மையையும், தங்களது வாழ்வின் முற்பகுதியில் நடந்த நிகழ்ச்சிகளைத் தங்களது பிற்காலக் கோட்பாடுகளுக்கு ஏற்பத் திரித்துக் கூறும் அபத்தத்தையும் காணக்கூடியதாக உள்ளது."**

(இளந்திரையன், சாலினி: 1974) எனவே, தன்வரலாற்றுத் தகவல்களை வரலாற்றுச் சான்றுகளாகக் கொண்டு சமூக வரலாற்றினை மீட்டெடுக்கும் போது அத்தரவுகளின் வன்மை, மென்மை அறிந்து பயன்படுத்துதல் அவசியமானதாகும்.

## உசாத்துணைகள்


இராமலிங்கப்பிள்ளை, வெ, (2006) **என்கதை** (புதிய பதிப்பு), சென்னை, சந்தியா பதிப்பகம்.

இளந்திரையன், சாலினி, (1974) **வாழ்க்கை வரலாற்று இலக்கியம்,** சென்னை, தமிழ்ப்புத்தகாலயம்.

குணசேகரன், அ, (க.ஆ) (2009) தமிழில் **தன்வரலாறுகள்,** TamilAuthors.com

சிவசுப்பிரமணியன், ஆ, (2011) **அடித்தள மக்கள் வரலாறு,** சென்னை, பாவை பப்ளிகேஷன்ஸ்.

சிவசுப்பிரமணியன், ஆ, (1998) **"முன்னுரை"**, அழகிய நாயகி அம்மாள், "கவலை" பாளையங்கோட்டை, நாட்டாரியல் ஆய்வு மையம்.

நடராசன், தி.சு, (2006) திறனாய்வுக் கலை, (நான்காம் அச்சு) சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்

மார்க்ஸ், அ, வேல்சோமி, பொ, (1998) **விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும்,** கும்பகோணம், நிறப்பிரிகை வெளியீடு.

ராஜ்கௌதமன், (2010) **பொய் அபத்தம் உண்மை,** கோவை, விடியல் பதிப்பகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அடிப்படை உரிமைகள்



திரு.ந.சிவகுமார்
விரிவுரையாளர்
அரசறிவியல்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

ஒரு நாட்டில் அடிப்படைச் சட்டமாக விளங்குவது அரசியலமைப்பாகும். அவ்வடிப்படைச் சட்டமான அரசியலமைப் பினுள் உள்வாங்கப் பட்டுள்ள உரிமைகள் சுதந்திரங்களை அடிப்படை உரிமைகளாகவும் சுதந்திரங்களாகவும் அடையாளப்படுத்தலாம். மனித உரிமை களில் இருந்தும், உரிமைகளில் இருந்தும் அடிப்படை உரிமையினை பிரித்துக் காட்டும் விடயமாக அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பே விளங்கு கின்றது. அடிப்படை உரிமைகளானது ஒரு நாட்டின் அரசியலமைப்பில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அவை சர்வதேச சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களைக் கொண்டனவாக இருத்தல் வேண்டும். உறுதிப்படுத்தப் படாத உரிமைகள் அர்த்தமற்றவை என்பர். ஆகவே, அடிப்படை உரிமைகள் சுதந்திரங்களை ஒரு யாப்பு வெளிப் படுத்துவது மட்டுமன்றி அவற்றுக்கான முறையான பாதுகாப்பு மற்றும் உத்தரவாத ஏற்பாடுகளையும் உள்வாங்குதல் அவசியமாகும். இக்கட்டுரையானது இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் சுதந்திரங்களைச் சுருக்கமாக அடையாளப்படுத்துவதுடன், அவற்றைப் பாதுகாப்பதற்கான பொறிமுறை என்ற வகையில் உயர் நீதிமன்றம் கொண்டுள்ள வகிபங்கினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்கின்றது.

## இலங்கையில் அடிப்படை உரிமைகள்

இலங்கையில் அரசியல் அமைப்பு வரலாற்றிலே அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் தொடர்பான ஏற்பாடுகளை உள்வாங்கிய முதலாவது யாப்பாக 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பு விளங்குகின்றது. 1947ஆம் ஆண்டின் சோல்பரி யாப்பின் 29ஆம் உறுப்புரையில் சிறுபான்மையோர் காப்பீட்டு ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் அவ் ஏற்பாடுகள் அடிப்படை உரிமைகளாகக் கொள்ளப்படுவதில்லை. முதலாம் குடியரசு யாப்பின் அத்தியாயம் 6 இல் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் என்ற தலைப்பின் கீழ் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் இடம்பெற்றன. ஆனால், அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான பரிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென எந்தவொரு பொறிமுறையும் குறித்துக் காட்டப்படவில்லை. ஆனால், 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இரண்டாம் குடியரசு யாப்பில் உள்வாங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், சுதந்திரங்களைப் பாதுகாக்கவும், அவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் பரிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான பொறிமுறை காணப்படுகின்றது.

## உயர் நீதிமன்றம்

இலங்கையில் தற்போதுள்ள நீதிமன்ற பதவணியிலேயே உயரியதும், இறுதியுமான நியாயாதிக்கமுடைய நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் விளங்குகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 105(1) அரசிலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவற்றை நிலைநாட்டி நடைமுறைப்படுத்தும் நீதிநிருவாகத்துக்கான நிறுவனங்களில் ஒன்றாக உயர்நீதிமன்றத்தினையும் அடையாளப்படுத்துகின்றது. உயர்நீதிமன்றமானது பிரதம நீதியரசரையும் 06 பேருக்குக் குறையாத ஆனால் 10 பேருக்கு மேற்படாத நீதியரசர்களையும் கொண்டது. அரசியலமைப்பிற்கான 19வது சீர்திருத்தத்தின் பிரகாரம் பிரதம நீதியரசரையும், உயர் நீதிமன்ற நீதியரசர்களையும் நியமிக்க வேண்டுமாயின், ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவைக்கு விதப்புரை செய்ய வேண்டும். அவ்விதப்புரையினை அரசியலமைப்புப் பேரவை அங்கீகரித்தால், ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்கள்.

## அடிப்படை உரிமைகள் தொடர்பில் உயர்நீதிமன்றம்

அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் முறைப்பாட்டினைச் சுட்டிக்காட்டி அதற்கான நிவாரணத்தினைக் கோருவதற்காக அவர் தானாகவோ அல்லது அவர் சார்பில் சட்டத்தரணி மூலமாகமோ உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். அரசியலமைப்பின் 17ம் உறுப்புரையானது, உறுப்புரை 126இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான உரிமையைக் குறிப்பிடுகின்றது. உறுப்புரை 126(1) இன் பிரகாரம், அரசியலமைப்பின் மூன்றாம் அல்லது நான்காம் அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதான ஏதேனும் அடிப்படையுரிமையானது அல்லது மொழி உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிர்வாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரணை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தனியானதும், பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் கொண்டுள்ளது.

## 1978 ஆம் ஆண்டின் ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள்

உறுப்புரை 10இல் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தல் அல்லது மேற்கொள்தலுக்கான சுதந்திரம், சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பன இடம்பெறுகின்றன. இங்கு உறுப்புரை 10இல் குறிப்பிடப்பட்டுள்ள மத சுதந்திரம் மட்டுப்பாடுகளுக்கு உட்படாத பூரணத்துவமான (absolute) உரிமையாகும். அதேவேளை, அரசியலமைப்பின் உறுப்புரை 9 மற்றும் 14 (1) (உ) என்பவற்றையும் நாம் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும். உறுப்புரை 9 இன் பிரகாரம், இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும், பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும். உறுப்புரை 14 (1) (உ) ஆனது, ஒவ்வொரு பிரஜையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம் உடையவர் என குறிப்பிடுகின்றது. இங்கு கவனிக்க வேண்டிய பிறிதொரு விடயமும் உள்ளது. அதாவது, இவ் 14 (1) (உ) இல் குறிப்பிடப்பட்ட விடயம் பிரஜைகளுக்கு மட்டும் உரித்தாவதுடன் உறுப்புரை 15 (7) இல் குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு (restrictions) உட்பட்டதுமாகும்.

இவ் உறுப்புரை 10இல் குறிப்பிடப்பட்டுள்ள மத சுதந்திரம் மதத்தினைப் பரப்புவதற்கான (propageat) உரிமையை உத்தரவாதம் செய்துள்ளதா? இதற்கான விடையினைப் பெற கிறிஸ்ரியன் சகய தொறடுவ வழிபாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நீதிமன்றத் தீர்மானத்தினைக் கவனத்தில் எடுக்க வேண்டும். உயர்நீதிமன்ற தீர்மானத்தின் பிரகாரம், ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தெரிவு செய்வதில் எவ்வித தடையும் இருத்தலாகாது. ஒவ்வொருவருக்குமான அடிப்படைத் தெரிவு ஏதேனும் முறையற்ற செல்வாக்கு, கவர்ச்சி அல்லது மோசடி என்பவற்றுக்கு அப்பாற்பட்டு முழுமையான, சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும். இலங்கையில் அரசியலமைப்பு மதத்தைப் பரப்புவதற்கான அடிப்படை உரிமையினை உத்தரவாதம் செய்யவில்லை. ஒவ்வொரு பிரஜையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ, நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும், போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம் உடையவர்களேயன்றி மதத்தைப் பரப்புவதற்கல்ல.

உறுப்புரை 11 ஆனது, சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது என ஏற்பாடு செய்துள்ளது. இவ் 11ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள உரிமைகள் மீது மட்டுப்பாடுகளை விதிப்பதற்கான எவ்விதமான ஏற்பாடும் அரசியல் அமைப்பில் இடம்பெறவில்லை. 1978 ஆண்டு யாப்பில் காணப்படும் மிக உறுதியான ஏற்பாடுகளில் ஒன்றாக உறுப்புரை 11 காணப்படுகின்றது. இவ் உறுப்புரையை அரசியலமைப்பின் உறுப்புரை 83இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே திருத்தவோ அல்லது மாற்றவோ முடியும்.

சித்திரவதை கொடூரமான, மனிதாபிமானமற்ற இழிவான நடத்துகை அல்லது தண்டனை என்பது மெய்யான உடல் ரீதியான இம்சைப்படுத்துகை மட்டுமல்லாது உயிர் மற்றும் உள்ளம் என்பவற்றின் பரப்பெல்லையையும் கருத்திற்கொள்ளும் என உயர் நீதிமன்றம் *W.M.K.De Silva vs Chairman Ceylon Fertilizer Corporation* வழக்கில் குறிப்பிட்டது. *Bandara Vs Wickremasinghe* வழக்கில் 17 வயதுடைய பாடசாலைச் சிறுவன் மற்றைய மாணவர்களுக்கு முன்னால் தனிப்பட்ட கோபம் ஒன்றின் மீது தாக்கப்பட்டமை சித்திரவதை, இழிவான தரக்குறைவான செயல் எனவும், இது அவனை அவமானப்படுத்தும் செயல் என்பதால் பாடசாலை மாணவனின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என Kulatunghe J, குறிப்பிட்டு சிறுவர்களுக்கும் இவ்வுரிமையை விஸ்தரித்தார். Amal Sudath Silva vs Kodituwakku எனும் வழக்கில் திருட்டுக் குற்றத்தில் ஈடுட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் மனுதாரர் கைது செய்யப்பட்டு பானந்துறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டாலும் 5 நாட்களாக நீதிவான் முன்னிலையில் கொண்டு செல்லப்படவில்லை. இக் காலப்பகுதியில் அவர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். இது தொடர்பான வழக்கில், அத்துக்கோரள நீதியரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார். இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு ஆளும் அவர் குற்றம் புரிபவராகவோ, அல்லாதவராகவோ இருக்கலாம். அவர் உறுப்புரை 11இனால் வழங்கப்பட்டுள்ள முழுமையான உரிமைகளிற்கு உள்ளாகின்றார்.

உறுப்புரை 12 ஆனது சமத்துவத்துக்கான உரிமையினைக் கூறுகின்றது. உறுப்புரை 12. (1) சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள், அத்துடன் அவர்கள் எல்லோரும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள். உறுப்புரை 12 (2) ஆனது, இனம், மதம், சாதி, மொழி, பால் அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரஜைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது எனக் குறிப்பிட்டுள்ளது. இவ் உறுப்புரை 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் பின்வரும் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும். ஒருவர் பகிரங்க சேவையில், நீதித்துறை சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தின் சேவையில் உள்ள ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனும் மொழியை அறிந்திருத்தல் நியாயமான அவசியமாகவுள்ளவிடத்து அத்தகைய ஏதேனும் ஊழியத்துக்கான அல்லது பதவிக்கான தகைமையான அம்மொழியில் போதிய அறிவை நியாயமான காலத்தினுள் பெறுதல் வேண்டுமென ஆளொருவர் தேவைப்படுத்தப்படலாம். பெண்களின் பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக சிறப்புரிமை வழங்கும் சட்டங்களை ஆக்கலாம்.

உறுப்புரை 13 இல் பல உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை **“சட்டத்தின் முறையான படிமுறைகள்”** என்ற எண்ணக்கருவுடன் தொடர்புபடுத்திப்பார்க்க முடியும். உறுப்புரை 13 (1) எதேச்சையாகக் கைது செய்யப்படாமல் இருப்பதற்கான சுதந்திரத்தினை குறிப்பிடுகின்றது. இச் சுதந்திரமானது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட முறையாலன்றி எவரும் கைது செய்யப்படலாகாது என்பதனையும் கைது செய்யப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படும் நபருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தினையும் குறித்து நிற்கின்றது.

உறுப்புரை 13 (2) ஆனது, எதேச்சதிகாரமாகத் தடுத்து வைக்கப்படாமலிருப்பதற்கான சுதந்திரத்தினைக் குறிப்பிடுகின்றது. கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும், தடுத்துவைத்திருக்கப்படும் அல்லது வேறுவகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வோராளும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க மிக அண்மையிலுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அத்துடன், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைக்கிணங்க அத்தகைய நீதிபதியால் ஆக்கப்படும் கட்டளைப்படியன்றியும் அதன் நிபந்தனைகளுக்கிணங்கவன்றியும் தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலோ தடுத்துவைக்கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது. **"நமசிவாயம் எதிர் குணவர்த்தனா"** என்ற வழக்கில் மனுதாரர் தான் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தபோது பிரதிவாதியால் கைது செய்யப்பட்டதாகவும் அதற்கான காரணம் எதுவும் தனக்கு கூறப்படவில்லை எனவும் இந்நடவடிக்கையால் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக வழக்குத் தாக்கல் தொடுத்தார். கைது செய்ததை மறுத்த பிரதிவாதி தான் மனுதாரரை தன்னுடன் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி அழைத்ததாகவும், அங்கு கூட்டிச் சென்று வாக்கு மூலத்தைப் பெற்ற பின்னர் விடுவித்ததாகவும் குறிப்பிட்டார். நீதிமன்றம், அழைத்துச் சென்றமையை சட்டத்தின் முன்னால் கைது எனக்கொண்டது. அத்துடன் மனுதாரர் தான் விரும்பும் இடத்திற்கு செல்வதற்கான சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது எனவும் கொண்டு அச்செயல் ஒரு அடிப்படை உரிமை மீறல் எனத் தீர்ப்பு வழங்கியது.

உறுப்புரை 13 (3) ஆனது, தவறொன்றுக்குக் குற்றம் சாட்டப்படும் எவரேனுமாள் தகுதி வாய்ந்த நீதிமன்றொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைத்தல் அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கான உரிமையினை வழங்கியுள்ளது. உறுப்புரை 13 (4) இன் பிரகாரம், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் கட்டளைகள் மூலமாகவன்றி ஆள் எவரும் மரணதண்டனையால் அல்லது மறியல் தண்டனையால் தண்டிக்கப்படல் ஆகாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடிவுறும் வரையில் ஆளொருவரைக் கைதுசெய்து வைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல் அல்லது அவரது சொந்தச் சுதந்திரத்தை வேறு வகையில் பறித்தல் தண்டனையாக அமையலாகாது.

உறுப்புரை 13(5) இன் பிரகாரம், ஆளொவ்வொருவரும் அவர் குற்றவாளி என எண்பிக்கப்படும் வரை சுத்தவாளி என ஊகிக்கப்படுதல் வேண்டும். உறுப்புரை 13(6) பின்னோக்கி ஆளும் விளைவினுடைய சட்டத்திற்கு ஆளாகாதிருப்பதற்குள்ள உரிமையினைக் குறிப்பிடுகின்றது. அதாவது, புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாகவிருந்திராத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆளெவரும் தவறொன்றிற்கு குற்றவாளியாதலாகாது. அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் வலுவிலிருந்த தண்டனையிலும் பார்க்கக் கடுமையான தண்டனையெதுவும் அத்தகைய ஏதேனும் தவறுக்கு விதிக்கப்படலாகாது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறுப்புரை 14. (1) பல உரிமைகள் இடம்பெற்றுள்ளதனை அவதானிக்கலாம். வெளியிடுதல் உட்பட்ட பேச்சுச் சுதந்திரம், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், ஒருங்க சேர்வதற்கான சுதந்திரம், தொழிற்சங்கமொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம், தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும், அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ, நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும் போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம், தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கும் ஆன சுதந்திரம், ஏதேனும் சட்ட முறையான முயற்சியில், உயர் தொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கான சுதந்திரம், இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம்: அத்துடன் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கான சுதந்திரம்.

அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 19வது சீர்திருத்த சட்டத்தின் மூலம் உறுப்புரை 14 (அ) என்ற பிரிவு உள்வாங்கப்பட்டுள்ளது. அப்பிரிவானது தகவல் அறியும் உரிமையினை வழங்குகின்றது. அதன்பிரகாரம், ஒவ்வொரு பிரஜையும், பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவலை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பெற அணுகுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். எனினும் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இவ்வுரிமை மட்டுப்படுத்தப்படலாம். ஒழுங்கின்மையை அல்லது குற்றத்தினைத் தடுத்தல், ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கங்களைப் பாதுகாத்தல், மற்றவர்களின் நற்கீர்த்தியை அல்லது உரிமைகளைப் பாதுகாத்தல் அல்லது அந்தரங்க தன்மையினைப் பாதுகாத்தல், நீதிமன்ற அவதூறைத் தடுத்தல், பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பாதுகாத்தல், நீதித்துறையின் அதிகாரத்தையும் பக்கச் சார்பற்ற தன்மையையும் பேணுவதற்காக, தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு.

ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை அவை ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்ளாக விசாரணைசெய்து உயர் நீதிமன்றம் தீர்க்க வேண்டும். எனினும் இதனை பணிப்புறுத்தும் வாசகமாக நீதிமன்றம் கொள்ளவில்லை. காரணம் சிலவேளை இக்குறிப்பிட்ட இரண்டு மாதங்களுக்குள் விசாரணை செய்து தீர்ப்பு வழங்க முடியாத சூழ்நிலை உயர் நீதிமன்றத்திற்கு ஏற்படலாம். குறிப்பாக நேரம், சான்றுகள், நீதிமன்ற வளம் போன்ற காரணிகளால் காலதாமதம் ஏற்படலாம். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்பிட்ட இரண்டு மாதங்களிற்குள் விசாரனை செய்து முற்றாக முடிவு செய்தல் வேண்டும் என்பதில் நெகிழ்வுத் தன்மை கடைப்பிடிக்கப்படுகின்றது.

## அடிப்படை உரிமை வழக்கினை தாக்கல் செய்தல்

உறுப்புரை 126 (2)ஆனது அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் முறைப்பாட்டினை சுட்டிக்காட்டி அதற்கான நிவாரணத்தினைக் கோருவதற்காக அவர் தானாகவோ அல்லது அவர் சார்பில் சட்டத்தரணி மூலமாகமோ உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம் எனக் குறிப்பிடுகின்றது. இதன்படி பாதிக்கப்பட்டவர் அல்லது அவர் சார்பாக சட்டத்தரணி மட்டுமே வழக்கிடலாம். எனினும், இத்தகைய நிலைப்பாட்டில் மாற்றத்தினை உண்டு பண்ணும் வகையில் உயர்நீதிமன்றம் **சிறியாணி சில்வா எதிர் பொலிஸ் பொறுப்பதிகாரி, பயகல** வழக்கில் தீர்மானத்திற்கு வந்தது. இவ்வழக்கின் சான்றுகளின்படி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது இறந்தவர் தாக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்தது. ஆரம்பத்தில் சட்டத்தரணி வழக்கிட்ட போதும் பின்னர் அது இறந்தவரின் மனைவியினால் வழக்கிடப்படுவதாக நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு மாற்றப்பட்டது. இது தொடர்பில் ஆட்சேபிக்கப்பட்டது. ஏனெனில் பாதிக்கப்பட்டவர் தானாக அல்லது சட்டத்தரணி மூலமே வழக்கிட முடியும். எனவே அவர் இறந்தால் வழக்கிட முடியாது. நீதிமன்றம் தனது தீர்ப்பில் இறந்தவர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அதன் விளைவாக அவர் அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமை மீறலுக்கான நிவாரணம் பெறுவதற்கான உரிமையைப் பெற்றுள்ளார். இறப்புக்கும் அவ்வாளின் அடிப்படை உரிமை மீறலுக்கும் தொடர்புள்ளபோது உறுப்புரை 126ன் கீழ் நெறிமுறை அக்கறையுடைய எவரும் வழக்குத் தொடரமுடியும் எனத் தீர்க்கப்பட்டது.

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான விண்ணப்பமானது, மீறப்பட்ட அல்லது மிக விரைவில் மீறப்படவுள்ளதெனத் தெரிய வந்த தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குட் செய்யப்பட வேண்டும். அதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் அடிப்படை உரிமை தொடர்பான வழக்கு விசாரணையில் இருக்கும் போது அக்காலப்பகுதி கணக்கெடுக்கப்படமாட்டாது. ஒரு மாத காலத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்பது **"பணிப்புறுத்தும் வாசகமாகும்".** பணிப்புறுத்தும் வாசகமென்பது சட்டத்திற் குறிப்பிடப்பட்டபடியே செய்ய வேண்டும் எனப் பணிக்கும் வாசகமாகும். எனவே விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர ஒரு மாத காலத்தினுட் தாக்கல் செய்யப்படாத வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. **மாறியோகோமஸ் எதிர் கொழும்புப் பல்கலைக்கழகம்** வழக்கில் மனுதாரர் தகுதிகாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதுடன் நியமன ஆவணத்தில் அவர் ஒரு வருட காலத்தில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் குறிப்பிடப்பட்ட தகுதியைப் பெறவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டது. அவ்வாறு தவறுமிடத்து பதவியிலிருந்து எவ்வித நட்டஈடும் இன்றி நீக்கப்படுவார் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 8 வருடங்கள் கழிந்த பின்னரும் குறித்த எந்த மொழியிலும் திறமையடையாத காரணத்தினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருடைய வேலை நீக்கம் அடிப்படை உரிமையை மீறுவதாக வழக்கிடப்பட்ட போது நீதிமன்றம் தனது தீர்ப்பில் இவ்வழக்கில் அத்தகைய வாசகம் இடப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற்குள் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடரப்பட்டிருத்தல் வேண்டும். தற்போது காலம் கடந்துள்ளது என்ற அடிப்படையில் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

## உயிர்வாழும் உரிமை யாப்பில் உள்வாங்கப்பட்டுள்ளதா?

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திலே உயிர்வாழ்வதற்கான உரிமை வெளிப்படையாக உள்ளடக்கப்படவில்லை. எனினும் சில வழக்குகளில் உயர் நீதிமன்றம் செயலூக்கமாகவும், பரந்தவகையிலும் செயற்பட்டு உயிர் வாழ்வதைப் பறிப்பதற்கெதிராகப் பாதுகாப்பை அளிக்கும் வகையில் பொருள்கோடல் செய்துள்ளது. **சிறியாணி சில்வா எதிர் பொலிஸ் பொறுப்பதிகாரி, பயகல** வழக்கில் பொலிஸ் உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்ட பின்னர் கடுமையான சித்திரவதைக்குள்ளான ஒருவர் சில நாட்களில் உயிரிழந்தார். அவருடைய விதவை மனைவியால் தனக்கும் தனது இவ்வழக்கில், உறுப்புரை 11 மற்றும் 13(4) என்பன பொருள் கோடல் செய்யப்பட்டன. சட்டமுறையற்ற விதமாக ஆளொருவரின் உயிர் வாழ்க்கையைப் பறிப்பது உறுப்புரை 11 இனால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஆளெவரும் மனிதாபிமானமற்ற நடாத்துகைக்கு உட்படுத்தலாகாதென்ற சுதந்திரத்தை மீறுவதாகும் என உயர் நீதிமன்றம் குறிப்பிட்டது. உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் **"வேறுவகையாக தகுதிவாய்ந்த நீதிமன்றம் கட்டளை ஆக்கினாலன்றி ஆளொருவர் வாழ்வதற்கு உரிமையுடையவரென அரசியலமைப்பின் உறுப்புரை 13(4) இனைப் பொருள் கோடல் செய்தது. எனவே நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட கட்டளையினாலன்றி மரணம் மூலமாக ஆளொருவரைத் தண்டிப்பது உறுப்புரை 13 (4) இனுள் உள்ளடக்கப்பட்டுள்ள உயிர் வாழ்வதற்கான உரிமையை மீறுவதாகும்"** எனக்குறிப்பிட்டது.

## முடிவுரை

இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பிலே முதன் முதலாக அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் தொடர்பான ஏற்பாடுகள் இடம்பெற்றன. ஆனால், அத்தகைய அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்புப் பொறிமுறை இடம்பெற்றிருக்கவில்லை. இரண்டாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடியரசு யாப்பில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சிறப்பாக உள்வாங்கப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன. அரசியலமைப்பானது உயர் நீதிமன்றத்தினை அடிப்படை உரிமைகளின் விசேட பாதுகாவலனாக அறிவிக்கின்றது. அடிப்படை உரிமைகள் ஆட்சித்துறை அல்லது நிர்வாக நடவடிக்கையினால் மீறப்படுமானால் மட்டுமே நிவாரணம் கோரி உயர் நீதிமன்றத்தினை நாட முடியும். அடிப்படை உரிமைகள் மீறப்படும் வரை காத்திருந்து அதன் பின்னர் நிவாரணம் கோரி வழக்கிட வேண்டும் என கருதக்கூடாது. மாறாக அடிப்படை உரிமை ஒன்று உடனடியாக மீறப்படவுள்ளது என அறியமுடியுமாயின் அதற்கெதிராகவும் வழக்கிட்டு நிவாரணம் பெற முடியும். அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டியது அவசியமாகும். காரணம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்கில் எதிராளியாக அரச தரப்பே இடம்பெறுகின்றது. அத்துடன் எந்தவொரு அடிப்படை உரிமை மீறல் வழக்கிலும் சட்டமா அதிபரை எதிராளியாக குறிப்பிடப்பட வேண்டியது அவசியம். ஆக, நீதித்துறை சுதந்திரமாக இருக்க வேண்டும். ஏனைய சட்ட மற்றும் நிருவாகத்துறையின் அவசியமற்ற, வெறுக்கத்தக்க தலையீடுகள் நீதித்துறையில் இடம்பெறக் கூடாது. இறுதியாக, உயர் நீதிமன்றம் பல்வேறுபட்ட வழக்குகளில் செயலூக்கமாகவும், பரந்த நோக்கிலும் வரவேற்கத்தக்க பல தீர்ப்புகளை வழங்கியுள்ளதுடன், அடிப்படை உரிமைகள் தொடர்பில் தனது வகிபங்கினையும் நிலைநிறுத்தியுள்ளது எனலாம்.

## உசாத்துணைகள்


Cooray.L.J.M. 2013. **Constitutional Government in Sri Lanka** 1996-1977. Stamford Lake Pubication. Pannipitiya, Sri Lanka.

Frank de Silva. 2013. **Police and Rights: In Search of Police Action to Promote Rights**. Vijitha Yapa Publications. Colombo.

Jayampathy.W. 2007. **Fundamental Rights in Sri Lanka. Stamford Lake Pubication.** Pannipitiya, Sri Lanka.

Ruana Rajepakse. 2011. **An Introduction to Law in Sri Lanka. Stamford Lake Pubication**. Pannipitiya, Sri Lanka.

Saliya Sumanathilaka. 2007. **Torture: A Sri Lankan Perspective**. Stamford Lake Pubication. Pannipitiya, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்போக முன்னம் ஊர்போய்ச் சேர்வேனோ

ஊருக்குப் போயிருந்தேன் - தம்பி
ஊரவன் போலே நின்றிருந்தேன்
பேருக்கு ஊர்காணப்போய் - நான்
பெரிதும் நொந்த கதைகேளாய்

தினகரன் வாங்கிவந்தேன் - தம்பி
தினமதைப் படிக்கும் பழக்கத்தினால்
மனமதை ஈர்த்ததொரு - செய்தி
மருந்ததாய் அங்கு இருந்ததடா

வலிகாமம் வடக்கிலுயர் - பாதுகாப்பு
வலயத்துள் அடங்கி நின்ற
வசாவிளா னெம்மூரில்மீண்டும் - குடியேற
வசதிகள் செய்து தருகிறராம்

பேப்பரில் கண்டசெய்தி - எனக்கு
பேரின்ப மகிழ்ச்சியைத் தந்ததடா
கூப்பிட்டேன் மனைவிதனை - நான்
ஊருக்குப் போவதாய்
உரத்துச்சொன்னேன்.

மழலையாய் வாழ்ந்தமண்ணின் - பல
மகிமைகள் மனதிலே வந்துசெல்ல
பழமைகள் உள்ளேஇன்னும் - நின்று
பூத்துக் காய்த்துக் கனிந்ததடா

குழந்தையாய் இருக்கையிலே - தினம்
குண்டு விழுந்து பலர் மடியக்
குவலயம் முழுவதிலும் - ஓடி
உயிரைக் காத்து மீண்டுவந்தோம்

எத்தனை காலமின்னும் - எங்கள்
சொத்தையும் சுகத்தையும் விட்டு விட்டு
மொத்த வாழ்வனைத்தும் - இன்னும்
செத்தே வாழ்ந்து சாகணுமோ?

கிழவனாய் ஆகமுன்னம் - மீண்டும்
கண்டிட வேண்டி மண்ணைக்
கிளர்ச்சியுற் றென்இதயம் - நானும்
கிராமத்தைப் பார்க்கச் சென்றேன்

ஊருக்குப் போயெங்களின் - காணியை
உறுதிப் படுத்தலாம் என்றிடவே
போருக்குப் போபவன்போல் - உத்வேகம்
கொண்டு எழுந்து நடந்துவந்தேன்

நட்ட நடுவெயிலில் - சனம்
நாலா யிரம் இருக்கும்
கிட்டநிற் பவர்கள்எல்லாம் - என்
கிராமத்தார் தானாம் நானறியேன்

றோட்டு வழிநிரையாய் - நின்று
சீட்டுப் பெற்றுக் கொண்டு
காட்டு வழிநடந்து - எங்கள்
கிராமம் காணச் சென்றால்,

கோயில் கிணறுதோட்டம் - பல
சோலைகள் சூழ்ந்த எம் ஊரதனை
போர்வந்து சூழ்ந்ததனால் - இன்னும்
கோரச் சுடலையாய்க் கிடந்ததடா

பாதம் அழுந்தி யதால் - மணலில்
புதைந்த பொன்காற் கொலுசை
தேடுபவன் போன்றே - என்
கிராமத்தைப் பற்றைக்குள் தேடினேனே

பார்க்கும் போதினிலே - வயிறு
பற்றி எரிந்து வெந்ததடா
ஊரின் நிலைமைகண்டு - எந்தன்
உயிரும் உருகி உறைந்ததடா

பாதிக் கிராமத்தைத்தான் - நாம்
தாண்டி நடந்து சென்றிருப்போம்
மீதிக் கிராமம்எங்கே - அது
முட்கம்பி வேலியுள் (சிறை)இருக்கிறதே.

உயர்காப்பு வலயமென - உயர்
தூண்கள் பலநட்டு கம்பியிட்டு
உயிர்போன்ற மண்ணில்இன்னும் -
எம்மை
உலவக் கூட விடவில்லையே

ஊருக்கு விடுவதென்று - உலகோர்
கண்துடைத் திடவென வந்தசெய்தி
ஊனை வருத்தியெந்தன் - உயிரையும்
உணர்வையும் வருத்தியதே.

ஐந்தாறு அரசி யல்கள் - மாறி
ஆட்சி பலபல அமைகையிலே
நம்பிக்கை கொண்டு நின்றேன் - ஓர்நாள்
நம்மூரில் குடியேற வைப்பாரென.

மண்ணுக்காய் சண்டையிட்டு - இன்று
மண்ணில் பலபேர் புதைந்த பின்னர்
என்ன பயன்வந்தது - இன்னும்
எம்துயர் நீங்க வழியில்லையே

என்னுயிர் போகமுன்னம் - தம்பி
எங்களின் ஊர்போய்ச் சேர்வேனோ?
என்னுயிர் போனபின்பு உடம்பு -
அங்கே
எரியுமோ சொல்லு தம்பி.

கணகதுர்க்கா
தமிழ்துறை
விடுகை வருடம்

(பேட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்மேகக் கவிஞரின் 'கொங்கு மண்டல சதகம்'



ர. தினுஷா,
தமிழ்த்துறை,
இறுதி வருடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**சதகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ள இலக்கிய வடிவங்களுள் சதகமும் ஒன்றாகும். இது வடமொழியிலும், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பிற திராவிட மொழிகளிலும் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. "சதகம்" என்பது வடமொழிச் சொல். இச்சொல் சதம் என்ற சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. வடமொழியில் "சதம்" என்பதற்கு நூறு என்பது பொருள். "க" என்ற எழுத்தானது பிரத்தியயம் எனும் வடமொழி மரபிற்கு ஏற்ப சதம் என்ற சொல்லிற்கு இடையே கூட்டியுரைக்கப்பட்டு "சதகம்" என அழைக்கப்பட்டு வருகின்றதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழில் தோன்றிய பாட்டியல் நூல்களுள் இலக்கண விளக்கம் தரும் விதி சதக இலக்கியத்திற்கு முதன்மையாகக் கருதப்படுகின்றது. இலக்கண விளக்கம் சதகத்திற்கு பின்வருமாறு விளக்கம் தருகின்றது:

**"விழையும் ஒருபொருள் மேலொரு நூறு தழைய உரைத்தல் சதகம் என்ப"**

இதனடிப்படையில் குறித்த பொருள் சார்ந்த செய்திகளை நூறு செய்யுள்கள் மூலம் வெளிப்படுத்தும் இலக்கியம் எனச் சதகத்தை கூறலாம். தமிழ் இலக்கியங்களுள் சதகம் எனும் சொல்லினை முதன்முதலில் திருவாசகத்திலே காணலாம். திருவாசகத்தின் ஐந்தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாகத் திருச்சதகம் அமைந்துள்ளது. இது பக்தி நிலை சார்ந்ததாகவே காணப்படுகின்றது. இத்தகைய சதக இலக்கிய வடிவமானது பிற்காலத்திலே வரலாறு சார்ந்ததாகவும் துதிப் பொருள் சார்ந்ததாகவும் வாழ்வியல் சார்ந்ததாகவும் பரிணமித்துள்ளது.

## மண்டல சதகங்கள்

சதக இலக்கிய வடிவத்தின் வரலாறு சார்ந்த பரிணாமத்தின் ஒரு விளைவாக மண்டல சதகங்கள் தோற்றம் பெற்றுள்ளன. மண்டலம், சதகம் ஆகிய இரு சொற்களும் இணைந்து "மண்டல சதகம்" என்னும் சொற்றொடர் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுள் சதகம் என்பது குறித்த பொருள் சார்ந்த செய்திகளை நூறு செய்யுள்கள் மூலம் வெளிப்படுத்தும் இலக்கிய வடிவமாகும்.

பல பொருள்களைக் குறித்து நிற்கும் சொல்லாக "மண்டலம்" விளங்குகின்றது. இந்தவகையில் "மண்டலம் எனும் சொல் வட்டமான பொருள்களையும் தோற்றத்தையும் செலவையும் காலத்தையும் இடத்தையும் தொன்றுதொட்டு இருவகை வழக்கிலும் குறித்து வந்திருக்கின்றது" என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது. "மண்டல சதகம்" என்னும் சொற்றொடரில் மண்டலம் என்பது இடத்தை குறிக்கும் வகையில் நாட்டின் பிரிவு, பிராந்தியம், நாடு, பிரதேசம், நாட்டுப்பகுதி முதலிய பொருள்களின் அடிப்படையிலே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நோக்கும் போது குறிப்பிட்ட நாடு சார்ந்த செய்திகளை நூறு பாடல்களில் வெளிப்படுத்தும் இலக்கிய வடிவமாக மண்டல சதகம் விளங்குவதனை அவதானிக்கலாம்.

ஈழமண்டல சதகம், கார் மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், சேர மண்டல சதகம், சோழ மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், நந்த மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் ஆகியன தமிழில் தோன்றிய மண்டல சதகங்களாகும். குறிப்பிட்ட சில மண்டலங்களைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்கள் மண்டல சதகம் இயற்றும் போக்கும் தமிழில் காணப்பட்டுள்ளது. இந்தவகையில் ஈழமண்டலம், கொங்கு மண்டலம், நந்த மண்டலம் முதலியவற்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மண்டல சதகங்கள் காணப்படுகின்றன.

பதினொராம் நூற்றாண்டில் கார் மண்டல சதகம் தோன்றியது. ஏனைய மண்டல சதகங்கள் பதினெழாம், பதினெட்டாம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் தோற்றம் பெற்றுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் முற்பட்ட காலங்களில் எவ்வெவ் வழிகளில் சிறந்து விளங்கியவை என்பதனை எடுத்துரைப்பதனையே மண்டல சதகங்களின் பொதுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாகக் கூறலாம்.

தமிழ்ச் சூழலில் சோழரின் ஆட்சிக்குப் பிறகு பதினெட்டாம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் நிலையான ஆட்சியை காணமுடியவில்லை. அதாவது, பாண்டியர்களின் ஆட்சியில் காணப்பட்ட போட்டித் தன்மை, இஸ்லாமியரது ஆட்சியில் ஏற்பட்ட குழப்ப நிலை, நாயக்க மன்னர்களின் ஆட்சியில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலை, மராட்டியர் நவாபுகளின் ஆட்சி, மேற்கத்தை நாடுகளைச் சேர்ந்தோரின் அரசியல் தலையீடு முதலிய நிலைமைகளை நோக்கும் போது குழப்பமான அரசியல் சூழ்நிலை நிலவியுள்ளமையை அவதானிக்கலாம்.

அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட நிலையற்ற தன்மையால் மக்களின் வாழ்வு பாதிப்படைந்தது. அந்நிய மதத்தவரது ஆட்சி, வரிச்சுமை, பஞ்சம் முதலிய பல இன்னல்களால் மக்கள் பாதிப்படைந்திருந்தனர். இத்தகைய சூழ்நிலைகளால் பாதிப்படைந்த தமிழக மக்கள் மத்தியில் தமிழ் நாடு சார்ந்த நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக புலவர்கள், தமிழகத்தின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் காணப்பட்ட சிறப்புக்களை எடுத்துரைக்க பொருத்தமான வடிவமாக விளங்கிய சதகத்தைப் பயன்படுத்தியுள்ளமையை மண்டல சதகங்களின் உருவாக்கம் காட்டுகின்றது. மேலும், பதினொராம் நூற்றாண்டில் தோன்றிய கார்மண்டல சதகமானது பிராந்தியம் சார்ந்த பல்வேறு நிலைகளையும் எடுத்துரைப்பதற்கு பொருத்தமான வடிவமாக சதகத்தை இனங் காட்டியுள்ளமையும் நோக்கத்தக்கது. இந்த அடிப்படையில் கார்மேகக் கவிஞர் இயற்றிய கொங்கு மண்டல சதகம் பற்றி சுருக்கமான ஆய்வு முன்வைக்கப்படுகின்றது.

## கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம்

கொங்கு மண்டலத்திற்கு கம்பதாச சுவாமிகள், கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர் ஆகியோர் தனித்தனியே மண்டல சதகம் இயற்றியுள்ளனர். இவற்றுள் கார்மேகக் கவிஞரால் இயற்றப்பட்ட கொங்கு மண்டல சதகம் பதினெட்டாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. இது தமிழகத்தில் நீண்ட கால வரலாற்று பின்னணியை உடையதாக விளங்கும் கொங்கு நாடு சார்ந்த வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகமானது கொங்கு மண்டலத்தின் எல்லை, மண்டலத்தில் அமைந்துள்ள தலங்கள், மலைகள், அப்பகுதியில் பிறந்து வாழ்ந்த வள்ளல்கள், புலவர்கள், வீரர்கள் முதலியோரின் சிறப்புகள், குறிப்பிட்ட பிரதேசம் சார்ந்த தொன்மங்கள், அப்பகுதியை ஆட்சி செய்த மன்னர்கள், பல்வேறு தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களின் சிறப்புகள் முதலானவற்றை இலக்கிய நயத்துடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்கின்றது.

கொங்கு மண்டல சதகத்தில் கிழக்கில் மதில் கரையும் தெற்கில் பழனியும், மேற்கில் வெள்ளியங்கிரியும் வடக்கில் பெரும்பாலையும் எல்லையாகக் கூறப்பட்டுள்ளன. எனினும், இவ்வெல்லை பற்றிய குறிப்பு பதினெட்டாம் நூற்றாண்டுக்குரியதாகவே விளங்குகின்றது. பழங்கொங்கு நாட்டின் எல்லையும் பரப்பும் மிகப் பெரிதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக தமிழகச் சூழலில் கொங்கு நாடு செல்வாக்கு பெற்றதாக விளங்கியுள்ளது. இதற்கு ஒரு காரணம் கொங்கு நாட்டில் பசுக்கள் மிகுதியாக இருக்கின்றமை ஆகும். கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஏர்த் தொழிலில் கொங்கர் சிறந்திருந்தனர் என இரா. வடிவேலன் குறிப்பிடுவார். மேலும், "ஆ கெழு கொங்கர்", "கொங்கர் படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்" என சங்க இலக்கியங்களில் கூறப்படுகின்றமையும் பழங்காலந் தொட்டு கொங்கு நாட்டில் ஆநிரை வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையைக் காட்டுகின்றது. உழவுத் தொழில் உணவு உற்பத்திக்கு அடிப்படை என்ற வகையில் கொங்கு மலித்தால் எங்கும் மலியும் என்ற பழமொழியும் ஆநிரை வளர்ப்பினை அடிப்படையாகக் கொண்டதென கொங்கு மண்டல சதகம் கூறுகின்றது.

**"பொற்பு மிகுகொங்கு நாடு செழித்திடப் பூமியெங்கும்**
**நற்பய னுற்றுச் சுகித்திடு மென்ன நவிற்று பழஞ்**
**சொற்பெற வெல்லா வளமும் பொருந்திச் சுரபியோடு**
**வற்சக மோங்கி வளர்வதன் றோ கொங்கு மண்டலமே"**

கொங்கு நாடு கொல்லிமலை, அலைவாய் மலை, பழனிமலை, ஆனை மலை, நாககிரி, சென்னிமலை, வெண்ணெய் மலை முதலிய மலைகளால் சூழப்பட்டிருந்தமை பற்றிய குறிப்புகளை கொங்கு மண்டல சதகம் தருகின்றது. இம்மலைகளுள் கொல்லிமலை தமிழக வரலாற்றின் ஆரம்பகாலம் தொடக்கம் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். இம்மலையின் அருகில் ஒரு பாவை அமைக்கப்பட்டிருந்தது. இதனை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். தற்காலத்தில் அப்பாவையைக் காணமுடியவில்லை. எனினும். கொங்கு மண்டல சதகம் எடுத்துரைக்கின்றமையால் கார்மேகக் கவிஞரின் காலத்தில் கொல்லி பாவை இருந்திருக்கும் என ஊகிக்கலாம். இதனைக் கீழ்வரும் பாடல் பதிவு செய்தது.

**"தாணு முலகிற் கடன்முர சார்ப்பத் தரந்தரமாய்ப்**
**பூணு முலைமட வார்சேனை கொண்டு பொருதுமலர்ப்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாணன் முதலெவ ரானாலுங் கொல்லியம் பாவை முல்லை**

**வாணகை யாலுள் ளுருக்குவ துங்கொங்கு மண்டலமே"**

கொங்கு மண்டல சதகத்தில் கொங்கு நாடு சார்ந்த தொன்மக் கதைகள் எடுத்துரைக்கப்படுவதனைக் காணலாம். இவ்வகையில் அர்த்தநாரீஸ்வரர், பிள்ளையார், அகத்தியர், காமதேனு, சம்பந்தர், சுந்தரர் முதலியோருக்கும் கொங்கு நாட்டிற்கும் இடையிலான தொடர்பு சித்திரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், பேரூர், அவிநாசி, வெண்ணெய் மலை, வெஞ்சமாங்கூடல், திருச்செங்கோடு முதலிய கொங்கு நாட்டு தலங்கள் பற்றிய கதைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு தொன்மம் நிறைந்த கதைகளை கூறுவதன் மூலம் கொங்கு நாட்டிற்கு புனிதத் தன்மையை ஏற்படுத்தி, அந்நாடு சார்ந்த பூர்வீக வரலாற்று உருவாக்கத்தை ஏற்படுத்த முனைந்துள்ளமை சிந்திக்கத்தக்கது. இது தலபுராணங்களது பண்பினை ஒத்ததாக அமைகின்றது.

கொங்கு நாட்டு குறுநில மன்னர்கள் வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய வேளாண்குடியைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கு நிகரானவர்களாக ஆட்சி புரிந்தமையை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இதனால் அவர்களை "குறு நில மன்னர்கள் என்றழைப்பதனை விட தனியரசர்கள் என அழைப்பதே பொருத்தமானது" எனப் புலவர் குழந்தை குறிப்பிடுவார். இத்தகைய புகழ் பெற்றிருந்த குமணன், அதியமான், ஓரி, கோப்பெரும்பேகன் முதலிய கொங்கு நாட்டு குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளையும் குறிப்புகளை கொங்கு மண்டல சதகம் கூறுகின்றது. சான்றாக ஓரி பற்றி குறிப்பிடும் செய்யுள் பின்வருமாறு

**"வினராயர் தொடையணி மூவேந்த ராசை மிகுந்துநச்சத்**
**தரைமீ தெலாவள முஞ்செறி கொல்லித் தடவரையாள்**
**துரையாய்த் தமிழ்மொழிக் கல்லும் பகலுஞ் சுரந்து செம்பொன்**
**வரையா தளித்தநல் லோரிவள்ளல் கொங்கு மண்டலமே"**

மேலும், கொங்கு நாட்டில் வாழ்ந்த பிறநாட்டு மன்னர்கள் பற்றிய குறிப்புகளையும் இச்சதகத்தில் காணலாம். இவ்வாறு குறிப்பிடப்படும் மன்னர்கள் ஆளுமை மிக்கவர்கள் என்பது நோக்கத்தக்கது. உதாரணமாக கரிகால் சோழனை குறிப்பிடலாம். இவன் ஆரம்ப கால சோழ மன்னர்களுள் புகழ் பெற்றவனாக விளங்கினான். இம்மன்னன் இளவயதில் கொங்கு நாட்டில் மாறுவேடமிட்டு வாழ்ந்தமை பற்றிய குறிப்பு கொங்கு மண்டல சதகத்தில் இடம் பெறுகின்றது. அப் பாடல் பின்வருமாறு:

**"நீரமை காவிரி நாட்டினை யாண்ட நிருபரினற்**
**பேருறு வான் கரிகாலன் கரந்து பிழைத்ததன்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏருறு சிங்கா தனமேறக் கையா லெடுத்துமத**

**வாரணங் கண்டு கொடுபோன துங்கொங்கு மண்டலமே"**

கொங்கு நாட்டைச் சேர்ந்த வள்ளல்கள் புலவர்களையும் இரவலர்களையும் போற்றியுள்ளனர். இந்தவகையில் அசதி, நல்லத் தம்பி காங்கேயன், சீயகங்கன், ஆணூர்ச் சக்கரை, காரையூச் சக்கரை, சம்பந்த சக்கரை, கொங்குபிராட்டியார், பல்லவராய சிறுவன், வாணராயன் முதலியோர் பற்றிய குறிப்புகளையும் கொங்கு மண்டல சதகத்தில் காணலாம். மேலும், கொங்கு நாட்டில் வாழ்ந்த வீரர்களின் விருது பெயர்களின் மூலம் அவர்கள் போற்றப்பட்டுள்ளமையும் அடியார்க்கு நல்லார், கொங்குவேளிர், பொய்யாமொழிப் புலவர், பவணந்தி முனிவர், சிவப்பிரகாசர், ஔவையார் முதலிய இலக்கியத்தில் புலமை மிக்கவர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிற்பிகளாக விளங்கிய வேளாளர்கள், மக்களின் நோய் தீர்க்கும் குயவர்கள், மருத்துவிச்சியாகப் பணி புரிந்த நாவித பெண் முதலியோரது வரலாறுகள் கொங்கு மண்டல சதகத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இத்தகைய வரலாறுகள் கொங்கு நாட்டில் வாழ்ந்தோர் பல்வேறு தொழில்களில் வல்லவர்களாக இருந்துள்ளமையைக் காட்டுகின்றன. சான்றாக குயவன் பற்றிய தகவலை தரும் கீழ் வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

**"கரிகாலச் சோழன் மகளுக்கு வந்த கனவலிப்பு**
**மெரியா மூடலை மயக்கமட் கோவ னிறைமகளைப்**
**பரிபா லனஞ்செய மட்பாவை யிய்குறி பார்த்துச்சுட**
**மரியாம லவ்வலி யேகிய துங் கொங்கு மண்டலமே"**

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகமானது கொங்குநாட்டின் பன்முகச் சிறப்புகளை எடுத்துரைப்பதனை அவதானிக்கலாம். இந்தவகையில் மண்டல சதகங்களானவை காலத்தின் தேவைக்கேற்ப தோற்றம் பெற்று குறிப்பிட்ட மண்டலத்தில் போற்றப்பட்ட பண்பாடு சார்ந்த அம்சங்களை வெளிப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**துணைநூல்கள்**


முத்துராசன், கு., (1984) **"இலக்கிய வடிவங்கள்"**, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், ப. 101.

**வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி 8,** (1991) தஞ்சாவூர்: தஞ்சாவூர் பல்கலைக்கழகம், ப.337.

இலக்கண விளக்கம் : 847.

தேவநேய பாவாணர், ஞா., (2015) **"தென்சொற் கட்டுரைகள்",** சென்னை : தமிழ் இணையக் கல்விக்கழகம், ப.108.

வடிவேலன், இரா., (2003) **"கொங்கு வேளிர் வரலாறு",** சென்னை : அருணோதயம் வெளியீடு, ப.10.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Is the origin of Sri Lankan Moors Dravidian?

(A brief description)



**M.A.A. Beham**
**Assistant Lecturer**
**Department of History**
**Faculty of Arts**

When studying the historical origin of Sri Lankan Moors, a basic problem that emerges is the lack of documentation based on Sri Lankan Moors by authors of the said origin. Therefore, the discussion ethnology of Moors could be based only on the concept of the historical tradition of Sri Lankan Moors. Especially, when developing the history of Sri Lankan Moors, the major difficulty—when paying attention to the factors shown by T. B. Abeysinghe who discusses about it—shows how serious the turn is to the above concept. That is;

1. "When the Sinhalese have a tradition of historical documents like the **Mahavamsa**, the **Culavamsa** and **Rajăvaliya**, and when the Dravidians have historical sources like **Yalpanam Vaipavamalai** to build up their history, why do the Sri Lankan Moors lack such sources?
2. Are they absolutely without a literary tradition?"

It is apparent that the contemporary historians face the difficulty of recreating the lives of the ancient Moors based on a heap of biased historical sources. However, since their contemporary historical viewpoints built on the historical method and the examining of sources have been widened, the modern historian is able to verify the facts which derive from these sources. Based on these facts, even though it is hard to assert that the Sri Lankan Moors did not feel the need to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

document their history, it is justifiable to say that another factor might have interfered into delaying their attempts at documenting their history. It can be speculated that the Moors needed a long time and space to locally settle themselves in the island and to expand the political, religious and economic structures needed for their stabilization. The opportunity for documenting their history must have opened itself with their achieving a permanently settled

Moor society, and with the assertion of their social freedom in the island. Yet, due to the historical forces that developed regionally in the fifteenth century, the need to protect their identity and their right to freedom became of utmost importance than beginning a tradition of historical documentation.For any society, the presence of threats for freedom and rights of its people makes it natural to react like wise. Therefore, during the fifteenth century, the primary concern of the Moors was to find alternatives to protect their rights and civil independence amidst the political, social, economic, and religious transformations that came forward after the century. At the same time, since the Portuguese and the Dutch burnt down the important religious institutions including mosques, if in any case the Moors had any written sources based on their origin, these documents might have met with their destruction there. For example," in the book *Sonahar* written by J. C. van Sandon in 1926, the author says that the foundation for his book was based on an ancient writing that belonged to a very old family lived in Beruwala during his stay in the country". Yet, by looking at the list of Moor authors of the post-colonial period, it is obvious that with the social and political rights they won after permanently settling in the island as a minority ethnic group, circumstances compelled them to initiate a literary tradition of their own. Accordingly, when studying about this particular period, the researches, and explanations of later Moor scholars whose compositions are based on contemporary sources are worth paying attention to. At present, modern historians attempt to build up the history based on the following types of literary sources.

1. Sinhalese literature including the Vamsakathas - **Rajăvaliya**, Sandesa Kavya etc.
2. Property given by Sinhalese rulers as gifts in written deeds - for example, the Sannasa given by king Keerthi Sri Rajasinghe to the Marakkala (Moor) doctor who saved the king's life from the conspirators and many other such documents (Sannas) given to Moor generations, as published by A. C. Laury who provides the details and translations of such documents in his book *Gessetier of the Central Province of Ceylon.* Reports found in Buddhist temples, for example The Commissioner's Book-1870, can also be used in this way even though they cannot be considered as formal documents.

[1] T. B. Abeysinghe,"Muslims in Sri Laka in the sixteenth and seventeenth centuries", **Muslims of Sri Lanka,** M.A.M Shukri , Beruwala :Jamiah Naleemia Institute, 1986, P. 129.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. The written works and reports of colonial rulers - Details and memoranda on contemporary Moors can be obtained by the Dutch administrators who were in-charge of the coastal areas who reported for the benefit of their followers and reports of the missionaries of the Portuguese and the Dutch including Queros. In addition, the documents of British writers like Robert Knox, James Coadiner, John Davy, John Doyly, and Emerson Tenant are taken into consideration.

When perceiving the ethnology of the Sri Lankan Moors based on these sources, the study comes forward as a debatable topic only in the nineteenth century. It was another facet of the cultural revolution evolved in the local Moor community. The forerunner of the movement was M. C. Siddilebbe while I.L.M. Abdul Aziz was the moving force in making it a systematic discourse. There, his work "*A Criticism of Mr. Ramanathan's Ethnology of the Moors in Ceylon*" is of crucial importance. It is important to pay attention to the historical context that influenced his work. In 1880, when there was an idea being created as to make amendments to the constitutional committee regarding particular movements made, the Moors appealed to the committee requesting that a representative of Moors should be allowed in the committee. Then in 1879, the Dravidian representative of the committee Mr. Ponnambalam Ramanathan declared that the Sri Lankan Moors were originally South Indian Dravidians converted to Islamism. In 1888 he presented an article named "*The Ethnology of Moors of Ceylon*" to the Sri Lankan branch of the Royal Asiatic society.

His idea was highly debated on the basis that the attempt of Mr. P. Ramanathan was to devoid the Moors of their right to be elected to the committee. The opinion of Mr. Abdul Aziz regarding the matter was "It is clear that the major purpose of Mr. Ramanathan in identifying the Moors as Dravidian is to bar the right for a Moor representation in the constitutional committee. The reason is that when it was revealed that the government was planning to give opportunity for Moor representation in the committee, the basic objective must have been to show the government that the Moors

---

[2] Van J. C. Sanden, Sonahr- A Brief History of Moors of Ceylon, Colombo: The Daily Mail Press, 1925, pp.117 – 118.

I. L. M. Abdul Azeez, A Criticism of Mr. Ramanathans Ethnology of the Moors of Ceylon, Colombo: Islamic Cultural Home, 1907.

Ponnambalam Ramanathan, The Ethnology of Moors of Ceylon : The Journal of The Ceylon Branch of The Royal Asiatic Society, Colombo: Times of Ceylon, 1888.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

lack a unique identity and therefore there is no need to grant the Moors an independent representation in the committee." As consequences Abdul Aziz was compelled to write logically and critically about the history of the Moors using both local and foreign literary sources and archaeological sources such as various legends, folk tales, Arabic documents and reports, and Kufique documents related to the history of the Moors. The attempt became significant since it planted the seed for modern historians to unveil the hidden story of the history.

In his article, Mr. Ramanathan was influenced by two major factors which made him relate the origin of the Moors to Dravidians.

1. Sri Lankan Moors seem to show an ethnological similarity to Dravidians.
2. Sri Lankan Moors use Tamil as their mother tongue.

One of his basic arguments was to criticize and show that the traditional belief among the Moors that says 'the Moors in Sri Lanka descend from the eight settlements (in Trincomalee, Jaffna, Manthota, Mannar, Kudiramalai, Puttalam, Colombo, Beruwala, and Galle) selected by Hashim Arabs (belonged to the cult of Nabi) of the group who came to Sri Lanka while fleeing the violent rule of Qualifaa Abdul Malik Bin Marvan in the eighth century and arrived in areas like Conornia, Sri Lanka, and Malakka marking the arrival of Moors in the region. He tries to refute the belief which rejects this fact based on its inability to account for mass Arabic settlements in the country. Mr. P Ramanathan adheres to the explanation provided by Mr. Kasichetti who shows that the ancestors of Sri Lankan Moors settled initially in Kayalpattanam in the ninth century and several years later in 1024, townsmen of Kayalpattanam settled in Beruwala, that Beruwala is actually a Kayal settlement and that it is one of the most ancient Moor settlements. Thereby he sides with the belief among the Indian and Sri Lankan Moors. Further asserting his belief, he tries to point out that these migrators were mostly Dravidians who embraced Islamism. He shows the exact year that the Moors settled in the island to be '1350', prior to which the Arabs, Abyssinians, Egyptians and other Africans who came to the country as tradesmen, militia, and tourists must have left the country after sometime. Yet when comparatively considered, they cannot be seen as permanent settlers. The first group of permanent settlers arrived in the country in 1350 and they chose Beruwala as their dwelling. Afterwards the migrators from Kayalpattanam expanded the population and spread their settlements to Batticaloa, and Puttalam. When looking at their language, customs and physical features etc. He arrives at a final conclusion that the Moors in coastal areas and Lankan Moors are Dravidians."

In reply to the conceptualization of Mr. Ramanathan about the ethnological and linguistic origin of Sri Lankan Moors, Abdul Aziz in his book draws the reader's attention to two issues.

[5] Azeez, ***Ibid***, p. 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Even though it is true that the Dravidian community contributed considerably to shape the behavior, customs, and ethics of Sri Lankan Moors, how does it prove their ancestry and ethnicity to be necessarily Dravidian?
2. Although the argument of P. Ramanathan is very strong in saying that since Sinahlese and Dravidians use Sinhala and Tamil respectively as their first language which makes their existence to be two ethnic groups, there are two issues in speculating that Tamil language proves the lineage of Moors to be Dravidian.
    I. Do the Moors use Tamil as their national language like the Sinhalese and Tamils use their languages
    II. Is there a probability of an ethnic group who forgets its own mother tongue and use a borrowed language?

A significant feature discernible in Mr. Abdul Aziz's view is his reluctance to support the agreement that the origin of Lankan Moors existed qualitatively pure from the Arabs. In other words, he shows that although there is a relationship with Arabs in the origin of local Moors, in similar proportion, they descend from the evolution of the ethnic composition of Sinhalese, south Indian Moors, and Sri Lankan Dravidians. Yet it is hard to fully believe they are purely Dravidian. Similarly, he refuses to accept that the history of Sri Lankan Moors did not stretch far back beyond the thirteenth century as pointed out by Mr. P. Ramanathan. In order to strengthen his position, he uses Arabic and Greek-Roman navigational reports, local Vamsakatas, and Sandesa Kavyas, administrative documents of the British, legends and folk tales existent among Sri Lankan Moors about their historical origin and also Kufique writings found in Sri Lanka. It is apparent that Mr. Abdul Aziz does not limit himself to a pile of biased sources but he uses multiple sources to assert his belief. In an era where modern dimensions of historiography are being widened, even though not well-read in the particular field, he is worthy of being praised for his attempt to develop a history by using the existent sources critically. The reason is because, in a context in which the origin of his own ethnic group was being challenged, he tries to present his convictions with a balanced historical perspective instead of entering into extremist or heated defensive mechanisms. Yet it does not say that his methods of historiography are flawless.It is due to the inevitability of interference of subjectivity, context of the sources used, and the background of the historiographer with his/ her attempt to build up a bygone story. However, further inquiries to the method employed by Mr. Abdul Aziz would pave the way to arrive at conclusions about the historical evidence he used to prove his concepts.

---

[6] Ramanathan, ***Ibid***,pp. 234- 262.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

By naming Deduru-oya as *Sonar Fluvious*, which means the river of the Arabs, in the map drawn by Claudius Ptolemy in 150 BC which was completed three centuries before the Mahavamsa, it is proved how ancient the relations were between Sri Lankans and Arabs. Ptolemy connects the Arabs with the Abyssinians and Persians who had trade settlements in the island during the particular period. With the wake of Islamism, the trade carried out then in the Indian Ocean by the Arabs, Persians and Abyssinians acquired a new perspective. People from various ethnic groups who used various languages were united under the flag of Islamism making Arabic their link language. In the nineth and nineteenth centuries Arabic settlements were well-developed in the coastal belt of Sri Lanka. Arabic Moors who arrived at the island may have made marital relationships with Sinhalese and Tamil women since they do not bring their wives with them. It is possible for these Arabs to have converted their local wives and children to Islamism. Thus, certain groups who settled in Sri Lanka tried to maintain cultural and religious relationships with Islamism at large. It helped them to maintain their identity among other non-Muslim people in Sri Lanka. Especially, Mr. Aziz highlights in his book how the patience of the local people and the generosity of local rulers contributed to strengthen this identity. Yet, with the loss of the centralization of world Muslim empire in the thirteenth century, trades carried out in the eastern regions of the Indian Ocean were weakened and were influenced by Indianization. Consequently, the Indo-Arabians quartered in South India during fourteenth and fifteenth centuries took hold of the trade between India and Sri Lanka. Later on, a part of these local and foreign Indo-Arabians got married to Sri Lankan women and began to settle in the coastal area of the island marking the beginning of Indo- Muslim settlements. With the arrival of colonizers in Indian Ocean, the numbers of these trade settlers were reduced. Due to the attacks and constant threatening of the Portuguese and the Dutch targeted at these groups, they started migrating slowly to inlands and specifically to Kandyan kingdom. Kandyan rulers (such as king Senerath) settled them in various places. Thus the Muslims had to move away from their permanent settlements and were spread to villages. There may have been marriages between these two groups: the Lankan Moors (the Sonahars) and the coastal Moors (the Sammankaras).Finally, through his book, Mr. Aziz refutes the argument that the ethnology of Lankan Moors was Dravidian depicting further that Arabians, Sinhalese, Sri Lankan Dravidians and South Indian groups were considerably



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mixed in the process.

Paying attention to linguistic similarities, he shows the first Arabian migrators gave priority to Arabic which was the language of the Koran and the religious sermons. Yet, since Tamil was used by Arabian tradesmen in the Indian Ocean, it was the link language of trade in the region which made it a practical necessity for the Arabian tradesmen to learn Tamil. With the development of Moor settlements in India, they started writing Tamil and Malayalam languages in Arabic without harming Tamil phonology. Many Arabic terms were introduced in places where Islamic concepts and activities could not be separated from Arabic, the language of Islamism. This sub-language developed as Arabic-Tamil. Therefore, although there are Tamil phonemes pronounced, it is widely different from Tamil language where features of a sub-language were ample. Thus in latter periods it developed not only as a language of trade but also as a language of Islamic culture.

Another important similarity drawn by Mr. Ramanathan lies in the social practices and customs among Muslims and Tamils. He presents his opinion about it as follows. "The fact is acknowledged by the Moors themselves that their ancestors took Dravidian women in marriage, and the descendants transferred their language, behavior, customs, and ethics for the future generation. ... ... what the Persians did in India was done by Moors in Sri Lanka. It is natural for children to be more influenced by the thoughts and behavior of their mothers than of their fathers. Sthreedhanam, accepting the '*Alatti*',*thellabandeema*, and similar customs are practiced among the Moors. This is what I believe to be the reason. They were influenced by Dravidians because their mothers were from that particular community. In response Mr. Aziz argues thus:"Merely because the Moors borrowed these customs from the Dravidians, can it be proved that they become Dravidian by descent or by nationality? Many customs of Jews in England show similarities to English society and culture. Based on this single fact can these Jews be named Anglo-Saxons?"

The ideas brought out by Mr. Aziz go beyond the argumentative limitations of Mr. P. Ramanathan. While the views of Mr. Ramanathan seem to be based on the similarities visible only at the surface level of a particular society,arguing logically and critically, Mr. Aziz triesto bring out the historical make-up of the said similarities and the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

interrelationships among those features.

The meaningfulness of the effort of Mr. Abdul Aziz is witnessed in the statement made by E. B. Denham in the Lankan census report -1911 when pointing out his idea about the conceptualization of Mr. Ramanathan about Sri Lankan Moors. "An individual who is acquainted with both Dravidians and Moors is able to discern easily many features unique to the latter which are not similar to Dravidians. Although there is no doubt about their being mixed with other ethnic groups, the features of the first Arabs in the island are easily reflected in them. Especially, their religion -Muhammadanism helps to make these features clearly obvious.Even with regard to the physical appearance there are clear demarcations between the two ethnic groups. The Muslims currently settled in Colombo

and Galle consist considerably of Sinhalese blood in them. Sinhalese women who are married to Muslims or live together with Muslim men are very high in number."

When taken as a whole a clearly obvious fact is that although the origin of Sri Lankan Arabs is connected to Arabs by descent, with the lapse of time, through the influence of trade and cultural movements, they claim to aunique culturaland traditional style of their own which paved way for their identity to take root in Lankan social structure.

[7] Azeez, ***Ibid***, pp. 41 - 42.
Lorna Dewaraja, The Muslims of Sri Lanka One Thousand Years ofEthnic Harmony 900-1800A. D., Colombo: The Lanka Islamic Foundation, 1994, pp. 45 – 46.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் ஆளுமையும் தமிழியல் ஆய்வுகளும்

பேராசிரியர் க. அருணாசலம்

அவர்களை முன்வைத்து

சில குறிப்புகள்



**பா.சுமன்**

**உதவி விரிவுரையாளர்**

**தமிழ்த்துறை**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலாநந்தரால் தொடக்கி வைக்கப்பட்ட தமிழியல் ஆய்வுகளை முன்னெடுத்துச் சென்ற ஆளுமைகளுள் பேராசிரியர் அருணாசலத்தின் பங்கும் கனதியானது. சாதாரண விவசாய குடும்பப் பின்னணியில் இருந்து பல்கலைக்கழகம் நுழைந்து, தனது அளுமையை விருத்தி செய்து, இன்று தமிழியற் புலத்தில் தனக்கான ஓர் அடையாளத்தை விட்டுச் சென்ற பெருந்தகையாளராக - வரலாற்று நாயகராக அவர் எம் முன் காட்சியளிக்கிறார்.

> **"தந்தையார் விவசாயியாக இருந்தமையால் நான் தினமும் காலையிலும் மாலையிலும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் சிலவேளை இரவு நேரங்களிலும் தந்தையாருடன் சேர்ந்து தோட்ட வேலை செய்து வந்தேன். இதனால் படிப்பில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியவில்லை."** (தமது மணிவிழா மலருக்கு அவர் அளித்த பேட்டி, 2011).

என்ற கூற்று பேராசிரியரின் ஆதங்கத்தையும் குடும்பப் பின்புலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இத்தகு சுமைகளுக்கு மத்தியிலேயே தனது உயர்கல்வியையும் தொடர்ந்தார்.

உயர்கல்விக்காய் பேராதனையில் நுழைந்த (1967) பேராசிரியரின் ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியில் அவரது பல்கலைக்கழக ஆசிரியர் குழாமும் துணைநின்றது. அவர்களுள் பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், ஆ.தனஞ்செயராசசிங்கம், ஆ.சதாசிவம், பொ.பூலோகசிங்கம், கா.இந்திரபாலா, அ.சண்முகதாஸ், சி.பத்மநாதன், சி.தில்லைநாதன் செ.குணசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இயல்பான ஆர்வமும் திறமையும் வாய்க்கப்பெற்ற ஒருவனுக்கு சந்தர்ப்பம் சரிவரக் கைகூடும் போதே அவனால் உச்சத்தை எட்டமுடியும். என் ஆசானுக்கு அத்தகைய சந்தர்ப்பத்தைப் பல்கலைக்கழக நுழைவே பெற்றுக்கொடுத்தது. ஒரு நாளின் முழு நேரத்தையும் தமக்குரியதாக அனுபவிக்கும் வரமும் பெற்றார். சந்தர்ப்பத்தைத் தக்க வகையில் பயன்படுத்தினார். வாசிப்பு - ஆய்வு என்ற இரு தளங்களிலும் தன்னை வளப்படுத்தினார். தன் ஆளுமையையும் உலகறியச் செய்தார். அவரது தமிழியல் சார் ஆய்வுகளின் அறுவடைகளே கீழ்வரும் ஆய்வு நூல்களும் எழுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுமாகும்.

01. பாரதியார் சிந்தனைகள் (1984)
02. சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள் (1992)
03. காலக்கண்ணாடி இளங்கதிர் (1994)
04. இலங்கையின் மலையகத் தமிழர் (1994)
05. மலையகத் தமிழ் இலக்கியம் (1994)
06. இலங்கையில் மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம் (1999)
07. இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997)
08. தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் (2005)
09. சாதனையபளர் சாரல்நாடன் (1995)
10. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் (2012)
11. ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி (2012)
12. இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் (2012)
13. இருபதாம் நூற்றாண்டு தமிழகக் கவிதை (2015)

பேராசிரியரிடம் பழந்தமிழ், இடைக்கால, நவீன தமிழ் இலக்கியம், யாப்பியல், மொழிவரலாறு, சமூக, பண்பாட்டு வரலாறு, தமிழக, ஈழத்து அரசியல் வரலாறு குறித்த தெளிந்த பார்வை காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உதாரணக் கட்டுரைகள் : "மதுரைக் காஞ்சியில் அக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்கள்", "தொல்காப்பியத்தில் யாப்பும் அணியும்", "பட்டினத்தடிகள் அருளிச் செய்த திருப்பாடல்கள்").



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

மேலைநாட்டு அறிஞர்களின் வருகையோடு தமிழியல் சார்ந்து நவீன ஆய்வு முறையியல் அடிப்படையான ஆய்வுகள் தமிழகத்திலும் ஈழத்திலும் மேற்கொள்ளப்பட்டன. அதன்வழி நின்று தமிழ் ஆய்வின் வரலாற்றினைக் கட்டமைக்கின்ற போக்கும் நிகழ்ந்தேறியது. அவ்வகையில் இலங்கையில் தமிழியல் சார்ந்து வெளிவந்த ஆய்வுகள் மீதான மதிப்பீடாக "இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்" வெளிவந்தது.

பேராசிரியர் தனியாளுமையாய் நின்று பல்துறை சார்ந்தும் வெளிவந்த ஆய்வுகள் மீது தமது மதிப்பீட்டை முன்வைத்தமையையே நாம் இங்கு மனம்கொள்ள வேண்டும். இவ்விடத்தில் பேராசிரியர் வ.மகேஸ்வரனின் கீழ்வரும் கூற்றும் நோக்கத்தக்கது :

> **"தமிழியல் தொடர்பான விடயங்கள் அனைத்தையும் இயன்றவரையில் உள்ளடக்கிப் பன்னிரண்டு இயல்களாக ஆசிரியர் எழுதியுள்ளார். வெறுமனே ஒரு துறை சார்ந்த ஆய்வாளர் ஒருவரினால் இத்தகையதொரு ஆய்வை மேற்கொள்ளல் சாத்தியமாகாது. பாரம்பரியத் தமிழ் இலக்கியம் முதல் நவீன தமிழ் இலக்கியம் வரையிலான ஆழமான பரிச்சயமும் பல்துறை ஆய்வுச் சங்கம ஒழுங்கின்வயப்பட்ட நோக்குநிலையும் பல்துறை பற்றிய கணிசமான பரிச்சயமும் கொண்ட ஒருவராலேயே இத்தகைய ஆய்வை மேற்கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை."** (அணிந்துரை, இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்).

ஓர் ஆய்வாளனாய், பல்கலைக்கழக ஆசானாய் ஆய்வு நூல்கள், கட்டுரைகள் மீதான வாசிப்பு அவருக்கு இருந்தமை இயல்பானதே. ஆயினும், ஈழத்திலே தமிழியல் சார்ந்து வெளிவந்த ஆய்வு நூல்களையும், கட்டுரைகளையும் தனது பார்வைக்கு எடுத்துக்கொண்ட அவரது தேடலும், அவற்றின் மீது அவர் முன்வைத்த மதிப்பீடுகளும் இந்நூலின்வழி வெளித்தெரியும் அவரது தனியாளுமையாகக் கட்டமைக்கப்பட வேண்டியது.

இன்று, ஈழத்துத் தமிழியல் ஆய்வு வரலாற்றைக் கற்பவர்களும், ஈழத்துத் தமிழியலில் ஏதோவொரு புலம் குறித்து ஆய்வு செய்பவர்கள் முன்னோடி முயற்சிகள் குறித்த அறிகைக்கும் இந்நூலை ஊடறுத்துச் செல்லவேண்டிய வகையில் தன் அடையாள இருப்பை இந்நூலின்வழி அவர் உருவாக்கிவிட்டார்.

III

பேராசிரியரிடம் நவீன இலக்கிய ஈடுபாடும் காணப்பட்டது. தமிழக, ஈழத்து நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை அவருடன் உடனிருந்தவர்கள் அறிவர். தமது முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வை "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்" என்ற தலைப்பிலும் கலாநிதிப்பட்ட ஆய்வை "தமிழில் வரலாற்று நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பிலும் மேற்கொண்டமையே இதனைத் தெளிவுபடுத்தும். (இவை பின்னர் நூலுருப் பெற்றன) நவீன இலக்கியங்களில் கொண்ட ஈடுபாடே "இருபதாம் நூற்றாண்டுத் தமிழகக் கவிதை", "ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி", மலையகம் குறித்த நூல்கள் என்பனவற்றுக்கும் அடிப்படையாயிற்று.

"தமிழில் வரலாற்று நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட கலாநிதிப்பட்ட ஆய்வு குமரன் பதிப்பாக 2005 இல் வெளிவந்தது. அதில் 1960 களின் பிற்பகுதிவரை வெளிவந்த வரலாற்று நாவல்களை அவர் ஆய்வுக்குட்படுத்தியிருந்தார். வரலாற்று நாவலாசிரியனிடம் இருக்கவேண்டிய வரலாற்றறிவும் அழகியலும் அது குறித்து ஆய்வு செய்பவனிடத்திலும் இருத்தல் வேண்டும். அந்தவகையில் அவரது ஆழ்ந்த வரலாற்றறிவையும் அழகியல் கண்ணோட்டத்தையும் இவ் ஆய்வின்வழி நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அவரது இலக்கிய (அழகியல்), வரலாற்றுக் கண்ணோட்டத்திற்குப் பல்கலையில் அவருக்குப் போதனை செய்தவர்களும் பிரதான பங்காளர்கள் என்பதை நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

ஈழத்துச் சிறுகதை வரலாறு குறித்து பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ள போதிலும், அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகளைத் தெளிவாக வலியுறுத்துகின்ற - ஆய்வு நுட்பத்தோடு அணுகிய முன்னோடி ஆய்வாக இவரது "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்" விளங்குகிறது. பேராசிரியரது "ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி" எனும் நூல் காலப்பகுப்புக்களாக அமைந்து வரலாற்று, ரீதியான வளர்ச்சிப் போக்குகளை அடையாளம் காட்டாத போதிலும், பாவலர் துரையப்பாப்பிள்ளை முதல் புகலிடக் கவிதைகள் வரை ஈழத்து நவீன கவிதையின் பொருள், வடிவம், உணர்த்துமுறை ஆகியன விரிவும் ஆழமும் பெற்றதை அடையாளம் காட்டத்தக்க சில கட்டுரைகளின் தொகுதியாக அமைந்துள்ளது.

IV

ஈழத்து நவீன இலக்கியம் குறித்து அவர் எழுதிய மேற்குறித்த இரு நூல்களுக்கும் மேலாக "மலையக இலக்கியப் பாரம்பரியம்" குறித்த பேராசிரியரின் நோக்குநிலை தனித்த அவதானிப்புக்குரியது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட - தோட்டத் தொழிற்றுறைசார் உற்பத்தி முறையினூடாகத் தம்மைத் தனித்துவமான சமூக அலகாகக் காட்டும் மலையகத் தமிழரின் கலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் மீது பேராசிரியரின் கவனம் திரும்பியது. இதற்கு மலையகத் தமிழரின் மீது அவர் கொண்டிருந்த ஆத்மார்த்தமான ஈடுபாடே காரணம் எனலாம். இதற்குச் சில சான்றுகளைக் குறிப்பிட முடியும்:

1. "நான் பிறந்து, வளர்ந்து, பயின்றதெல்லாம் அடிமட்ட குடும்பத்திலிருந்தே. அதனால் ஏழைகளிடமும் அயராது உழைப்பவர்களிடமும் இயல்பாகவே பரிவும் பாசமும் ஏற்பட்டது." (அவரது மணிவிழா மலருக்கு அளித்த பேட்டி, 2011)
2. "மலையகத் தொழிலாளர்களின் பால் எனது கவனத்தை முதலில் திசை திருப்பியது புதுமைப்பித்தனின் "துன்பக்கேணி" என்னும் சிறுகதையாகும். அக்கதையினைக் கருத்தூன்றிப் படிக்கும்போது என்னையறியாமலேயே எனது கண்கள் பனித்துவிட்டன." (முன்னுரை, மலையகத் தமிழ் இலக்கியம்)
3. மலையகம் தொடர்பான அவரது இருநூல்களின் சமர்ப்பணம்
    I. "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் விமோசனத்துக்காகத் தீரத்துடன் போராடித் தமதின்னுயிர்களைத் தியாகம் செய்த கோவிந்தன், வெள்ளையன், செல்வநாயகம், சிவனுலெட்சுமணன் முதல் ஏபிரகாம் சிங்கோ வரையிலான தொழிலாளச் செம்மல்களுக்கு" (மலையகத் தமிழ் இலக்கியம்)
    II. "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் தொழிலாளியின் மகனாகப் பிறந்து தொழிலாளியாகவே வாழ்ந்து வறுமையில் வாடிப் புடமிட்ட பொன்னாகித் தொழிலாளர் கவிஞனாகி என் நெஞ்சில் குடிகொண்டுவிட்ட குறிஞ்சித் தென்னவன் அவர்கட்கு." (இலங்கையில் மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்)
4. "என் கஸ்டங்களையும் தியாகங்களையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கைப் போராட்டங்களுடனும் அவலங்களுடனும் தியாகங்களுடனும் ஒப்பிடுகையில் அவை "கால் தூசுக்கும் சமம்" என்பதனையும் உள்ளவாறு உணர்ந்து கொண்டேன்" (என்னுரை, இலங்கையில் மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற பொதுமைப்பாட்டுக்குள் வைத்து மலையகத் தமிழ் இலக்கியங்களையும் அணுகுகின்றபோது அவற்றின் உயிர்த்துடிப்பான சில சிறப்புப் பண்புகள் புதையுண்டு விடலாம் என்ற அவரது மனப்பாங்கு அவற்றைத் தனித்து நோக்குவதற்குக் காரணமாகியது. அதனடிப்படையில் "மலையகத் தமிழ் இலக்கியம்" என்ற நூலின் வழி மலையகத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்க முயன்றார். மலையகத் தமிழ் இலக்கியத்தின் வரண்முறையான வளர்ச்சியை சரியான வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்பதற்கு இலக்கியப் படைப்புக்களைத் தேடிப் பெறுதல் என்பது பாரிய சவாலாகும். படைப்புக்களைத் தேடிப் பெறுவதில் உள்ள பிரச்சினைகள் சில வருமாறு :

1. தோட்டத் தொழிலாளர் குறித்து வெளிவந்த படைப்புகளில் ஒரு சிலவே நூலுருவாகியுள்ளமை (பெருந்தொகையான ஆக்கங்கள் தொகுக்கப்படாது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் உதிரியாகக் காணப்படுகின்றன).
2. கையெழுத்துப் பிரதிகளாக பல படைப்புக்கள் பலரது கைகளிலும் காணப்படுகின்றமை.
3. மலையகம் குறித்து வெளிவந்த படைப்புக்கள் பல, காலத்தால் முற்பட்ட சஞ்சிகைகளில் காணப்பட்டன. அவற்றுள் சில சஞ்சிகைகள் மறைந்து விட்டதனால் அவற்றைப் பெறுவதில் உள்ள சிரமம்.

ஆயினும் இச்சவால்களை முகம்கொண்டு, படைப்புக்களைத் தேடிப்பெற்று, மலையக இலக்கிய வரலாற்றைக் கட்டமைத்தமையே அவரது பெருஞ்சாதனை எனலாம். அந்நூலில் மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை ஆரம்ப காலம் (ஏறத்தாழ 1825 – 1920 வரை), விழிப்புணர்வுக் காலம் (ஏறத்தாழ 1921 – 1950 களின் இறுதிவரை), எழுச்சிக் காலம் (1960 கள் முதல்) ஆகிய மூன்று கட்டங்களாகப் பகுத்து ஆராய்ந்துள்ளார். அத்தோடு, மலையக மக்களிடத்தே வழங்கிவரும் நாட்டார் இலக்கியங்களில் இருந்து மலையகத் தமிழ் இலக்கிய வரலாற்றை பேராசிரியர் தொடங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே மலையகத் தமிழ் நாவல்கள் குறித்த விரிவான ஆய்வாக இலங்கையில் "மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்" வெளிவந்தது. மலையகத் தமிழ் நாவலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் மதிப்பிடுவதோடு அந்நாவல்களின் பாடுபொருள் புலம்பெயர்வு, தோட்ட அதிகாரிகளின் கெடுபிடிகள், வன்செயல்கள், பிரஜாவுரிமைப் பிரச்சினை, தொழிற்சங்க நடவடிக்கைகள் என விரிந்த தளத்தில் இயங்குவதையும் பதிவுசெய்கிறார்.

மேலும், மலையகத் தமிழரின் இலங்கைக்கான புலம்பெயர்வையும், அதற்கான காரணங்களையும், புலம்பெயர்வின் பின்னர் மலைநாட்டை பெருந்தோட்டத் தொழிற்றுறைப் பிராந்தியமாக மாற்றியமைத்த அவர்களின் தியாகத்தையும் உணர்வுபூர்வமான எடுத்தியம்பும் "இலங்கையின் மலையகத் தமிழர்" என்னும் அவரது நூலும் கவனிப்புக்குரியது. அவர் தனது வாழ்நாளின் இறுதிக்காலத்தில் "மலையகத் தமிழ்ச் சிறுகதை வரலாறு" குறித்த ஆய்வினையே மேற்கொண்டிருந்தார். அவ்வாய்வு இதுவரை நூலுருப்பெறவில்லை. அது நூலுருப்பெறும்போது அவர் மலையக இலக்கிய உலகுக்கு வழங்கிய பங்களிப்பு இன்னுமொருபடி உயரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்கள் மீதும் படைப்பாளிகள் மீதும் ஆத்மார்த்தமான ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர், அம்மக்களை நேசிக்கும், அம்மகளின் வரலாற்றை, இலக்கிய முயற்சிகளை வெளிக்கொணரும் ஆய்வாளர்களாக முகிழ்த்த சாரல்நாடன் முதலானோரை கௌரவப்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் பின்நிற்கவில்லை. அதன் வெளிப்பாடுகளில் ஒன்றே "சாதனையாளர் சாரல்நாடன்" எனும் நூலாகும்.

மேற்குறித்த நூல்களோடு அவர் உதிரியாக ஆங்காங்கே எழுதிய ஆய்வுக் கட்டுரைகளையும் (இதுவரை தொகுக்கப்படாத), மலையகப் படைப்புக்களுக்கு அவர் வழங்கிய அணிந்துரைகளையும் ஒருசேர நோக்கும்போதே மலையக மக்கள் மீது அவர் கொண்டிருந்த அபிமானமும், அவர்களின் படைப்புக்கள் குறித்த அவரது உள்ளத் துணிபையும் இனங்காணலாம். எது எவ்வாறாயினும் மலையகத் தமிழ் இலக்கியம் குறித்து ஆய்வு மேற்கொண்டோருள் முதன்மையாளராகவும் அம்மக்களின்- படைப்பாளிகளின் மனதை வென்றவராகவும் விளங்குகிறார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

V

ஈழத்து இலக்கியம் குறித்த ஆய்வுகளுக்கு அப்பால் இருபதாம் நூற்றாண்டின் இரு பெரும் ஆளுமைகள் குறித்து அவர் மேற்கொண்ட "பாரதியார் சிந்தனைகள்", "சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள்" ஆகிய ஆய்வுகளும் சுட்டிக்காட்டத்தக்கன. யுகப்பெரும் கவிஞனான பாரதியின் சிந்தனையைப் புரிந்துகொள்ள அவரது வாழ்க்கை வரலாறு, உரைநடை ஆக்கங்கள், கவிதைகள் மீதான ஆழ்ந்த புலமை அவசியம். இந்நிலையில் அவரது சிந்தனைகளை பெரும்பாலானோர் கவிதைய்யின் வழி தேட முனைந்தபோது, உரைநடை ஆக்கங்கள் வழி அவரது சிந்தனைப் பாங்கை கட்டமைக்க முயன்றதன் வெளிப்பாடே பாரதியார் சிந்தனைகள் ஆகும்.

அதுபோலவே ஆசிரியராக, பேராசிரியராக பதவிநிலையிலும் முத்தமிழ் ஆய்வாளராக ஆய்வுலகிலும் படைப்பாளியாக, சமூகத் தொண்டனாக இன்னும் சிலராலும் அறியப்பட்ட சுவாமி விபுலாநந்தரை சமய நல்லிணக்கவாதி - சமய சிந்தனாவாதியாக எம்முன் நிறுத்துவதாக "சுவாமி விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்" வெளிவந்தது. சுவாமி விபுலாநந்தரிடம் சமயத்தின் அடியாகக் கட்டியெழுப்பப்படும் ஒரு சமுதாயமே நிலையானது என்ற எண்ணப்பாங்கு காணப்பட்டமையையும் அவரது சமய இணக்கப்பாட்டுக்கு அவர் பிறந்து, வளர்ந்து, கல்விகற்ற சூழலே காரணம் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இந்நல்லிணக்கப்பாடே கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும், சைவர்களும் அவரைப் போற்றுதல் செய்வதற்குக் காரணம் என்பதையும் அவர் அறிவுறுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆய்வுகளுக்கு மேலாக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க வெளியிடான இளங்கதிர் இதழ் குறித்த பகுப்பாய்வு நூலாக "இளங்கதிர் காலக் கண்ணாடி" என்ற நூலனையும் எழுதினார். சமகால அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் இளங்கதிர் ஆக்கங்களின் உள்ளடக்கமாக அமையுமாற்றினையும், பல்துறை சார்ந்த ஆய்வுச் சங்கமமாக அது விளங்குமாற்றினையும் அடையாளப்படுத்துவதன் மூலம் இளங்கதிருக்கான வரலாற்று முக்கியத்துவத்தினை கோடிட்டுக் காட்டுகிறார். அந்நூலின் இறுதியில் "பேராதனைப் பல்கலைக்கழக வரலாறு, அதன் வளர்ச்சி, தமிழ்ச் சங்க வரலாறு, தமிழ் பேசும் மக்களது வரலாறு, ஈழத்து இலக்கிய வரலாறு, ஈழத்துத் தமிழியல் ஆய்வு முயற்சிகள் முதலானவற்றை எழுதுவோரோ ஆராய்வோரோ இளங்கதிர் இதழ்களைப் புரட்டாது தமது முயற்சியை முழுமையாக்க முடியாது" என்று குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.

மேற்குறித்த நூல்களோடு அவர் எழுதிய எழுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் ஒரேசேர நோக்கும்போதுதான் மொழி, இலக்கியம், சமூகம், சமயம், வரலாறு என அவரது பார்வை பரந்திருந்தமையை புரிந்துகொள்ள முடியும்.

குறிப்பு : அமரர் பேராசிரியர் க.அருணாசலம் அவர்களின் வாழ்வையும் புலமையையும் பண்புநலன்களையும் அவருடனான உறவாடலின்போது புரிந்துகொண்டவன். அவரிடம் கற்கும் பாக்கியம்பெற்ற இறுதி மாணாக்கர் குழுவில் நானும் ஒருத்தன். எனக்கான எதிர்காலமாகத் தமிழியலை வரித்துக்கொண்டபோது மூன்று வருடங்கள் அவரிடம் கற்றிருக்கிறேன். அவர் தேக ஆரோக்கியமற்றிருந்த அந்தக் காலங்களில் அப்பெரும் புலமையாளர் விரிவுரைகளுக்கு வருகைதந்த அவரைக் காத்துப் பேணக் கிடைத்தமை கடவுள் தந்த பேறெனக் கருதி அவரின் நினைவாக தமிழன்னையின் பாதங்களில் இக்கட்டுரையைச் சமர்ப்பணம் செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவரசர் வாசாப்பில் பக்தியும், கலையும்

மன்னார் பேசாலைக் கிராமத்தை களமாகக் கொண்டது



சடாச்சரலிங்கம் வினோஜா
விடுகை வருடம்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இலங்கை நாடகவரலாற்றில் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்கள் செழிப்பாக ஆற்றுகைசெய்யப்படும் இடங்களில் மன்னாரும் ஒன்று. அந்தவகையில் போர்த்துக்கேயரின் வருகையுடனே கத்தோலிக்க மதக் கருத்துக்களைக் கொண்ட கூத்துக்கள் குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டன. மன்னாரின் தனித்துவமான கலைவடிவமாகக் கொள்ளப்படும் வாசாப்பாவும் ஈழத்து நாடகவரலாற்றில் இக்காலத்திலே இடம்பிடித்தது. கிறிஸ்தவ மதக் கருத்துக்களைக் கூறவும், மக்களை மதம்மாற்றவும் போர்த்துக்கேயர் ஐரோப்பிய மரபு வழிப்பட்ட அரங்கையும், சுதேச அரங்கை உள்வாங்கிய அரங்கையும் பயன்படுத்தினர். இதன் வளர்ச்சியில் மத்தியகால மறைஞான, அற்புத நாடகங்களின், தன்மைகளைக் கொண்டு தோன்றியதே வாசாப்பு ஆகும்.வாசாப்பு நேர்த்தி நாடகமாக ஆற்றுகையிடப்பட்டாலும் இதில் சமய நம்பிக்கைகளும் அரங்கக் கலை என்ற ரீதியில் கலையம்சங்களும் இயல்பாகவே காணப்படுகிறது.

வாசாப்பு பொதுவாக வசனம் கலந்த பாட்டு என்றே பொருள்கொள்ளப் படுகிறது. ஆகவே வாசாப்பை வாசாப்பா என அழைக்கும் வழக்கமும் உண்டு. வாசாப்பு **"நாடகங்களின் சுருக்கங்களாக அமைகின்றன வாசகப்பா என்ற சொல் வசனம் கலந்த பாட்டு எனப்பொருள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொள்ளப்படும். ஒரே கதையை நாடகமாகவும் வாசகப்பாவாகவும் பாடுதல் உண்டு. உதாரணமாக அந்தோனியார் வாசகப்பா- அந்தோனியார் நாடகம், சந்தொமையார் வாசகப்பா-சந்தொமையார் நாடகம், மூவிராசாக்கள் வாசகப்பா-மூவிராசாக்கள் நாடகம் என நூல்கள் இருப்பதைக்காணலாம்."** என்பார் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

வாசாப்பில் பாடலே முக்கியம் பெறுகிறது. பொதுவாக ஓர் இரவுக் கதையை வாசாப்பு எனவும் அதற்கு மேற்பட்ட இரவுகள் ஆற்றுகை செய்யப்படும் கதைகளை நாடகம் எனவும் கூறுவர். இவ்வாசாப்பு இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் ஆற்றுகை செய்யப்படுகிறது. குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் போர்த்துக்கேயர் கிறிஸ்தவ மதக்கருத்துக்களை பரப்பும் பொருட்டு ஆரம்ப காலம் முதல் மக்களிடையே பேணப்பட்டு வந்த கூத்துக்கலையில் ஆடலைக் குறைத்து பாடலுக்கு முக்கியம் கொடுத்து புதிய அரங்கக் கலையாக வாசாப்பை உருவாக்கியுள்ளனர். இந்த தனித்துவமான அரங்கக்கலை இலங்கையில் மன்னாருக்கேயுரிய தனித்துவமான கலைவடிவமாக இன்றும் பேணப்பட்டு வருகிறது.அந்தவகையில் மன்னாரில் மூவரசர் வாசகப்பா, புனித சூசையப்பர் வாசகப்பா, மரியசித்தாள் வாசகப்பா, சந்தொம்மையார் வாசகப்பா முதலிய பல வாசகப்பாக்கள் இன்று வரை ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன.வாசகப்பாக்கள் நேர்த்தி நாடகங்களாகவே ஒவ்வொரு கிராமமக்களாலும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது. ஆரம்பகாலம் முதல் இன்று வரை வாசகப்பாக்களை பாடுவதால் ஏற்படும் நன்மைகள் சடங்குகள் ரீதியாகவும் போதனைகள் ஊடாகவும் பாரம்பரியமாக கூறப்படுவதால் இவ்வாசாப்புக்களில் கலையம்சத்தை விட பக்தியம்சம் முதன்மை பெறுகிறது. கத்தோலிக்க மதக்கருத்துக்களையும், புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றையும் கருவாகக் கொண்டு வாசாப்புக்களைப் பாடுவதால் அருள் கிடைக்கும், ஊருக்கும் மக்களுக்கும் நன்மை உண்டாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாசாப்புக்கள் ஆற்றுகைசெய்யப்படுகிறது.

இவ்வாறாக ஆற்றுகைசெய்யப்படும் வாசாப்புக்களில் பாரம்பரிய கலையம்சங்களும், கிராமியப்பண்பாடும் இணைந்து வெளிப்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் மன்னார் மாவட்ட மூவரசர் வாசகப்பாவில் பக்தியும், கலையும் எவ்விதம் அமைந்துள்ளது என்பதைக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மூவரசர் வாசாப்பானது மூவிராசாக்கள் வாசகப்பா எனவும் அழைக்கப்படுகிறது. இது பேசாலைக்கிராம மக்களால் ஒரு பக்தி முயற்சியாக ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது. பேசாலைக்கிராமம் மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதியில் அமைந்துள்ளது. மன்னார் மாவட்டத்தின் கலைப்பாரம்பரியத்தின் தோற்றுவாயாக காணப்படும் லோறஞ்சுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரால் எழுதப்பட்டதே இந்த மூவரசர் வாசகப்பாவாகும். .இவ்வாசாப்பின் கதையானது இயேசுநாதர் பிறந்தபின் அவரை தரிசிக்கவரும் மூன்று ஞானிகளின் கதையையும், பாலன்யேசுவை கொலை செய்ய ஏரோது மன்னன் செய்யும் சூழ்ச்சிகளையும் உள்ளடக்கியதாக அமையும். இவ்வாசாப்பானது வருடத்தின் முதல் மாதமான தைமாதத்தில் ஆற்றுகைசெய்யப்பட்டு வருகிறது. போர் மற்றும் உள்ளூர்க் குழப்பங்களால் மூவரசர் வாசாப்பானது பேசாலைக் கிராமத்தில் முப்பத்துமூன்று வருடங்களின் பின் கடந்த 2013ஆம் ஆண்டு ஆற்றுகையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாசாப்பானது மாதோட்டப்பாங்கு அதாவது தென்பாங்கில் ஆற்றுகை செய்யப்படுகிறது.மூவரசர் வாசாப்பானது காப்புக்கவியுடன் ஆரம்பமாகி வாசகப்பாவின் அமைப்பு முறைக்கேற்ப ஆற்றுகை செய்யப்பட்டு ஈற்றில் மங்களம் பாடப்படுவதோடு குருவானவரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிறைவடையும். இவ்விதமாக ஆற்றுகை செய்யப்படும் ஒவ்வொரு வாசாப்பின் தொடக்கத்திலும் லோறஞ்சுப்பிள்ளை ஆசிரியர் எழுதிய காப்புவெண்பா பாடப்படும். அது பின்வருமாறு,

**"வல்ல சிலுவை மரத்தைப் புயத்தேந்திச்**
**சொல்லரிய வாதைத் துயரோடு – கல்வாரி**
**மேட்டுக்கு மேல்நடந்த வேதபரனே யெமது**
**பாட்டுக்கு முன்னிற்ப தாம்"**

என்ற இக்காப்பு வெண்பாவானது அன்று தொடக்கம் இன்று வரை மன்னார் மாவட்ட கத்தோலிக்க நாடகங்களின் காப்புக்கவியாக பாடப்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்தில் மீன்பாடு குறைந்து ஊரில் வறுமையும், நோயும் நீடித்து, பெண்பிள்ளைகளின் திருமணவிடயங்கள் நிறைவேறாமல் போய் ஊரில் பிரச்சினைகள் நீடிக்கும் போது ஊருக்கு ஏதாவது சாபம் ஏற்பட்டதோ எனக்கருதி இறைவனிடம் மன்றாடி நேர்த்தி நாடகமாக இவ்வாசாப்பு ஆற்றுகை செய்யப்படுகிறது. இவ்விதமாக பரிசுத்தமானதாகவும், பாடல்களுடன் கூடிய செபக்கொத்தாகவும் மூவரசர் வாசாப்பு ஆற்றுகை செய்யப்படுகிறது

மூவரசர் வாசாப்பில் காணப்படும் கலையம்சங்களாக தென்பாங்குப்பாணியில் அமைந்த ஆடல் முறைகள், பாடல் முறைகள், களரி அமைப்புமுறை, வேடஉடை, ஒப்பனைகள், வரவு கொடுத்தல், ஒத்திகைகள் முதலியவற்றைக் கூறலாம். அந்தவகையில் சாதாரணமாக கூத்துக்களில் உள்ள சுழலுதல், சுரிதகம், வீசல், துரிதலை, மென்தலை முதலிய ஆடல்முறைகள் வாசகப்பாவின் முழுமையான அளிக்கைக்கும் பயன்படுத்தப்படாமல் மன்னன், கட்டியக்காரன், தளபதி, சேனாதிபதி போன்ற கதாப்பாத்திரங்களின் அளிக்கையின் போது மட்டும் பயன்படுத்தப்படுகிறது. வாசாப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவியார் மரபைச்சேர்ந்தது, இங்கே கூத்துக்கொரு அண்ணாவியார், மேளத்துக்கொரு அண்ணாவியார், பாடல்களுக்கொரு அண்ணாவியார் என மூவர் காணப்படுவர். இவர்களோடு கட்டளைக்காரர் என்ற சமூகத்தினரும் மூவரசர் வாசாப்பில் முக்கியம் பெறுகின்றனர். இக்கட்டளைக்காரச் சமூகத்தின் உத்தரவின் பேரில்தான் வாசாப்பு பாடலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டு அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாசாப்பிற்கான வரவு கொடுத்தல் என்பது வாசாப்பில் உள்ள கதாப்பாத்திரங்களைத் தெரிந்தெடுத்து அவர்களைக்கான வரவுக்கொப்பியை வழங்கும் நிகழ்வாகும். இந்நிகழ்வில் சம்மனசு கதாப்பாத்திரங்கள், மன்னனான ஏரோது கதாப்பாத்திரம், தமிழ் கத்தோலிக்க நாடகங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட புலச்சந்தோர் கதாப்பாத்திரம், மூன்று ஞானிகளின் கதாப்பாத்திரங்கள் என்ற ரீதியில் அனைத்து கதாப்பாத்திரங்களையும் தெரிந்தெடுத்து வரவு கொடுக்கப்படும்.யார் எந்த வரவை ஏற்பது என அண்ணாவியாருடன் இருக்கும் மாஸ்டர் என்று அழைக்கப்படுபவர் ஒரு கொப்பியில் எழுதி நடிகர் கையில் கொடுப்பார். இந்த கதாப்பாத்திரத் தெரிவானது பரம்பரை சார்ந்ததாகவும், திறமைகள் சார்ந்ததாகவும் இடம்பெறுகிறது. இதனைத் தொடர்ந்து ஒத்திகைகள் குறைந்தது இரண்டு மாதங்கள் நடைபெறும். தமிழ் கத்தோலிக்க நாடகங்களில் போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புலச்சந்தோர் கதாப்பாத்திரங்கள் ஊடாக முழு வாசாப்பிலும் நடக்கப்போகும் விடயங்கள் சுருக்கமாகப் பாடல் வடிவில் அரங்கப் பார்வையாளர்களுக்கு கூறப்படுகிறது. மூவரசர் வாசாப்பில் அரங்க நடிகர்களாக மட்டும் குறைந்தது அறுபத்தைந்து கலைஞர்கள் பங்குபற்றுவார்கள். இரவிரவாக இவ்வாசாப்பு ஆடப்படுவதால் சில முக்கிய கதாப்பாத்திரங்களுக்கு இரண்டு நடிகர்கள் தெரிவுசெய்யப்படுவர் அதாவது முதற்பாதியில் ஏரோது மன்னன் கதாப்பாத்திரம் ஏற்பவர் ஒருவராக இருப்பார் மற்றைய பாதியில் ஏரோது பாத்திரம் ஏற்பவர் இன்னொருவராக இருப்பார்.

மூவரசர் வாசாப்பிற்கான மேடையமைப்பானது கந்தாய முறையில் அமைக்கப்பட்டது.இம்மேடையானது இருபத்தெட்டு அடி நீளமும், இருபது அடி அகலமும் கொண்டு செவ்வகவடிவக் களரியாக அமைக்கப்பட்டது. இக்களரிக்கு வலது பக்கமும் இடது பக்கமும் இரண்டு படுதாக்கள் அமைக்கப்படுகின்றன. இம்மேடையானது மரக்குற்றிகளை வெட்டிப்பிளந்து அவற்றை அடுக்கி அதன் மேல் பனங்குற்றிகளை செறிவாக அடுக்கி அதற்கு மேல் மண்ணடித்து ஆற்றுகைக்கான அரங்காக தயார் செய்யப்பட்டது. இன்றைய காலத்தில் கோவிலுக்கு அண்மையில் நிரந்தரமாக உருவாக்கப்பட்டுள்ள அரங்கிலேயே மூவரசர் வாசாப்பு ஆற்றுகை செய்யப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரசர் வாசகப்பாவில் ஒப்பனையானது மாதோட்டப்பாங்கிற்குரிய முறையிலேயே மேற்க்கொள்ளப்படுகிறது. இவ்வாசகப்பாவில் ஒவ்வொரு நடிகர்களாலும் பாடப்படும் பாடல்கள் ஊடாக நவரச உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. மூவிராசாக்கள் வாசாப்பில் அரசனாக மண்ணில் அவதரித்த பாலனை ஆராதிக்க வருகிறோம் என மூன்று ஞானிகள் கூறக்கேட்ட ஏரோது அரசன் தன்னை விட வேறு அரசனா என்ற கோபத்துடன் சீறுகிறான்: அதனை கீழ்வரும் பாடல் பதிவுசெய்கிறது.

**'தாரகை யுதித்தது பொய்தான்-நூதனமான**
**தாரகை யுதித்தது பொய்தான்**
**தாரகை யுதித்தது பொய் நீரமதித்து ரைத்தகதை**
**ஆரெனும் நம்பார்களிதைப்**
**பாரினிற்செய் கிறேன்வதை'**

இவ்வாறாக கலையம்சங்கள் அமைவு பெற்றுள்ளன. அடுத்து இவ்வாசாப்பிலுள்ள பக்தி, பக்தி சார்ந்த நம்பிக்கைகள் எனும் போது ஏடு அவிழ்த்தல், கச்சைகட்டல், வீடுகளில் வாசாப்புப் பானைவைத்தல், களரிகட்டுதலும் வார் வளைத்தலும், நாடகப்பந்தலைக் காவல் காத்தல் முதலியன காணப்படுகின்றன. ஏடு அவிழ்த்தல் என்பது பக்தி உணர்வோடு செய்யும் பாரம்பரியமான மரபாகும். வாசாப்பு எழுதப்பட்ட ஏட்டினை அண்ணாவியார் எடுத்துவர ஊர்ப் பெரியவர்களும் ஊர் மக்களும் ஆலயத்திற் கூடி செபித்து வேண்டுதல்களைச் சொல்லி பிரார்த்தனை செய்து புனிதரின் பரிந்துரையைக் கேட்டு மன்றாடிய பின்னர் ஏட்டினை பீடத்தில் வைத்து அதன்மேல் நேர்த்திகட்டி ஏட்டை அவிழ்ப்பர். இவ்வாறு ஒரு முறை ஏடு அவிழ்க்கப்பட்டால் வாசாப்பு ஆற்றுகையிடப்படாமல் கட்டிவைக்ககூடாது அவ்விதம் செய்தால் ஏதும் கேடு நடக்கும் என்பது நம்பிக்கை.

கச்சை கட்டுதல் என்பது வரவு கொடுத்தலின் பின்னர் அவ்வருடம் புதிய வரவாக அறிமுகப்படுத்தப்படுபவருக்கு செய்யப்படும் சடங்காகும். புதிய வரவாக தெரிவு செய்யப்பட்ட நடிகர் தனது வீட்டில் கச்சை கட்டும் நிகழ்விற்கு ஆயத்தம் செய்து அவருடைய உறவினர்களையும், மத்தளகாரர், கட்டளைக்காரர், அண்ணாவியார் முதலியோரை தனக்கு கச்சை கட்டுவதாகக் கூறி அழைப்பார். இந்நிகழ்வின் போது அப்புதிய வரவானவர் வேட்டியை மடித்து இடுப்புப் பகுதியில் கச்சையாக கட்டியிருப்பார். அப்போது அவரின் வலது காலில் குதிக்கு மேலே அண்ணாவியார் சலங்கையை கட்டுவார். அவ்வேளை புதிய வரவினால் அண்ணாவியாருக்கு தட்சணை கொடுக்கப்படும். இதன்பின் மத்தளகாரர் தாளம் இசைக்க புதிய வரவு பாட்டுப்பாடி ஆடுவார். இவ்விதம் செய்வதால் மேடைக்கூச்சம் மறையும் என்பது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசாப்பு ஆற்றுகைசெய்யப்படும் நாள் அறிவிக்கப்பட்ட பின்னர் ஏனைய கிராமங்களில் இருந்து மக்கள் வண்டிகட்டிக்கொண்டு வரும் மரபு காணப்படுகிறது. இவ்வாறு வருபவர்கள் ஊரில் இந்த வீட்டில் தான் தங்க வேண்டும் என்ற நோக்கில் வருவதில்லை, அவர்கள் வரும் போது எந்த வீட்டார் அழைக்கிறார்களோ அங்கேயே தங்கும் முறை காணப்பட்டது. இவ்விதம் வருபவர்களை எந்தக்குறையும் இல்லாமல் கவனிக்கும் பொருட்டு வாசாப்பு ஆற்றுகை செய்வதற்கு தீர்மானிக்கும் போதே இக்கிராமத்தில் 'வாசாப்புப்பானை' என ஒரு பானை வைத்து காசு சேர்க்கும் மரபு காணப்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் இம்மரபு அருகிவிட்டது என்றே கூறவேண்டும்.

வாசாப்பில் பாடப்படும் பாடல்கள் அனைத்தையும் சரியான உச்சரிப்புடன் தவறின்றிப்பாட வேண்டும், தவறாகப்பாடினால் “அறம் விழும்” அதாவது ஏதேனும் கெடுதல் நிகழும் என்பது நம்பிக்கை.

களரி கட்டுதல் என்பது அரங்கை தீமைகளில் இருந்து பாதுகாக்கச் செய்யும் சடங்காகும். அனைத்துத் தீமைகளும், விக்கினங்களும் அகலும்படி செய்வதே களரி கட்டுவதன் நோக்கம் ஆகும். இதனை இரண்டு மத்தள அண்ணாவிமார்கள் செய்வார்கள். அல்லது ஒரு மத்தள அண்ணாவியாரும் அவர் உதவியாளரும் இதனைச் செய்வார்கள். உடலின் இடுப்புப் பகுதியில் மத்தளத்தைக் கட்டி எட்டு அல்லது பதினெட்டு வகையான தீர்மானங்களை மத்தளத்தில் வாசித்து இதனைச் செய்கிறார்கள்.

பந்தலைக் காவல் காத்தல் என்பது ஒரு சடங்காகும். வாசாப்புப் பாடி முடித்து மூன்றாம் நாளில் அல்லது எட்டாம் நாளில் நாடகப்பந்தல் பிரிக்கப்படுகிறது. வாசாப்பில் பாடப்பட்ட மங்களம் பலிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது. இந்நாட்களில் பாடிய வாசாப்புப் பாடல்களை யாரும் பாடமாட்டார்கள்.அந்த நடிகர் இவ்விதம் நடித்தார் இந்த நடிகர் இவ்விதம் நடித்தார் என்ற உரையாடல்கள் இடம்பெறாது. வாசாப்புப் பாடியவர்களில் வயதில் மூத்தவர்கள் இரவில் பந்தலில் தங்கி பந்தலைக் காப்பர்.பந்தல் அவிழ்க்கப்படும் மாலைப்பொழுதில் கஞ்சி அல்லது சோறு சமைத்துக் கொடுக்கப்படும்.

இவ்வாறாக மூவரசர் வாசாப்பில் பக்தியும், பக்தி சார்ந்த நம்பிக்கைகளும் காணப்படுகிறது. மூவரசர் வாசாப்பு மன்னார் கூத்துக்கலையின் அழகினை வெளிப்படுத்துவதுடன் மக்கள் கொண்ட பக்தியையும், அவர்கள் மேற்கொள்ளும் சடங்குகளையும்,அவற்றில் மறைந்துள்ள நம்பிக்கைகளையும், அத்தோடு பண்பாடு மற்றும் கலாச்சாரத்தையும் தெளிவுபடுத்துகிறது. கலை மக்களிடம் இருந்து பிறப்பதால் மக்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடும், நம்பிக்கைகளும் கலைகள் ஊடாகப் புலனாகிறது.

மூவரசர் வாசாப்போடு தொடர்புடைய சொற்பொருள் விளக்கங்கள்

அறம் விழும்: கெடுதல் நிகழும்

**கச்சை கட்டுதல்:** வேட்டியை மடித்து இடுப்பில் கச்சையாக கட்டுதல்.

**வாசாப்புப் பானை:** வாசாப்பிற்காக காசு சேர்க்கும் பானை

**சம்மனசு:** தேவ தூதன் / இறைதூதன்

**புலச்சந்தோர்:** நாடகக் கதையினை சுருக்கமாக கூறுபவர்கள்

**வரவு கொடுத்தல்:** பாத்திரங்களை தெரிவு செய்தல்

**உசாத்துணை நூல்கள்**

பெஞ்சமின் செல்வம். [1978] **"மன்னார் மாதோட்ட தமிழ்ப்புலவர் சரித்திரம்"** யாழ்ப்பாணம். அர்ச்.பிலோமினா அச்சகம்.

செபமாலை அன்புராசா. [2007] **"மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்-ஓர் ஆய்வு"** யாழ்ப்பாணம், அ.ம.தி வெளியீடு.

யோண்சன் ராஜ்குமார், யோ [2010] **' ஈழத்துக்கத்தோலிக்க நாடக மரபு – ஓர் அறிமுகம்"** ஆற்றுகை- நாடக அரங்கியலுக்கான இதழ், யாழ்ப்பாணம், திருமறைக்கலாமன்றம்.

மிராண்டா. எஸ். ஏ. [2008] **"மன்னார் மாவட்ட நாட்டுக்கூத்துகள்"** மன்னார்-மன்னார் பிரதேசசெயலகம்.

தகவல்: எஸ்.ஏ.உதயன், நாவல் எழுத்தாளர், நாடக ஆர்வலர், பேசாலை

தகவல்: கலாபூசனம் அந்தோனி சந்தியோகு மிராண்டா, இளைப்பாறிய அதிபர், நாடக ஆர்வலர், பேசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கல்வி மீதான முதலீடு ஒரு பொருளியல் நோக்கு



**எம்.ஏ.எப்.சுமையா**
**உதவி விரிவுரையாளர்,**
**பொருளியல் மற்றும்**
**புள்ளிவிபரவியல் துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**"வர்க்கங்கள் அற்ற சமூகத்தினை உருவாக்குவதற்கு அரசினது இலவசக்கல்வி மிகப் பிரதானமான தாகும்".** சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா

மனிதன் பிறந்தது முதல் அவனது அத்தியாவசிய தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாட்டிற்கு உட்படுகின்றான். தனது தேவையினை உற்பத்தி மற்றும் நுகர்வு நடவடிக்கை களினை மேற்கொள்வதன் மூலம் பூரணப்படுத்துகின்றான். நாகரீகம் வளரவளர அவனது தேவைகளும் மேம்பட்டது. அத்தேவைகளினைப் பூர்த்திசெய்யப் பொருள் தேடும் நடவடிக்கையிலும் ஈடுபட்டான். பண்டைய காலத்தில் ஒரு தனிநபரின் அந்தஸ்து பிறப்பின் அடிப்படையினிலேயே நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. குறிப்பாகச் சாதி, குலம் அடிப்படையில் அது பிரிந்திருந்தது. ஆனால் 19ம் நூற்றாண்டின் பிற்பாடு ஒரு தனிநபரின் அந்தஸ்தினை நிர்ணயிப்பது வர்க்கமாக் காணப்பட்டது. வர்க்கம் எனும் போது இது வருமானம் மற்றும் சொத்துக்களின் அடிப்படைகளில் நிர்ணயிக்கப்பட்டது. பொருள் தேடும் இயலுமையினைக் கொண்டு இருந்த ஒவ்வொருவரும் அவர் தேடும் வருமானத்தின் அடிப்படையில் சமூகத்தில் உயர் அந்தஸ்தினைப் பெற்றிருந்ததுடன், அதற்கு சந்தர்ப்பமும் வழிவகையும் அற்றவர்கள், சமூகத்தில் அடிநிலையினை அடைந்தனர். இது சமூகத்தில் அதிக வருமானம் உடையவர் மேலும் மேலும் வசதி படைத்தவராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவெடுக்க, இன்னொரு புறம் ஏழை மேலும் மேலும் ஏழையாக உருமாற்றம் பெறவழி வகுத்தது. இது சமூகத்தில் சமத்துவமின்மைக்கும், வருமான ஏற்றத்தாழ்விற்கும் இட்டுச் சென்றது.

இலங்கை அரசானது பங்கீட்டு நடவடிக்கையினை நான்கு தசாப்த காலங்களுக்கும் மேலாக இலவசக்கல்வி, இலவசசுகாதாரம், உணவுமுத்திரை என்பவற்றின் ஊடாக மேற்கொண்டு வருகின்றது. இக் கட்டுரை அரசின் இலவசக்கல்வி குறித்தே மிகப் பிரதான கவனத்தைச் செலுத்துகின்றது. உற்பத்திக் காரணிகளாக மரபார்ந்த பொருளியலில் அடையாளப்படுத்துவது நிலம், உழைப்பு, ஊழியம், மூலதனம், முயற்சி என்பவனவாகும். இதற்கும் மேலாக "மனித மூலதனம்" எனும் காரணியினை நவீன பொருளாதாரக் கோட்பாடுகள் உள்ளடங்குகின்றன. இங்கு மனித மூலதனம் எனும் போது "தனிமனிதன் ஒருவனுள் பொதிந்து இருக்கும் அறிவு, திறன், இயலுமை, ஆற்றல் என்பவை அவனது சமூக, பொருளாதார மற்றும் தனிப்பட்ட நன்மைகளுக்கு இட்டுச் செல்லுதல்". என்ற நிலையில் அறிவாற்றலுக்கே மிகப் பிரதான இடம் வழங்கப்படுவதைக் குறிக்கின்றது.

இவ் அறிவாற்றலினை விருத்தி செய்வதில் கல்வி மிகப்பிரதான இடம் வகிக்கின்றது. கல்வி என்பது ஒரு பொருளாதாரப்பண்டம் என்பதற்கு மேலாகவும் அது ஒரு தனிமனித உரிமையும் ஆகும். ஆனால் இன்று அடிப்படைக் கல்வியினைப் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவான பணம் அவசியப்படுகின்றது. கல்வி எனும் சேவையினை கொள்வனவு செய்வதற்குப் பணமும், ஆற்றலும், இயலுமையும் உடையவர் மனித மூலதனம் எனும் உயரிய சொத்தினை அடைகின்றார். ஊழியம் எனும் காரணியின் பொருளாதாரப் பெறுவனவுகளைவிட மனித மூலதனம் எனும் உற்பத்திக் காரணியின் பொருளாதாரப் பெறுவனவுகள் அதிகமாகும். இவ்வாறு பொருளாதாரப் பெறுவனவில் காணப்படும் ஏற்றத்தாழ்வு வருமான சமத்துவமின்மைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான வருமான சமத்துவம் இன்மை சமூகக் கட்டமைப்பில் ஏற்றத்தாழ்வினை உருவாக்குகின்றது.

இந் நிலையிலேயே "வர்க்கங்கள் அற்ற சமூகத்தினை உருவாக்கவதற்கு அரசினது இலவசக் கல்வி மிகப் பிரதானமானதாகும்" எனும் சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா அவர்களின் கூற்று பிரதான இடம் வகிக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் சமூகக் குறிகாட்டிகள் மேம்பட்டநிலையில் காணப்படுகின்றன. இது அண்ணளவாக அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சமூக குறிகாட்டிகளுக்குச் சமனாதாகக் காணப்படுகின்றது. பல ஆய்வுகளின் படி இதற்குப் பிரதானகாரணம் அரசின் சமூகநலச் செலவீடாகும். இந்நிலையில் அரசின் கல்வி மீதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவீடானது நான்கு தசாப்த காலமாக கிட்டத்தட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 வீதமாகும். இது 6 வீதமாக அதிகரிக்கப்படல் வேண்டும் எனக் கடந்த வருடங்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் கடந்த ஆண்டு அதாவது 2014 வரை இது 1.8வீதமாகவே காணப்பட்டது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் வேகமாகப் பொருளாதார வளர்ச்சியினை எட்டிப் பிடித்தமைக்குக் காரணம் அந்நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் மனித மூலதனம் உயர் பங்கினை வகித்தமையே ஆகும். இலங்கையில் அரசின் கல்வி மீதான செலவீடு ஒரு முதலீடாக நோக்கப்பட வேண்டும். முதலீடு என்பது இலாபத்தினை ஈட்டித்தரக்கூடிய ஒரு நடவடிக்கையாகும். ஆகவே அரசின் கல்விமீதான செலவீட்டு அதிகரிப்பு எனும் போது அது மனித மூலதனத்தின் அதிகரிப்புக்கு இட்டுச் சென்று பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பிற்கும் வழிவகுக்கும்.

ஒவ்வொரு அரசும் ஆட்சி பீடம் ஏறும் போது ஒவ்வொரு கொள்கை முன்மொழிவுகளினை முன்வைக்கின்றன. அந்த வகையில் 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் தொனிப்பொருளாக **"சாதாரண மனிதனுக்கு வசதியளிக்கக் கூடிய சரியான சமூகம்"** என்றும் 1987ல் ஆர்.பிரமதாச அதிகாரம் பெற்றபோது **"நாட்டின் ஏழைகளினை வலுப்படுத்தல்"** என்றும் சந்திரிக்கா அம்மையார் ஆட்சிப் பீடம் ஏறியபோது **"மனிதப் பெறுமானத்துடன் கூடிய சந்தைப் பொருளாதாரம்"** என்ற கொள்கையுடனும், மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் **"ஆசியாவின் அதிசயம் இலங்கை"** என்ற தொனிப் பொருளிலும் கொள்கைகளை உருவாக்கினர். இன்றைய புதிய அரசானது **"அறிவினை மையப்படுத்திய போட்டித் தன்மை கொண்ட சமூகசந்தைப் பொருளாதாரம்"** என்று தனது கொள்கையினை வெளிப்படுத்தியுள்ளது.

புதிய அரசின் கொள்கையில் ஈண்டு கவனிக்கத்தக்க விடயம் என்னவெனில் அறிவினை மையப்படுத்திய என்ற தொனிப் பொருளாகும். இங்கு அறிவினை மையப்படுத்திய எனும் போது மனித மூலதனமே பிரதான இடம் வகிக்கின்றது. எனவே புதிய அரசின் மிகப் பிரதான கடப்பாடு அறிவினை மேம்படச் செய்வதற்கு கல்வி மீதான செலவினை அதிகரிக்க வேண்டும். இங்கு கல்வி மீதான செலவின் அதிகரிப்பு எனும் போது கல்வியின் தரம் மற்றும் நவீனத்துவத்தின் இணைப்பு என்பதற்கு அது வழிவகுக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மூலதனமே ஏனைய உற்பத்திக் காரணிகளை ஆளும் மிகப் பிரதான காரணி என்பதனால் அதன் விருத்தியானது ஏனைய உற்பத்திக்காரணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுப்பதுடன் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவும். எனவே பேரினப் பொருளியல் மட்டத்தில் உற்பத்தி மேம்பாடு மற்றும் வருமான சமத்துவமின்மைக் குறைப்பு, நிலைத்த அபிவிருத்தி, வர்க்கங்கள், அற்ற சமூகம் என்பவற்றிற்கு அரசினது கல்வி மீதான முதலீடு அவசியம். பொறுத்திருந்து நோக்குவோம். புதிய அரசானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆறு வீதத்தினை கல்விக்காக ஒதுக்கீடு செய்து தனது கொள்கையினை நிலை நிறுத்துமா என்பதை.

## எம் தேச உறவுகள்

காரிருள் மேகங்கள் சூழ்ந்து
இடியோடு மழை பெய்கையில்
எங்குதான் நாம் ஒதுங்குவது?
தறப்பாள் கூரையையும்
துளையிடுகிறதே துளிகள்

இரை தேடிவட்டமிட்ட பருந்துகள்
எத்தனை குஞ்சுகளைக் காவிச்சென்றன
தாய்க்கோழிகள் என்ன செய்யும்
வயிற்றிலடித்துதான் என்ன பயன்!

சிட்டுக் குருவிகளும்
மொட்டவிழ் மலர்களும்
ஆல மரங்களும்
வாழையடி வாழைகளும்
காட்டுத் தீயில் கருகித் தீய்ந்தனவே!

சன்னங்கள் சல்லடை போட
எங்கள் உடம்புகளென்ன
சாக்கு மெத்தைப் பஞ்சனையா?

பாலகன் ஈறாய் பாவியெமன்
கைகளிலே
யார்தான் மிஞ்சினார்கள்

சிங்கங்கள் வேட்டைக்கு
சில அயல் காட்டு
நரிகளும் உறுதுணையாம்

வேலிதாண்டி தாலியறுத்து
கேலி செய்து கேளிக்கையாக்கி
எத்தனை மலர்களை
கசக்கி எறிந்தாய் காலனே!

கடலோரக்காற்று
கதைகள் பல சொல்லும்
கண்ணீரில் ஓடிய உதிரங்கள் பற்றி
நீலச் சமுத்திரத்தில்
சிவப்புக் கடல்கள் சங்கமித்ததை
யார் அறிவார்?

**தே.கஜீபன்**
**2ம் வருடம்**
**தமிழ் சிறப்புத்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்கற்கால சவ அடக்கு முறையும், பிற்காலத்தில் அதன் வளர்ச்சி நிலையும்

(தமிழர் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட தொல்பொருள், இலக்கியக் கண்ணோட்டம்.)



**ஞானசக்தி - கனகரத்தினம்**
**மூன்றாம் வருடம்**
**வரலாற்றுத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**கனகதுர்க்கா - கனகரத்தினம்**
**விடுகை வருடம்**
**தமிழ்த்துறை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**பெ**ருங்கற்காலம் என்பது கற்காலத்தின் முடிவுக்காலமாகவும், வரலாற்றுக் காலத்தின் தொடக்ககாலமாகவும் விளங்கும் காலப்பகுதியாகும். இக்காலத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி, ஈமச்சின்னங்களை அமைத்தமையால் இக்காலம் பெருங்கற்கால கலாசாரம் எனப்படுகின்றது. வரலாற்று நோக்கிலே பெருங்கற்காலம் முக்கியமான பண்பாட்டு வரலாற்றுக் காலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் ஈமச்சின்னங்கள், மக்கள் குடியிருந்த பகுதிகள், குளங்கள் வயல்கள் என்பன பெருங்கற்காலப் பண்பாட்டில் பிரதான அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இக்காலத்தில் கால்நடை வளர்ப்பு, மேட்டுநில விவசாயம் என்பவற்றை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த மக்கட் குழுவினரிடையே பலவிதமான பண்பாட்டு மரபுகள், நம்பிக்கைகள் நிலவியதை நாம் பெருங்கற்காலத் தொல்பொருட் சிதைவுகளினூடு அவதானிக்கலாம். இறந்தவர்களுக்காக் மேற்கொள்ளப்பட்ட சவ அடக்கமுறை அக்கால மக்களின் உயர்ந்த பண்பாடு மற்றும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இறந்தவர்களின் ஆன்மா கால்நடை வளர்ச்சிக்கும், வேட்டைத் தொழிலுக்கும் உதவும் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் தொழிற்பட்டனர். இதன் காரணமாக இறந்தவர்களுக்கு மதிப்பளித்து அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தபின்பும் தம்மோடு வாழ்வதாக எண்ணி அவர்களுக்கு வேண்டியதைச் செய்யத் தலைப்பட்டனர். இதன் விளைவே அவர்கள் வெவ்வேறு முறையிலான சவ அடக்க முறைகளைப் பின்பற்றக் காரணமாயிற்று.

பொதுவாகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் வசிப்பிடங்களுக்கு அப்பால் உள்ள தரிசு நிலங்களிலேயே சவ அடக்கம் செய்யும் முறை பின்பற்றப்பட்டது. இறந்தவர்களுக்குச் சின்னங்களை அமைத்து, அவர்கள் வாழ்ந்தபோது உண்ட, உடுத்த, உபயோகித்த பொருட்களை இறந்தவரின் எலும்புகளோடு சேர்த்துப் புதைக்கும் வழக்கம் இருந்தது. இது பெருங்கற்கால மக்கள் இறந்தவர் மீது கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் அபிமானத்தைக் காட்டுவதாக உள்ளது. மனிதனது உயிர் உடலை விட்டுப் பிரிந்தாலும் அது அழிவதில்லை என இக்கால மக்கள் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர். இறந்த உடலை அடக்கம் செய்வதற்காக இவர்களால் பலவகையான ஈமச்சின்னங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை **தாழிகள், கல்லறைகள், கற்பேழைகள்** எனப் பலவாறாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

இவ் ஈமச்சின்னங்கள் இந்தியா முழுவதும் பரந்து காணப்படுகின்ற போதும், தென்னிந்தியாவில் உள்ள ஈமச்சின்னங்களே பெருமளவானவையாகவும் பிரசித்தி பெற்றவையாகவும் காணப்படுகின்றன. தென்னகப் பெருங்கற்காலம் பற்றிய ஆய்வு பரவலான முறையில் மேற்கொள்ளப்பட்ட இடமாக தமிழகம் காணப்படுகின்றது. நரசிம்மையர் என்பவர் தமிழகப் பெருங்கற்காலம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அங்கு காணப்படும் ஈமச்சின்னங்களைப் பின்வருமாறு பாகுபடுத்தியுள்ளார்.

1 கிழக்குப் பக்க கற்களில் துளையுடைய கற்கள்
2 நுழை வாயிலையும், பல பிரிவுகளையும் உடைய ஈமச்சின்னங்கள்
3 தாழிகள்
4 கற்பதுக்கைகள்
5 கல்வட்டங்கள்
6 ஈமப் பேழைகள்
7 மேற்குப்பக்கத்தில் துளையுடைய கற்கள்
8 குத்துக்கற்கள்
9 ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களை உடைய கற்கள்

தென் தமிழகப் பகுதியில் காணப்படும் **ஆதிச்ச நல்லூர்** என்ற இடத்திலேயே அதிகளவான ஈமச் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுவே தென்னிந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய தாழிக்காடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே காணப்படும் தாழிகள் உருவத்தில் பெரியனவாய் அமைந்துள்ளன. அநேகமாக மங்கல் சிவப்பு நிறத்தையுடைய இச்சின்னங்கள் ஏனைய மட்பாண்டங்களைப் போல் அல்லாது பருமனான கரடுமுரடான இயல்பைக் கொண்டுள்ளன. அவற்றின் வெளிப்புறத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிரல் அடையாளங்களும் அலங்கார வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. சில தாழிகளின் உட்புறத்தே நிவேதனப் பொருட்களைத் தொங்கவிடுவதற்கான ஒழுங்குகளும் காணப்படுகின்றன. தாழிகளின் விளிம்புகளில் வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஆதிச்ச நல்லூரில் காணப்படும் ஈமத்தாழியில் வரையப்பட்டுள்ள பெண்ணின் ஓவியம் ஒன்று சிந்துவெளி நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியத்தை ஒத்தது. எனவே இந்த இரு பண்பாட்டுக்கும் இடையே தொடர்பு இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆதிச்ச நல்லூரில் கிடைக்கப்பெற்ற ஈமத்தாழிகள் உயர் பண்பாட்டைப் பிரதிபலிப்பதால் அக்கால மக்களின் பண்பாடும் நாகரிகம் மிக்தாக இருந்திருக்கும் என ஊகிக்கக் முடிகின்றது. அதுமட்டுமன்றி இப்பண்பாடு சிந்துவெளி நாகரிகத்திற்கு முந்தியது என்ற கருத்தும் அறிஞர்களிடையே நிலவிவருகிறது.

ஆதிச்ச நல்லூரில் காணப்பட்ட ஈமத்தாழிகளில் காணப்படும் பொருட்களில் மனித எச்சங்கள் மட்டுமன்றி இறந்தோருக்கு அளிக்கப்பட்ட நிவேதனப் பொருட்களும் குறிப்பிடத் தக்கவை. இவற்றுள் மட்பாண்டங்கள், இரும்பினாலான உபகரணங்கள், ஏனைய பொருட்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. மட்பாண்டங்கள் பலவகையான வண்ணங்களிலே காணப்படுகின்றன. இவற்றிலே கறுப்புச் சிவப்பு வண்ணமுடைய மட்பாண்டங்கள், கறுப்பு நிறமுடைய மட்பாண்டங்கள், வெள்ளை வர்ணம் பூசப்பட்ட கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள், சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பன குறிப்பிடத் தக்கவையாகும். கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள் தென்னகத்தில் ஈமப் பண்பாட்டின் சிறப்பம்சமாக விளங்குகின்றன.

கொற்கை என்னும் இடத்தில் காணப்பட்ட தாழியில் மனித மண்டையோடும் முழு எலும்புக் கூடும் காணப்பட்டது. இத்தாழியில் நிவேதனப் பொருட்கள் வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மண்ணாலான பளபளப்பான சிறு கிண்ணங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர பெருங்கற்காலச் சிறப்பான பண்பாடாக விளங்கும் கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் தென்னகமெங்கும் பரவியுள்ளதையும் நாம் அவதானிக்கலாம்.

எனவே தென்னிந்தியாவானது பெருங்கற்காலப் பண்பாட்டின் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதனை அங்கு நிலவிய சவஅடக்குமுறைகள், ஈமச்சின்னங்கள், அவற்றோடு தொடர்புடைய ஏனைய பொருட்களும் எடுத்துக் காட்டுகின்றன. இப் பண்பாடானது பின்னாளில் வளர்ச்சியுற்று நடுகல் வழிபாடாக இலக்கியங்களினூடு வெளிப்படக் காணலாம். தமிழக வரலாற்றிலே இலக்கிய காலங்களில் முதன்மை பெறும் சங்ககாலம் பெருங்கற்காலப் பண்பாட்டையும் உள்வாங்கியது. அதனை இலக்கியத்தின் அகச்சான்றினூடாக அறியக் கிடைக்கின்றது. சங்ககால மக்களின் பண்பாட்டுக் கூறுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக்க முற்பட்டகாலத் திராவிட பண்பாட்டுக் கூறுகளுடன் பொருந்தி நிற்கின்றது. இவ்வகையிலே இன்று பெருங்கற்காலப் பண்பாட்டில் கிடைக்கப் பெற்ற எச்சங்களை ஈமத்தாழி என்று குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது.

தாழி என்ற சொல் முதன்முதலில் சங்க இலக்கியங்களிலேயே வருகின்றன. தாழ் என்கின்ற ஏவல்வினை அடியாகவே தாழி என்னும் இச்சொல் காரணப்பெயராய் அமைந்துள்ளது. (தாழ் -புதைத்தல்) இன்றும் கூட இலங்கையின் வட பிராந்தியத்தில் இச்சொற்பண்பாடு அதிகமாக உள்ளது. தாழ், தாழ்வை, தாட்டல், போன்றசொற்கள் புதை என்கின்ற சொல்லிற்கு நேரொத்த வழக்கில் உள்ளது. புதைத்தல் என்கின்ற சமநிறை உள்ள சொல்லை வடபிராந்தியத்தில் உள்ளோர் பயன்படுத்துவது மிக அரிது. இவ்வகையில் தாழி என்னும் சொல் நிலத்தினுள் கலத்தை தாழ்ப்பதன் காரணமாய் உருவான பெயராகும். தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சின்னங்களாகத் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுள் இத் தாழிகள் முக்கிய இடம் பெறுகின்றன. இறந்தவர்களைத் தாழியில் இட்டுப்புதைக்கும் வழக்கைத் தமிழர்கள் கொண்டிருந்தனர் என்னும் கண்டுபிடிப்பு தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. சங்க இலக்கியங்களிலும் இத் தாழிகள் குறித்த செய்திகள் பல இடங்களில் வருகின்றன. இது குறித்து ஆய்வாளர் கா.ராஜன் தன்னுடைய தொல்லியல் நோக்கில் சங்ககாலம் என்ற ஆய்வில் பல கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

தாழி என்ற சொல் நற்றிணையிலும் **"மா இருந் தாழி கவிப்ப..."** நற்றிணை 271:11) புறநானூற்றிலும் **"அன்னோற் கவிக்கும் கண்அகழ் தாழி"** புறம்: 228: 12) **கவிசெந் தாழக் குவிபுறத்து** புறம்: 238: 1) பதிற்றுப்பத்திலும் **"துளங்குநீர் வியலகம்... மன்னர் மறைந்த தாழி"** பதி.பத்து: 44: 23) அகநானூறிலும் (தாழிமுதல் கவித்த கோளிலைப் பருத்தி அகம்: 129: 7) **"தாழிக் குவளை வாடுமலர் சூட்டி"** அகம்: 165: 11) **"ஓங்குநிலைத் தாழி மல்கச் சாத்தி"** அகம்: 275: 1) இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. அவ்வகையில் தாழி என்னும் சொல் சங்கப் பாடல்களில் அதிகமான இடங்களில் வந்துள்ளதை அவதானிக்கலாம். இது பண்டைத் தமிழர்களின் இறப்புக் குறித்த சடங்கின் சான்றாதாரமாக விளங்குகிறது என ஆய்வாளர்கள் கூறுவர். புறநானூறில் ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாத பாடல் ஒன்றில் மட்டும் தாழி என்ற சொல் ஈமத்தாழி என்ற அடையுடன் வருகின்றது. **"வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி"** புறம் 256:5) ஈமம் என்ற சொல் முதன்முதலில் இறப்புச் சடங்கோடு தொடர்புபட்டதாக புறநானூறில் வருகிறது. "ஈம விளக்கு, ஈம ஒள்ளழல், விறகு ஈமத்து, கருங்கோட்டு ஈமம்" முதலான புறநானூறில்வரும் சொற்களில் 'ஈமம்' என்பது எரிக்கின்ற பொருட்களுடனேயே சேர்த்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது. ஆனால் முதன் முதலில் தாழியுடன் ஈமத்தை இணைத்து ஈமத்தாழி என்று இப்புலவர் குறிப்பிடுகின்றார். ஈமத்தாழிகள் செய்வதற்கென்று அக்காலத்தில் சிறப்புப் பெற்றவர்கள் இருந்திருக்கின்றார்கள், அதுமட்டுமன்றி ஈமத்தாழிகள் செய்வதற்குச் சூளைகள் பயன்பட்டமையை பின்வரும் செய்யுள் எடுத்தியம்புகிறது. ஐயூர் முடவனார் என்னும் புலவர் தம் அரசன் இறந்து விட்டான் அவன் புகழுக்கு ஏற்றவாறு தாழி செய்யமுடியுமா? என்று கேட்பதாகப் புறநானூற்றுப் பாடல் இது.

**கலஞ்செய் கோவே! கலஞ்செய் கோவே!**
**இருள்திணிந் தன்ன குருஉத்திறள் பருஉப்புகை**
**அகல்இரு விசும்பின் ஊன்றுஞ் சூளை**
**நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே**
**அளியைநீயே யாங்கு ஆகவைகொல்**
**நிலவரை சூட்டிய நீள்நெடுந் தானைப்**
**புலவர் புகழ்ந்த பொய்யா நல்இசை**
**வரிகதிர் ஞாயிறு விசும்புஇவர்ந் தன்ன**
**சேண்விளங்கு சிறப்பின் செம்பியர் மருகன்**
**கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்**
**தேவர் உலகம் எய்தினர் ஆதலின்**
**அன்னோர் கவிக்கும் கண்ணகன் தாழி**
**வனைதல் வேட்டனை ஆயின் உனைய தூஉம்**
**இருநிலம் திகிரியாப் பெருமலை**
**மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே?**

என்று இறந்து போன சோழமன்னனுக்கு அவன் தகுதிக்கு தக்கவாறு கலம்செய்ய வேண்டும் என்கிறார் புலவர். இது இறந்தவரின் புகழுக்குத் தக்கவாறு ஈமத்தாழிகள் அமைக்கப்பட்ட பண்பாட்டைக் காட்டி நிற்கின்றது. சங்கப் பாடல்களில் ஈமத்தாழி பற்றி வரும் பிறிதொரு பாடல் பெண்கூற்றாக வருவதாகும். முதன்முதலில் 'ஈமத்தாழி' என்னும் சொல் இடம்பெறும் பாடல் இதுவே.

**"கலம்செய் கோவே! கலம்செய் கோவே!**
**........................................**
**வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி**
**அகலிது ஆக வனைமோ**
**நனந்தலை மூதூர்க் கலம்செ் கோவே"** புறம் - 256

கணவனைப் போர்க்களத்தே பலிகொடுத்த பெண்ணொருத்தி அவனை இழந்து தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழமுடியாது என்பதாலும் அவனைத் தாழியில் புதைக்கவேண்டும் என்பதாலும் இருவருக்கும் சேர்த்து பெரிய தாழி ஒன்று செய்யும்படி கூறுகின்றாள்

**ஈமச்சின்னங்களின் வகைப்பாடுகள்**

தென்னிந்தியாவில் காணப்படும் ஈமச்சின்னங்களை பல்வேறு வகையாக அறிஞர்கள் பாகுபடுத்தியுள்ளனர். அல்சின் தம்பதியினர் பெருங்கற்கால ஈமச்சின்னங்களை தாழிகள், ஈமப்பேழைகள், கல்வட்டங்கள், கல்லறைகள் அல்லது கற்பதுக்கைகள், குடைவரைக் குகைகள், நிரையாக ஒன்றுக்கு மேற்பட்ட வரிசைகளில் அமைக்கப்பட்ட குத்துக்கற்கள் என ஆறாக வகுத்துள்ளனர்.

தீக்கிற் என்பவர் இவற்றை முறையே கல்மேசைகள், குடைவரைக் குகைகள், குத்துக்கற்கள், தொப்பிக் கற்கள், குடைக்கற்கள், கல்லறைகள் எனப்பிரித்து இவ் ஒவ்வொன்றையும் மேலும் மூன்றுவகைகளாகப் பிரித்துள்ளார். லெஸ்னிக் என்பவர் தென்னகத்து ஈமச்சின்னங்களைப் பிராந்திய அடிப்படையில் பிரித்து ஆராய்ந்துள்ளார். அவையாவன, தமிழகம், கேரளமாநிலம், கர்நாடக மாநிலம், மகராஸ்டிரத்திலுள்ள சில பகுதிகள் என நான்காகப் பிரிக்கின்றார். இப்பிராந்தியங்களில் உள்ள ஈமச்சின்னங்கள் தத்தமக்கே உரியதான சில சிறப்புப் பண்புகளைக் கொண்டு அமைந்துள்ளன.

தமிழகத்தில் நிலவிய சிறப்பான ஈமச்சின்னங்கள் தாழிகளில் அடக்கம் செய்தல், ஈமப் பேழைகளில் அடக்கம் செய்தல் ஆகியவையாகும் குடைவரைக்குகை, தொப்பிக்கல், குடைக்கல் என்பன கேரள மாநிலத்தில் காணப்பட்டன. கர்நாடக மாநிலத்தில் காணப்படும் கல்லறைகளில் ஒரு பக்கம் துவாரம் அமைந்த நிலையில் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் இவை தெற்கு அல்லது தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளன. ஏனைய பகுதிகளில் இவை பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை.

ஈமச்சின்னங்களில் அமைக்கப்பட்ட துளைகள் பற்றிப் பல்வேறு கருத்தக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நான்கு பக்கக் கற்களில் ஒரு பக்கக் கல்லில் மையத்தில் பெரிய வட்டம் போன்று துவாரங்கள் அமைந்துள்ளன. இவை அமைக்கப்பட்டதன் நோக்கம் இறந்தவர்களுக்கு இதனூடாகச் சென்று வருடந்தோறும் கிரியை செய்வதற்கே என்பர். இதை ஏற்றுக்கொள்ளும் வகையில் பல கற்பதுக்கைளில் ஒரு மனிதன் உள்ளே சென்று திரும்பிவருவதற்கான அளவில் பெரிய துளைகளும் காணப்படுகின்றன. இவற்றை மூடிவைத்துத் தேவையான நேரத்தில் திறப்பதற்காக கற்தகடுகளும் காணப்படுகின்றன. இன்னும் சிலர் இதனை ஆவி வெளியே சென்று உள்ளே திரும்புவற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டது என்றும் கூறுவர்.

சுந்தர் என்பவர் தென்னகத்தில் உள்ள ஈமச்சின்னங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் பண்புகளை விரிவாக ஆராய்ந்துள்ளார். அவையாவன

- கல்லறைகள் அல்லது கற்பதுக்கைகள்
- கல்லறைகள் தவிர்ந்த ஈமச்சின்னங்கள்

அடக்கங்கள் இல்லாத வெறும் ஞாபகச் சின்னங்கள் கல்லறைகள் அல்லது கற்பதுக்கைகள்

கல்லறைகள் என்பவை நான்கு பெரியகற்களால் அறைகள் போன்று அமைக்கப் பட்டவையாகும். இக்கல்லறையின் பக்கக் கற்கள் நிலத்தின் கீழ் அமைந்திருக்க இவற்றை மூடிக் கல்லால் அமைந்த மூடிகளும் காணப்படுகின்றன. சில சமயங்களில் இவற்றில் கீழ்ப்பக்க மூடிகள் காணப்படாதபோதும் மேற்பக்க மூடிகள் அமைந்திருக்கின்றன. சில கல்லறைகளில் அரைவாசிப்பகுதி நிலமட்டத்தின் கீழ் மறைந்தும், மிகுதி நிலமட்டத்திற்கு மேலாகவும் காணப்படுகின்றது. இவை கற்திட்டைகள் எனப்படுகின்றன. இச்சின்னங்கள் மேசை வடிவினதாக அமைந்து முழுவதும் பூமியின் மேற்பரப்பில் தோற்றமளிக்கும்போது இவை கல்மேசைகள் எனவும் அழைக்கப்படுகின்றன. கல்லறைகளில் ஒரு பக்கத்தில் துளைகள் காணப்படுகின்றபோது அவை துளையுடைய கல்லறைகள் எனவும் சிலவேளைகளில் இரண்டு அல்லது மூன்று பிரிவுகளைக் கொண்டு காணப்படும்போது இவை பலபரிசுக் கல்லறைகள் எனவும் அழைக்கப்படுகின்றன. சிலவற்றில் நான்கு பக்கக் கற்களும் விழாதவாறு சுவஸ்திகா வடிவில் காணப்பட இன்னும் சில சதுர, நீள்சதுர வடிவ அமைப்பில் காணப்படுகின்றன. பொதுவாகச் சதுரமாகக் காணப்படும் கல்லறைகள் முன்று அடிதொடக்கம் ஏழு அல்லது எட்டு அடிவரை நீளமுள்ள பக்கக் கற்களைக் கொண்டவை. கேரள மாநிலத்தில் சிறப்பான ஈமச்சின்னங்களாக தொப்பிக்கல் குடைக்கல், குடைவரைக்கல், ஆகியன காணப்படுகின்றன. மூன்று அல்லது நான்கு கற்களால் தொப்பி வடிவில் அமைக்கப்பட்ட ஈமச்சின்னமே தொப்பிக்கல் எனப்படுகின்றது. குடைக்கல் என்பது பெரிய கல்லால் அமைக்கப்பட்டு குவிந்து குடைபோன்று தோற்றமளிக்கும் சின்னமாகும். இவ்வித சின்னங்கள் இறந்தவர்களுக்கான நிவேதனப் பொருள்களையும், எலும்புகளையும் கொண்டு காணப்படுகின்றன.

குடைவரைக் குகைகளானவை பாறையை மேலிருந்து கீழாகக் கிடங்கு போன்று குடைந்து செய்யப்பட்டவை. இதில் இறங்கிச் செல்வதற்கான படிக்கட்டுகள் காணப்படும். சதுரவடிவ அறைபோன்று வெட்டப்பட்ட கிடங்கிலே பெரிய துளை இடப்பட்டுப் பின்னர் அத் துளையினூடு உள்ளே சென்று இன்னொரு அறை அமைக்கப்பட்டது. இருட்டறை போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட இந்த அறை கற்தகடுகளால் மூடப்பட்டுள்ளது. இக் கல்லறையின் நான்கு பக்கமும் நான்கு கல்லாசனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் இறந்தவர்களுக்கான நிவேதனங்கள் படைக்கப்பட்டுள்ளன.

## கல்லறைகள் தவிர்ந்த ஈமச்சின்னங்கள்

கல்லறை தவிர்ந்த ஈமச்சின்னங்களில் தாழிகள், ஈமப்பேழைகள், குழிகளிலுள்ள சவ அடக்கங்கள், கல்வட்டங்கள், கற்குகைகள், குத்துக்கற்கள் நடுகற்கள் என்பன அடங்கும். தாழிகளில் இடம்பெற்ற சவ அடக்குமுறைச் சிதைவுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. முன்னர் சங்கப் பாடல்களில் அவதானிப்பது போன்று தாழிகள் பல வகையில் அமைந்திருந்தன. பருமன், வாய் அகலம், வேலைப்பாடு போன்ற அம்சங்கள் தாழிகளில் வேறுபடுவதை நோக்கலாம். தாழிகளை அமைத்தவர்களைக் **கலஞ்செய் கோ** எனச் சங்கப்பாடல்கள் விளிக்கின்றன. அன்றியும், தமக்குரிய தாழிகளைத் தாம் உயிருடன் இருந்தபோதே செய்வித்தமை தொடர்பான செய்திகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தாழி என்றசொல் தாழ்த்தல் என்னும் காரணப்பெயர் பற்றி அமைந்தது ஆகும். இத்தாழிகள் பலவகையான பருமன்களில் அமைந்துள்ளமையை நோக்கும்போது சில தாழிகளில் மட்டுமே முழுமையான மனித உடலம் புதைக்கப்பட்டமை தெளிவு. ஏனெனில் அளவிற் சிறிய தாழிகளில் குறிப்பிட்ட வகையான பிரதான எலும்புகள் மட்டுமே காணப்படுவதாலும் அவை மனித உடலை முழுமையாகக் கொள்ளும் அளவற்றவையாகவும் இருப்பதால் இறந்தவருக்கு இரண்டாவதாக மேற்கொள்ளப்பட்ட கிரியையின் போது அவரின் எலும்புகள் மட்டும் எடுக்கப்பட்டு மறுபடி புதைக்கப்பட்டிருக்கலாம் என ஐயுற முடிகின்றது. இத் தாழிகளை மூடுவதற்கு மண்ணாலான பெரிய சட்டிகளும் மண் அல்லது சிறு கற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாழிகள் தவிரக் கற்பேழைகள் அல்லது ஈமப்பேழைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப் பேழைகள் நீண்டதோற்றத்துடனும் வளைவான மூலைகளுடனும், கொண்டிருந்தன. கால்கள்,மற்றும் மூடியுடன் கூடியதாக மிருகங்களின் தோற்றத்தைப் போன்றும் இப் பேழைகள் அமைந்திருந்தன.

நிலத்தில் தோண்டப்பட்ட குழிகளில் மேற்கொள்ளப்பட்ட சவஅடக்க முறை குழி அடக்க முறை எனப்பட்டது. இவை வெவ்வேறு வடிவங்களில் குழிகளாக அமைவு பெற்றன. சில வேளைகளில் இறந்தோரை நீளமாகக் கிடத்தியோ, அவர்களின் பிரதான எலும்புகளைக் குழிகளில் இட்டோ ஞாபகச் சின்னமாக மண்மேடுகளையும், கற்குவியல்களையும், கலவட்டங்களையும் அமைக்கும் மரபு இக்காலத்தில் காணப்பட்டது. குத்துக்கல் எனப்பட்ட ஈமச்சின்னங்களில் சவக்குழியின் நடுவில் நிறுத்தப்பட்ட உயரிய பெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் அதைச்சுற்றிக் கல்லால் ஆன வட்டமும் காணப்படுகின்றது. நடுகல் எனும் ஈமச்சின்னம் இறந்தவர் நினைவாக கல்லை நட்டு அதில் அவரின் பெயர், சித்திரம் பொறித்துக் கட்டப்படும் ஈமச்சின்னமாகும்.

ஈம அடக்கம் இல்லாத வெறும் ஞாபகச் சின்னங்களும் காணப்பட்டுள்ளன. சில நடுகற்கள் அடக்கமில்லாத இடங்களில் கற்பதுக்கைகளுக்கு அண்மையில் அமைந்துள்ளன. அவ்வகையில் அகழ்வாராய்வுகளில் கிடைக்கப் பெறும் தமிழக ஈமச்சின்னங்கள் மக்களின் உயர்ந்த பண்பாட்டை வலியுறுத்தவதாக அமைந்துள்ளது. இவ் ஈமச்சின்னங்கள் பாதுகாப்பு, நம்பிக்கை, சுகாதாரம், வழிபாடு போன்ற அம்சங்களைப் பிரதி பலிப்பதைக் காணலாம்.

## ஈம அடக்க முறைகளின் பிற்கால வளர்ச்சி

பெருங்கற் காலத்தில் ஈமச்சின்னமாக விளங்கிய நடுகல்லே பண்பாட்டு வளர்ச்சிபெற்று பிற்காலத்தில் வழிபாட்டுக்குரியதாக மாற்றம் பெற்றது. மேலும் இந்நடுகல் வழிபாடு தமிழ்ப்பண்பாட்டில் ஒரு சமயப்பண்பாடு வளர்ச்சியுறக் களம் அமைத்தமையையும் காணலாம். இவ் ஈமச்சின்னங்களின் தொடர்ச்சி இன்றும் எச்சமாக ஈமக்கிரியைகளினூடு நிகழ்த்தப்படுகின்றது. கொள்ளித்தாழி, மற்றும் இறந்தவர்களின் அஸ்திசஞ்சயனத்தில் எலும்புகளைத் தாழியினுள் எடுத்தல் போன்ற செயற்பாடுகள் இதன் எச்சமெனவே கொள்ளமுடியும். நடுகல் வழிபாடு, பள்ளிப்படைக்கோயில்களின் அமைவு, அதன் தொடர்ச்சியாய் இன்றுவரை நிலைத்திருக்கும் கல்லறைக் கோயில்கள் என்பனவும் தமிழரின் இத்தொன்மை மரபறாத் தொடர்ச்சியின் வளர்ச்சியாகவே காணப்படுகின்றது.

நடுகல் வழிபாட்டுடனேயே தமிழர்களின் வழிபாட்டியல் ஆரம்பிக்கிறது. இதனைச் சங்கப் பாடல்களும் தொல்காப்பியச் சூத்திரமும் உறுதி செய்கின்றது. இறந்தவர் மீதான நம்பிக்கை, அவர்கள் வாழ்வாதாரத்துக்கு துணை செய்வார்கள் என்ற நம்பிக்கை மற்றும் இறந்தோரை வழிபடுவதால் அவர்களின் வீரம், ஆற்றல் நம்மை வந்து சேரும் என்ற நம்பிக்கைகள் ஈமச் சின்னமான நடுகல், வழிபாட்டுச் சின்னமாக மாறக் காரணமாக அமைந்தது. உண்மையிலேயே நடுகற்கள் வெறும் ஈமச்சின்னங்களே. ஆனால் அதன் பின்ணணியில் தமிழர்களின் பெரும் பண்பாடும் புதையுண்டு கிடக்கிறது. இறந்தவனின் கீர்த்தி, இறந்தமைக்கான காரணம், இறந்தவர் மீதான நம்பிக்கை, இறந்தவனின் சமூக இருப்பு இறந்த பின்னும் நிலைபேறடைந்துள்ளமை, இன்றுவரை பண்பாட்டை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளமை எனப் பல வழிகளில் தமிழர் பண்பாட்டின் பொக்கிசமாக இந் நடுகற்கள் விளங்குகின்றன. சங்கச் செய்யுட்கள் நடுகல் பற்றி ஏராளமான செய்திகளைத் தருகின்றன. இந் நடுகற்கள் கற்பதுக்கைகளுக்கு அருகிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனவே இவை நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்டமை தெளிவு. ஒருவகையில் பெருங்கற் பண்பாட்டில் ஈமச்சின்னமாக நிலைபெற்ற நடுகற்கள் பண்பாட்டியல் வளர்ச்சிபெற்று நினைவுச்சின்னங்களாக்கப்பட்டன. பெருங்கற்கால ஈமச்சின்னத்தின் முதிர்ச்சி நிலை என ஆய்வாளர்கள் இதனைச் சுட்டுவர். இதற்குச் சான்றாக புளிமான்கோம்பைக் கல்வெட்டைக் குறிப்பிடலாம். **ஆகோள் பூசலில் இறந்த பேடுதியன் அதியன்** என்பானுக்கு நடப்பட்ட நடுகல் பற்றிய குறிப்பு இதற்குத் தக்க சான்றாகும். அஃறிணை உயிர்களுக்கும் கூட வீரமரபை ஒட்டி நடுகற்கள் நடப்பட்டுள்ளன. அன்றியும் வீரமரபு சாராவகையில் சாதாரண மக்களுக்கும் நடுகல் நடப்பட்டதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. இந் நடுகல்லின் ஒரு படிமுறை வளர்ச்சியாகவே கிராமியத் தெய்வ வழிபாடு வளர்ச்சி பெற்றுள்ளது.

இவற்றின் இன்னொருதள வளர்ச்சியாக நாம் பள்ளிப்படைக் கோயில்களைக் கொள்ளமுடியும். தமிழர்களின் பண்டைய நம்பிக்கைகளின் வழியே அவர்களைக் கவர்ந்து ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளும் இப்பள்ளிப்படைக் கோயில்களின் பின்னணியில் நிகழ்ந்தேறின எனினும் அது தமிழரின் தொன்மையான பண்பாட்டு வழிவந்த மரபு என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பின்னாளில் இறந்தவர்களுக்கான சமாதிக் கோயில்களாக இவை வளர்ச்சியுறத் தொடங்கின. இதன் காரணமாக தழிழ்ப்பண்பாட்டில் இறந்தவர் நினைவாக ஆலயங்களும் தோற்றம் பெறலாயின. சோழர் காலத்தில் பொலநறுவையில் அமைவுபெற்ற வானவன்மாதேவி ஈஸ்வரம் ஏறத்தாழ ஒரு சகாப்தத்திற்கு முன்னர் கட்டப்பட்ட பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில், மற்றும் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் அமைவுபெற்றுள்ள இராமநாதனின் சமாதிகோயில் என்பன இம் மரபின் தொடர்ச்சியாய் எம் கண்முன் நிலைபெற்றுள்ள ஆவணங்களாகும்.

விடுதலைப் போராட்டத்தின் விளைவாக அமைக்கப்பட்ட துயிலுமில்லங்கள், நவீனம் உட்புகாத காலப்பகுதியில் ஈழத்தில் காணப்பட்ட ஆவுரோஞ்சிக் கற்கள், மற்றும் சுமைதாங்கிகள் என்பனவும், நவீனம் தமிழ்ச் சுழலில் நுழைந்த பின்னர் இறந்தோர் நினைவாக அமைக்கப்பட்டுவரும் அனைத்து வகையான சேவைநிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்பனவும் பெருங்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சி என்று கூறின் அதனை மறுதலிப்போர் உண்டோ? இவற்றின் பின்னணியில் என்னதான் அரசியல் இலாபம், சுயநலம் கற்பிக்கப்பட்டாலும் அது தமிழர் பண்பாட்டின் ஒரு வளர்ச்சி அல்லது தொடர்ச்சி நிலை என்று கொள்வதும் பொருந்தும். எனவே காலந்தோறும் நாகரிகம் மாறுபடினும் தழிழர்களின் கருத்தியல் மற்றும் நம்பிக்கை மாறுபடாது அமைந்துள்ளது என்பதற்கு இது ஒரு தக்க சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துணை ஆதாரங்கள்.**


சந்திரவல்லி,சி. (1995) **இந்தியவரலாறு கி.பி 1256 வரை**, சென்னை: தமிழ் பாடநூற் கழகம்.

சிற்றம்பலம், சி, க. (1991) **பண்டைய தமிழகம்,** திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

சுப்பிரமணியம், தி. **தமிழகத் தொல்லியலும் வரலாறும்,** சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்

நீலகண்ட சாஸ்திரி (1996) **தென்னிந்திய வரலாறு,** இலங்கை

பிள்ளை, கே, கே (2000) **தமிழக வரலாறு,** மக்களும் பண்பாடும்.

வேதாசலம்,வே (2011) தென்தமிழ் நாட்டில் நடுகற்கள், சமூகவிஞ்ஞானம், இதழ் : 30

2015 பெப்ரவரி 28ல் **"புதியநோக்கில் சங்க இலக்கியம்"** என்னும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் நடாத்தப்பட்ட தேசிய கருத்தரங்குக் குறிப்புகள்.


**மனதி லுறுதி வேண்டும்.**

**வாக்கினி லேயினிமை வேண்டும்**

**நினைவு நல்லது வேண்டும்**

**நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்**

**கைவசமாவது விரைவில் வேண்டும்**

**தனமும் இன்பமும் வேண்டும்**

**தரணியிலே பெருமை வேண்டும்**

**–பாரதியார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண தரைக்கீழ் நீரின் மாசாக்கமும் சந்திக்கப் போகும் விபரீத விளைவுகளும்



நா.சுஜீவன்,
இரண்டாம் வருடம்,
புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 01. அறிமுகம்

யாழ்ப்பாண மாவட்டமானது இலங்கையின் மிக முக்கியமான மாவட்டங்களில் ஒன்றாகும். வடபகுதியில் அமைந்துள்ள பல்லுருவக கடற்கரைய மைப்பைக் கொண்ட மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட குடா நாடாகும். யாழ்குடாவிலே மூன்று சிற்றாறுகள் (பருவகால ஆறு) காணப்படுகின்றன. தொண்டமானாறு, உப்பாறு, வழுக்கையாறு என்பனவே அவையாகும். இவை முறையே 78, 26, 14 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரந்துள்ளன. இம்மூன்று ஆறுகளும் தொண்டமானாறு, அரியாலை, அராலி போன்ற பகுதிகளில் கடலுடன் சங்கமமாகின்றன. 160Km கடற்கரை யோரத்தைக் கொண்ட யாழ்குடாவில் 10Km நிலப்பரப்பினால் சூழ்ந்துள்ளது. குடாநாட்டின் மிக முக்கிய பிரச்சனை கடல்நீர் உள்நுழைவு ஆகும். குடாவின் மிகமுக்கிய நீர் மூலம் த்ரைக்கீழ் நீராகும். இத்தரைக்கீழ் நீரின் ஒட்டு மொத்த அளவுமே மாசடைந்துள்ளது. கடல் நீரின் உள்நுழைவும் கழிவுகளை நீரோடைகளில் கலக்க விடுவதும் அதிகரித்து வரும் விவசாய இரசாயனங்களின் உபயோகமும் மூன்று முக்கிய மாசாக்க காரணங்களா கும். கடல் நீரின் உட்புகுதலால் நூற்றுக் கணக்கான கிணறுகள் உவரடைந்துள்ள தை அவதானிக்க முடிகின்றது. தொண்டமானாறு, அரியாலை, அராலி உவர்நீர் தடுப்பணைகளை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதனை உறுதி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வடபகுதியிலமைந்த வளம்மிக்க மாவட்டமான யாழ் குடாவின் மொத்த நிலத்திணிவான 1036$Km^2$ பரப்பளவில் தொண்டமானாறு (776.6$Km^2$), உப்பாறு(25.9$Km^2$), வழுக்கியாறு போன்றனவும் உள்ளடங்குகின்றன. மேற்கூறிய மூன்று பிரதேசங்கள் உள்ளடங்கலாக கடல், நீரேந்து (நீர்வளம்மிக்க) பிரதேசம் 518$Km^2$ல் பரந்துள்ளது. குடாநாடானது திராவிட இனக்குழுமத்தின் பூர்வீக பகுதியாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவ் இனக் கூட்டத்தினரில் அதிகமானவர்கள் வேளாண்மை மற்றும் மீன்பிடி போன்ற வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். கண்டி வீதியின் மூலமாக யாழ் குடாநாடானது ஏனைய நிலத்திணிவுகளுடன் இணைக்கப்பட்டள்ளது. யாழ்ப்பாண நிர்வாக அலகினுள்ளே மண்டைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு போன்ற தீவுக்கூட்டங்களும் உள்ளடங்குகின்றன. இத்தீவுக் கூட்டங்கள் யாவும் வெக்னர் முன்வைத்த கண்டநகர்வு காரணமாக சிறிய மற்றும் பாரிய நிலத்திணிவுகளாகப் பிரிந்தவை (இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து பிரிந்து சென்றன).

## 02. புவிச்சரிதவியல் ரீதியில் யாழ் குடாநாடு

யாழ் குடாநாடானது நிலத்தடியிலே மயோசீன் கால அடையற் பாறைகளை (Miocene – Limestone) கொண்டமைந்துள்ளது. இதனுடைய நிலைக்குத்தான தடிப்பு ஏறத்தாழ 100m ஆக காணப்படுவதுடன் சில இடங்களில் அதைவிடக் குறைவாகவும் சில இடங்களில் அதிகமாகவும் காணப்படுகிறது. பிறீ கேம்பிறியன் (Precambrian) காலத்துக்குரியவற்றின் தடிப்பு அண்ணளவாக 137m ஐ விட அதிகமாகக் காணப்படுகின்றது. சில அடையற் பாறைகள் அதிகளவில் நிலக்கரி, உயிர்சுவட்டு அடையல்கள் போன்றவற்றைக் கொண்டு காணப்படுகின்றது. மயோசீன் கால அடையற் பாறை ஊடுருவடியக் கூடிய வகையில் காணப்படுவதனால் மழைவீழ்ச்சியின் மூலம் கிடைக்கின்ற நீரானது இலகுவில் தரைக்குக் கீழ் ஊடுவடிந்து தரைக்கீழ் நீராகச் சேமிக்கப்படுகிறது.

## 03. யாழ்குடாவின் நீர் மூலம்

குடாநாடானது வடகீழ் பருவக்காற்றின் மூலம் (டிசம்பர் - பெப்ரவரி) மழையைப் பெறுகிறது. இம்மழைவீழ்ச்சியின் மூலம் பெறப்படுகின்ற நீரில் 62 மில்லியன் கன மீற்றர் (62million $m^3$) வரையிலான அளவு தரைக்கீழ் நீராகச் சேமிக்கப்படுகின்றது. வருடாந்த மழை கிடைப்பனவு 559mm – 1575mm வரை பெறப்படுகிறது. இது மழைநீரின் ஆவியாக்கம், கடலைச் சென்றடையும் கழுவுநீரோட்ட ஆவியாக்கம், படிவுவீழ்ச்சி என்பவற்றில் தங்கியுள்ளது. வருடாந்த மொத்த மழைவீழ்ச்சியில் 12% ஆவியாக்கமாகவும் 25% கழுவுநீரோட்டமாகவும் சென்றடைகிறது. மழைநீரின் தரத்திலே ஆவியாக்கம், படிவுவீழ்ச்சி என்பன தாக்கம் செலுத்துகின்றன. எனவே, யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாடானது வடகீழ் பருவக்காற்றின் மூலமும் அதன் விளைவாகக் கிடைக்கும் தரைக்கீழ் நீரையும் நம்பியே வாழ்கிறது. ஆனால் இந்நிலை தற்போது மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளாலும் வேறு சில காரணங்களாலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது.

## 04. குடாநாட்டின் நீர்ப்பிரச்சனைக்குரிய காரணங்கள்

யாழ் குடாவின் பிரதான நீர் மூலமான தரைக்கீழ் நீரின் ஒட்டுமொத்த இருப்பே இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஐங்கரநேசன், கலாநிதி துஷ்யந்தி மிகுந்தன், கலாநிதி ந.சிவராஜா உள்ளிட்ட ஆய்வாளர்கள் பல்வேறு கோணத்தில் ஆய்வுகளை முன்னெடுத்து காரணங்களை விளக்கியிருக்கின்றனர். அவ்வாறான காரணங்களுள் பின்வருவன முதன்மை பெறுகின்றன.

- அதிகரித்து வரும் விவசாய இரசாயனங்களின் பாவனை
- மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகள்
- கழிவுநீர் வெளியேற்றத்துக்கு ஒழுங்கான திட்டமிடலின்மை
- தரைக்கீழ் நீர் உபயோகத்தில் திட்டமிடலின்மை
- கடல்நீரின் உள்நுழைவு
- முன்வைக்கப்படும் முகாமைத்துவ செயற்பாட்டின் மந்த நிலை
- சுன்னாகம் மின்சார நிலையமும் அது சார் நடவடிக்கைகளும்

### 4.1 அதிகரித்து வரும் விவசாய இரசாயனங்களின் பாவனை

யாழ்ப்பாணம் பயிர்செய்கைக்கு (Agriculture) பெயர் பெற்ற ஓர் பிரதேசமாகும். தம்புள்ளை பிரத்தியேக பொருளாதார மரக்கறிச் சந்தையில் விற்பனையாகும் மரக்கறிகளில் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படுபவையே. மரக்கறி, பழவகை, நெல் எனப் பலவகை பயிர்கள் பயிரிடப்படுகின்றது. இன்றைய கால விவசாயிகள் சேதனப் பசளை, கிருமிநாசினி முறைகளை விரும்பாது அசேதன முறைகளையே அதிகம் உபயோகிக்கின்றனர். அசேதன வளமாக்கிகளை உபயோகிப்பதனால் மழை மூலம் அவை கழுவப்பட்டு தரைக்கீழ் நீராகச் சென்றடைகிறது. அதைவிட வயல்நிலங்களில் பாவிக்கப்படும் பீடைகொல்லி, களைகொல்லி மருந்துகள் வயலில் தேங்கி நிற்கும் நீருடன் கலப்பதால் ஒரு பகுதி ஆவியாக இன்னொரு பகுதி ஊடுவடிந்தது தரையின் கீழே சேமிக்கப்படுகின்றது. இதனை மனிதன் கிணறு மூலம் பெற்று உபயோகிக்கும் போது விபரீத விளைவுகளை எதிர்கொள்கிறான்.

### 4.2 மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகள்

மனிதன் தன் அறிவற்ற செயற்பாடுகளால் தரைக்கீழ் நீர்வள இருப்பை இல்லாது செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகிறான். வீடு மற்றும் நகரக்கழிவுகளை நீர்நிலைகளில் கலக்க விடுவது பாரியதொரு பிரச்சனையாகும். இப்பிரச்சினை சாவகச்சேரி, யாழ்ப்பாண நகரம், காக்கைதீவு, செம்மணி, பண்ணை போன்ற பகுதிகளில் அதிகளவில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. மேலும், யாழ்ப்பாணத்தில் அதிகமாகச் செய்கை பண்ணப்படும் புகையிலைப் பயிருக்கு அதிகளவு நீர் தேவைப்படுகிறது. இதனாலும் அதிகளவு நீர் வீணாக்கப்படுகிறது. இந்நிலை தொடர்ந்தால் யாழ்ப்பாணப் பிரதேசம் குடிநீருக்கு கையேந்தும் நிலை தற்காலத்தை விட அதிகரிப்பது உறுதி.

## 4.3 கழிவு நீர் வெளியேற்றத்துக்கு ஒழுங்கான திட்டமிடலின்மை

குடாவின் தலைநகரமான யாழ்ப்பாணத்தின் சுற்றுலா விடுதிகள், வைத்தியசாலை, குடியிருப்புக்கள், உணவுக்கடைகள், சந்தைத்தொகுதி போன்றவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பல்வேறு இரசாயனப்பொருட்களுடன் கலக்கின்றது. இதனை வெளியேற்ற ஒழுங்கான வடிகால் கட்டமைப்போ அல்லது ஒழுங்கான சுத்திகரிப்பு முறைகளோ இல்லாமையினால் ஊடுவடியும் நீர் மாசடைந்த நீராகவே மாற்றமுற்று காணப்படுகிறது. அதைவிட இக் கழிவுகள் எல்லாம் யாழ் புல்லுக்குளத்தில் சென்று தேங்குவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் தரைக்கீழ் நீரின் மாசாக்கத்துக்கும் காரணமாகின்றது.

## 4.4 தரைக்கீழ் நீர் உபயோகத்தில் திட்டமிடலின்மை

தரைக்கீழ்நீரை நாம் பயன்படுத்தும்போது உரிய திட்டங்கள் ஏதுமற்ற நிலையில் பயன்படுத்துவது வருந்தத்தக்கது. விவசாயத்திற்கு பயன்படுத்தும் போது தூவல், சொட்டு நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்த முடியுமாக இருந்தாலும் அதிகமானோர் இதனை முன்னெடுக்காமை பல பாரதூர விளைவுகளை உண்டு பண்ணுகிறது. அன்றாட வீட்டுத் தேவைகளுக்கு உவர்நீரைப் பயன்படுத்த முடியும். ஆனால், அதிகமானோர் இதனைப் பின்பற்றுவதில்லை. அதைவிட குழாய் கிணறுகளை அமைப்பதற்குரிய சரியான அளவுத்திட்டம் தொடர்பில் மக்களுக்கு போதிய அறிவின்மையாலும் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

## 4.5 கடல்நீரின் உள்நுழைவு

அராலி, அரியாலை, தொண்டமானாறு போன்ற சிற்றாறுகள் கலக்கின்ற களப்புப் பகுதிகளுடாக கடல் நீரானது உள்நாட்டினுள் ஊடுபுகுவதன் மூலம் அப்பகுதிகளிலுள்ள கிணறுகள் உவரடைந்து வருவது கவலைக்குரியது. அப்பகுதிகளில் கடல்நீர்த் தடுப்பணைகள் அமைக்கப்பட்டிருந்தும் அதன் தரக்குறைவின் காரணமாக கடல்நீர் உட்புகுவதைத் தடுக்க முடியாதுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.6 முன்வைக்கப்படும் முகாமைத்துவ செயற்பாட்டின் மந்த நிலை

மக்களின் நீர்ப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றுக்குச் செயல்வடிவம் என்பது அரிதாகவே உள்ளது. உதாரணமாக இப்பிரதேச மக்களின் நீர்ப்பிரச்சினை தொடர்பாக மத்திய அரசும் சரி, மாகாண அரசும் சரி ஒழுங்கான நடவடிக்கைகள் எதையும் செய்யாதுள்ளதை நாம் கண்கூடாகவே காண்கிறோம். சுன்னாகம் மின்சார நிலையம் தொடர்பான விவாதங்கள் பாராளுமன்றத்திலும், மாகாண சபையிலும் நடந்து முடிந்து பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன. ஆனால், எதுவும் செயல்வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை. மக்களின் நீர்ப்பிரச்சனைக்கு மருதங்கேணி கடல் நீரை சுத்திகரிக்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகையும் நடைபெறவில்லை. அதைவிட இரணைமடுக் குளத்து நீரை யாழ் குடாவுக்கு கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்துமே கைகூடாது போயுள்ளது. இதை வைத்து சிலர் அரசியல் நடத்துகிறார்களே தவிர மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாய் தெரியவில்லை.

### 4.7 சுன்னாகம் மின்சார நிலையமும் அது சார் நடவடிக்கைகளும்

நொதேண் பவர் (Northern Power) நிறுவனம் சுன்னாக மின் நிலையத்தை இயக்கி வருகிறது. இந்நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கு யாரும் மின்சாரத்தை வழங்க முன்வராத போது துணிந்து வந்து அவர்களுக்கு மின்சாரத்தை வழங்கியது. இந்நிறுவனம் அங்கிருந்து வெளியேறும் கழிவு எண்ணெயை அருகில் குழிதோண்டி வெளியேற்றி வருகிறது. இதன்மூலம் சுன்னாகம், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், தெல்லிப்பழை உள்ளிட்ட பகுதிகளில் கிணற்று நீரில் எண்ணெய் மாசு கலந்திருப்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது மிகப் பாரதூரமான தரைக்கீழ் நீர் மாசாக்க பிரச்சனையாகும். இதற்கு எதிராக மக்கள், புத்திஜீவிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியர்கள் எனப் பலதரப்பட்டோரும் ஆர்ப்பாட்டங்கள், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்றவற்றில் ஈடுபட்டனர். ஆனாலும், இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை மனவருத்தத்துக்குரியது.

## 05. யாழ் குடாநாடு சந்தித்து வரும் விபரீத விளைவுகள்

இலங்கையில் ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாணமே அதிகளவில் புற்றுநோயின் தாக்கத்துக்கு உள்ளாகி வருகிறது. கடந்த ஐந்து வருடங்களில் யாழ் மாவட்டத்தில் புற்றுநோயாளிகளின் தொகை அசுரவேகத்தில் அதிகரித்து வருவதை மருத்துவ ஆய்வுகள் முன்வைக்கின்றன. யாழ் போதனா வைத்தியசாலையின் தரவுகளின் படி 2008ம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 748 பேராகக் காணப்பட்ட நோயாளர் தொகை 2011ம் ஆண்டு 1382 ஆக உயர்வடைந்திருப்பது ஆபத்தானது. இந்நோய் காரணமாக 2011ம் ஆண்டு 206 பேர் மரணமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய்த் தாக்கம் மிகவேகமாக அதிகரித்து வருகிறது. இந்நிலை யாழ் போதனா மருத்துவமனையில் புற்றுநோய்ப் பிரிவு ஆரம்பிக்கப்படுவதற்கு முதலே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்வர்கள் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்றனர். அதன் பதிவுகளின் படி 1970களில் இலங்கையின் தேசிய அளவுடன் ஒப்பிடுகையில் தொண்டை மற்றும் இரைப்பை புற்றுநோயின் தாக்கம் யாழ்ப்பாணத்தில் கண்டறியப்பட்டது. இந்த விபரீதங்களுக்கெல்லாம் யாழ்ப்பாணத்தவர்கள் அளவில்லாமல் அள்ளி வீசும் வேளாண் இரசாயனங்களே காரணம் என்ற ஊகம் முன்வைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செறிவு வேளாண்மை (Intensive Agriculture) நெடுங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறைந்த நிலப்பரப்பில் கூடுதலான வேளாண் இடுபொருட்களைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் அமோக விளைச்சல் பெறும் முறைமை செறிவு வேளாண்மை எனப்படுகிறது. இரசாயன உரம், பீடைகொல்லி, களைகொல்லி என இரசாயனங்கள் அதிகளவில் பயன்படுத்ப்படுகின்றன. இதில் கவலை என்னவெனில் இரசாயனங்களைப் பயன்படுத்த வேண்டிய அளவு, காலநேரம், பக்கவிளைவு போன்றன குறித்த விழிப்புணர்வு ஏதுமற்ற நிலையில் பிரயோகிக்கப்படுவது தான். யாழ் குடாநாட்டின் அடித்தளம் "மயோசீன்" காலத்து சுண்ணாம்பு பாறைகளாலானது. இப்பாறைகள் மூட்டுக்களையும் நுண்துளைகளையும் கொண்டிருப்பதனால் வேளாண் இரசாயனங்கள் மழைநீருடன் சேர்ந்து வடிந்தோடி சுலபமாக நிலத்தடி நீருடன் கலந்து விடுகின்றது.

வேளாண்மையில் பயன்படுத்தப்படும் நைதரசன் உரங்களிலிருந்து நைத்திரேற்று ($NO_3^-$) அதிகளவில் தண்ணீரில் கலக்க நேருகிறது. இது குடிநீருடன் உடலை அடையும் போது குடல்வாழ் பக்ரீறியாக்களினால் நைத்திரைற்றாக($NO_2^-$) மாற்றப்படுகிறது. ஆபத்து இங்கேதான் ஆரம்பிக்கிறது. நைத்திரற்று சமிபாட்டு நொதியங்களுடன் தாக்கமடைந்து நைத்திரோசமைன்கள்(Nithrosamines) எனப்படும் வேதிகளாக உருவாகுகின்றன. இவை மிகப்பயங்கரமான புற்றுநோய்த் தூண்டிகள். தொண்டை, இரப்பை, பெருங்குடல், சிறுநீர்ப்பை உட்பட்ட பல்வேறு உறுப்புக்களிலும் புற்றுநோயை ஏற்படுத்த வல்லன. அத்தோடு நைத்திரைற்று குழந்தைகளின் செங்கலங்களிலுள்ள ஈமோகுளோபினை (Hemoglobin) மெதிமோகுளோபீனாக (Methemoglobin) மாற்றிவிடக்கூடியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் ஒட்சிசன் ($O_2$) கொண்டு செல்வதில் இடையூறுகளை ஏற்படுத்தி நீலக் குழந்தைகளின் (Blue Babies) பிறப்புக்கும் காரணமாக அமைகின்றது.

நைத்திரேற்றின் அபாயத் தன்மை தெரிய வந்ததையடுத்து உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) நைத்திரேற்றை ஆபத்தான குடிநீர் மாசாக அறிவித்தது. ஒரு லீற்றர் குடிநீரில் 50mg க்கு மேலதிகமாக நைத்திரேற்று காணப்படுமாயின் (50mg $NO_3^-$/L) அந்த நீர் அருந்துவதற்கு உகந்ததல்ல என எச்சரித்திருக்கிறது. நைத்திரேற்றிலுள்ள ஒட்சிசனைத் தவிர்த்து நைதரசனின் அளவை மட்டும் கருத்தில் எடுக்கும் நடைமுறையும் உள்ளது. இம்முறையில் லீற்றரில் 10mg க்கு மேலாக நைத்திரேற்றின் நைதரசன் இருப்பது(10அப $NO_3^-$/L) ஆபத்தானதாக குறிப்பிடப்படுகிறது.

தரைக்கீழ் நீரின் அதிகம் மாசாகியுள்ள நீர் யாழ் பிரதேசத்து நீர் என்பது யாவருமறிந்ததே. யாழ் பல்கலைக்கழக விவசாய பீட பேராசிரியர் கலாநிதி. துஷ்யந்தி மிகுந்தன் குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் குடாநாட்டு தண்ணீரில் நைத்திரேற்று அளவு அதிகமாயிருப்பதும் அது புற்றுநோயைத் தூண்டி வருவதும் தெரியவந்தது. 2000 – 2009ம் ஆண்டு காலப் பகுதியில் பலவகைப்பட்ட புற்றுநோய்க்காகவும் 2300 பேர் சிகிச்சை பெற்றனர். தொண்டை மற்றும் இரைப்பை புற்றுநோய்க்காக 159 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களின் பதிவுகளிலிருந்து சுன்னாகம், வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்து புற்றுநோயாளிகளின் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவர்கள் பயன்படுத்திய கிணறுகளின் நைத்திரேற்றின் அளவும் துணியப்பட்டது.

அதிர்ச்சியளிக்கும் விதமாக சுன்னாகம் பிரதேசக் கிணறுகளில் நைத்திரேற்று அனுமதியளிக்கப்பட்ட அளவை விட மிக உயர்வாக இருப்பதும் இப்பிரதேசத்திலேயே தொண்டை மற்றும் இரைப்பை புற்றுநோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் தெரியவந்துள்ளது. சுன்னாகம் பெருமளவில் பயிர்ச்செய்யை மேற்கொள்ளப்படுகின்ற ஊர் என்பது அறிந்ததே. இவ் ஆய்வுக்கு முன் யாழ் பல்கலைக்கழகத்தின் இரசாயனபீடம் மேற்கொண்ட ஒரு ஆய்விலும் கோண்டாவில், உரும்பிராய், வல்வெட்டித்துறை, வேலணை போன்ற விவசாயக் கிராமங்களிலும் கிணற்று நீரில் நைத்திரேற்று அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ் ஆய்வுகள் ஏனைய விவசாயப் பிரதேசங்களுக்குரிய அபாய ஒலியாகக் கொள்ள முடியும்

யாழ் குடாநாட்டில் 60க்கும் அதிகமான பீடைகொல்லிகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றில் ஒன்றான கார்போ.ஃபியூறன் (Carbo – Furan) பூச்சி கொல்லி நஞ்சாக நீண்டகாலமாக பயன்படுத்தப்படுகிறது. கென்யாவில் விவசாயிகள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடைகளைக் கவருகின்ற சிங்கங்களை கார்போ.ஃ.பியூறன் நஞ்சு வைத்தே கொல்கின்றனர் என்பதிலிருந்து அதன் கொல்திறனைப் புரிந்து கொள்ளமுடியும். யாழ் குடாவைப் போலவே கற்பிட்டிக் குடா விவசாயிகளும் கார்போ.ஃ.பியூறன் நஞ்சை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தண்ணீரில் கார்போ.ஃ.பியூறன் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆகவே, கற்பிட்டிக் குடாவின் ஒத்த மண்ணமைப்பைக் கொண்ட யாழிலும் நிலத்தடி நீரில் கார்போ.ஃ.பியூறன் ஊடுருவியிருக்கும் என்பது திண்ணம்.

எகிப்தில் அலெக்காண்ட்ரா பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் முயல்களின் விந்துகளின் உற்பத்தியை கார்போ.ஃ.பியூறன் பாதிப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதைவிட யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படுகின்ற டயொசீனோன்(Diazionon), பூச்சிகொல்லி, அலகுளோர்(alachlor), அட்ராசின்(Atracin), களைகொல்லி நஞ்சுகளும் விந்து கொல்லிகளாக செயற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக ஆண்கள் மலடாகும் போக்கு உலகளவில் அதிகரித்திருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த மனிதர்களின் விந்துகளின் எண்ணிக்கையை விட தற்போது உள்ளவர்களில் விந்துகள் குறைவாகவே உற்பத்தி செய்யப்படுகின்றது. அதுமாத்திரமில்லாமல் வீரியம் குறைந்த, உருத்திரிபுற்ற, கருமுட்டையைத் துளைக்க முடியாதவாறு ஈட்டிமுனை மழுங்கிய விந்துகளும் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. இப்படி விந்துகள் அளவிலும் தரத்திலும் தாழ்ந்து போவதன் சூத்திரதாரிகளில் முதன்மையானது பீடைகொல்லி நஞ்சுகள் தான். குடிநீருடன் உடலைச் சென்றடையும் இவை ஈஸ்திரோஜன்(Estrogen) என்ற பெண் ஓமோனைப் போலவே பாசாங்கு செய்து ஆண்மையைப் பறித்து வருகிறது.

நாம் எமது நோய்களைக் குணப்படுத்துகின்ற மருந்துகளைத் தகுந்த மருத்துவரின் பரிந்துரைச் சிட்டை இன்றி கொள்வனவு செய்ய முடியாது. ஆனால், உயிர் குடிக்கும் பீடைகொல்லி நஞ்சுகளை இங்கு எவரும் எவ்வளவு வேண்டுமானாலும் கொள்வனவு செய்ய முடிகின்றது. யாழ் குடாநாட்டில் வருடாந்தம் விற்பனையாகும் வேளாண் இரசாயனங்களின் சரியான அளவை விற்பனை முகவர்களிடமிருந்து பெறுவது இலகுவான காரியமன்று. எனினும் வேளாண் இரசாயனங்களின் நுகர்வில் யாழ் குடா முன்னணியில் இருக்கின்றது என்பது பலரதும் கணிப்பாக உள்ளது. யுத்தம் முடிந்ததும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறிய போதே வேளாண் இரசாயனங்களின் விளம்பரத் தட்டிகளும் கூடவே விளைநிலங்களில் குடியேறி விட்டன. ஆனால், இதுகுறித்த எந்த விழிப்புணர்வும் அற்றவர்களாக நிலத்தடி நீரை மேலும் மேலும் மாசுபடுத்தி வருகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண் இரசாயனங்களை விட யாழ்ப்பாணத்தவர்களின் குடிநீர் முகத்தைச் சுழிக்க வைத்தவாறே தொண்டையினுள் இறங்குகின்றது. யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் (RDHS) உத்தியோக பூர்வ தகவல்களின் படி 2001ல் யாழ் மாவட்ட சனத்தொகையில்(6,14,431) கிராமங்களில் 66.9% மானோரும் நகரகளில் 73% மானோரும் மாத்திரமே மலசலகூட வசதியுள்ளவர்களாக இருந்தனர். குடா நாட்டின் மொத்த சனத்தொகையில் இன்னமும் 30% மான மக்கள் அடிப்படைத் தேவையான மலசலகூட வசதிகளைக் கொண்டிருக்கவில்லை என்பது வேதனையளிக்கும் உண்மை. இவர்கள் நாள்தோறும் 3500Kg எடையுள்ள மலத்தை வெளிகளில் கழித்துக்கொண்டிருக்கின்றனர். இதில் பெரும் பங்கின் போக்கிடம் இறுதியில் நிலத்தடி நீராகத் தான் இருக்கிறது.

பயன்பாட்டில் உள்ள நீர்த்தடுப்பு மலசலகூடங்களும் பாதுகாப்பானவையல்ல. கழிவுக்குழிக்கும் கிணற்றுக்கும் இடையே ஆக்குறைந்தது 15m இடைவெளி இருக்க வேண்டும். ஆனால் குடாநாட்டின் குடியடர்த்தி அதற்கு இடம் தராததால் இடைவெளி மிகக் குறைவாகவே உள்ளது. குடியடர்த்தி ஒரு சதுர கிலோமீற்றருக்கு 2500 பேர்களுக்கு மேல் தாண்டுகின்ற போது கழிவுக்குழிகளின் நம்பகத் தன்மை சரியத் தொடங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நுண்துளைகளைக் கொண்ட சுண்ணாம்புக் கற்கள் சிறந்ததொரு வடிகட்டியல்ல என்பதால் கழிவு நீர் தடையின்றி கிணற்று நீருடன் சங்கமமாகின்றது. குடிநீரில் நைத்திரேற்றின் அளவு அதிகரித்துச் செல்வதற்கு இந்த மலக்கழிவு நீரும் ஒரு காரணமாகும். அத்தோடு மலக்கழிவுகளான இகோலி(E-Coli) கோலி.்.போர்ம்கள் போன்றனவும் குடிநீரில் தாராளமாக குடியேறுகின்றன. பாசையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறைப் பகுதிகளில் கிணற்று நீரைக் குடிப்பதற்கு மட்டுமல்ல வேறெந்த தேவைக்கும் பயன்படுத்த முடியாத அளவுக்கு கிருமிகள் ஆக்கிரமித்துள்ளன.

மக்கள் ஆரோக்கியம் தேடிவரும் மருத்துவமனைகளும் குடாநாட்டில் ஆரோக்கியமாக இல்லை. இதற்கு யாழ் போதனா மருத்துவமனையே சாட்சி. இங்கு காணப்படும் ஐந்து கிணறுகளில் நான்கில் மலக்கிருமிகள் வாழ்வதாக யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பேராசிரியர் கலாநிதி. ந.சிவராஜா தெரிவித்துள்ளார். மருத்துவமனைகளில் நோயாளிகள் பரிசோதிப்பதற்காக சேர்க்கப்படும் மலம், சிறுநீர், சளி மற்றும் பயன்படுத்தி வீசப்படும் கட்டுத்துணிகள், ஊசிக்குழல்கள், சத்திரசிகிச்சைகளில் அகற்றப்படும் உடல் இழையங்கள் என்று தினமும் ஏராளமான மருத்துவக் கழிவுகள் குவிகின்றன. ஆபத்தான கிருமிகளைக் கொண்டிருக்கக் கூடிய இக்கழிவுகள் எரித்து அகற்றப்பட வேண்டும் (Incinerstion) என்பதும், கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டே வெளியேற்றப்பட வேண்டும் என்பதும் பொதுச்சுகாதார நியதி. ஆனால், யாழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்திலுள்ள பெரும்பாலான அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இத்தகைய கழிவகற்றும் வசதிகள் இல்லை. இவ்வாறு மலக்கிருமிகள் குடிநீர்க் குவளைகள் வரை சேர்வதால் தைபோயிட்டு, செங்கண்மாரி, வயிற்றோட்டம் போன்ற நீரினால் காவப்படும் நோய்களின் தாக்கத்தில் குடாநாடு முதலிடத்தில் உள்ளது. இலங்கையில் தைபோயிட்டுக் காய்ச்சலால் அவதிப்படுபவர்களில் மூன்றில் ஒருவர் (1/3) யாழ்ப்பாணத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடாநாட்டின் சனத்தொகை இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் பத்து லட்சத்தினை தொடவிருக்கும் நிலையில் குடாநாட்டின் நீர்வளத் தூய்மையை மீட்புச் செய்யும் நடவடிக்கைகளை விரைந்து செயற்படுத்தாவிடில் மிகப்பெரும் நீரியல் அவலத்தை நாம் சந்திப்பது தவிர்க்க முடியாது போகும். கடந்த அரையாண்டில் யாழில் 10000 க்கும் மேற்பட்டோர் நீர்த்தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டனர். இதைவிட கடல் நீரின் உள்நுழைவு, சுன்னாகம் மின்நிலைய கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமை போன்ற காரணங்களால் யாழ் குடாவின் கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தடுக்க இரணைமடுக் குள நீரை கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்தன. கிளிநொச்சி மாவட்ட மக்கள் தெரிவித்த எதிர்ப்பே இதற்குக் காரணமாகும். இந்தியாவில் தமிழகமும் ஆந்திராவும் காவிரி நீருக்காக மோதுவதைப் போல இம்மக்களும் மோதிக்கொள்கின்றனர். யாழ்குடாவின் நீர்ப்பிரச்சினையைத் தீர்க்க முன்வைக்கக்கூடிய தீர்வுகள் சில வருமாறு:

- மழைநீரைச் சேமிக்க மழைநீர்த்தாங்கிகளை அமைத்தல்
- குளங்களை ஆழமாக்கிப் புனரமைத்தல்
- நீர்பாசனத் தொழில்நுட்பங்களை விவசாயத்தில் கொண்டுவருதல்
- கழிவுகளை உரிய முறையில் அகற்றுதல்
- உவர் நீரின் உட்புகுதலைத் தடுத்தல்
- பாதுகாப்பான மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல்
- விவசாயத்தில் கிருமிநாசினி, களைநாசினி பாவனையைக் குறைத்தல்

இவ்வாறான நடவடிக்கைகளை நாம் விரைந்த செயற்படுத்தாவிடின் எதிர்காலத்தில் மிகப்பெரும் நீரியல் அவலத்தை யாழ்குடா பிரதேசம் சந்திக்கும் என்பது உண்மை. எனவே துரிதகதியில் விரைந்து செயற்பட்டு ஏற்படவிருக்கும் நீரியல் அவலத்தை இயன்றவரை கட்டுப்படுத்த யாவரும் முன்வர வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வரட்சி நிலையும் அது தொடர்பான முகாமைத்துவ நடவடிக்கைகளும்



ஜோ. யூலியற் றொசானி
உதவி விரிவுரையாளர்
புவியியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

உலகினை அதிரவைக்கும் பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் காணப் படுகின்றன. அந்தவகையில் எரிமலை வெடிப்பு, புவிநடுக்கம், சுனாமி, வெள்ளப்பெருக்கு, வரட்சி, காட்டுத் தீ, சூறாவளி, இடிமின்னல், நிலச்சரிவு என்பற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் ஏற்பட்டு வரும் வரட்சி நிலை பற்றியும், வரட்சி தொடர்பான முகாமைத்துவ முயற்சிகள் பற்றியும் சிறப்பாக இக் கட்டுரையில் ஆராயப்படவுள்ளது. அந்தவகையில் இலங்கையின் வரட்சி நிலைக்கான காரணங்கள் பற்றியும் அதன் தாக்கங்கள் பற்றி இங்கு தெளிவாக ஆராயப்படுவதோடு, வரட்சி முகாமைத்துவ நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் தெளிவாக நோக்கப்படவுள்ளது.

## இலங்கையில் வரட்சி

வரட்சியானது வளிமண்டல ரீதியான இயற்கை அனர்த்தமாகும். இவ் அனர்த்தமானது, நீண்டகால சராசரி மழைவீழ்ச்சியிலும் பார்க்க மழைவீழ்ச்சி குறைவாகக் கிடைக்கும் காலத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துவ தாகவுள்ளது. இலங்கையின் அமைவிடம் வரட்சிக்குக் காரணமாகின்றது. அதாவது இலங்கையில் காணப்படும் நான்கு வேறுபட்ட வகையான இடவிளக்கவியல் தன்மைகள் இங்கு வரட்சியினைத் தூண்டி நிற்கின்றன. அதாவது இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவாகக் காணப்படுகின்றமை, பூமத்திய கோட்டுக்கு அண்மையில் அமைந்துள்ளமை, மத்திய பிரதேசம் மலைகளால் சூழப்பட்டுள்ளமை, இந்திய துணைக் கண்டத்தின் செல்வாக்கு, வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதியில் நிலவுகின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதாவது இத் தீவினைச் சூழ்ந்துள்ள வெப்பமான இந்து சமுத்திரத்தின் மேற்பரப்பில் வீசுகின்ற அயனக் காற்றுக்கள் வெப்பம் மற்றும் ஈரத் தன்மையான வளித் திணிவுகளை மாறி மாறிக் கொண்டுள்ளன. இவற்றிலே வெப்ப வளித்திணிவுகளுடனான காற்று வீசுகின்ற போது வரட்சி ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாக உள்ளது. அத்துடன் இலங்கையானது பூமத்திய கோட்டுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் வெப்ப வலயத்தில் உள்ளடங்குகின்றது. இதனால் அவ்வலயத்தின் வெப்பத் தாக்கம் இலங்கையிலும் காணப்படுகின்றது. வரட்சியின் வகைகள் எனும் போது வளிமண்டலவியல் வரட்சி, நீரியல் வரட்சி, விவசாய வரட்சி, பஞ்ச வரட்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## வரட்சி ஏற்படுவதற்கான காரணங்கள்

### இயற்கைக் காரணங்கள்

**குறைவான மழைவீழ்ச்சி:** வரட்சியை ஏற்படுத்தும் காரணிகளில் குறைவான மழைவீழ்ச்சி மிக முக்கியமான காரணியாகும். பருவ மழை பொய்த்தாலோ அல்லது காலம் தவறிப் பொழிந்தாலோ வரட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக 1935-1937 காலப் பகுதியில் வடபகுதியிலுள்ள இரணைமடுக்குளம் மற்றும் யான் ஓயா நதிகளில் நீர் வற்றியதால் வரட்சி ஏற்பட்டது.

**அதிகரித்த ஆவியாக்கம்**: அதிகரித்த வெப்பத்தின் காரணமாக நில மேற்பரப்பிலும், அதனை அண்மித்து காணப்படுகின்ற பகுதிகளிலுமுள்ள ஈரப்பதனானது ஆவியாக்கத்திற்குட்படுகின்றது. இதனால் நிலமேற்பரப்பானது ஈரப்பதனை இழந்து வரள் நிலமாகின்றது. இது நீடித்துச் செல்கின்ற போது அங்கு வரட்சி ஏற்படுகின்றது.

**வேகமான காற்று**: காற்றானது ஒரு பிரதேசத்திலே வீசுகின்ற போது அங்குள்ள ஈரப்பதனை, அக் காற்றானது தன்னுடன் கொண்டு செல்கின்றது. இதே காற்றானது வேகமாக வீசுகின்ற போது ஈரப்பதனுடன் மேற்பரப்பு மண்ணையும் கொண்டு செல்கின்றது. இதுவே தூசுப் புயலாகின்றது. காற்றானது முதலில் அப் பிரதேச ஈரப்பதனை கொண்டு செல்லும். அதன் பின்னர் அம் மண்ணானது பிடிப்பற்ற தன்மையாகி தூசுப்புயல் உருவாகக் காரணமாகின்றது. இவ்வாறு அந் நிலமேற்பரப்பு தூசுப் புயலால் பாதிக்கப்பட்டு வரட்சிக்குட்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலநிலை மாற்றம்:** உலகிலேற்பட்டு வரும் காலநிலை மாற்றத்தால் வரட்சி அதிகளவில் இடம்பெறுகின்றது. புவியின் வெப்பம் அதிகரிக்கும் போது மழைவீழ்ச்சியின் கிடைப்பனவு குறைவடைகிறது. இதன் தாக்கத்தினை உலர்வலயத்தில் அவதானிக்கலாம். குறிப்பாக அம்பாந்தோட்டை, மன்னார், அம்பாறை பிரதேசத்தில் கூடுதலாக வெப்பம் நிலவப் பெறுவதால் வரட்சி ஏற்படுகின்றது. அதனைவிடக் காலநிலை மாற்றத்தின் விளைவுகளான எல்நினோ மற்றும் லாநினோ செயற்பாடுகள் வரட்சிக்குக் காரணமாகின்றன. இவற்றின் மூலம் வெப்பநிலையானது அதிகரிக்கப்பட்டு வரட்சிக்கு காரணமாகின்றது.

**காட்டுத் தீ:** காட்டுத் தீ ஏற்படுவதாலும், இயற்கைத் தாவரங்கள் மற்றும் காடுகள் அழிவுறுகின்றன. இந்த அனர்த்தத்தினால் நிலமும் பாதிக்கப்படுகின்றது. நெருப்பின் காரணமாக நிலம் ஈரலிப்பை இழந்து வரண்ட நிலையை அடைகின்றது. இலங்கையின் ஹந்தானை மலைப் பகுதியிலும், அம்பாறை மாவட்டத்திலும் அடிக்கடி காட்டுத்தீ ஏற்படுகின்றது. காட்டுத்தீயின் காரணமாக வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரிக்கின்றது. காட்டுத்தீயினால் தாவரப் போர்வை அழிவடைகிறது. ஆகவே அவ்விடங்களில் சூழல்சமநிலையானது சீர்குலைகின்றது. இதன் காரணமாக வரட்சி நிலையானது அதிகரிக்கின்றது.

**மானிடக் காரணங்கள்**

**மிகையான பயிர்ச்செய்கை:** விவசாயம் நிலமொன்றில் அதன் தாங்கு சக்திக்கு மேலாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற போது அவ்விவசாய நிலமானது 'வளமிழக்கின்றது. அதேபோலவே குறித்த பிரதேசத்தில் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் செறிவான பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடுகின்ற போதும் அந் நிலத்தின் முழு வளமும் இழக்கப்பட்டு காலப்போக்கில் அவை தரிசு நிலங்களாகி வரட்சிக்குட்படுகின்றது.

**அளவுக்கதிகமான நீர்ப்பாசனம்:** வரையறையற்று நீரினை உபயோகிக்கின்ற போது எதிர்காலத்தில் அதற்கு தட்டுப்பாடான நிலையே ஏற்படும். சிறந்த வடிகாலமைப்பு மற்றும் முறையான நீர்ப்பாசன நடவடிக்கை மேற்கொள்ளாது விடுகின்ற போது நீரானது வீணாகின்ற சந்தர்ப்பம் அதிகமாகின்றது. இதனைவிட நீரினை மிகையாக நுகர்கின்ற போது காலப்போக்கில் அந் நீரேந்து பிரதேசம் உவராதலுக்குட்பட்டு வரட்சிக்குள்ளாகின்றது.

**காடழிப்பு:** மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து மனிதன் காடுகளுக்கு தீங்கு விளைவித்துக் கொண்டுள்ளான். இலங்கையிலே பல்வேறான அரசியல், பொருளாதார,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி நடவடிக்கைகளினால் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளானது அழிக்கப்படுகின்ற போது அதன் மூலம் இடம்பெறுகின்ற ஆவியுயிர்ப்பானது தடைப்படுகின்றது. இதனால் வளிமண்டலத்திற்கு செல்கின்ற நீராவியினளவு குறைந்து மழையற்ற நிலையினைத் தோற்றுவிக்கின்றது. இது நீண்ட காலப் போக்கில் வரட்சிக்கு காரணமாகின்றது. உதாரணமாக மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் போது உலர் வலயக் காடுகள் அழிக்கப்பட்டன.

**மிகையான கால்நடை வளர்ப்பு**: புல்நிலங்கள் உயர் மேய்ச்சல் தரைகளாக பயன்படுத்தும் போது புற்கள் இழக்கப்படுகின்றன. இதனால் மண் தளர்த்தப்பட்டு வெறுமையான தரைப்பிரதேசம் அதிகரிக்கின்றது. வெளிப்படும் மேல் மண்படையானது காற்றினாலும் மழையினாலும் அகற்றப்படுவதனால் கால்நடைகள் தொடர்ச்சியாக தரையைச் சேதப்படுத்துவதனாலும் நிலச்சீரழிவு ஏற்பட்டு வரட்சிக்குத் தூண்டுதலாக அமைகின்றது.

**சேனைப் பயிர்ச்செய்கை:** இலங்கையில் ஏற்படும் வரட்சிக்குச் சேனைப் பயிர்ச்செய்கையும் ஒரு காரணமாகின்றது. காடுகளிலுள்ள மரங்களை வெட்டி மழை பெய்யும் பருவத்தில் அந்த நிலத்தை கொத்திப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இச்சேனைப் பயிர்ச்செய்கையினால் மண்ணரிப்பு ஏற்படுகின்றது. இதனால் மண்வளம் குன்றிப்போகும், இயற்கைத் தாவரங்கள் அழிவடையும் அத்துடன் இயற்கை சமநிலையானது பாதிப்படைகிறது. இது இறுதியில் வரட்சிக்கு இட்டுச்செல்கின்றது. இலங்கையில் சேனைப் பயிர்ச்செய்கையினால் அதிகமாக வரட்சிக்குட்படும் இடங்களாக மொனராகலை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் மஹியங்கனை போன்ற பிரதேசங்கள் காணப்படுகின்றன.

**சனத்தொகை அதிகரிப்பு:** சனத்தொகை அதிகரிக்கின்ற போது வளங்களுக்கான பற்றாக்குறை ஏற்படுவதோடு அதிகரித்த வளச்சுரண்டலும் ஏற்படுகின்றது. இது வரட்சியினைத் தூண்டுபவையாக உள்ளன. அதாவது நிலம் மற்றும் நீர் வளங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதோடு அவனது தேவைகளுக்காக அதிகரித்த வளச்சுரண்டலும் இடம்பெறுகின்றது. இது வரட்சிக்குக் காரணமாகின்றது.

## வரட்சியினால் ஏற்படும் விளைவுகள்

வரட்சியின் காரணமாக ஏற்படும் விளைவுகள் நீண்ட காலத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. அதிக வெப்பம் காரணமாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் பெறப்பட வேண்டிய மழைவீழ்ச்சியின்மையாலும் வரட்சி நிலைமை தோன்றுகின்றது. இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரஞ்செடிகள் வாடிப்போகும். புவி மேற்பரப்பு நீரும் தரைக்கீழ் நீரும் வற்றிப்போகும். வெப்பம் அதிகமாக காணப்படுவதனால் களிமண் தரை வெடித்துக் காணப்படும். இவ்வாறாக வரட்சியினால் ஏற்படும் பாதிப்புக்களை இரண்டு வகையாக நோக்கலாம். அதாவது மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் என்பனவாகும்.

**கிணற்று நீர் வற்றுதலும் நீர்ப்பற்றாக்குறை ஏற்படலும்:** வரட்சியினால் நீர்நிலைகள் வற்றும், கிணற்று நீர்மட்டம் குறையும், இதனால் குடிநீர்ப் பாதிப்பு ஏற்படும், விவசாய செய்கைகள் பாதிப்படையும். இலங்கையில் வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவில் மாற்றம் ஏற்படாத அதே வேளை குறுகிய காலத்தில் வரட்சியை ஏற்படுத்துகின்றது. இதனால் நீர்ப்பிரச்சனை ஏற்படுகின்றது. இலங்கையில் வடமத்திய பிராந்தியமான குருநாகலில் கிராமப்பகுதிக் கிணறுகளானவை அடிக்கடி வற்றிவிடுகின்றது. இலங்கையில் முக்கிய வனவிலங்கு பூங்காவாகிய யால சரணாலயத்தில் நீர்பற்றாக்குறை காரணமாக ஆபத்து தோன்றியுள்ளது. கடந்த சில மாதங்களாக யால சரணாலயத்தில் வரட்சி காரணமாக சிக்கலான நிலை தோன்றியுள்ளது. யால சரணாலயத்தில் வன விலங்குகளின் இறந்த உடல் காணப்படுகின்றன. இதில் அரிய வகை விலங்குகளும் அடங்கும். சரணாலயத்திற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் நீர் விநியோகம் செய்து வருகின்ற போதும் அது போதாத நிலை காணப்படுகின்றது. சரணாலயத்தில் வரட்சி காரணமாக நீர்நிலைகள் வற்றிவிட்டன.

**நீர்த்தேக்கங்கள் பாதிப்படைதல்:** வரட்சியின் தீவிரத்தன்மையினால் நீர்த்தேக்கங்களில் நீர்வற்றுதலும், சாதாரண நீர் மட்டங்களைவிட குறைவான நீர் மட்டமும் காணப்படும். இலங்கையிலுள்ள 58 பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் கொள்ளளவு வரட்சி நிலைமையினால் 25% வீதத்தால் குறைவடைந்துள்ளது, (http:lliri.sri.edu.drought/impact). இதனால் எமது அன்றாடத்தேவைக்கான நீர்ப்பற்றாக்குறை ஏற்படல்.

**குடிநீர்த் தட்டுப்பாடு** : 2009ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட வரட்சியினால் 8 மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக சுமார் 2 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு நிவாரணம் வழங்க 20மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இவ் வரட்சி காரணமாக மொனராகல மற்றும் அம்பாறை மாவட்டங்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு பொலநறுவை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, புத்தளம், மாத்தளை, குருநாகல் மாவட்டங்களும் ஓரளவு பாதிக்கப்பட்டன. மொனராகல மாவட்டத்தில் 128250 குடும்பங்களை சேர்ந்த 577341 பேர் வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அம்பாறை மாவட்டத்தில் 29792 குடும்பங்களைச் சேர்ந்த 111352


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் பாதிக்கப்பட்டனர். இவர்கள் குடிநீர் இன்றியும் ஏனைய தேவைகளுக்கு நீர்வசதியின்றியும் பாதிக்கப்பட்டுள்ளனர். 2009ம் ஆண்டு மலையகப் பகுதிகளில் கடுமையான வரட்சி நிலை காணப்பட்டது. இதன் காரணமாக பொது மக்களுக்கு குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

**பயிர் நிலங்கள் அழிவடைதல்:** வரட்சி நிலையை காரணம் காட்டி தோட்ட நிருவாகங்கள் தொழிலாளர்களின் வேலை நாட்களை குறைத்தது. இரத்தினபுரி பகுதியில் நிலவிய கடும் வரட்சியினால் இறப்பர் தேயிலை மற்றும் விவசாயப் பயிர்செய்கையாளருக்கு பாரிய நட்டம் ஏற்பட்டது. விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நீர்ப்பாசன வசதியில்லாமல் தவித்தனர். அறுவடையை அண்மித்த காலப் பகுதியில் இந்த வரட்சியின் காரணமாக பயிர்கள் வாடும் சூழ்நிலை ஏற்பட்டது. மாணிக்ககற்கள் தோண்டுவோரும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆகவே இரத்தினபுரி மாவட்டம் இவ் வரட்சியினால் அதிகம் பாதிக்கப்பட்டது. 2009ம் ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கிழக்கு மாகாணத்தில் வரட்சி எற்பட்டது. பெரும் போக வேளாண்மை செய்கையானது இதனால் மிகவும் பாதிக்கப்பட்டது. கூடுதலாக காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் அறிய முடிந்தது.

**மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்**: இவ் வரட்சியினால் குறித்த பிரதேச மக்கள் பாதிக்கப்படுவர். இவ் வரட்சியானது தீவிரமடைகின்ற போது உயிரிழப்புகளும் ஏற்பட வாய்ப்புள்ளன. மக்கள் தமது சொந்த பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வரவேண்டிய நிலையும் தமது வாழ்வாதாரத் தொழிலை சில சந்தர்ப்பங்களில் இழக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

**உணவுத்தட்டுப்பாடு ஏற்படுகின்றது:** விவசாயம் பாதிக்கப்படுவதனால் மக்களுக்கு தேவையான உணவினை பெற்றுக் கொள்ளமுடியாது. உணவிற்கான விலை அதிகரிக்கும் போது எல்லோராலும் வாங்க முடியாத நிலையில் பஞ்சம் ஏற்படுகின்றது. கடந்த 2001 இல் வரட்சியின் போது இலங்கைக்கு உணவுத் தட்டுபாடு ஏற்பட்டது. ஆனால் அனர்த்த முகாமைத்துவ உதவியினால் நிலமை மோசமான நிலைக்கு செல்ல வில்லை.

**நோய்கள் ஏற்படல்**: மக்கள் உணவில்லாமல் போசாக்கு சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது. தொற்று நோய்களும் ஏற்படும். இந் நிலமை இதுவரை இலங்கையில் கடுமையாக இடம்பெறவில்லை. வெப்ப அதிகரிப்பின் காரணமாக மக்கள் மனநோயால் பாதிக்கப்படகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கால்நடை பாதிக்கப்படல்:** வரட்சியினால் குளங்களில் நீரின்மை, வயல்களில் புற்கள் கருகுதல் போன்றவற்றினால் கால்நடைகளுக்கான உணவும் நீரும் கிடைக்காமையினால் அவை உயிர்வாழ முடியாது இறக்கின்ற நிலை ஏற்படுகின்றது.

**நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும்:** இவ் அனர்த்த முகாமைத்துவத்திற்கு அதிக பணம் செலுத்தவேண்டி ஏற்படும். இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருப்பதுடன் ஏனைய நாடுகளிடம் கடன்களை பெற்றுள்ளது. இந்நிலையில் பொருளாதாரம் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. வரட்சியின் தாக்கத்தினால் காலநிலை மூலகங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் ஏற்படுகின்ற காலநிலை மாற்றங்களினால் விவசாயம் பாதிக்கப்படுகின்றது. விவசாய நிலங்களில் வரட்சி கூடி மழைவீழ்ச்சி குறைகின்ற போது வெடிப்புக்கள் ஏற்பட்டு பயிர் செய்யமுடியாத தரிசுநிலங்களாகின்றன. இலங்கையில் 25 மாவட்டங்களிலுள்ள 14 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் வரட்சியினால் பாதிக்கப்படுகின்றனர்.

**வறுமை ஏற்படும் :** இவ்வாறு பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதால் வறுமை ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

## இலங்கையில் வரட்சியைக் கட்டுப்படுத்துவதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள்

பல்வேறு இயற்கை அனர்த்தங்களில் இருந்து எதிர்காலத்தைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும். இயற்கை மற்றும் மனிதர்களின் மூலம் வருகின்ற அனர்த்தங்கள் ஊடாக ஏற்படுகின்ற தாக்கங்களைக் குறைப்பதற்கு கூட்டு முயற்சியினை வலுப்படுத்தல் வேண்டும். இவ்வாறாக இலங்கையில் முக்கியமாக வரட்சியினைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரட்சியைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள்

குறுங்கால முகாமைத்துவ நடவடிக்கைகள்(உடனடியாக செய்ய வேண்டியவை)

- நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதல்
- மரஞ்செடி கொடிகள் மூடுகையை நீக்காதிருத்தல் கடும் வெப்பத்தினால்

நீண்ட கால முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

- குளங்கள் ஏரிகள் என்பவற்றை அமைத்தல்
- மரங்களை நடுதல்
- நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாக்க காடுகளை அழிக்காதிருத்தல்
- நீரை அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே பயன்படுத்துதல்
- மழை நீர் சேகரிப்பு தாங்கிகள் அமைத்தல்
- குழாய்க்கிணறுகளைப் பயன்படுத்துதல்
- மண் பாதுகாப்பு
- குறைவான நீரைப்பயன்படுத்தக் கூடிய பயிர்களை நாட்டல்

**சட்டங்களை உருவாக்குதல்**

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதுடன் தொடர்பான சட்டங்களை உருவாக்குதல். இச்சட்டங்களை மீறி இயற்கை வளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தல்.

- நில அபிவிருத்தியும் பாதுகாப்பும் பற்றிய சட்டங்கள்:-
    1. காணி அபிவிருத்திச்சட்டம் 19 / 1935(1935 ஆம் ஆண்டின் 19ம் இலக்கச்சட்டம்
    2. இலங்கை காணி பயன்படுத்தலுக்கும் அபிவிருத்திக்குமான ஒத்துழைப்புச்சட்டம் 52.·.1982
    3. விவசாய சேவைச்சட்டம் 58/1979
    4. மண் பாதுகாப்புச்சட்டம் 35 / 1981
    5. மகாவலி அதிகாரசபைச்சட்டம் 1981
    6. கமநல சேவைச்சட்டம் 1979
- வன பாதுகாப்புச் சட்டங்கள்.
    1. வனச்சட்டம் 16/1907
    2. மரம் வெட்டுதலைத் தடுப்பதற்கான சட்டங்கள் 9 /1951
    3. தேசிய வனாந்தர பாதுகாப்புச்சட்டம் 1988
- வனவிலங்கு தாவரப் பாதுகாப்பிற்கான சட்டங்கள்
    1. பிராணிகள் தாவரப் பாதுகாப்புச்சட்டம் 2 /1924
    2. தாவரப் பாதுகாப்புச்சட்டம் 10 /1924



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தாவரப் பூங்காச்சட்டம் 3/1961
4. தேசிய பாரம்பரிய அடர்காட்டுச்சட்டம் 3/1988

♦ நீர்ச் சூழல்பாதுகாப்பிற்கான சட்டங்கள்

1. நீர் வனச்சபைச்சட்டம் 29/1964
2. தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச்சட்டம் 12/1974
3. நீர்ப்பாசனச்சட்டம் 32/1946
4. தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்திச்சட்டம் 54/1981

## முடிவுரை

பல்வேறு விதமான இயற்கை அனர்த்தங்களினால் பல விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன. அவை மனிதனுக்கும், சூழலுக்கும் அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆகவே இவ்வாறான விளைவுகளிலிருந்து விடுபட பல்வேறுபட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டியது மிக அவசியமாகும். அந்தவகையில் இலங்கையில் ஏற்படும் வரட்சி நிலை பற்றியும், அதன் முகாமைத்தவ நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாக இங்கு ஆராயப்பட்டுள்ளது. வரட்சியானது நீண்டகால நிலமையில் ஏற்படக்கூடியது. வரட்சியானது ஏனைய அனர்த்தங்கள் போல உடனே எற்படுவதில்லை. நீண்டகாலத்தின் இதன் தாக்கத்தை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு வரட்சியினால் ஏற்படும் விளைவுகளை முகாமைத்துவம் செய்வதில் அதிக காலம் தேவைப்படுகின்றது. இவ்வாறாக இவ் வரட்சி நிலை காரணமாக மனிதர்களுக்கும் சூழலுக்கும் அதிக பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது. இவ் வரட்சியானது மானிட காரணிகளாலும், பௌதிக தன்மைகளாலும் ஏற்படுகின்றது. ஆகவே சூழலுக்கு பாதிப்பை எற்படுத்தக்கூடிய மானிட நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறாக இலங்கை அரசாங்கமும் இவற்றைப் பற்றிய விழிப்புணர்வுகளை வழங்கி அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும்.

## உசாத்துணை நூற்பட்டியல்

Hettiararachchi, H.D, (2004) "**National Disaster Management Policy**", BMICH , Colombo.

Peiris, G.H, (2006) "**SriLanka Challenges of the New Millennium**", Kandy.

Wickramagamage,(2009) "**Seasonality and spatial pattern of rainfall of SriLanka**", International Journal of climatology.

பாலச்சந்திரன், செ. 1998 **"பிரயோகக் காலநிலையியல்"**, புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் காட்டும் முயற்சியாண்மை



கு.தர்மேந்திரன்,
4ம் வருடம்,
முகாமைத்துவ கற்கைகள் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

திருக்குறள் என்பது தமிழின் பழம்பெரும் இலக்கியங்களில் எக்காலத்துக்கும் எம்மக்களுக்கும் பொருந்தத்தக்க கருத்துக்களைத் தன்னுள் கொண்ட ஓர் இலக்கியம். இதனால்தான் மனித வாழ்வின் பாலுள்ள விடயங்கள் திருக்குறளின் பாலுள்ளதாக வும் இதன்பால் இல்லாதவை மனித வாழ்வின்பால் இல்லாதிருப்பதாகவும் திருக்குறள்சார் ஆய்வறிஞர்கள் கருதுகின்றனர். அந்த வகையில் வாழ்வின் அனைத்து அங்கங்களையும் தன்னுள் கொண்ட சிறப்புடையது இந்தத் திருக்குறள். வள்ளுவரைப் பாரதி முதலாய் புகழாதவர்கள் நவீன உலகில் இல்லை. வள்ளுவர் கூறிய நெறிகள் மனிதரை தெய்வீக நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை வள்ளுவரே தனது குறள் ஒன்றில் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் " எனக் குறிப்பிடுகிறார். இங்கு வாழ்வாங்கு வாழ்பவன் என்பது ஆழமான கருத்துடையது. ஒருமனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கான நெறிகளை திருக்குறள் ஆதிமுதல் அந்தம் வரை மீதமின்றி அலசியிருக்கிறது எனலாம்.

மறு முனையில் இன்றைய நவீன யுகத்தில் மொழிக்கல்வியை விடவும் தொழிற்கல்வி தானாகவே முக்கியம் பெறுகின்றது. உலகம் முழுவதும் பரவலாக விரும்பப்படும் ஒரு துறையாக முகாமைத்துவம் (Management) அமைகின்றது. இதன் ஒரு உப பிரிவுதான் முயற்சியாண்மை (Entrepreneurship). அதாவது சந்தர்ப்பங்களைச் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தொழில் முயற்சியில் ஈடுபடுபவரையே முயற்சியாளர் என்பர். உண்மையில் முகாமைத்துவம் என்பது கைத்தொழிற் புரட்சியின் பின்பே தோன்றிப் பெருவளர்ச்சி கண்டது. ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார்த்தை தமிழில் முன்பு வழங்கப்பட வாய்ப்பு இல்லை. ஆனாலும் நிர்வாகம் என்ற விடயம் முகாமையினை ஒத்த ஒரு விடயம்தான். ஆக திருவள்ளுவர் முகாமைபற்றி வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் பொருட்பாலில் இடையிடையே முகாமைத்துவத்திற்கு பொருத்தமான விடயங்களை முன்வைக்கத் தவறவில்லை. வணிகம் என்ற சொல்லை முன்னிலைப்படுத்தி வெளிப்படையாகவே வள்ளுவர் அமைத்த ஒரே ஒரு திருக்குறள்.

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தம் போற் செயின்" 120**

(திருக்குறளும் முகாமைத்துவமும் ஒரு ஒப்பியலாய்வு: பேராசிரியர் தி. வேல்நம்பி)

பிறருடைய பொருளாக இருந்தாலும் அதனைத் தன்னுடைய பொருளைப் போன்று பேணிப் பாதுகாத்து வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்பவனுடைய வணிகம் செழிக்கும் என்கிறார் இக் குறளில் திருவள்ளுவர். தமிழுக்கு இந்த வணிகம் என்றசொல் புதிதன்று. "வணிகன் மகனை ஆகி வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்ப" என்ற கண்ணகி வார்த்தையாக சிலப்பதிகாரத்தில் வணிகன் என்ற சொல் சமகாலத்தில் இடம் பெறுதலையும் காணலாம்.

திருக்குறள் முயற்சியாண்மையைப்பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் முயற்சியைப் பற்றிச் சொல்லிருக்கிறது. வள்ளுவர் கூறிய முயற்சி வேறு நவீன முயற்சியாண்மை என்ற எண்ணக்கரு வேறு. இருந்தாலும் வள்ளுவர் கூறிய முயற்சி நவீன முயற்சியாண்மை என்ற எண்ணக்கருவுக்கு மேலும் வலுச் சேர்ப்பது போல் அமைந்துள்ளது. திருவள்ளுவர் இரண்டே அடியில் கூறியுள்ளார் என்பதற்காக அதற்கு திரிபுபடுத்தி பொருள்கூறிவிட முடியாது. திருவள்ளுவரை எமது போக்கிற்கு வலிந்திழுத்துப் பொருள்கூறுவதை விட திருவள்ளுவரது போக்கில் சிந்தித்து அதை இக்காலத்துக்கு பொருத்தமாக ஆராய்வதுதான் தமிழுக்கும் பெருமை, திருக்குறளுக்கும் பெருமை.

திருவள்ளுவர் முயற்சியாண்மைக்கு வலுச்சேர்க்கும் வகையில் கூறிய கருத்துக்கள் எவை? அவை எவ்வாறு தற்கால உலகின் சிந்தனைகளுக்கு வலுச்சேர்த்துள்ளது என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். தற்போதைய உலகிலுள்ள இத்தகைய முயற்சியாண்மை பற்றி வள்ளுவர் வெளிப்படையாக எதுவும் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் நவீன கருத்துக்களை முன்வைத்துள்ளார். சுருங்கச் சொன்னால் ஒரு புதிய தொழில் முயற்சியாளன் எவ்வாறு இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை வள்ளுவரின் பார்வையில் தூக்கி நிறுத்துகிறது இந்தக் கட்டுரை

இவற்றுக்கு முன் முயற்சியாண்மைக்கு வரையறைகளைக் குறிப்பிடுவது அவசியமாகும். Petter f. Drucker என்பவரின் கருத்துப்படி "எப்போதும் மாற்றங்களைத் தேடுவதோடு கிடைக்கும் வணிக சந்தர்ப்பங்களைச் சரிவரப்பயன்படுத்திக் கொள்ளலே முயற்சியாண்மை". இவ்வகையில் திருவள்ளுவர் முயற்சி பற்றிக்கூறிய கருத்துக்கள் முயற்சியாண்மை என்ற எண்ணக் கருவுக்கு எவ்வாறு வலுச் சேர்ப்பதாய் அமைந்துள்ளது என நோக்கலாம்.

முயற்சியாண்மைக்கு வலுச் சேர்க்கத்தக்க வகையில் ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, காலமறிதல், தெரிந்துசெயல்வகை முதலான பல அதிகாரங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை முன்வைத்த வள்ளுவர் ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில் முயற்சியைப்பற்றி அழகான கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். உண்மையில் ஒருவருக்கு என்ன வளம் இருந்தாலும் அங்கு முயற்சி என்ற ஒன்று இல்லாவிட்டால் தோல்விகளைத் தாங்கி வெற்றியை எதிர் கொள்ளக்கூடிய தொழில் முயற்சியாளர்கள் தோன்ற முடியாது. இக் கருத்து வள்ளுவரின் குறள்களிலும் ஊடுருவியுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

ஆகவே முயற்சியாளன் ஒருவன் எப்போதும் எவ்வாறான முயற்சியுடையவனாக இருக்க வேண்டும் எனபதற்கு வள்ளுவருடைய முயற்சி பற்றிய கருத்துக்கள் உறுதுணையளிக்கிறது. ஒரு முயற்சியாளனிடம் சொத்துக்கள் வளங்கள் இல்லாமல் போகலாம். ஆயினும் ஒரு முயற்சியாளன் சொத்துக்கள் இல்லாத நிலையிலும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து ஊக்கத்தின் மூலம் எதையும் அடைந்து விடமுடியும். முகாமைத்துவத்தில் ஒரு நிறுவனத்தின் இயலளவு என்பது வளங்கள் ஆற்றல்கள் என இரண்டாக வகைப்படும். இங்கு ஊக்கம் என்பது ஒரு ஆற்றலாகும். ஆகவே சொத்துக்களைக் குறைவாகக் கொண்டிருந்தாலும் ஊக்கமிருந்தால் எதையும் பெறலாம். இக் கருத்தை வள்ளுவர் முன்வைத்துள்ளார். அதேவேளை ஊக்கமுடையவர்கள் பணம் போய்விட்டதே என்று கலங்க மாட்டார்கள் என்றும் குறிப்பிடுகின்றார்.

**"ஆக்கமிழந்தேம் என்(று) அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தங் கைதுடையார்."** 593

என்று கூறினார். அடுத்த குறளிலே "ஆக்கம் அதர்வினாய் செல்லும்" என்றார். அதாவது சோர்வற்ற ஊக்கமுடையவனிடம் செல்வம் தானே வழிகேட்டு அவனிடமே செல்லும் என்கிறார்.

எவ்வளவுதான் சொத்துக்கள் இருந்தாலும் ஒரு நிறுவனம் வெற்றி பெற புத்தாக்கம் அவசியம். அத்துடன் நிறுவனத்தின் தலைமைத்துவமும் முகாமைத்துவமும் மற்றும் உபாயத்திட்டமிடலும் அவசியம். ஆனாலும் சொத்துக்கள் அற்ற நிலையிலும் முயற்சியொன்றையே தனக்குத் துணையாகக் கொண்ட முயற்சியாளன் தோற்றுப்போவதில்லை. இதனை வள்ளுவர் சொல்லும் அழகே அழகு. நீர் நிலையிலே நீர அதிகமாக இருந்தால் தாமரை மலரின் உயரம் அதிகரிக்கும். நீர்குறைவாக இருந்தால் அது குறைந்த அளவுக்கே உயரும். ஏனெனில் தாமரை நீருக்கு மேலேதான் பூக்கும் இயல்புடையது. இதனைப் போலத்தான் ஒருவர் உயர்வதற்கு காரணம் உள்ளம் என்கிறார். அதாவது உள்ளத்தின் பாலுள்ள விடாமுயற்சியே இதற்குக் காரணம் என்கிறார். ஆகவே ஒருவரிடமும் ஒரு நிறுவனத்திடம் விடாமுயற்சி உள்ள அளவிலேயே எமது உயர்வு தங்கியிருக்கும்.

**"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்தனைய உயர்வு"**595

எப்போதும் உயர்வைப்பற்றியே சிந்திக்க வேண்டும். ஆனால் உயர்வு கிட்டாமல் போகலாம். அதற்காக அவ்வாறு சிந்திப்பதை நிறுத்தக் கூடாது. என்கிறார். இதனை அழகாக "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் ...." 596 என்றார். நமது கால அப்துல் கலாமின் சிந்தனையைப் போல் அல்லவா இருக்கிறது வள்ளுவரின் சிந்தனை. யானை அம்பு பட்டாலும் ஊன்றி நிற்பதைப் போலத்தான் சிறந்த முயற்சியாளர்கள் தோல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற வேளையிலும் ஒரு போதும் தோற்றுப் போகமாட்டார்கள் மீண்டும் குறிக்கோளுடன் இயங்குவார்கள் என்கிறார். இவ்வாறுதான் IBM கணணிகளுக்குப் போட்டியாக மவுஸ் கொண்டியக்கும் அப்பிள் (APPLE) கணணிகள் விற்பனைக்கு வந்த போது அது பெரும் வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பில்கேட்ஜ் அயராது தன் முயற்சியால் மைக்ரோசொப்ற் விண்டோ (MS WINDOW) என்ற இயங்குதளத்தை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டார்.

யானையின் பலம் என்ன, புலியின் பலம் என்ன? இரண்டினதும் தோற்றம் ஒப்பிடத்தக்கவையா? ஆனாலும் புலி தாக்குகிற பொழுது கூரிய கொம்பினையும் பாரிய உடலையும் உடைய யானை தோற்று ஓடுகிறது. இதனை இப்போது தான் நாம் நாம் டிஸ்கவரி சனலில் பார்க்கிறோம் இதை அன்றே வள்ளுவர் பார்த்திருக்கிறார் அதற்கு அவர் கற்பிக்கும் பாடம் என்னவெனில் முயற்சியுடையது புலி ஆகையால்தான் அது யானையைக் கூடவெல்கிறது. ஆகவே முயற்சி என்ற பலத்தினால் வெல்லக் கூடிய ஒரு தன்மையை வணிக உலகில் பார்க்கலாம். சிறியதொழில் முயற்சியாகத் தோன்றிய சிறிய வணிகங்கள் இறுதியில் பாரிய நிறுவனங்களைத் தோற்கடித்ததை காண்கிறோம்.

ஊக்கமுடைமையில் கருத்துக்களை அழகாக முன்வைத்த வள்ளுவர் இறுதியில் முயற்சியற்றவர்களை மனித உருவத்தில் உள்ள மரங்கள் என்று சாடுகிறார். அதேவேளை மக்கட்பண்பில்லாதவர்களை மரம் போல்வர் என்றும் அன்பில்லாதவர்களை சடப் பொருட்கள் என்றும் சாடியுள்ளமை கவனிக்கத்தக்கது. உண்மையில் நாமே முயற்சிக்காமல் இருந்து விட்டு எமக்குத் தொழிலில்லை பணமில்லை என்று கவலைப்படுவதில் பயனில்லை. முயற்சிக்காமல் இருப்பவை மரங்கள்தான். ஏனெனில் விலங்குகள் கூட தமது இரைக்காய் எந்நேரமும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மையாகும். அத்துடன் முயற்சியானது எப்போதும் செல்வத்தை உண்டாக்கும் என்றார்

**"முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்."** 616

ஒவ்வொரு மனிதனும் எவ்வளவோ முயன்றும் கூட தோற்றுப் போகலாம். அப்படி முயற்சித்துத் தோற்றுப் போவதில் தவறில்லை. ஆனால் அறிவதை அறிந்து முயலாதிருப்பதே குற்றம் இதனை வள்ளுவர்

**"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து**
**ஆள்வினை இன்மை பழி"** 618என்கிறார்.

நாம் முயற்சிக்கின்ற பொழுது கடவுள் நமக்கு துணையாக இல்லாது போனாலும் கூட எவ்வளவு தூரம் எமது உடலை வருத்தி நாம் முயற்சித்தோமோ அந்தளவு தூரம் எமக்குப் பயன்கிடைக்கும். ஆகவே எந்த ஒரு முயற்சியிலும் அர்ப்பணிக்காது கடவுளின் அருள் எமக்கு இல்லை என்று கூறுவதில் பயன் இல்லை. இன்றைய வணிக உலகை வெல்ல ஆயிரம் வழிகள் உள்ளன. ஒருகதவு முடப்படுகின்ற போது ஆயிரம் கதவுகள் திறக்கின்றன.

**"தெய்வந்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலிதரும்"** 619


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவருக்கு விதிதொடர்பில் மிகப்பெரிய நம்பிக்கை உண்டு. என்பது மறுப்பதற்கில்லை. அதனால் தான்

**"ஊழிற் பெருவலியாவுள மற் றொன்று**
**சூழினும் தான்முந்துறும்"** 380

என்ற குறளில் விதியை விட வலுவானது எதுவுமில்லை. விதியை வெல்வதற்கு வேறு வழியை யோசித்தாலும் விதிஅவற்றை எல்லாம் முந்திக் கொள்ளும். என்று விதியை எல்லாவற்றிலும் வலிமை பொருந்தியது என்று குறிப்பிட்ட வள்ளுவர் பெருமான்

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்றுபவர்" 620**

என்கிறார். இங்கு மனந்தளர்வில்லாத முயற்சி செய்வோர் விதியையும் துரத்திவிடலாம் என்று குறிப்பிடுகின்றார் இவ்வாறு எப்போதும் விடாமுயற்சியுடன் தொழிற்படுபவர்கள் இருப்பதால்தான் விடாமுயற்சியுடைய தொழில் முயற்சியாளர்கள் புத்தாக்கங்களைப் படைக்கிறார்கள். இம்முயற்சியாளர்கள் தமக்கு வருகின்ற சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள் ஆவர் இதனை வள்ளுவர் காலம் அறிதல் சரியான சந்தர்ப்பம் அறிதல் என்ற அதிகார வைப்பில் குறிப்பிடுகிறார்.

**"எய்தற்கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கரிய செயல்."**489

வெற்றி பெறுவதற்கு சரியான காலம் வந்து கூடிவிட்டால் உடனே சிறப்பாகச் செய்து விடவேண்டும் என்கிறார். இதன் மூலம் முயற்சியாண்மையின் முக்கிய வரையறையை வள்ளுவர் அண்மித்துள்ளார். அதாவது சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து பலம் பலவீனத்தை அறிந்து தொழில் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று சொல்கின்றார். அதே வேளை சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து தக்க சமயம் வரும் போது கொக்கின் குத்தைப் போல விரைந்து செயற்பட வேண்டும். இதை பிறிதொரு குறளில் கூறுகிறார்.

**"கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து "**490

இதேவேளை காலம் அறிந்து நாம் வணிக முயற்சிகளில் ஈடுபடுகின்ற பொழுது துன்பம் நேரலாம். அப்போது வருந்திச் சோர்ந்து போனால் என்னவாகும்! இதனைக் கருதி வள்ளுவர் "இடுக்கண்வருங்கால் நகுக"621 என்கிறார்.

இவ்வாறாகவே ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, காலமறிதல் முதலியனவற்றில் மட்டுமன்றி தெரிந்துசெயல்வகை, வலியறிதல், தெரிந்துவினையாடல், வினைத்திட்பம் , வினை செயல்வகை, பொருள் செயல்வகை முதலான அதிகாரங்களும் முயற்சியாண்மைக்கு நன்மை பயக்கும் கருத்துக்களைக் கொண்டுள்ளன.

முடிவாக, முயற்சியாண்மை என்ற கருத்தை முதன்முதல் முன்வைத்தவர் வள்ளுவர் என்று சொன்னால் அதை நம்பிவிடுமளவுக்கு முட்டாள்கள் யாரும் இல்லை என்பதனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை அவ்வாறு சொல்லிவிட்டால் அதுவே உலகத்தின் மிகச்சிறந்த பொய்யாகவும் வள்ளுவருக்குச் செய்த மாபெரும் துரோகமாகவும் இருக்கும். எனவே வள்ளுவர் இப்படியும் சொல்லியிருக்கிறார் என்று கூற முடிகிறதே தவிர இதைத்தான் கூறியிருக்கிறார் என்று கூறிவிட முடியாது. ஆனால் 2000 ஆண்டுகள் பழைமையான கருத்து நவீன அறிவியற் கற்கையோடு எப்படி ஒத்துப் போகிறது என்பதைக் காட்ட முயற்சித்துள்ளது இக் கட்டுரை. அத்துடன் தமிழில் ஆரம்பத்தில் தோன்றிய ஒரு அறிவியல் சார் இலக்கியம் என்ற கருத்தை மேலும் அழுத்திக் கூற முடிகின்றது. தமிழ் இலக்கியங்கள் தனியே உணர்வுகளைப்பாடவில்லை. இயற்கையைப்பாடவில்லை. அறிவியலைக் கூடப் பாடியிருக்கிறது என்பது உண்மையாகும். தொழில் நுட்பமே இல்லாத காலத்தில் இத்துணை அழகாக பாடிய வள்ளுவர் தற்போது இருந்திருந்தால் எவ்வளவு செய்திருப்பார், எண்ணும் போது வியப்பாக உள்ளது.

## மிதித்தலும் மீதிருத்தலும்

மிதிபட்டுக்கிடப்பதே உன் விதி
என் மேற்படவிருந்த முட்களையும்
கற்களின் விளிம்புகளின் சிராய்ப்புகளையும்
உன்னில் தாங்கினாய்
என்றாலும்
மிதிபட்டுக்கிடப்பது தான் உன் விதி
அனலால் கனன்றெரியும்,
என் கால்களை ஏந்தும்
பூமகளின் சினத்தீயையும் நீயே
ஏற்றுக்கொண்டிருக்கிறாய்
இருந்தாலும் மிதிபட்டுக்கிடப்பதே தான் உன் விதி
உன்னை அரியாசனத்தில் வைத்து அழகுபார்க்க
அயோத்தியின் பரத குமரன் அல்லன் நான்
எந்நாளும்
மிதிபட்டுக்கிடப்பதே உன் விதி!

என். கேதீஸ்வரன்
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிறுவர் உரிமைகள்



கோபாலபிள்ளை வினோ.
உதவி விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

**சி**றுவர்கள் எனப்படுவோர் சர்வதேச ரீதியான சிறுவர் உரிமை சமவாயத்தின் படி 18 வயதிட்குட்பட்ட மனிதப்பிறவி ஒவ்வொருவரும் சிறுவர் எனக் கருதப்படுவர். ஒவ்வொரு நாடும் தனது சிறுவர் தொடர்பான தேசிய சட்டத்தின்படி பராயமடையும் வயது முன்னதாகவே வரையறுக்கப்பட்டிருந்தாலன்றி மேற்படி வயதெல்லையானது சிறுவரைக் குறிக்கின்றது. அத்துடன் சர்வதேச சமவாயம் ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் வெவ்வேறான வயதெல்லை யினை வைத்திருப்பதற்கு அனுமதி க்கின்றது. இவ் அடிப்படையில் இலங்கைச் சட்டங்களிலும் வெவ்வேறான வயதெல்லையானது வெவ்வேறான சட்டங்களினால் கடைப்பிடிக்கப் படுகின்றது.

1.குற்றவியல் கோவை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம், பராமரிப்புச் சட்டம் என்பனவற்றில் 18 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. சிறுவர் இளம்பராயத்தினர், பெண்கள் தொழிற்சட்டம், தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம், சிறுவர் இளம்பராயத்தினர் தீங்குமிக்க வெளியீடுகள் சட்டம் என்பனவற்றில் 14 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்கள் என வரையறுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1997 100/35 இலக்க வர்த்தமானி அறிக்கைக்கமைவாக கட்டாயக்கல்வி 14 வயது வரையிலாகும்.

4. 1956 47 ஆம் இலக்க பெண்கள், வயது வந்தவர்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவது தொடர்பான சட்டத்தின்படி 14 வயதிற்கு குறைந்தவர்கள் சிறுவர்களாக கருதப்படுகின்றார்கள்.

சிறுவர்கள் என்ற தரப்பினர் இரண்டாம் உலக மகாயுத்தம் வரையில் கவனத்தில் கொள்ளப்படாத குழுவினராகவே காணப்பட்டனர். சிறுவர்களுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியன மிகமிக அத்தியாவசியமான தேவையாகும். இச்சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் பாதுகாக்கப்படுதல் என்பது 1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் வருகையுடனே ஆரம்பித்தது.

சிறுவர் உரிமைகள் என்றால் என்ன என்று பார்க்கின்றபோது சிறுவர்களும் மனிதப்பிறவிகள் என்ற வகையில் மனித உரிமைகள் அனைத்தும் சிறுவர்களுக்கும் உரித்தானதாகும். சிறுவர் உரிமைகள் என்றால் சிறுவர்களுக்கு சிறப்பான வாழ்க்கையினை வாழ்வதற்கு அவசியமான நிபந்தனைகளாகும். அதாவது சமூகத்தில் சிறுவர்களுக்கு உரித்தாக வேண்டிய வரப்பிரசாதங்கள் சிறுவர் உரிமைகளாகும். பிரத்தியேகமான முறையில் சிறுவர்களுக்கேயுரிவை என்று சர்வதேச ரீதியாக ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் சிறுவர் உரிமைகளாகும்.

முதன் முதலில் 1924 ஆம் ஆண்டிலேயே சிறுவர் உரிமை தொடர்பான கொள்கை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 1959 ஆம் ஆண்டு பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக ஐக்கிய நாடுகள் சபையினால் விரிவாகவும் தெளிவாகவும் சிறுவர்களுக்குரிய உரிமைகள் தொடர்பான கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இது 1924 ஆம் ஆண்டின் பிரகடனத்தினைவிட அதிக அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்தது.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் 1989 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான கொள்கைப்பிரகடனத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது. 1992 ஆம் ஆண்டு மேற்படி உரிமைகள் தொடர்பான விதிமுறைகளை இலங்கையும் நடைமுறைப்படுத்துவதாக உறுதி செய்து ஏற்றுக் கொண்டது.

- ❖ வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை.
- ❖ பிறப்பின்போது பெயரொன்றையும், இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை.

- பெற்றோரிடமிருந்து தம்மை தனிமைப்படுத்தாதிருப்பதற்கான உரிமை
- கருத்தை வெளிப்படுத்துவதற்கும், சிந்திப்பதற்கும், சமயமொன்றைப் பின்பற்றுவதற்குமான உரிமை.
- போதுமான கல்வியினைப் பெறுவதற்கான உரிமை.
- சமூக உரிமை, தனியுரிமை, சுகாதார வசதிகள் பெறும் உரிமை
- பொருளாதார சுரண்டலிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை.
- பாலியல் வன்புணர்வுகள் மற்றும் சித்திரவதை குரூரமான தண்டனைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளும் உரிமை.
- பாதுகாப்பு மற்றும் சாதரண வழக்கு விசாரணைக்குள்ள உரிமை

சிறுவர் உரிமைகள் முக்கியப்படுத்தப்படுவதற்கான காரணங்கள்.

- உடலாலும் உள்ளத்தாலும் முதிர்ச்சி அடையாதவர்களாக இருப்பதனால்.
- சிறப்பான பராமரிப்பும் ஆதரவும் பெறும் உரிமை சிறுவர்களுக்கு அவசியமாக இருப்பதனால்.
- சமுதாயத்தில் பிள்ளைகள் தமக்குரிய முழுப்பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான பாதுகாப்பும் ஒத்தாசையும் தேவை என்பதனாலாகும்.
- வயது வந்தவரின் கீழ் தங்கியிருப்பதனால்.
- குடும்பச் சூழலில் அவர்களுக்கு அன்பும் பற்றுணர்வும் உள்ள சுற்றாடல் தேவை என்பதனால்.
- சுயமாகவும், சுதந்திரமாகவும் சிந்திப்பதற்கு போதுமான ஆற்றல் இல்லாதிருப்பதன் காரணமாக
- சமூகத்தில் வாழும் கபடமற்ற பிரிவினராக இருப்பதனால்
- இலகுவில் வழிதவறி செல்லக்கூடியவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் இருப்பதனால்

## சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் காணப்படும் சட்ட ஏற்பாடுகள்.

18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு உரிமைகள் கிடைப்பதனை உறுதிசெய்து கொள்ளும் முகமாகவும் பிள்ளைகள் வளருகின்ற காலத்தில் கவனிப்பும் உறுதுணையும் கொடுப்பதன் மூலமும் அவர்களது எதிர்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்விற்கான பாதையை தீர்மானிக்க கூடியதாக வளர்க்க வேண்டும் என்பதுடன் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 52 உறுப்புரைகளில் தெளிவாகக் கூறப்பட்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவர் உரிமைகளின் மூலமாக பாதுகாப்பு, உடல்வளர்ச்சி, போஷாக்கு, பராமரிப்பு போன்றவற்றினை மேலும் உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசும் இச்சாசனத்தினை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டுள்ளது. இலங்கை அரசானது 1991 ஆம் ஆண்டு சிறுவர் உரிமை சாசனத்தினை அங்கீகரித்தது.

இலங்கையில் 1998 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 5ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் சிறார்களின் நலன் மற்றும் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளுக்கு பொறுப்புவாய்ந்த ஓர் அதிகாரசபை காணப்படுகின்றது. இத்தேசிய சிறுவர் சபையானது நாட்டின் தேசிய கொள்கைக்கு உதவும் வகையில் சிறுவர் வன்முறைக்கு எதிராகவும், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாகவும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் அரசின் முக்கியதோர் அமைப்பாகக் காணப்படுகின்றது.

அது மட்டுமின்றி சகல பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறுவர் மீதான பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைந்துள்ளது. தொழில் திணைக்களம், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவை ஆற்றத்தக்கதான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறுவர் வாழ்வு வளம்பெற அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு அமைப்புக்களை நிறுவி அவர்கள் உரிமையுடன் இன, மத, பேதமற்ற எதிர்கால வாழ்வினைக் கட்டியெழுப்ப உதவியாக அமைகின்றன.

1977 இல் கொண்டுவரப்பட்ட கட்டாயக் கல்வி சட்டம் 5-14 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு முக்கியமானது. இது தவிர அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிறுவர் உரிமை தொடர்பான பல விழிப்புணர்வுகளை நடாத்தி வருகின்றது.

## இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் செயற்பாடுகள்.

### 1. சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தைத் திணைக்களம்

#### 1.1 சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல்.

சர்வதேச சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு ஏற்ப சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களையும், முதியவர் சமூகத்தினரையும் விழிப்பூட்டுவதற்காக இத்திணைக்களம் சேவை வழங்குகின்றது. நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக வழிநடத்தும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக எல்லாப் பிரதேச செயலகங்களிலும் சிறுவர் உரிமை மேம்படுத்தல் அதிகாரி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் இவ் அதிகாரியிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

**1.2. பாணந்துறை பரந்தை என்னும் இடத்தில் அமைந்துள்ள சிறுவர் பயிற்சி உளவளத்துணை நிலையம்.**

பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதனாலும் பிற சமூகக் காரணங்களினாலும் உள ரீதியான பாதிப்பிற்கு உள்ளான சிறுவர்களுக்கு தேவையான உளவளத்துணை மற்றும் தொழிற்பயிற்சியினை வழங்கி அச்சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து மீண்டும் சமூகத்தில் சேர்ப்பதற்கான சிறப்பான நிலையமொன்றாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பெண்பிள்ளைகளுக்கு மாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் ஐந்து மாதங்களுக்கு மாத்திரமே சேர்க்கப்படுவார்கள். ஒரு தடவையில் 20 சிறுவர்களையே இதில் சேர்க்க முடிகின்றது. சிறுவர் உரிமை அதிகாரி மற்றும் நன்னடத்தை அதிகாரி ஆகியோரின் சிபார்சின் அடிப்படையிலே தலைமை அலுவலகத்தின் மூலம் இந்நிறுவனத்திற்கு சிறுவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள்.

**1.3 அர்ப்பணிப்புக்கான பெற்றோர் வேலைத்திட்டம்**

சிறுவர் இல்லங்களிலே இருக்கின்ற சிறுவர்களிடையே அல்லது சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்துள்ள சிறுவர்களிடையே வருமானத்துணை ஒன்றுடன் தாய் அல்லது தந்தை அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் ஒருவரிடம் தங்கவைக்கின்ற சிறுவர்களை அவ்வாறான குடும்ப சூழ்நிலை ஒன்றுடன் தங்கவைப்பதற்காக இவ்வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அந்தந்தக் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூபா 1000 வழங்கப்படுகின்றது. உதவியாளர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடை அரச நிதியுதவி என்பனவற்றைக் கொண்டே இப்பண உதவியானது வழங்கப்படுகின்றது. சிறுவர் ஒருவர் 18 வயதினை அடையும் வரை இவ் உதவி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. தலைமை அலுவலகத்தின் மூலமே இத்திட்டம் நேரடியாக வழிநடத்தப்படுகின்றது.

**1.3. செவசரண அர்ப்பணிப்பாளர் உதவித்திட்டம்**

5-15 வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலைக்குச் செல்கின்ற வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இத்திட்டத்தினூடாக மாதமொன்றுக்கு குறைந்தது ரூபா 500 வீதம் மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு பண உதவி வழங்கப்படுகின்றது. தேசிய சேமிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியின் சேமிப்புக் கணக்கு புத்தகமொன்றினூடாகவே இவ் உதவி வழங்கப்படுகின்றது. இவ்வேலைத் திட்டம் நேரடியாகத் தலைமை அலுவலகத்தினூடாகவே செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 1.4 சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட புனருத்தாரண சேவை

நன்னடத்தைச் சேவைச் சட்டத்துடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்ட சிறுவர்கள் மற்றும் முதியவர்களைச் சிறையில் அடைக்காமலும் பிற தண்டனை வழங்காமலும் அவர்கள் வாழ்கின்ற சூழலிலே வைத்துப் புனருத்தாரணம் செய்வதே நன்னடத்தை சேவையாகும். சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட புனருத்தாரண முறையினால் தனிப்பட்ட ரீதியாக குற்றமிழைத்தவருக்கும் பொதுவாக நாட்டிற்கும் பரந்த அளவிலான பொருளாதார சமூக அனுகூலம் ஏற்படும் தனிநபர் ஒருவர் சிறையில் அடைக்கப்பட்டால் தனிப்பட்ட வகையில் அவனுக்கும் அவளுக்கும் அவரின் குடும்பத்திற்கும், நாட்டிற்கும், நாட்டின் எதிர்கால தலைவர்களான சிறுவர்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

### 1.5 பொருத்தமான நபர் ஒருவரின் கண்காணிப்பிற்கு உட்படுத்தல்

சட்டத்துடன் முரண்பாட்டினை ஏற்படுத்திக்கொண்ட சிறுவர்களை நீதிமன்றமொன்றின் கட்டளைக்கு அமைய பொருத்தமான நபர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இருக்க வைக்கலாம்.

### 1.6 இரட்டைக்குழந்தைகளுக்கான நிதியுதவி.

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களில் பிறக்கின்ற இரட்டைக் குழ்ந்தைகளுக்காக இரட்டைக் குழந்தை நிதியுதவி வழங்கப்படுகின்றது. இவ் உதவி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஊடாக நேரடியாகப் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. இரட்டைக்குழந்தை பிறந்து மூன்றுமாத கால எல்லைக்குள்ளேயே இவ் உதவியினைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

### 1.7 வைத்தியச் செலவு நிதியுதவி

குறைந்த வருமானமுள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு, பாரதூரமான நோய்நொடிகளினால் பீடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இந்நிதியுதவி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. அதற்காக நோய் தொடர்பாக அங்கீகாரம் பெற்ற வைத்தியர் ஒருவரின் சான்றிதழும், அனுமதியும் தேவைப்படுகின்றது. சிறுவர் உரிமை மேம்படுத்தல் அதிகாரிகளின் அறிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு உச்ச அளவு ரூபா 15000 வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.8 திடீர் விபத்துக்களுக்கான நிதியுதவி

குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் திடீர் விபத்து சந்தர்ப்பங்களை முகங்கொள்ள நேரிடும் போது அதனைக் கருத்திற்கொண்டு அக்குடும்பங்களின் சிறுவர்களுக்கு இந்நிதியுதவி ஒரு முறை வழங்கப்படும் இந்நிதி உதவியின் உச்சப் பெறுமானம் 15000 ஆகும்.

### 1.9 சிறுவர்களைத் தத்தெடுத்தல்.

இத்திணைக்களத்திற்கு அநாதையான, கைவிடப்பட்ட சிறுவர்களைத் தத்தெடுப்பதற்காக எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். உள்நாட்டு விண்ணப்பதாரர்கள் இல்லாவிட்டால் மாத்திரம் வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்கு உதவி பெற்றுக் கொடுக்கப்படும். மாவட்ட நீதிமன்றம் ஒன்றினால் பெற்றுக்கொடுக்கப்படும் தத்தெடுத்தலுக்கான கட்டளை ஒன்று மாத்திரமே இலங்கையினுள் செல்லுபடியாகும்.

1941 ஆம் அண்டின் 24 ஆம் இலக்க சிறுவர்களைத் தத்தெடுத்து வளர்க்கும் கட்டளைச் சட்டத்தின் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சர்வதேச ரீதியாக சிறுவர்களைத் தத்தெடுத்து வளர்த்தலின் ஹேக் உடன்பாட்டின் சட்டதிட்டங்களுக்கும் இணங்கியும் இவ்விடயம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 1.10 சான்றுபடுத்தப்பட்ட பாடசாலை

திணைக்களத்தின் சான்றுபடுத்தப்பட்ட பாடசாலைகள் மாகொலை, ஹிக்கடுவ, கெப்பட்டிப்பொல ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம் மூன்று பாடசாலைகளும் ஆண்களுக்குரியதாகும். பெண்பிள்ளைகளுக்கு ரம்முதுகலையில் இவ்வாறான பாடசாலை ஒன்றுள்ளது. அனுமதியளிக்கப்பட்ட பாடசாலை மக்கொனை என்னும் இடத்தில் அமைந்துள்ளது. திணைக்களத்தின் நிதி உதவியுடன் நடாத்தப்படும் அப்பாடசாலை ரோமன் கத்தோலிக்க சிறுவர்களுக்குரியதாகும். இப்பாடசாலைகளுக்கு 12-15 வயது சிறுவர்களே சேர்க்கப்படுகின்றார்கள். இவர்கள் நீதிமன்றின் கட்டளையின் கீழே சோத்துக்கொள்ளப் படுகின்றார்கள்.

சேர்க்கப்படுகின்ற சிறுவர்களில் ஒழிந்துள்ள ஆற்றல்களை இனங்கண்டு அவற்றுக்கமைய தொழிநுட்ப பயிற்சி, கட்டட வேலை, மின்னியல் வேலை, உலோக வார்ப்புவேலை, ஒட்டல் வேலை, நெசவு வேலை போன்ற தொழிநுட்பப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் மேலதிகமாக வெளியேயுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு மேலதிகமாகக் கல்வி வழங்கப்படுகின்றது. இச்சிறுவர்களை மீண்டும் சமூகத்தில் சேர்க்கும் செயல் முறையும் இந் நிறுவனத்தின் மூலமே நேரடியாக மேற்கொள்ளப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.11 பின்பொறுப்பு நிலையங்கள்

சான்றுப்பள்ளியை விட்டு வெளியேறிய பின்னர் அங்கு கிடைத்த தொழில் பயிற்சியை மேலும் முன்னேற்றிக் கொள்வதற்கும், விடுதியிலிருந்து தொழிலொன்றை மேற்கொள்வதற்கும் அவ்வாறான பிள்ளையொன்றுக்குத் தேவைப்பட்டால் அதற்கு வசதியை வழங்கும் விதத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பின் பொறுப்பு நிலையங்களுக்கு திணைக்களம் நிதியுதவி வழங்கும்.

### 1.12 அனுமதியளிக்கப்பட்ட இல்லங்கள்

சான்றுபடுத்தப்பட்ட பாடசாலை ஒன்றுக்கு பயிற்சிக்கு செல்லவேண்டிய தேவை அற்றது எனினும் தம் வீட்டுச் சூழல் புனருத்தாரண நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்ற சந்தர்ப்பங்களில் அவ்வாறன சிறுவர்கள் அனுமதிக்கப்பட்ட இல்லங்களுக்கு அனுப்பப்படுவர். இதற்காக பொருத்தமான பிரத்தியேக இல்லங்கள் மற்றும் வேலைத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### 1.13. தடுத்து வைத்தல் இல்லம்

சிறுவர்களை சிறுவர் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கும் வரை அல்லது அவ்வாறு கொண்டு சென்று அதன் பின்னர் நீதிமன்றம் தீர்மானம் எடுக்கும் வரை அவர்களைத் தடுத்து வைக்கும் இடங்களை தடுத்து வைக்கும் இல்லங்கள் என்று அழைக்கப்படும். ஒவ்வொருவர் தொடர்பாகவும் மிகவும் பொருத்தமான புனருத்தாரண வேலைத்திட்டம் தொடர்பாக தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு இலகுவாகும் விதத்தில் இங்கு சிறுவர் தொடர்பான விடயங்கள் தேடிப்பார்க்கப்படுகின்றன.

ஆண்பிள்ளைகளுக்ககாக கிதுலம்பிட்டி(காலி), பன்னிப்பிட்டிய, அனுராதபுரம் என்னும் நகரங்களில் மூன்று இல்லங்களும் பெண்பிள்ளைகளுக்கு ரம்முதுகலையில் ஒரு இல்லமும் அமைந்துள்ளன. திணைக்களத்தின் நிதி உதவியுடன் தொண்டர் அமைப்புக்களினூடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இல்லங்கள் இவை.

### 1.14 அநாதையாக, கைவிடப்பட்ட, துணையற்ற துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான சேவைகள்.

இத்தகைய சிறுவர்களுக்கு பாதுகாப்பும் அடைக்கலமும் அமைத்துக் கொடுக்கும் நோக்கில் இத்திணைக்களத்தின் நிதி உதவி உபகாரங்களைப் பெற்று தொண்டர் நிறுவனங்களினால் சிறுவர் இல்லங்கள் நடாத்தப்படுகின்றன. இல்லங்களில் வசிக்கும் சிறுவர்களுக்கு திணைக்களம் மாதாந்த உதவித் தொகை ஒன்றை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிதி உதவியினைப் பெறுவதற்கு 13 வயதிற்கு குறைந்த சிறுவராக இருத்தல் வேண்டும்.

தற்போது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இல்லங்கள் நாடு பூராகவும் 253 உள்ளன. இதில் சிறுவர்களுக்கும் பாடசாலைப் பொதுக்கல்வியினை பெறுவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெற்றோர்களுடன் வீட்டில் வசிப்பது மிகவும் நன்றாகும். பெற்றோர் இருவரும் இறந்து போனதன் காரணமாக அநாதைகளாக அல்லது பெற்றோரால் கைவிடப்பட்டமையினால் அல்லது அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படாது அடைக்கலம் இல்லாமல் போன சிறுவர்கள் மாத்திரமே இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### 1.15 அரச பொறுப்பேற்றல் சிறுவர் இல்லங்கள்.

ஒரு குறுகிய காலப்பகுதிக்கு அல்லது தொடர்ந்து தனது வீட்டில் வாழ்வதற்கான அதிஸ்ரத்தினை இழந்த சிறுவர்களை பொறுப்பேற்றுப் பாதுகாப்பதற்கான திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் நடாத்தப்படும் சில சிறுவர் இல்லங்கள் உள்ளன. இப்படியான பொறுப்பேற்றல் இல்லங்கள் பாணந்துறை காலி பண்டாலவெல, யாழ்ப்பாணம், கண்டி அனுராதபுரம் மீகலாவை (குருநாகலை), குருவிட்டை (இரத்தினபுரி) ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலைகளில் அல்லது தெருவோரங்களில் கைவிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் பல்வேறு அனர்த்தங்களுக்குள்ளான சிறுவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இச்சிறுவர்களுக்கு அவர்களின் பெற்றோர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் மீண்டும் ஒப்படைப்பதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு மேற்கொள்ளப்படாதவிடத்து தொண்டர்சேவை சிறுவர் இல்லங்களிடம் ஒப்படைக்கப்படுவர். குமரப்பருவத்தினை அடைந்த பின்னர் சமூகத்தில் சேர்க்கப்படுவர்.

### 1.15. தொழில்பயிற்சி நிலையங்கள்

தொண்டர் இல்லங்களில் இருக்கின்ற பாடசாலைக்குச் செல்லும் வயதினைக் கடந்த சிறுவர்களுக்கு தொழிநுட்ப, விவசாயத்துறைகள் சார்ந்த பயிற்சிகளை வழங்கும் நோக்கில் தொழில்பயிற்சி நிலையங்கள் திணைக்களத்தின் நிதி உதவியுடனும், தொண்டர் சேவை ஒழுங்கமைப்புக்களின் மூலமும் இவ்வாறான நிலையங்கள் நடாத்தப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.16. போஷாக்கு நிலையங்கள்

அரச பொறுப்பேற்றல் இல்லங்கள், தொண்டர் சிறுவர் இல்லங்களில் இருக்கின்ற சிறுவர்களிடையே மந்த போஷாக்கினால் பாதிப்படைந்துள்ள சிறுவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு அவர்களைப் புனருத்ததாரணம் செய்வதற்காக தொண்டர் சேவை ஒழுங்கமைப்புக்களின் மூலம் போஷாக்கு நிலையங்கள் நடாத்தப்பட நான்கு நிலையங்கள் தற்போது காணப்படுகின்றது.

### 1.17. சிறுவர் பூங்காக்களும் பகல் பராமரிப்பு நிலையங்களும்.

தொழிலில் ஈடுபட்டுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளை பகல் காலத்தில் கண்காணிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான தொண்டர் சேவை ஒழுங்கமைபப்புக்களின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காக்கள் அல்லது பகல் பராமரிப்பு நிலையத்தினை மேற்பார்வை செய்தல், நிதியுதவி வழங்கல் என்பனவும் இத்திணைக்களத்தின் பிரதான பணியாகும்.

### 1.18. கட்டாக்காலியாகச் செல்லும் சிறுவர்களுக்கான நிலையங்கள்.

வீடுவாசல் ஒன்று இல்லாமல் இடத்துக்கிடம் அலைந்து திரியும் சிறுவர்களை புனருத்தாரணம் செய்வதற்கான நிலையமொன்று ஹிக்கடுவையில் -ஹல்பாதொட்டை என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்து. சுயதொழில் செய்யக்கூடிய கற்கை நெறிகளைக் கற்பித்து கல்வி வழங்குவதனூடாக நல்வழிப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்காள்ளப்படுகின்றன. இவ்வாறான நிலையங்கள் சிறுவர் நிழல் (லமா செவன) என அழைக்கப்படுகின்றன.

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

இலங்கை அரசாங்கமும் சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தினை ஒத்த சிறுவர் உரிமைப்பிரகடனம் ஒன்றை 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 12ம் திகதியன்று வெளியிட்டது, அத்துடன் சிறுவர் உரிமையினைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் என 1998 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்கச் சட்டத்தின் வாயிலாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உருவாக்கப்பட்டது. இச்சபை மூலம் சிறுவர்களின் உரிமைகளின் பாதுகாப்பினை மேம்படுத்த பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் பல சிறுவர் உரிமை மீறல்களும் ஏற்படும் வடிவத்தினை இனங்கண்டு தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்கின்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் மூலம் 1929 என்ற தொலைபேசி இலக்கம் விஷேடமாக சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களை கூறுவதற்காக இச்சிறுவர் அதிகார சபையினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டிருக்கின்றது. கடந்த வருடம் இதன் மூலம் 1500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் விஷேட தொலைபேசி மூலமாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரிக்கவென இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கென 25 மாவட்டங்களில் 50 அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இன்னல்களை எதிர்நோக்கும் சிறுவர்கள் தொடர்பில் குறித்த அதிகாரிகள் வாராந்தம் அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையில் சிறுவர் உரிமைகளின் நிலை

இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பல்வேறான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இவைகள் இன, மத பேதமற்ற எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் நடாளாவிய ரீதியில் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகம் எண்ணற்ற வகையில் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உதாரணமாக அண்மையில் வித்தியா மற்றும் ஷேயா மீதான கொடூரமான வன்புணர்வுக் கொலை நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அடிக்கடி பாடசாலை மாணவர்கள் மீதான வன்முறையும், பாலியல் துஷ்பிரயோகமும் மற்றும் உள உடல் ரீதியான தண்டனைகள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள் எல்லையற்றுக் காணப்படும் நிலையானது சிறுவர்கள் மீதான பரிவுணர்வினை பெரியோர்கள் பாதித்து விட்டார்கள் என்ற நிலையினை உருவாக்கிவிட்டது.

14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் அனைவரும் கட்டாயம் பாடசாலைக் கல்வியை கற்றே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இருந்த போதிலும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் பள்ளி செல்லாது வீணே காலத்தினைக் கழிப்பதும், தொழில்கள் செய்யப் பயன்படுத்துவதும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. யுத்தம், பொருளாதார நெருக்கடிகள் போஷாக்கு பற்றாக்குறை, மற்றும் கடத்தல், மோசடி, போன்ற பல காரணங்களாலும் பாலியல் ரீதியான வன்முறைகள், சிறுவர் ஊழியம் போன்ற சுரண்டல்களாலும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னர் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்கள் பல்வேறு வடிவங்களில் தலைதூக்கியுள்ளதனை அவதானிக்க முடிகின்றதுடன் இலங்கையானது எதிர்கொள்ளும் சவால்களில் பிரதான சவாலாக சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் என்பது மாறியுள்ளது.

சிறுவர்களின் உரிமை மீறல்களுக்கு பிரதான காரணங்களாக பின்வருவனவற்றை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ பெற்றோர் பாதுகாவலரின் கவனக்குறைவு.
- ❖ துஷ்பிரயோகத்தினை மேற்கொள்வதற்கான சூழல் அல்லது சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ❖ குற்றவாளிகளுக்கு அதிகாரிகள் அல்லது ஒரு சில சமூகப்பெரியோர்கள் மூலம் பாதுகாப்புக் கொடுத்தல்.
- ❖ சிறுவர் உரிமைகள் மீறப்படும்போது வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பான விழிப்புணர்வின்மை.
- ❖ கலாசாரக் காரணிகள் பொதுவாக இன்றைய பொருளாதார நெருக்கடியுடன் பிள்ளைகளை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்காகப் பாடுபடும் பெற்றோர்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதில் கூடுதலான கவனத்தினைக் காட்டுகின்றனர். இதனால் பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றமை.
- ❖ குறிப்பாகப் புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளே அதிகளவில் துஸ்பிரயோகத்திற்குட்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இன்றைய சிறுவர்களின் உரிமைகளானது கல்விக் கூடங்களில் பெரும்பாலும் இடம்பெறும் வன்முறைகள் மூலம் மீறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளிலும் தனியார் வகுப்புக்களிலும் மாணவர்கள் ஆசிரியர்களால் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய நிலைமைகளில் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் மூடி மறைக்கும் போக்கே காணப்படுகின்றது.

இன்று சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளின் அசமந்தப் போக்கின் காரணமாக குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கின்றனர். உதாரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சட்ட உதவியினை நாடுகின்ற போது தேவைப்படும் ஆவணங்களை வழங்க மறுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கலாசார ரீதியான காரணிகள் இன்று சிறுவர் உரிமை மீறல்களை வெளிக்கொணர்வதில் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குடும்பத்தின் கௌரவம், அந்தஸ்து, பிள்ளையின் எதிர்காலம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் வெளிக்கொணரப்படுவதில்லை.

இலங்கையில் சிறுவர் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கமானது பல பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. சிறுவர் கல்வி, சிறுவர் தொழிலாளர், சிறுவர் துஸ்பிரயோகம் போன்றவற்றில் சட்டமும் நீதி மன்றமும், உயர்ந்த பாதுகாப்பாக அமைந்துள்ளதுடன் ஆசியாக் கண்ட நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இலங்கையில் முன்னேற்றகரமான நடைமுறைகள் அமுலில் உள்ளன எனலாம். சிறுவர் துஸ்பிரயோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குகளில் சுருக்க முறையான விசாரணை மற்றும் சான்றுகளாக ஒலி, ஒளி நடாக்கள் மற்றும் போட்டோ பிரதிநிதிகளின் அங்கீகாரம் மூலம் உயர்தண்டனை வழங்கப்படுகின்றன. ஆனாலும் இலங்கையில் சிறுவர் உரிமை மீறலானது நாளாந்தம் அதிகரித்தவாறே உள்ளது.

சிறுவர் தொடர்பான துஷ்பிரயோகம் மற்றும் பிரச்சினைக்களுக்கு வறுமை, போர், இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள், குடும்ப வன்முறை பெற்றோரின் பராமரிப்பின்மை, பெற்றோர் மதுவுக்கு அடிமையாதல், தாய்வெளிநாடு செல்லல், மாறுபட்ட திருமணங்கள், இவை அனைத்தையும் விட ஒட்டுமொத்தமாக குடும்பம் என்னும் முதன்மை நிறுவனத்தின் வகிபங்கானது முக்கியத்துவத்தினை இழந்து வருகின்றமை போன்றன பிரதான காரணங்களாகும்.

இலங்கையில் சிறுவர்களின் உரிமைகள் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் மிக மோசமானதொரு நிலை காணப்படுகின்றது. சிறுவர்கள் மீதான பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் கொலை செய்தல் கடத்திச் செல்லுதல் போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கவை.

2010 ஆம் ஈண்டில் மட்டும் 26 சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 107 சிறுவர்கள் மீது பாலியல் குற்றங்கள் புரியப்பட்டுள்ளது. 517 சிறுவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். 504 சிறுவர்கள் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடமிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இந்த 2010 ஆம் ஆண்டில் மட்டும் சிறுவர்கள் மீது 1660 குற்றங்கள் புரியப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. முறைப்பாடுகளின் அடிப்படையில்தான் இத்தொகையுள்ளதனால் இந்த எண்ணிக்கை மேலும் உயர்ந்ததாகவே இருக்கும் என்னும் சந்தேகம் நிலவுகின்றது.

உலகினை அச்சுறுத்தும் வகையிலான விடயங்களுள் ஒன்றாக சிறுவர் மீதான துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மேற்கொண்டதொரு ஆய்வின்படி 18 வயதிற்குட்பட்ட 15 கோடி சிறுமிகளும், 7 கோடி 30 இலட்சம் சிறுவர்களும் ஓர் ஆண்டில் பாலியல் வல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விதமான பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு ஆளாவதாக தெரியவந்துள்ளது.

“Sri Lanka East News, 2010” வழங்கிய தகவலின்படி கடந்த வருடத்தில் 611 சிறுவர்கள் கைவிடப்பட்டும், 888 பேர் துணையற்றும், 104 சிறுவர் உழைப்பு, 101 சிறுவயதுத் திருமணம், 130 கற்பழிப்பு, 148 துஷ்பிரயோகம், 81 கடத்தல், 111 உடல்ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகமும் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் வடகிழக்கில் 27000 சிறுவர்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகக் கூறப்படுவதுடன் 27 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களிலும் உறவினர்களிடமும் வாழ்ந்து வருவதும், பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட சமய அமைப்புக்கள் பராமரித்து வந்தாலும் கல்வி, பாதுகாப்பு குறித்துப் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

“Kilakku.info.News” வருடாந்தம் 40000 சிறுவர்கள் வயது குறைந்த நிலையில் தாய்மையடைவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணீப்பீடு மூலம் தெரியவந்தது இதற்கு தீர்வாக பெற்றோர்களுக்கான அறிவுறுத்தல் முக்கியமானதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இத்தகைய பொறிமுறைகள் காணப்பட்டாலும் கூட மேற்கூறப்பட்ட காரணிகளின் அடிப்படையில் இலங்கையில் நினைத்துப்பார்க்க முடியாதளவு பச்சிளம் குழந்தைகளையும் விட்டுவைக்காத நிலை உருவாக்கியுள்ளது. ஆகவே அரசின் அத்தகைய பொறிமுறைகள், உரிமைகள் உள்ளமை மீறப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பினை வழங்கவா அல்லது மீறப்பட்ட பின்னர் பாதுகாப்பினை வழங்குவதற்கா என்ற குழப்பத்தினைத் தருகின்றது. சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதுடன் எதிர்கால சமூகத்தினைக் கட்டியழுப்ப வேண்டியவர்களாவார்கள். இளம் மொட்டுக்களை சிதைக்கும் விஷமங்களிற்கு வழங்கும் தக்க தண்டனையே வருமுன் காக்கும் சிறந்த மருந்தாகும்.

வே. சிவயோகலிங்கம், 2004, **இலங்கையில் சிறுவர் பராமரிப்பும் அபிவிருத்தியும்,** இஸ்லாமிக் புக் ஹவுஸ்,77 தெமடகொடவீதி, கொழும்பு - 9
http://sangam.org/taraki/articles/2006/04-01_Child_Rights.php?uid=1621
http://protectingrights.blogspot.com/2010/01/national-laws-to-protect-rights-of.html.
http://www.tchr.net/civil_and_pol_right-
child.htmhttp://www.tchr.net/civil_and_pol_right-child.htm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பால்



**சி.கேசவன்,**
**மூன்றாம் வருடம்**
**தமிழ்த் துறை,கலைப் பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**வி**ஞ்ஞான யுகத்தில் வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனது பிரச்சினையும் வேறுபட்டதாய் அமைந்திருப்பதைக் காண்கிறோம். தொழில்நுட்பம் வளர வளர மனிதன் தொழில் நுட்பங்களுடனேயே தனது நேரத்தைச் செலவிடத் துணிகிறான். இதனால் சக மனிதர்களிற் கிடையேயான ஊடாட்டம் பாதிப்பிற்குள்ளாகிறது. எவ்வாறெல்லாம் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருந்தாலும், மனித வாழ்க்கை முறை மாற்றமுற்றிருந்தாலும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வளர்ச்சி கண்டிராத, பழமை வாதம் பேசுகின்ற சமூகக் குழுக்கள் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. நாகரிகம், உயர் கல்வி என்ற போர்வையால் தங்களைப் போர்த்திக் கொண்டவர்களும் சாதி, சமயம், நம்பிக்கை போன்றவற்றினை உதறித் தள்ளிவிட முடியாத நிலையிலேதான் உள்ளனர். இத்தகையதொரு சூழலில் "ஆண்"என்ற வகைப்பாட்டினுள்ளோ "பெண்"என்ற வகைப்பாட்டினுள்ளோ உள்ளடக்க முடியாத இருபால் தன்மையையும் கொண்ட மனிதர்கள், தம் உணர்வுகளோடும் மறுக்கப்பட்ட உரிமைகளோடும் ஏங்கித் தவிப்பதனை அவதானிக்க முடிகிறது. அவர்கள் குறித்தே இக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

தமிழில் இதுவரை தோன்றிய இலக்கியங்கள் பல்வேறு பாடு பொருட்களைக் கொண்டமைந்துள்ளன. அவை சமூகத்தில் வழக்கிலிருந்த பல்வேறு அம்சங்களைப் பிரதிபலிப்பன வாய் அமைந்துள்ளதனைக் காணலாம். அவ்வகையில் தமிழிலக்கியங்கள் எவ்வாறு ஆணுமற்ற பெண்ணுமற்ற "மூன்றாம் பாலினர்" என அடையாளப் படுத்தக்கூடிய மனிதர்களை நோக்குகின்றன. மனித சமூகமானது பெரும்பாலும் ஆண்,பெண் என்ற இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலினத்தால் கட்டமைக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக மூன்றாம் பாலினரது உரிமைகள் தொடர்பாகக் குரலெழுப்பப் படுவதனை அவதானிக்க முடிகிறது. இவர்களைக் குறிக்கும் நாகரிகமான பெயர்களாக அரவாணி, திருநங்கை போன்ற சொற்கள் வழக்கிலிருக்கின்றன. இவர்களைக் கேலியாக அழைக்கும் சொற்களும் வழக்கிலிருப்பினும் இது குறித்து இங்கு பதிவு செய்ய விரும்பவில்லை.

மூன்றாம் பாலினரின் உருவாக்கம் குறித்தும் நாம் இங்கு நோக்குதல் அவசியமாகிறது. அறிவியலாளர்கள், மரபணு மாற்றங்களினால் மூன்றாம் பாலினர் இயற்கையாகப் பிறப்பதாகக் குறிப்பிடுகின்றனர். மானிடவியலாளர்கள் சமுகச் சூழலினால் மூன்றாம் பாலினர் உருவாக்கப்படுகின்றனர் என்கின்றனர். அதாவது ஒரு குழந்தை ஆணாகவோ,பெண்ணாகவோ பிறப்பதில்லை. பிறந்த பின்புதான் பாலினப் பண்புகளை சமூகத்திடமிருந்து கற்றுக் கொள்கின்றது என்பது இவர்தம் வாதம்.

தமிழ் இலக்கியங்களை நோக்குகையில் அவை மூன்றாம் பாலினர்க்குரிய இடத்தினை வழங்கத் தவறியுள்ளதனை அவதானிக்க முடிகிறது.சங்க இலக்கியங்கள் "பேடி", "அலி" ஆகிய சொற்களைக் கொண்டு இவர்களை அடையாளப்படுத்துகின்றது.
**"பேடிப்பெண் கொண்டு ஆடுகை கடுப்ப"** (அகநானுறு- 206)

தொல்காப்பியரும் இவர்களை எப்பாலினுள் சேர்ப்பது என்பது தொடர்பான சிக்கலுக்கு ஆளாகியுள்ளார்.
**"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் தத்தமக்கிவே**
**உயர்திணை மருங்கின் பால்பிரிந்திசைக்கும்"**

மூன்றாம் பாலினர், உடலளவில் ஆணாகவும் மனதளவில் பெண்ணாகவும் இருப்பதனால் இவர்களை ஆண் வர்க்கத்திலோ பெண் வர்க்கத்திலோ ஏற்காது புறந் தள்ளுவதனை அவதானிக்கலாம். தொல்காப்பியர் காலத்திலும் இவர்கள் குறித்த வரையறை காணப்படாமையை அவதானிக்கலாம். தொல்காப்பியர் மூன்றாம் பாலினர்க்குரிய பாலினமாக பெண்பாலையும், பலர்பாலையும் குறிப்பிடுவதாக நச்சினார்க்கினியார் விளக்கமளிக்கின்றார். எனினும் இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் இன்று மூன்றாம் பாலினரை நோக்குவது போல் இழிவாக நோக்கவில்லை. அவர்களையும் மனிதர்களாக ஏற்றுக் கொண்டமையைக் காணலாம். "அரவான்" என்ற மகாபாரதக் கதாபாத்திரத்தின் தாக்கத்தினால் மூன்றாம் பாலினரை "அரவாணிகள்" என அழைக்கும் வழக்கமுள்ளதனை அவதானிக்க முடிகிறது. பொதுவாக மூன்றாம் பாலினரை ஆண் அரவாணி, பெண் அரவாணி என இருவகைப்படுத்துவர். பெண் தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்திருந்தால் அவர் ஆண் அரவாணியாவார். ஆண்தன்மை குறைந்து பெண்தன்மை மிகுந்திருந்தால், அவர் பெண் அரவாணி ஆவார். இதனைத் தொல்காப்பியம்,

**"ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை அறிசொற்கு ஆகிடனின்றே"**

எனப் பதிவு செய்வதனைக் காண்கின்றோம். எனினும் தொல்காப்பியர் ஆண் அரவாணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துப் பேச முற்படவில்லை. ஆண்தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்த பெண் அரவாணிகள் குறித்தே பேச முற்படுவதனைக் காண்கின்றோம்.

சங்க இலக்கியங்களை நோக்குகையில், அவை மூன்றாம் பாலினரை இழிவாகவே நோக்கின என்பது தெளிவாகிறது.

**"என்னனப் படும்கொல் தோழி நல்மகிழ்**
**பேடிப்பெண் கொண்டு ஆடுகை கடுப்ப**
**நகுவரப் பணைத்த திருமருப்பு எருமை**
**மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்"** (அகம்-206)

என்ற அகநானூற்றுப் பாடலில் மூன்றாம் பாலினரை பரத்தைகளோடு ஒப்பிடுவதனைக் காண்கின்றோம். புறநானூற்றுப் பாடலொன்று ஊனமுற்றவர்களாக மூன்றாம் பாலினர் நோக்கப்பட்டமைக்குச் சான்று பகிர்கின்றது.

**"சிறப்புஇல் சிதடும் உறுப்புஇல் பிண்டமும்**
**கூனும் குறளும் ஊமும் செவிடும்**
**மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்**
**பேதமை அல்லது ஊதியம் இல்என"** (புறம்-28)

இங்கு சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்துபாடும் புலவர், சோழன் எதுவித குறையுமற்றவன் என்கிறார். அவர் குறிப்பிடும் குறைகளுள் மூன்றாம் பாலினத்தோரின் பிறப்பும் ஒன்றாக இருக்கிறது. ஔவையார் பாடலொன்றில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

**"அரியது கேட்கின் வரிவடிவேலோய்**
**மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே**
**மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்**
**மூங்கையும் செவிடும் கூனும் குருடும்**
**பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே..."**

இங்கு மனிதப் பிறவியை உயர்ந்த பிறவியெனக் குறிப்பிடும் ஔவையார், அப்பிறப்பு யாதொரு குறையுமின்றி இருத்தல் வேண்டுமென்கிறார். அவர் குறிப்பிடும் குறைகளுள் மூன்றாம் பாலினராய் பிறப்பதும் உள்ளடங்குகிறது.

சங்ககாலத்தினைத் தொடர்ந்து வந்த அறவிலக்கியங்கள் பல தோன்றிய சங்க மருவிய கால இலக்கியங்களும் மூன்றாம் பாலினர்க்குரிய இடத்தினை வழங்கத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும்.திருவள்ளுவர் திருக்குறளில் அவையஞ்சாமை அதிகாரத்தில்,

**"பகையகத்துப் பேடிகை யொள்வாள வையகத்**
**தஞ்சு மவன்கற்ற நூல்"** என்கிறார்.

அதாவது, கற்றோர் அவையில் பேச அஞ்சுபவன் கற்ற அறிவினை, போர்க் களத்தில் நிற்கும் மூன்றாம் பாலின்தோர் கையிலிருக்கும் வாளுக்கு ஒப்பிடுகிறார் வள்ளுவர்.

நாலடியாரில் வரும் பின்வரும் பாடல் மூன்றாம் பாலாரை இழிவான பிறப்பினராக நோக்குவதனைக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"செம்மையொன்றின்றிச் சிறியார் இனத்தாராயக்**
**கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ உம்மை**
**வலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை**
**அலியாகி ஆடியுண்பார்"** (நாலடியார்-பிறன் மனை-15)

இப்பாடலில், முற்பிறவியில் பிறர்மனையாளை நாடிச் சென்றோர்தான் இப் பிறப்பில் மூன்றாம் பாலினராக பிறந்து துன்பமுறுகின்றனர் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு சமுகத்தில் அங்கீகரிக்கப்படாத இழிந்த பிறவிகளாகவே மூன்றாம் பாலினரை அறநூல்கள் நோக்கியிருப்பதனைக் காண்கின்றோம். இது ஒரு விதத்தில் அறங்களை வலியுறுத்திக் கூறும் உத்தி முறை என்றே கூறவேண்டும். மூன்றாம் பாலினரைப் போன்று பிறக்காதிருப்பதற்கு அற நெறியிலிருந்து தவறாது வாழவேண்டும் எனச் சமுகத்தை வலியுறுத்தி, அறக்கருத்துக்களை மக்கள் மனங்களில் புகுத்த முற்பட்டதன் விளைவே இது. இவ்வாறு அவர்கள் அறத்தின் மீது கொண்ட பற்றுதலின் மூலம், மூன்றாம் பாலினரது மனம் புண்பட்டதனையும் அவர்களது சமுக அந்தஸ்து இழக்கப்பட்டமையையும் அறநூற்காரர்கள் உணராதிருந்தமை வேதனைக்குரியது. அவர்கள் மூன்றாம் பாலினர்க்கு அநீதியே புரிந்துள்ளனர்.

பக்கி இலக்கியங்கள் மூன்றாம் பாலினரை அரவணைக்க முற்பட்டதனையும் அவர்களைச் சமுக நீரோட்டத்தில் இணைக்க முற்பட்டதனையும் அவதானிக்க முடிகிறது. மாணிக்கவாசகர் இறைவனுக்கு இணையாக மூன்றாம் பாலினரை உயர்த்துவதனைக் காணலாம்.

**"பெண் ஆண் அலி என்னும் பெற்றியன் காண்க"** (திருவாசகம்,திருவண்ட பகுதி -5)
சிவன் ஆணாகவும் பெண்ணாகவும் மூன்றாம் பாலினராகவும் காட்சி தருவதாகக் கூறுகிறார் மாணிக்கவாசகர்.

**"ஆண் எனத் தோன்றி அலி எனப் பெயர்ந்து"** (திருவாசகம்,திருவண்ட பகுதி-138)
**"அச்சன் ஆண் பெண்ணலி ஆகாசமாகி"** (திருவாசகம்,திருச்சதகம்-42)
"பெண்மையனே தொன்மை ஆண்மையனே அலிப் பெற்றவனே" (திருவாசகம்,நீத்தல் விண்ணப்பம்-22)

இவ்வாறு பல இடங்களில் மாணிக்க வாசகர் மூன்றாம் பாலினர்க்குத் தெய்வ அந்தஸ்து கொடுக்க முனைகிறார்.திருமூலர் இறைவனை மூன்றாம் பாலினருடன் இணைத்துப் பாடுவதனைக் காணலாம்.

**"காண்கின்ற கண்ணொளி காதல்செய் தீசனை**
**ஆண்டெடன் அலியுரு வாய்நின்ற ஆதியை**
**வண்டுபடு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்**
**சேண்படு பொய்யை நெஞ்சம் செயலனையாரே"** (திருமந்திரம்,மறைப்பு 3:420)

சிவன் உமையின் பாதியுடலைப் பெற்று மூன்றாம் பாலினனாகவும் விஸ்ணு மோகினி அவதாரம் எடுத்து மூன்றாம் பாலினராகவும் காட்சியளிக்கின்றனர்.மூன்றாம் பாலினரும் சமுகத்தின் ஓர் அங்கமே என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.
**"ஆணாகிப் பெண்ணா யலியாகி வேற்றுருவாய்**
**மாணாகி நின்ற வகையறியேன் பூரணமே"**

என்கிறார் தாயுமானவர். அதாவது, எங்கும் நிறைந்துள்ள பொருளே ஆணாகியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகியும் மூன்றாம் பாலினராகவும் பல்வேறு வடிவங்களில் காட்சி தருகின்றது என்கிறார். இவ்வாறு சங்க இலக்கியங்களும் அற இலக்கியங்கள் போன்றவையும் மூன்றாம் பாலினரை இழிவாக நோக்க, பக்தி இலக்கியங்கள் அவர்களை இறையந்தஸ்துக்கு உயர்த்துவதைக் காண்கிறோம்.

இன்றைய சூழ்நிலையில் மூன்றாம் பாலினத்தோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனைக் காண்கின்றோம். சமூகக் காரணிகள் இதற்குக் காரணமாய் இருத்தல் கூடும். இவர்களது எண்ணிக்கை அதிகரித்துச் சென்றாலும் கூட, இவர்களிற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட வண்ணமே இருக்கிறது. அவர்களை ஏளனமாகக் கருதி ஒதுக்கும் நிலை தொடர்கிறது. இது வேதனைக்குரியது. விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றம் என்பது மனிதப் பண்புகளைத் தீர்மானிக்காது. எமது சமுகத்தில் எம்மிடையே தமது உணர்வுகளுடன் போராடும் மூன்றாம் பாலினத்தோர் குறித்து நாம் சிந்தித்தேயாக வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். அவர்களிற்கு உதவிக் கரம் கொடுக்க வேண்டிய கடமையும் எங்கள் மீது சுமத்தப் பட்டிருக்கின்றது. அவர்களைக் கீழ்த் தரமான சொற்களைக் கொண்டு அழைப்பதனைத் தவிர்த்து, "மூன்றாம் பால்" என்ற வகைப்பாட்டினுள் அவர்களை உள்ளடக்குவது சிறந்தது. மூன்றாம்பாலினர் ஒருவர், தனது பாலினப் பண்புகளிற்கேற்ப ஆணையோ அல்லது பெண்ணையோ திருமணம் செய்யலாம் என்ற நியதியும் உருவாக்கப்பட வேண்டும்.

பாவம் விட்டில் பூச்சி

என்னால் உனக்கு உதவ முடியாது

விளக்கை அணைக்க மட்டுமே

என்னால் முடியும்

– ரைசார்டு க்ரினிவிக் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநாதை



எம்.என். ஜெஸ்மினா,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை.

**வ**ழமை போலப் பாடசாலைக் கோபுர மணி டிங்...டிங்....டிங்...என்று அடித்து, பாடசாலை ஆரம்பமாவதற்குரிய அறிகுறியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அந் நேரம் பார்த்து ஓர் உருவம் பாடசாலை நுழைவாயிலின் வழியே வெளியேறுவதற்கு முயற்சிக்கின்றது என்பதை அவ்வுருவத்தினுடைய தடுமாற்றமே காட்டிக் கொடுக்கின்றது. நுழைவாயிலைத் தாண்டிச் செல்லும் தருணம் பார்த்து அவ்வுருவத்தினுடைய காது சண்முக வாத்தியாரின் கையில் சிக்கிக் கொள்கின்றது.

"ஆ....வலிக்கிது சே....ர்"
என்று கத்திக் கொண்டு ஆசிரியரின் கைகளுக்குள் அகப்பட்டுக்கொண்ட தன் காதுகளை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்வதும், அம் முயற்சி தோல்வியடைவதுமாக இருந்தது. சண்முக வாத்தியாரின் வெள்ளைப் பிரம்பு அவ்வுருவத்தின் பின் புறத்தைப் பலமாகப் பதம் பார்த்தது. வலி தாங்க முடியாமல் வாத்தியாரின் பிடியிலிருந்து விடுபட்டுத் ஷதுண்டக் காணம் துணியக் காணம்' என ஓடிப் போய் ஏழாம் வகுப்பு கடைசி மேசையில் ஓர் ஓரமாகக் குந்திக் கொண்டது. அவ்வுருவம் வேறு யாரும் இல்லை. பாடசாலை மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் உருப்படாதவன் என்று மகுடம் சூட்டிக் கொண்ட ஏழாம் வகுப்பில் கற்கும் ரகுநாதன்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரம் கழித்துத் தலைமை ஆசிரியர் சண்முகம் விஞ்ஞானப் பாடத்திற்காக ஏழாம் வகுப்பிற்கு வருகின்றார். வகுப்பை ஆரம்பிப்பதற்கு முன்,
"ஹோம் வேர்க் முடிக்காத கசுமாலமெல்லாம் வெளியே போ..."

ஆசிரியரின் குரலைத் தொடர்ந்து ரகுநாதன் தலைமையில் ஐந்து நடமாடும் ஜடங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியேறுகின்றன. பின் வகுப்பறைப் பாடம் தொடங்குகின்றது. ஆசிரியரிடம் ஒரு பயிற்சிப் புத்தகம் நீட்டப்படுகின்றது. அது அவ்வகுப்பிலே கெட்டிக்காரனான விமலனுடைய புத்தகம். அப்புத்தகத்தினுடைய ஒவ்வொரு வசனமும் ஆசிரியரை மெய்சிலிர்க்க வைக்கின்றது. அவ்வளவு நேர்த்தி. ஆசிரியர் விமலனைப் பெருமிதத்துடன் பார்த்து,
"உன்ன இப்படி அழகா வளர்த்துவிட்ட உங்க அம்மா, அப்பாவத்தான் பாராட்டனும். அவங்க உன்ன மிச்சம் நல்ல புள்ளயா வளத்து இருக்காங்க. இப்ப வெளிய போச்சிங்களே, புள்ளயா அதுகள் தறுதலங்க..." என்று விமலனைப் பாராட்டுவதோடு ரகுநாதன் குழு மீது இருந்த வெறுப்பையும் கொட்டிக் கொண்டார்.

ஆசிரியரினுடைய ஆதங்கம் எதுவுமே விமலனுடைய செவிகளுக்கு எட்டவில்லை. அவன் சுய நினைவில் இருந்தால்தானே எட்டும். சண்முக ஆசிரியர் உன் அப்பா, அம்மா உன்னை நல்ல விதமா வளர்த்துவிட்டு இருக்காங்க என்று சொன்னவுடனே அவன் இரண்டு வருடங்கள் பின்னால் போய்விட்டான்.

விமலன் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்காகத் தோற்ற இருக்கும் கட்டத்தில் அவனுடைய தந்தை விபத்தொன்றில் திடீர் என்று உயிர்நீத்துவிட்டார். பரீட்சை பெறுபேருகளும் அவனுக்குச் சோகமாவே அமைந்தது. விமலனை இவ்விரண்டு வருடங்களாக அவனுடைய தாய் தான் இட்லி விற்று நல்ல முறையில் வளர்த்து வந்தாள். கணவனை இழந்த தாய்க்கும், தந்தையை இழந்த விமலனுக்கும் ஆறுதல் கூற நாதியில்லை. இதனையுணர்ந்த விமலன் தான் படித்துப் பெரியவனாகித் தன் தாயை எந்தக் குறையும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதனையே தன் இலட்சியமாகக் கொண்டான்.

சிந்தனையிலிருந்து சுயநினைவிற்கு வந்த விமலனுடைய இரண்டு கண்ணீர்த் துளிகள் ஆசிரியரின் கையிலிருந்த பயிற்சிப் புத்தகத்தில் பட்டுத் தெறித்தன. இதனை சுதாகரித்துக் கொண்ட ஆசிரியர் கண்டு காரணம் வினவ,

"ஒன்னுமில்ல சேர்" எனத் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாகத் தனக்கென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கப்பட்ட இடத்தில் போய் அமர்ந்துகொண்டான். ஆசிரியர் வகுப்பைத் தொடர்ந்து நடத்தினார். தொடர்ந்து பாடங்கள் மாறி மாறி நடைபெற்றன. சுமார் இரண்டு மணியிருக்கும் பாடசாலை விடுவதற்கான மணி ஓசை கேட்கின்றது. மாணவர்கள் அனைவரும் தங்களுடைய புத்தகப் பைகளைத்தம் தோள்களில் சுமந்தவர்களாக பரபரப்புடன் வீட்டிற்குச் செல்லும் ஆர்வத்துடன் ஆயத்தமாகின்றனர். அதற்கிடையில் ஒரு சிறுவன் இளைக்க இளைக்க ஓடி வந்து,

“விமலா....விமல்....உன்..உன் வீடு எரியுது”

என்று சொல்லி முடிக்கும் முன்பே விமலன் திக்குமுக்காடிப் போய். ஆசிரியரிடம் அனுமதி கூடப் பெற்றுக் கொள்ளாமல் தலைதெறிக்க ஓடினான். விமலன் ஓடுவதைக் கண்ட ஆசிரியர் என்ன ஏது என்று தெரியாமல் பதறியடித்துக் கொண்டு விமலனைப் பின்தொடர்ந்தார். காலை முதல் பாடசாலை விடும் வரையில் கால் கடுக்க நின்ற ரகுநாதன் குழு இதனையே சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு சாவகாசமாக வகுப்பறையினுள் வந்து பொதி சுமந்த கழுதைகளாகத் தங்களுடைய புத்தகப் பைகளைச் சுமந்து கொண்டனர்.

விமலனுடைய வீடு காட்டுத் தீ போலப் பயங்கரமாக எரிந்துகொண்டிருந்தது. கடைக்குப் போய் வந்த விமலனுடைய தாய் விமலன் பாடசாலை முடிந்து வந்து வீட்டினுள்தான் இருக்கிறான் என எண்ணிக்கொண்டு, பிள்ளைப் பாசம் கண்ணை மறைக்க முன் பின் எதைப்பற்றியும் சிந்திக்காமல் எரிகின்ற வீட்டினுள் குதித்தாள். அங்குள்ளவர்களுக்கு என்ன செய்வதென்று புரியாமல் சிலையாகி நின்றனர். சிலர் வாளி வாளியாகத் தண்ணீர் ஊற்றுவதும் சிலர் மண்ணை வாரி இறைப்பதும் சிலர் வீட்டினுள் எரிந்துகொண்டிருப்பவள் குறித்த கவலையை வெளிப்படுத்துவதுமாக இருந்தார்கள்.

பாடசாலையில் இருந்து ஓடி வந்த விமலன் தாய் எரிகின்ற வீட்டிற்குள் சிக்கிக் கொண்டதைக் கண்டு வீட்டினுள் குதித்து தன் தாயைக் காப்பாற்ற முயன்றான். ஆனால் வீட்டினுள் குதித்தால் விமலனுடைய உயிருக்கு ஆபத்து வந்து விடும் என வீட்டைச் சூழ்ந்து இருந்தவர்கள் விமலனைப் பிடித்து இழுத்துக் கொண்டனர். வீட்டின் தீயில் அகப்பட்டுக்கொண்ட விமலனுடைய தாயை மூன்று ஆடவர்கள் சுமந்து கொண்டு வெளிவந்தார்கள். அவளுடைய உடம்பில் வெறும் உயிர் மட்டுமே ஊசலாடிக் கொண்டிருந்தது. அவளுடைய தோல் காய்ந்த திராட்சைபோல் கருகி, சுருண்டுபோய் பார்க்கப் பரிதாபகரமான நிலையில் இருந்தது. உடனே அம்பியுலன்ஸ் மூலம் அவள் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். விமலனைக் கூட்டிக்கொண்டு சண்முக வாத்தியார் அம்பியுலன்ஸ்சைப் பின் தொடர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையில் தன் தாய் இருந்த கோலத்தைக் கண்ட விமலன் தலை சுற்றி விழுந்தான். சிறிது நேரம் கழித்து வாத்தியாரின் உதவியுடன் சுயநிலைக்கு வந்தவன் தன் தாயின் கைகளிரண்டையும் பற்றிக் கொண்டு ஓ…வென கதறியழுதான். கவலை தீர்க்க முடியாமல் துன்பப்படும் தன் மகனுடைய தலையை இலேசாக வருடிக் கொடுத்தவளாக,
"விமலா, அழாதப்பா…உங்க அம்மா இன்னும் எவ்வளவு நேரம் உயிருடன்….."

என்று வசனத்தை முடிக்கும் முன்னமே விமலன் தன்னுடைய பிஞ்சுக் கைகளால் தாயினுடைய வாயை மூடிக் கொண்டு "வேண்டாம் அம்மா" என்று சொல்வது போலத் தலையசைத்துக் கண்ணீர் மாரி பொழிந்தான். மெதுவாகத் தன் வாயிலிருந்த மகனின் கைகளை நகர்த்திவிட்ட தாய்
"இல்லையப்பா, என்ட நிலம ரொம்ப மோசமாப் போச்சின்னு டாக்டர் சொல்லிட்டாரு. நான் செத்துப் போன பிறகு நீ உன் சித்தி, சித்தப்பா கூட நல்ல சமத்து புள்ளயா இருக்கனும். சரியா?"
என்று கூறிக் கொண்டே மகனின் முகத்தைப் பார்த்துவிட்டு, கட்டிலின் தலைப்பக்கத்தில் இருந்த விமலனுடைய சித்தியையும், சித்தப்பாவையும் ஓர் ஏக்கப் பார்வை பார்த்தாள். அப் பார்வை தனக்குப்பின் தன் மகனைத் நீங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்பது போல இருந்தது. அவளுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்ட அவர்களும் சரியென தலையசைக்க. தாயின் சுவாசப் பையிலிருந்து பெருமூச்சொன்று பலமாக வெளிவந்தது. அவ்வளவுதான் வெளிவந்த மூச்சு உள் இழுக்கவில்லை. மூச்சு முற்றுப்பெற்றது. கண்கள் மூடிக்கொண்டன.

வைத்தியசாலை இழவு வீடாக மாறியது. தாயின் பிரிவைத் தாங்காத விமலன் அடியற்ற மரம் போலத் தாயின் பாதங்களின் அருகே தலை சாய்ந்தான். விமலனுக்குச் சுய நினைவு வர இரண்டு நாட்கள் எடுத்தன. அதற்குள் அவன் தாய்க்குரிய ஈமக்கிரியைகள் அனைத்தும் முற்றுப்பெற்று விட்டன. விமலன் சுய நினைவுபெற்று விழிக்கும்போது அவன் கண் முன் தாயின் படம் மாலையுடனும், பத்திகள் கொழுத்தப்பட்டும், விளக்கு எரிந்த வண்ணமும் இருந்தது. அவன் சித்தியின் வீட்டுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். தாயினுடைய அந்நிலமையை மீண்டும் பார்க்க விரும்பாதவனாகத் தன் கண்களை இலேசாக மூடிக்கொள்கிறான். கண்ணை மூடும் போது அவன் கண்ணுக்குள் இருள் குடிகொள்கின்றது. அதே போல் அவனுடைய வாழ்வும் இருளப் போகிறது என்பதை அவன் அப்போது உணரவில்லை.

தாயினுடைய இழப்பு விமலனை வாட்டியெடுத்தது. அவன் தனிமையை உணரத் தொடங்கினான். சிறிது காலம் தனிமையாகவே கழித்த விமலன் பாடசாலைக்குச் செல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தான். பாடசாலையில் சக மாணவர்களுடன் அவனால் சகஜமாகப் பழகமுடியவில்லை. சக மாணவர்களாலும் இவன்கூட முன்புபோல் பழக முடியவில்லை. அவர்கள் விமலனைப் பரிதாபகரமான ஒரு நிலையிலே வைத்துப் பார்த்தார்கள். விமலனும் தான்உண்டு தன்பாடு உண்டு என ஒதுங்கிக் கொண்டான். விமலனுடைய இக் கோலம் குறித்துப் பல முறை சண்முக வாத்தியார் கண்டித்து தோற்றுப் போனார்.

விமலன் தாயினுடைய இழப்பைத் தொடர்ந்து சித்தி வீட்டிலேயே தங்கி இருந்தான். சித்திக்கு ஒரு மகன், ஒரு மகள். மகன் விஜய் விமலனுடைய வகுப்பிலே படித்தான். விஜய் படிப்பில் கவனம் குறைந்தவன், ஏன், அந்த வகுப்பிலே தறுதலை என்றும் கூடக் கூறலாம். விமலன் தன் வீட்டுக்கு வந்தது விஜய்க்கு விருப்பமில்லை. எப்போதும் விமலன்மீது குறை கண்டுபிடிப்பதையே குறியாகக் கொண்டிருந்தான். அவனுக்கு ஏற்றால் போலத்தான் அவனுடைய தாயும். விமலன் மீது எப்போதுமே தன் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தவாறே இருந்தாள். மகள் மாலா மிகவும் கெட்டிக்காரி. விமலன் மீது அண்ணா அண்ணா என்று உயிரையே வைத்து இருந்தாள். அதே போல்தான் சித்தப்பா விமலன் மீது பாசம். தன் சொந்த பிள்ளையைப் போலவே விமலனையும் எண்ணினார். ஆனால் சித்தப்பா சித்தியின் பேச்சை மீறி எதுவும் செய்யமாட்டார். சித்திக்கு அடங்கியவர். சித்திக் கொடுமை பற்றித் தொலைகாட்சியிலும் பத்திரிகைகளிலும் பார்த்த விமலன் தன் சொந்த வாழ்விலும் அனுபவிக்கத் தொடங்கினான்.

தாயும் மகனும் சேர்ந்து விமலனுக்குச் செய்யும் இன்னல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. விமலன் தனக்கு நடக்கும் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ளவும் முடியாமல் வெளியில் சொல்லவும் முடியாமல் புழுங்கினான். மாலா, தாயும் தன் சகோதரனும் இணைந்து விமலனுக்குச் செய்யும் கொடுமைகள் குறித்துப் பல முறை எச்சரித்தாள். அவள் அவ்வாறு எச்சரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் விஜயினுடைய முரட்டுக் கைகள் அவள் கன்னங்களைப் பதம் பார்க்கும். காலப் போக்கில் விஜயினுடைய அடிக்குப் பயந்து மாலாவும் விமலனுக்குச் சார்பாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டாள்.

அன்று எட்டாம் வகுப்பேற்றப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் நாள். விமலன் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று வகுப்பில் முதல் மாணவனாக வந்தான். ஆனால் விஜய் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்று மீண்டும் ஏழாம் வகுப்பிலே படிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. வகுப்பு மாணவர்கள் மத்தியில் விமலனை உயர்த்தியும், தன்னைத் தாழ்த்தியும் ஆசிரியர் பேசியது விஜயினுடைய மனதில் பசுமரத்தாணி போலப் பதிந்து விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தனக்கு எதிராகப் பாடசாலையில் நடந்த விடயங்களைத் தன் தாயிடம் விஜய் பற்ற வைத்தான். சித்தி தன் மகனுக்குக் கிடைக்காத ஒன்று அந்த அநாதைச் சிறுவனுக்குக் கிடைக்க விடுவதா என மனதில் வஞ்சம் கொண்டாள். விமலனுடைய படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்தாள். விமலனை வீட்டில் வைத்து மாடுபோல வேலை வாங்க ஆரம்பித்தாள். அவளுடைய வன்செயல் சித்தப்பாவினதும் மாலாவினதும் மனதைத் தைத்தாலும்கூட ராட்சசிக்கு எதிராக அவர்களால் இயங்க முடியாமல் இருந்தது. தனக்கு ஒவ்வொரு முறை சித்தி இன்னல் தரும் போதும் தன் தாயை எண்ணியும், தன் விதியை எண்ணியும் நொந்து கொண்டான்.

காலம் கழியக் கழிய விமலனுக்கான துன்பம் அதிகரித்துக் கொண்டே சென்றது. கண்ணீரின் வழியே விதி எழுதிய பாத்திரமானான். காலப் போக்கில் பொறுமையிழந்த விமலன் ஒரு முடிவிற்கு வந்தான். அன்று இரவு பதினொரு மணி இருக்கும். ஒரு பையில் தன்னுடைய துணிகள் இரண்டையும், தன் தாயினுடைய மாலை சுமந்த புகைப் படத்தையும் சுருட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான் தன்னுடைய புதிய பாதையைத் தேடி. விமலனுடைய மனம் ஒரு திசையில் செல்ல கால்கள் மறு திசையில் செல்ல பாதை செல்லும் போக்கில் தன் விடிவைத் தேடிப் போய்க் கொண்டு இருக்கிறான் அந்த அநாதைச் சிறுவன்.

**விண்ணில்**

**ஊர்வலம் போகும்**

**நட்சத்திரங்களைவிட**

**சின்ன புல்லிதழ்கள்**

**தாழ்ந்தவை அல்ல**

**–வால்ட்விட்மன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநிர்ணயம்:
### ஒரு விமர்சன நோக்கு



**க. சதீஸ்வரன்,**
**விடுகை வருடம்,**
**அரசறிவியற் சிறப்புத்துறை,**
**கலைப்பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**ஒ**ரு சமூக அரசியல் அமைப்பென்ற வாறு, ஒரு தேசம் தன் இருப்பின் தன்மையை நிர்ணயிக்கும் உரிமையாக சுயநிர்ணயம் என்பது பரவலாக நோக்கப்படுகின்றது. இது ஓர் அரசோ, தனிமனிதனோ அல்லது குழுவோ தம்மைத்தாமே தீர்மானிக்கின்ற நிலையைக் குறிக்கின்றதுடன் இன்றும் அதிகம் பேசப்பட்டுவரும் ஒரு கருத்தியல்சார் அம்சமாகவும் காணப் படுகின்றது. உலகில் இடம்பெற்றுவரும் பெரும்பாலான போராட்டங்களின் பிரதான கோரிக்கையாக சுய நிர்ணய உரிமை முன்னிறுத்தப்படுகின்றது. ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா, ஐரோப்பா முதலான பிராந்தியங்களில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன் உலகளாவிய ரீதியில் வலியுறுத்தப்பட்டும் வந்துள்ளது. அரசினால் அல்லது ஆதிக்க வர்க்கத்தினால் ஒரு பகுதியினர் அடக்கி ஒடுக்கப்படும் போதும் பாராபட்சப்படுத்தப்படும் போதும், பல்லின சமூக அமைப்பை யுடைய அரசுகளில் அப்பல்லினத் தன்மைக்குள் சமத்துவம், சம வாய்ப்பின்மை தோற்றுவிக்கப்படும் போதும் சுயநிர்ணயத்திற்கான போராட்டங்களும் தோற்றம் பெறுகின்றன.

சுயநிர்ணயம் பற்றிய எண்ணக் கருவானது கருத்தியல் ரீதியில் 17ம், 18ம் நூற்றாண்டுகளிலே உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலங்களில் பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் போன்றவை மூலம் மக்களாட்சி நிறுவப்பட்டுக் கொண்டிருந்தன. சமூகத்தில் தனி மனிதனின் உரிமைகள் வலுப்பெறத் தொடங்கியதால் தனி மனிதனின் சுயநிர்ணயம் பற்றிய கருத்தாடல்கள் தோற்றம் பெற்றது. இருப்பினும் அக்காலத்தில் சுயநிர்ணயம்சார் கருத்துக்கள் தனி மனிதனுக்கும் அரசுக்குமிடையிலான சமூக ஒப்பந்தத்தைக் குறிப்பதாகவே காணப்பட்டது. அவ்வகையில் நோக்கின் சுயநிர்ணயம் பற்றிய எண்ணக்கருக்கள் தனிமனித சுயநிர்ணய உரிமையுடனே ஆரம்பமாகின்றது எனலாம்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் சுதந்திரம் பெற முயற்சித்ததுடன் அதற்கான போராட்டங்களையும் கோரிக்கைகளையும் முன்னிறுத்தியது. தங்கள் நலன்களைப் பாதுகாக்கவும் சுதேச தன்மையுடன் செயற்படவும் சுயநிர்ணய அடிப்படைகளை வேண்டினர். இதன் காரணமாக அரசுகளின் சுயநிர்ணயம் பற்றிய கருத்துக்கள் தோற்றம் பெற்றன. மறுபுறம் காலனித்துவத்திற்குட்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து நிலைநிறுத்தும் நோக்கிலும் ஐக்கிய நாடுகள் சபை தனிமனித சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்தியது. 1950களின் பின்னர் அரசுகள் தனிமனித சுயநிர்ணய உரிமைமைகளைச் சட்ட ரீதியாக உத்தரவாதப்படுத்தி வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பல்லின சமூக அமைப்பின் தோற்றமும் அரசுகளில் காணப்பட்ட ஸ்திரமற்ற தன்மையின் காரணமாகவும் குழுக்களின் சுயநிர்ணயம் பற்றிய கருத்தாடல்கள் தோற்றம் பெறத்தொடங்கியது. இன, மத, மொழி ரீதியான அடிப்படைவாத எண்ணக்கருக்களின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட குழுக்கள் தங்களை குழுவாக இணைத்துக்கொண்டு போராட்டங்களில் ஈடுபடத்தொடங்கியது. குறிப்பாக, அரசுகளுக்குள்ளாக ஏற்பட்ட குழுக்களுக்கிடையிலான பிளவுகள் குழுக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை வலுப்படுத்தியது. உதாரணமாக, இந்தியாவின் காஷ்மீர் பிரதேசம், கனடாவின் குவெபெக் மாகாணம், துருக்கியின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட குஸ்திஸ்தானி, திபெத்திய போராட்டம் மற்றும் இலங்கையில் தமிழர்களின் போராட்டங்கள் முதலானவை குழுக்களாக இணைத்து முன்னெடுக்கப்பட்ட சுயநிர்ணய போராட்டங்களாக விளங்குகின்றன.

இவ்வாறாக, சுயநிர்ணயம் பற்றிய கருத்தாக்கங்கள் தனிமனிதனில் ஆரம்பித்து அரசு, அரசுக்குள்ளான குழுக்கள் என்பவற்றை மையப்படுத்தி வளர்ச்சியடைந்துள்ளது. இது இவ்வாறிருக்க சுயநிர்ணயம் பற்றிய எண்ணக்கருக்கள், போராட்டங்கள் அரசியலில் சூழ்நிலைக்கேற்ப ஆதரிக்கப்பட்டும் நிராகரிக்கப்பட்டும் வந்துள்ளது. ஆரம்பத்தில் காலனித்துவ அரசுகளின் விடுதலை மற்றும் தனிநபர் சுயநிர்ணய உரிமைகளுக்கு உடன்பட்டு அவற்றிக்கான அங்கிகாரத்தை வழங்கிய அரசுகள் இன்று குழுக்களின் சுயநிர்ணய போராட்டங்களை நிராகரிப்பதுடன் அதற்கான அங்கிகாரத்தையும் வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கின்றன. குழுக்களின் சுயநிர்ணயம் பற்றிய போராட்டங்கள் அரசுகளுக்கு எதிரானவையாக குறுகிய நோக்கில் பொருள்கொள்ளப்படுகின்றன. குழுக்களின் சுயநிர்ணய உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் போது அரசுகளின் இறைமை பாதிக்கப்படலாம் எனும் நிலையே அதற்கான பிரதான காரணமாகவும் உள்ளது.

அவை அரசுகளின் தேசிய இறைமை, தேசியவாதத்திற்கு சவால் விடுவதாகவும் பிரிவினைக்கான சூழ்நிலைகளை விருத்தி செய்வதாகவும் அமைகின்றது என அரசுகளால் நோக்கப்படுகின்றது. அத்தோடு அரசுகளினால் அங்கிகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்புக்களும் நிறுவனங்களும் அவ்வரசினுள் வாழும் குழுக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டிருப்பதில்லை. உரிமைகள் தொடர்பாக அழுத்தம் கொடுக்கும் சர்வதேச சமூகம் குழுக்களின் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பில் பின்நிற்பதாகவே உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது சுயநிர்ணய உரிமையை மனித உரிமையுடன் தொடர்புபடுத்தி அதனோடு இணைந்த வகையில் அங்கிகாரமளிக்க முயற்சித்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பில் ICCPR இன் கீழ் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் குழுவானது சுய நிர்ணயத்திற்கும் மனித உரிமைக்குமான தொடர்புபற்றி பின்வருமாறு கூறுகின்றது.

> **"சுயநிர்ணய உரிமையானது குறிப்பாக முக்கியத்துவமுடையதாகின்றது. ஏனெனில் தனிமனித உரிமைகளின் பயனுறு உத்தரவாதத்திற்கும் அனுஷ்டிப்புக்கும் இந்த உரிமையை விளங்கிக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் கூட சுயநிர்ணய உரிமையைப் பாவிப்பது அவசியமாகின்றது." (அனஸ்.எம்.எஸ்.எம்: 2000: 56)**

இக்கூற்றின் வாயிலாக சுயநிர்ணய உரிமையானது மனித உரிமைகளை பாதுகாத்து உத்தரவாதப்படுத்த அவசியமாகின்றது என்பது தெளிவாகின்றது. குழுக்களாக அடக்கு முறைக்கு உட்படும் போது அங்கு மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்த முடியாது போகும். எனவே, குழுக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பது அவசியப்படுத்தப்பட்டது. இருப்பினும், இவ்வுரிமைகள் மீறப்படும்போது மனித உரிமை என்ற அடிப்படையில் ஒரு தனிநபர் மாத்திரமே முறைப்பாடு செய்ய முடியும். மாறாக குழுக்கள் அல்லது மக்கள் குழுமங்கள் முறைப்பாடு செய்ய முடியாது எனும் நிலை குழுக்களின் சுயநிர்ணய உரிமைக்கான உறுதிப்பாட்டைப் பலவீனப்படுத்தியுள்ளது. எனவேதான் இன்றும் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான கருத்தாக்கங்கள் சவால் மிக்கதாகதாக காணப்படுவதுடன் அதற்கான போராட்டங்களும் முரண்பாடுகளும் தொடர்ந்து செல்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணயக் கொள்கையை தேசத்துடன் இணைத்து கருதுவதனால் அதன் அடிப்படையான நியதி தேசமாக வரையறுக்கத்தக்க அல்லது தேசமாக அடையாளங் காணப்படுகின்ற மக்கள் குழுக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது. இதனால் அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கும் குழுக்களின் சுயநிர்ணய உரிமையை அனுமதிக்க வேண்டும் என ஒரு குழுவும் மறுபுறம் இவ்வாறு தனித்துவமான அடையாளத்திற்காக ஒவ்வொரு குழுக்களும் போராட முற்படும் போது அது அரசின் தேசிய ஒற்றுமைக்கு தீங்காக அமைவதுடன் தேசியவாத உணர்வும் வீழ்ச்சியடைந்து அரசுகள் பலவீனமாக்கப்படும் தன்மை ஏற்படும் என எதிர்வாதங்களை மற்றோர் குழுவும் முன்வைக்கின்றன.

அவ்வகையில், சுயநிர்ணயத்தை அனுகூலமான ஒன்றாகக் காட்சிப்படுத்த முற்படுவோர் அதனை வேறு திசையில் நோக்க முயற்சிக்கின்றனர். பல்லின சமூகக் குழுக்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் அதேவேளை தேசிய இறைமையையும் தேசியவாத பண்பையும் பாதுகாக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்தோடு, சமஷ்டி ஆட்சிமுறையில் வேற்றுமையின் மத்தியில் ஒற்றுமை காணப்படுகின்றது. உதாரணமாக, இந்தியாவில் இன, மத, மொழி அடிப்படையிலான வேறுபாடுகள் காணப்படினும் அங்கு அவற்றைப் பேணும் வகையில் மாநில நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குழுக்களின் சுயநிர்ணய உரிமையைப் பேணுவதற்கான சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு இங்கு தேசியவாத எண்ணக்கருவும் வளர்ச்சியடைந்துள்ளது.

இறைமை என்பது மக்களை ஒரே தொகுதியினராக கொண்டிருப்பதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அவர்களுக்குள்ள பல்தேசியங்கள், பல தேசங்கள், பல மக்கள் கூட்டங்கள் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது என்பதை 1994 ஆம் ஆண்டில் எதியோப்பிய யாப்புருவாக்கத்தில் காணமுடிகின்றது. யாப்பின் முன்னுரை பின்வருமாறு கூறுகின்றது:

> **"எதியோப்பியாவின் தேசங்கள், தேசியங்கள் மற்றும் மக்களாகிய நாங்கள்... எமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு, எமது பொதுவான எதிர்காலம் வரலாற்று ரீதியாக நியாயமற்றிருந்த உறவுகளைத் திருத்தியமைப்பதன் மூலமே உயர்வடையும் என்பதை பூரணமாக ஏற்றுக்கொண்டு... இவ்யாப்பினை எமது பிரதிநிதிகள் மூலமாக ஏற்றுக்கொண்டோம்."** (நீலன் திருச்செல்வம்: 2002: 69)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த யாப்பானது ஒரு கூட்டாட்சியை அமைக்கின்றது. சகல இறைமை அதிகாரமும் மக்களில் தங்கியிருக்கவில்லை ஆனால் பன்முகப்பட்ட தேவைகள் தேசியங்கள் மற்றும் மக்கள் கூட்டங்களில் தங்கியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதுடன் குறிப்பிடத்தக்க தன்னாட்சியையும் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமையையும் வழங்குவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மறுபுறம் தனிமனிதனுக்கான சுய உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் போது அங்கு குழுக்களுக்கான சுய உரிமைப் போராட்டங்களோ அதற்கான அவசியமோ உணரப்படாது. மாறாக தனிநபர்கள் தங்களின் அடையாளங்கள் மற்றும் சுதந்திரத்தைப் பேண முடியாது என அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழக்கும்போது தனிநபர்கள் தங்களோடு ஒருமித்த தேவைகள், பண்புகள் உடையவர்களை இணைத்துக்கொண்டு குழுக்களுக்கான சுயநிர்ணய உரிமையை வேண்டி போராட முற்படுவர். எனவே, தனிநபர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அரசுகள் வழங்கி அவற்றை உத்தரவாதப்படுத்தும் போது சுயநிர்ணயம் பற்றிய அரசுகளின் நிலை மாற்றத்துக்குள்ளாகலாம். சுயநிர்ணயத்திற்கான உரிமை பற்றி பூட்ரஸ் காலி சமாதானத்திற்கான நிகழ்ச்சி நிரலில் கீழ்வருமாறு கூறுகின்றார்:

> **"இன, மத அல்லது மொழிக் குழு ஒவ்வொன்றும் அரசுத் தன்மையை கோரினால் அரசுகள் சிதறுண்டு போவதற்கு அளவே இருக்காது. அது மட்டுமன்றி எல்லா மக்களுக்குமான சமாதானம், பாதுகாப்பு, பொருளாதார சேம நலன் என்பவற்றை ஈட்டுதல் இன்னும் கடினமாகிவிடும். இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளுள் ஒன்று யாதெனில் உரிமைகளின்பால் காட்டுகின்ற பற்றுறுதியே ஆகும்" (**அனஸ்.எம்.எஸ்.எம்: 2000: 52)

மேற்கூறிய கருத்தின் படி சுயநிர்ணயம் என்பது அரசுக்கு எதிரான ஒன்றாகவே நோக்கப்படுகின்றமை புலனாகின்றது. இருப்பினும், சுயநிர்ணய உரிமையை முற்று முழுதாக ஒதுக்கிவிட முடியாது என்பதும் உணரப்படுகின்றது. எனவே உரிமைகளை உத்தரவாதப்படுத்திப் பாதுகாக்கும் போது அரசுகள் சுயநிர்ணயத்தின் பாதிப்புக்களிலிலிருந்து பாதுகாப்புப் பெறமுடியும் எனக் கூறப்படுகின்றது.

எனவே, சுயநிர்ணயம் எனும் பதமானது பிரிந்து செல்வதற்கான உரிமை அல்லது அரசை பிளவுபடுத்துவதற்கான உரிமை எனக் கருத்துக்கொள்ளும் நிலைமாறி சுயாட்சிக்கான விருப்பு, உரிமைகளை விருத்தி செய்வதற்கான ஒன்று என பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட வேண்டும். மக்கள் மத்தியில் இத்தகைய மனோநிலை வளர்ச்சியடையும்போது முரண்பாடுகளையுடைய சமூகங்களில் சாதகமான நிலை ஏற்படலாம். உதாரணமாக இலங்கையில் தமிழ் - சிங்கள மக்களிடையிலான முரண்பாட்டில் தமிழர்கள் சுயாட்சிக் கோரிக்கையை முன்வைத்தனர். இக் கோரிக்கையால் சுயநிர்ணயம் என்பது பெரும்பான்மை சமூகத்தினரால் இன்றுவரை பாதகமான ஒன்றாகவே உணரப்படுகின்றது. இந்நிலையானது யுத்தம் முடிவுற்ற நிலையிலும் அதற்கான தீர்வு முயற்சிகளில் செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே, சுயநிர்ணயம் என்ற எண்ணக்கருவில் மக்கள் கொண்டுள்ள மனோநிலை மாற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, சுயநிர்ணயம் பற்றிய கருத்தாக்கங்கள் தற்காலத்தில் அவசியமாக்கப்பட்டிருப்பினும் சர்வதேச அரசியல் முறைமையில் அரசுகள் கொண்டுள்ள முக்கியத்துவம் மற்றும் தேசிய இறைமை எனும் நிலைமைகள் சுயநிர்ணயத்தினை அங்கிகரிப்பதில் பின்நிற்கின்றன. கடந்த காலங்களில் ஏற்கப்பட்ட பூரணமான சுயநிர்ணய கருத்தாக்கங்கள் இன்று ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மறுபுறம் அரசுக்குள்ளான சுயநிர்ணயக் கோரிக்கைகளுக்கு ஆதரவுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசுகள் தங்களின் அதிகாரங்களைப் பரவலாக்குவதனூடாகவும், மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதனூடாகவும் இதனை நடைமுறைப்படுத்துகின்றன. ஏகாதிபத்திய மனப்பாங்கு, இனவாதம், மத அடிப்படைவாதம் முதலானவற்றிற்கு முக்கியத்துவம் வழங்காது, பல்லின சமூக அமைப்பைக் கொண்ட அரசுகள் அம்மக்களை சமமாக மதிக்கும் போது சுயநிர்ணயம் என்பதும் அரசுகளுக்குச் சாதகமான ஒரு எண்ணக்கருவாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உசாத்துணை**

அனஸ்,எஸ்.எம்.எஸ். (தொ.ஆ), (2000), ஆய்வு, சமூக விஞ்ஞான மன்றம்: பேராதனை.
இமயவரம்பன் (2001), **சுயநிர்ணயம் பற்றி,** புதிய பூமி வெளியீட்டகம்: கொழும்பு 11.
தமிழ்மாறன்,வி.ரி. (1995) **சர்வதேசியம்: சமகால சிந்தனைகள்,** கவிதா பதிப்பகம்: மதுரை.
நித்தியானந்தன்,ரா. (தொ.ஆ), (1997) **இலங்கையின் அதிகாரப் பகிர்வு யோசனைகள் கருத்துரைகளும் கண்ணோட்டங்களும்,** உயர்கல்வி நிறுவனம்: கண்டி.
நீலன்திருச்செல்வம் (2002), **மனித உரிமைகள் அரசமைப்புவாதம் பன்மைத்துவமும் பல்வகைமையும்,** இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்: கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து போன கண்ணாடி



**தேவதாசன் தேலக்ஷன்**
**2ம் வருடம்**
**விவசாய பீடம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்.**

ஓலைக்குடிசை, ஒழுக்குக்கூரை, நாலுபக்கம் மண்சுவர், கதவுக்கு காய்ந்து போன கறுப்புத்துணி, கட்டாந்தரையாட்டம் நிலம், வீட்டுக்குள்ள நாலு பாத்திரம், சாப்பிட ரெண்டு தட்டு, படுக்க கிழிந்து போன பாய், மாத்த கந்தையான நாலு துணி. இதுதான் அவளோட வீடு. பேருக்கென்று ஒரு அப்பன், குடித்துக் குடித்தே முழு வருத்தமும் வாங்கி இன்றோ நாளையோ என்று இழுத்துக் கொண்டு ஒரு பக்கம். தாய் காமாட்சி வீடு வீடாக வேலை பார்த்து குடும்பத்தைக் கொண்டு செல்லும் முதுகெலும்பாக. நாலாம் வகுப்பில் ஒரு தம்பி, எதுவும் தெரியாத சிறுவன். இதுதான் அவள் குடும்பம்.

நிவேதா! இதுதான் அவள் பெயர். பெயருக்கேற்றால் போல் அழகாய் இருப்பாள். உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டு இருக்கிறாள். இந்த வருடம் பரீட்சை எடுக்க இருக்கிறாள். அதி கஸ்ரத்திலும் அவள் இந்தளவுக்கு படிக்கிறாள் என்றால் அதற்கு காரணம் சண்முகநாதன் வாத்தியார்தான். எட்டாம் ஆண்டோட வேலைக்கு போகச் சொன்ன அப்பனிட்ட இருந்து தன்ர காசைக்கொடுத்து இந்தளவு வரை படிப்பித்ததற்கு அவள் என்றைக்குமே நன்றிக்கடன் பட்டிருக்க வேண்டும். வீட்டு வறுமை தாங்கமாட்டாமல் அவளும் கூட படிப்பை உடன் நிறுத்தி விட்டு வேலைக்கு போவமெண்டுதான் இருந்தாள். இருந்தும் அவளின் திறமை கண்டு பாடசாலை நிர்வாகமே அவளது படிப்பிற்குத் தேவையான செலவுகளை இலவசமாகச் செய்து வருகிறது. அதோட நல்ல ஆதரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவள் ஒரு டாக்டராக வருவாள் என்ற நம்பிகை எல்லோருக்கும் உண்டு. அவர்களது நம்பிக்கைக்கு ஏற்றால் போல அவளும் வகுப்பில் முதலாம் நிலையாகவே வந்து நல்ல புள்ளிகள் பெற்று அனைவரையும் சந்தோசப்படுத்தினாள். ஆனால் அவள் வீட்டைத்தான் அவளால் சந்தோசப்படுத்த முடியவில்லை... வீட்டிலோ ஒழுங்கான சாப்பாடு இல்லை. எப்பவுமே கால்வயிறும், அரைவயிறும் தான். சிலவேளை அதுவும் இல்லை. சாப்பாட்டுக்கே வழியில்லை இதில் அப்பாவின் வருத்தம் முத்தி வைத்தியசாலை வைத்தியசாலையாக ஏறி இறங்கினாள் அம்மா. வருத்தம் சுகமாக்க ஏராளமான பணம் கேட்டார்கள் வைத்தியசாலையில், ஏலுமா அவர்களால்?... விரும்பியதை சாப்பிட்டு, துள்ளித் திரிந்து விளையாட வேண்டிய தம்பி பசிப்பிணி தாங்கி, வாடி வதங்கி, கூனிக் குறுகி, கந்தையான சட்டையுடன், இருண்ட முகத்துடன் பள்ளி போவதை எத்தனை நாள் பார்த்து அழுதிருப்பாள். அவளால் கூட எல்லாக் கஷ்டங்களையும் தாங்க முடியும் ஆனால் அந்த பாலகனால்?. மாலை நேரம்தான் படிக்கும் நேரம் அவள் ஏனைய நேரங்களை வீணாக்காமல் ரியூசன் சொல்லிக் கொடுத்து அதில கிடைக்கிற சிறு வருமானத்தைப் பெற்று குடும்பத்துக்கு தன்னால் இயன்ற உதவியை செய்து வந்தாள். இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள்... மாலை நேரம் அது. வகுப்பு முடிந்து நிவேதா வேகமாக வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தாள். எல்லோரும் அவரவர் சைக்கிள்களிலும், பெற்றோர்களது வாகனங்களிலும் போய் விடுவார்கள். நிவேதாவுக்குத் தினமும் நடைதான். நேரம் போய்க் கொண்டிருந்தது. வேகமாக நடந்தாள். அவளைப் போலவே அவளது நினைவுகளும் முன்நோக்கி நகர்ந்தன. எப்பிடியும் என்னும் ரெண்டு மாசத்தில எக்சாம் எழுதி நல்ல றிசல்ட் வரும். எப்படியாவது டொக்டருக்கு படிக்கணும். சண்முகநாதன் வாத்தியார் சொன்னவர் தானே நான் மெடிசினுக்கு போனால் அவற்ர வெளிநாட்டுத் தம்பி உதவி செய்வார்னு. சொன்னா கண்டிப்பா மனுஷன் செய்யும். பிறகு டாக்டராக வந்து அப்பாட வருத்தத்தைச் சுகப்படுத்தணும். அம்மாவ நல்லாப் பாக்கணும். தம்பி விரும்பினதெல்லாம் வாங்கி குடுக்கணும். பெரிய வீடாக் கட்டணும். வீடு முழுக்கச் சாமான் வாங்கிப் போடணும் என்று அவள் பிஞ்சு மனசின் எண்ணங்கள் விரிந்து கொண்டே போக, பின்னால் ஒரு பெல் சத்தம் அவளை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. சைக்கிளில் வந்தவனைப் பார்த்து அவள் கண்கள் விரிந்தன. ஏன்னா அங்க அசடு வழியச் சிரிச்சிட்டிருந்தான் சந்தோஷ்.

சந்தோஷ் கணித பிரிவில் கல்வி கற்றான். சாதாரண தரத்தில் இருந்து ஒரு தலையாக அவளைக் காதலித்து வருகிறான். ஆனால் அவள் மசிவதாக இல்லை. இது நாள் வரை அவன் அவளிடம் கேட்டதும் இல்லை. அவளிடம் கேட்பதற்கு அவனிடம் துணிவும் இல்லை. இப்போதுகூட நிவேதா திரும்பி என்ன என்பது போலத்தான் பார்த்தாள். பையன் 'ஒன்னுமில்லையே' என்பது போல அப்பாவியாப் பார்த்து விட்டு ஓட்டமெடுத்தான். அவளும் முன்னால் திரும்பி ஒரு புன்முறுவலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க ஆரம்பித்தாள். சந்தோஷ் வசதியான குடும்பத்துப் பையன். ரொம்பவே நல்ல பையனும் கூட. அவளுக்காக என்னவென்றாலும் செய்வான். அவளுக்குத் தெரியாம அவளது தம்பிக்கு எத்தனையோ தரம் சாப்பாடெல்லாம் வாங்கிக் கொடுத்திருப்பான். நீண்ட காலமாக அவளை மனசார விரும்புகின்றான். இது அவளுக்கும் தெரியாமல் இல்லை. அவளுக்கும் அவனைப் பிடிக்காமலும் இல்லை. இருந்தும் அவனது காதலை ஏற்றுக்கொண்டால் அவளது குடும்பம் என்னாவது? இலட்சியம் அவளை அடியோடு தடுத்தது. அவள் காதலித்தால் இலட்சியத்தை தவறவிட வேண்டிவரும். பின் அவள் குடும்பம் இப்போது போலவே எப்போதும் இருக்க வேண்டியதுதான். இதே நிலை தான். அதனால்தான் அவள் திருமணம் செய்யாமல், குடும்பத்தை ஒரு வழிக்கு கொண்டு வந்து விட்டுத்தான் தனக்கு காதல், திருமணம் எல்லாம் என்று மனதுக்குள் ஒரு வைராக்கியமாகவே இருந்தாள்.

நேரத்தைப் பார்த்தாள். நேரம் 4.30 மணி. ஐயையோ அப்பாவுக்கு குளிக்க தண்ணி வார்க்க வேணுமே. 5மணிக்கு ரியூசனுக்கு பிள்ளைகள் வேற வருவார்களே. போகேக்க தம்பிக்கு பிடிச்ச கொம்பு பணிஸ் வாங்கிக் கொண்டு போகணுமே. இல்லாட்டி தம்பி விடமாட்டனே என்று எண்ணங்கள் பறக்க வேகமாக நடந்து கொண்டிருந்தாள் அந்த யாருமற்ற சாலையில்....

திடீரென! சாலையோர மரத்தின் பின்னாலிருந்து ஒருவன் முன்னால் பாய்ந்து வந்து நின்றான். அவள் பயந்தே போனாள். "அந்த மரத்தின் பின்னால் வா உன்கூட கொஞ்சம் பேசணும்" என்றான். அவள் என்றுமே கண்டிராத புதுமுகம் அது..

பயத்தின் உச்சிக்கே சென்ற அவள் முடியாது என்று அவசரமாக மறுக்கவும், "வாடி!" என்று அவளின் கையைப் பிடித்து இழுத்தான். சற்றும் எதிர் பார்க்காத அவள், நிலை குலைந்து தப்பிக்க முயன்றாள். சிறிய போராட்டத்திற்கு பிறகு அவனின் கையைக் கடித்து விட்டு எதிர்த்திசை நோக்கி "காப்பாத்துங்க" என்று ஓலமிட்டவாறு ஓடினாள். புத்தகங்கள் வீதியெங்கும் சிதறிப் பறந்தன. நாடி நரம்பெல்லாம் நடுக்கமெடுத்து இதயத்துடிப்பு கட்டறுத்துத் துடிக்க தலைதெறிக்க ஓடுகையில் எதிரே புதருக்குள் இருந்து இன்னொருவன் வெளிப்பட்டான். அவனைக் கண்டதும் அவள் திகைத்து நின்றாள். இது எங்கயோ பார்த்த மூஞ்சி என்று மின்னலென மண்டையில் பொறிதட்டியது. அவள் பத்தாம் வகுப்பு படிக்கும் போது அவன் A/L படித்தவன். இவளுடன் சேட்டை விட்டதென அதிபரிடம் இவள் புகார் செய்து பாடசாலையை விட்டு கலைபட்டவன். பல காலங்களுக்குப் பிறகு இப்போதான் பார்க்கின்றாள். சட்டென நினைவைத் திருப்பி ஆபத்துக்குக்குப் பாவமில்லை என்று "அண்ணே காப்பாத்துங்க" என்று அழுது கொண்டு அவனிடம் ஓடினாள். அவனும் "வாம்மா காப்பாத்துறன் பயப்படாதே" என்று அவளுக்கு அடைக்கலம் கொடுக்க சிறு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். இருந்தும் அது அதிக நேரம் நீடிக்கவில்லை. நிண்டவன் அவள் இரு கைகளையும் இறுக்கமாகப் பற்றினான், வந்தவன் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கால்களையும் பிடித்து அவளை அப்படியே தூக்கிக் கொண்டு புதர் பக்கம் கொண்டு சென்றார்கள். நிவேதா கத்தினாள், கதறினாள், கெஞ்சினாள், மன்றாடினாள், விடுபட தன்னால் இயன்றளவும் முயன்றாள். இருந்தும் அந்த இரு அரக்கர்களின் இரும்பு பிடிக்குள் இருந்து விடுபட அவளால் முடியவில்லை. சத்தம் வராமல் அவளது வாய்க்குள் துணியை அடைந்தார்கள். இனி அவளால் கத்தவும் முடியாது. யாரும் காப்பாற்ற வருவார்கள் என்ற இறுதி நம்பிக்கையும் இழந்து தளர்ந்து சோர்ந்தாள், விழுந்தாள். விழுந்தவளை இரு மிருகங்களும் மாறி மாறி வேட்டையாடின.

சிறு மரண போராட்டத்தின் பின் நிவேதாவின் அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது. இறுதியில் அவளுக்கு மூச்சு முட்டியது. உயிர் பிரிந்தது. அவள் செத்து விட்டதை உணர்ந்த காமுக நாய்கள் ஓட்டமெடுத்தன. நிவேதாவின் உடல் அலங்கோலமாக, சின்னாபின்னமாக்கப்பட்டு, சிதைக்கப்பட்டுக் கிடந்தது. கண்கள் மட்டும் திறந்திருந்தன. அந்த கண்களில் ஆயிரம் ஏக்கங்கள் நிரந்தரமாக உறங்கிப் போயின.

இரண்டு நாட்கள் கழிந்தன. விடயம் பரபரப்பானது. ஊரெங்கும் இதே பேச்சு. சம்பந்தப்பட்ட இருவரையும் போலீசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள். பல மாத வழக்காடல்களுக்கு பிறகு சட்டம் பணப்பைக்குள் சிக்கி ஊமையாகிப்போனது. ஆம்! பணம் தான் வென்றது. செல்வாக்கும் வென்றது. ஆறு மாதத்தின் பின் பணத்தாலும் செல்வாக்கினைப் பயன்படுத்தியும் இருவருக்குமே நிருபிக்க போதிய சாட்சிகள் இல்லை என்று நீதவான் இரண்டு கோடிகளுக்கு விலை போய் வஞ்சகர்களின் வீட்டுக் கோடிக்குப் பின்னால் நின்று எழுதிய தீர்ப்பை இறுதியென வாசித்தார். மேல் முறையீடு செய்யலாம் எனக்கூறி பல லோயர்களின் வாகனங்கள் நிவேதாவின் வீட்டினை வட்டமிட்டன. அதற்கு ஒவ்வொருவரும் இரண்டு இலட்சம் , ஐந்து இலட்சம், பத்து இலட்சம் என்று கேட்டார்கள். அதேநாள் இரவு நிவேதாவின் மொத்த குடும்பமும் சாப்பாட்டில் விஷம் சேர்த்து உண்டு செத்து மடிந்தார்கள். அந்தக் கோரச் செத்த வீட்டிற்கு அந்த இரு கயவர்களும் வந்து துக்கம் விசாரித்துச் சென்றதுதான் கொடூரம். கடன் தொல்லையாம் காரணம், கட்டுக்கதை வேறு.

அடுத்த நாள் காலை, வானொலியில் தலைப்புச் செய்தி....

கடந்த ஆறுமாதத்திற்கு முன் இடம்பெற்ற கற்பழிப்புச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, நேற்று விடுவிக்கப்பட்ட ராஜன் என்பவரின் தங்கை இன்று இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு, உயிருக்குப் போராடிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். செய்தியை கேள்விப்பட்ட ராஜன் நிலை குலைந்து போனான். தன்வினை தன்னையே தாக்கியதை நினைத்து, பைத்தியம் பிடித்தவனைப் போல அழுது புலம்பி, ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று நாள் கழித்து வந்த பத்திரிகையில் தலைப்புச் செய்தி...

ஆறு மாதங்களுக்கு முன் நிவேதாவை கற்பழித்து கொலை செய்தோரில் சில தினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்ட ரகு என்பவர் மர்மநபரால் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு பாழடைந்த கட்டடத்தின் அருகில் இருந்து மீட்கப்பட்டார். அவரது சடலத்தின் அருகில் ஒரு துண்டுப் பிரசுரம் மீட்கப்பட்டது. அதில் " கற்பழிப்பு காமுகர்களுக்கு தண்டனை ஜெயியில் அல்ல, வெளியில் தான் - கடவுள்", என்று குறிப்பிடப்பட்டிருந்தது. விசாரணைகளைக் காவல்துறையினர் முன்னெடுக்கின்றனர் என்று தொடர்ந்தது அந்தச் செய்தி.

தன் தாய் சகோதரிகளைத் தவிர மற்ற பெண்களை காமத்தோடு பார்ப்பவர்கள், மற்றவர்களின் கண்களுக்கும் அவர்களின் தாய், சகோதரிகள் காமத்தோடு தான் பார்க்கப்படுவார்கள் என்று அனைவரும் உணரும் வரை இந்த வன்செயல் நிறுத்தப்படப் போவதில்லை. சட்டம் பணத்தால் வாங்கப்பட்டு, செல்வாக்கும், பாரபட்சமும் தலை விரித்தாடும் வரை, நீதி கோரி எங்கு சென்றாலும் பலனில்லை. இதற்கு சந்தோஷ் போன்ற மர்ம நபர்கள் உலகத்திற்குத் தெரியாமல் கயவர்களை தட்டிக்கேட்டு தண்டனை வழங்கினாலேயொழிய மற்றப்படி சட்டம் அவர்களை ஒன்றும் செய்துவிடப் போவதில்லை.

**மூழ்கிப் போன**

**நட்சத்திரங்களை எண்ணி**

**இன்னும் எத்தனை காலம்**

**ஆகாயம்**

**துக்கம் அனுசரிக்கும்**

**– இக்பால்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலில் ஞாபகத்தின் முக்கியத்துவம்



**வே.ரவிக்குமார்**
**மெய்யியல் மற்றும் உளவியல் துறை**
**விடுகை வருடம்**

## அறிமுகம்

ஞாபகம் என்பது கற்றலில் பங்களிப்புச் செய்யும் முக்கியமான ஓர் அம்சமாகும். ஞாபகம்இ கற்றல் ஆகியன மிக நெருங்கிய தொடர்புள்ளவை. கற்றவற்றை களஞ்சியப்படுத்தி வைத்துப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தாவிடின், பயன் பெற முடியாத அந்தக் கற்றல் அர்த்தமற்றதாகும். அதனால்தான் ஞாபகத்தையும்இ கற்றலையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்கின்றோம். கற்றல் நிகழாவிடின் ஞாபகம் எவ்வித உள்ளடக்கத்தையும் கொண்டிருக்க மாட்டாது என்பதே அதுவாகும்.


தகவல்களைச் சேமித்து அல்லது களஞ்சியப்படுத்தி திரும்ப மீட்டுக் கொள்ளும் தகைமையினை ஞாபகம் அல்லது நினைவு என வரையறுக்கலாம். அதாவது தேவையானவற்றை திரும்ப பெறுவதற்காக அவற்றைச் சேமித்து வைக்கும் கொள்வனவு சக்தியைக் குறிக்கும். வேறுவகையில் கூறுவதானால் புலக்காட்சிகள் மூலம் உள்ளத்தினுள் உருவாகும் அமைப்புக்களை மீட்டறியும் சக்தியே ஞாபகம் எனப்படும். ஸ்டௌரிட் (Stout) என்பவரின் வரைவிலக்கணப்படி ஞாபகம் என்பது நடைபெற்று முடிந்துவிட்ட ஒரு அனுபவத்தையோ, நிகழ்வையோ அது எவ்வாறு நடந்தது எனப்படிப்படியாக நினைவு கூர்ந்து கொள்ளும் ஒரு செயலாகும் என்கிறார்.

எல்லோருக்கும் ஒரே மாதிரியான நினைவாற்றல் இருப்பதில்லை. மனிதனுக்கு மனிதன் இவை வேறுபட்டுக் காணப் படுகின்றது. சிலருக்கு மற்றவரின் பெயரை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது கடினம். சிலருக்கு அவர்களது தொலைபேசி எண்களையே நினைவு வைத்துக் கொள்வது பெரும் சிரமமாக உள்ளது. நாம் எமக்கு எதனால் ஞாபக மறதி ஏற்படுகின்றது என்றும் தேவையான அளவு ஞாபக சக்தி ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கற்றலுக்கும் மீளக்கற்றலுக்கும் இடைப்பட்ட காலம் | நினைவிலிருத்தி வைத்திருந்த வீதம் |
|---|---|
| 20 நிமிடம் | 58 % |
| 1மணி | 44 % |
| 9 மணி | 36 % |
| 24 மணி | 34 % |
| 2 நாள் | 28 % |
| 6 நாள் | 25 % |
| 31 நாள் | 21 % |




இருப்பதில்லை என்றும் நினைப்பது மட்டுமின்றி நம்முடைய சிறியளவிலான மூளையிலே எவ்வளவு வி'யங்களைத்தான் பதிவாக்க முடியும் என்ற வினாவும் எம் எல்லோரிடமும் ஏற்படுவதுண்டு. ஆனால் எம் அனைவருக்கும் எங்கள் மூளையைப் பற்றிச் சரியாக அறிவு இல்லை என்பதுதான் இங்கே அர்த்தமாகும்.

நம் மூளையில் இணைந்திருக்கும் ஒவ்வொரு நரம்பும் நம் ஒவ்வொரு அனுபவத்தையும் பதிவு செய்து கொள்கிறது. இப்படிப்பட்ட நரம்புகள் மூளையில் லட்சக்கணக்கில் இருக்கின்றன. எனவே, நம் அனுபவங்கள் எல்லாமே மூளையில் ஒன்றுவிடாமல் பதிவாகி விடுகின்றன எனலாம். ஆனால், திடீர் அதிர்ச்சி காரணமாக ஞாபகம் தற்காலிகமாக அல்லது நீண்ட காலத்திற்கு இல்லாது போகலாம். இந்நிலையே நினைவிழத்தல் எனப்படுகின்றது.

ஒரு மனிதர் ஒரு விடயத்தைத் தேவைக்கேற்ப குறிப்பிடாத இடத்து அவரை நாம் மறதி உடையவர் என்கின்றோம். மறதி என்பது மூலக்காரணியின் உதவியில்லாமல் ஒரு செயலையோஇ ஆட்களையோ, இடத்தினையோ நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் போவது இது ஒரு அசாதாரண நிகழ்வல்ல. ஒரு சமயம் நினைவிற்கு வராமல் போவதை மறுசமயம் தெளிவாக நினைவு கூற முடிகின்றது. சந்தேகம், அதீத களைப்பு, கவனச்சிதறல், உணர்வுப் பாதிப்பினால் ஏற்படும் அசதிகள் என்பனவே மறதிக்கு வழி வகுக்கின்றது எனலாம். மறதி எல்லா மனிதர்களுக்கும் உரிய பொதுச் செயற்பாடாகக் காணப்பட்டாலும் ஓர் எதிர்மறை மனப்பதிவாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அதாவது நாம் அறிந்த ஒன்றை மீண்டும் நினைவில் கொண்டு வர முடியாமல் இருப்பதனை மறதி என்கிறோம்.

இதன் படி (வரைபு, அட்டவணை) முதல் 24 மணி நேரத்தில் 66 வீதமானவை மறக்கப்பட்டன. இரண்டாவது நாளுக்குப் பின்னர் வரைபு அனேகமாக ஓர் நேர்கோடு போன்று செல்கின்றது. அதற்குப் பின்னர் ஒவ்வொரு நாளும் மிகக் குறைவாகவே மறக்கப்படுகின்றது என்பதை அவதானிக்க முடிகின்றது. இதன் படி கற்கப் பெற்ற திறன்கள் பல நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தபடவில்லை எனின் மறதி ஏற்படலாம். இங்கு காலம்தான் மறதியினை உண்டாக்கின்ற முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகம் தசைநாரைப் போன்றது. தசைநார்கள் பயிற்சி மூலம் விருத்தியடையும். தசைநார்களை விருத்தி செய்து கொள்வதன் மூலம் நற்பயன்கள் பெறலாம். ஞாபகத்தைப் பயிற்சி மூலம் மேம்படுத்திக் கொள்ளலாம். இன்று பெரும்பாலோனோர் ஞாபகக் குறைபாடுகள் பற்றி பிரஸ்தாபிப்பதைக் காணமுடியும். ஆனால், பெற்றோர்கள் பிள்ளைகளின் பல்வேறு நடவடிக்கையில் அக்கறை செலுத்தினாலும் ஞாபக சக்தியை மேம்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்துவது குறைவு. ஒரு மனிதன் "எனக்கு எதுவும் ஞாபகத்தில் இருப்பதில்லை" என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தால் ஞாபகசக்தி மேலும் குறையுமே தவிர விருத்தியடையமாட்டாது எனலாம். அவ்வாறு எண்ணுவதை விட்டு நம்பிக்கையுடன் பயிற்சி செய்வதன் மூலம் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் இதற்காகச் சிறிது நேரத்தை செலவிடுவது போதுமானது. அந்தவகையில் சில உத்திமுறைகள் பின்வருமாறு:

- இப்போது நீங்கள் இருக்கும் இடத்தில் உள்ள பொருட்களை சில கண நேரம் அவதானியுங்கள். அவற்றை ஞாபகப்படுத்தி முதலில் எழுதிக் கொள்ளுங்கள். மீண்டுமொரு தடவை சில கணநேரம் அவதானியுங்கள் மீண்டும் ஞாபகத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.
- மனதை இதப்படுத்தும் பயிற்சி ஒன்றில் ஈடுபடுங்கள்.

அவ்வாறான பயிற்சிகளை தினமும் மேற்கொள்ளுங்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு நீங்கள் ஓய்வாக இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதுடன் அமைதியாக இருக்கும் சூழலை தெரிவு செய்வதும் அவசியமாகும். மனதை ஒருமுகப்படுத்தியவாறு தியானத்தில் ஈடுபடுங்கள். உங்களது சமயத்தை அடிப்படையாகக் கொண்டு ஈடுபடலாம். முதல் நாள் படிக்க ஆரம்பிக்கும் முன் ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டித்தும் பிறகு ஒவ்வொரு நிமிடமும் படிப்படியாக அதிகரித்து 10 நிமிடம் வரையில் மௌனமாக இருக்கப் பழகி கொள்ளுங்கள். இச் செயற்பாட்டினைத் தவறாது தினமும் சில நிமிடங்கள் செய்து பாருங்கள் உங்களது ஞாபக சக்தி விருத்தியடைவதை நீங்கள் உணர்வீர்கள்.

ஞாபக சக்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டுமாயின் படிக்கும் போது பல்வேறு உத்தி முறைகளையும், நுட்ப முறைகளையும் கையாள வேண்டியது அவசியமாகும். படித்தவற்றை அவ்வப்போது ஞாபகமூட்டிப் பார்ப்பதன் ஊடாக அவை நினைவில் பதிந்துள்ளனவா எனப் பரிசீலித்துக் கொள்ளலாம். நீங்கள் மறந்துவிட்டவை எவை எனத் தேடியறியுங்கள். மறந்து விடுபவை பற்றிக் கவனஞ் செலுத்துங்கள். இயலுமாயின் இன்று தொடக்கம் யாதேனும் ஓர் பாடத்தையோ, மொழியையோ கற்பதன் மூலம் ஞாபகப் பயிற்சியில் ஈடுபடுங்கள். அதன் மூலம் உங்களது ஞாபகப் பயிற்சியை பரிசீலித்துப் பாருங்கள்.

பல சமயம் நாம் ஞாபகத்தில் இருக்கின்றது ஆனால் நினைவுகூற முடியவில்லையே என்று குழப்பிக்கொள்கிறோம். வேண்டிய நேரத்தில் நினைவுகள் வராமல் திடீரென்று ஞாபகம் வந்து விட்டது என்கின்றோம். இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணமான ஞாபகம் (memory) என்பது பல நிலைகளின் அடிப்படையில் நிகழ்வதாகும். ஞாபகம் என்பது ஒரு தகவல் களஞ்சியமாகும். நாம் பெறும் அனுபவங்கள் மூலம் பயன்பெற வேண்டுமெனின் அவற்றை ஞாபகக் களஞ்சியசாலையில் தேக்கி வைக்க வேண்டும். கற்றல் நிகழாவிடின் ஞாபகத்தில் எவ்வித உள்ளடக்கமும் காணப்படமாட்டாது.

ஞாபகம் என்பது மூன்று படிமுறைகளைக் கொண்ட ஒரு செயன்முறை எனலாம். சான்றாகப் புலன்சார் ஞாபகம், குறுகிய கால ஞாபகம், நீண்ட கால ஞாபகம், என்பன அவையாகும். ஒருவர் நன்கு ஞாபகம் வைத்திருக்க வேண்டுமாயின் தகவல்களை நீண்ட கால ஞாபகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புதல் வேண்டும். ஆனால் குறுகிய கால ஞாபகத்தின் மூலம் சூழலிலிருந்து பெறப்படும் தகவல்கள் நீண்ட கால ஞாபகத்திற்கு அனுப்பப்படுவதோடு நீண்ட கால ஞாபகத்தில் உள்ள தகவல்கள் மீண்டும் நோக்கும் பொருட்டு குறுகிய கால ஞாபகத்திற்குக் கொண்டு வரப்படும்.

## ஞாபகத் திறன் நிலைகள்


உளவியல் அறிஞரான அட்கின்ஸன் என்பவர் தனது ஆய்வின்படி ஞாபகத் திறனானது மூன்று தனித்த ஞாபக நிலைகளை உள்ளடக்கியுள்ளது என்கிறார்.

- ❖ முதல் கட்ட ஞாபகம் உணர்வினை அடிப்படையாகக் கொண்டது (Sensory Memory)
- ❖ இரண்டாம் கட்ட ஞாபகம் குறைந்த கால அளவினைக் கொண்டது (Short term Memory)
- ❖ மூன்றாம் கட்ட ஞாபகம் நீண்டகால அளவினை உடையது எனலாம் (Long term Memory)

தொடு உணர்ச்சி, கேட்கும் உணர்ச்சி, பார்க்கும் உணர்ச்சியின் மூலம் ஏற்படும் நினைவுகள் முதற்கட்ட ஞாபக உணர்வில் உள்ளடங்கும். மின்னல் நொடியில் தோன்றி மறைவதைப் போன்று இவ் ஞாபகம் ஒரு கணம் நினைவிற்கு வந்து மறந்து போகும். ஒரு பொருளினை வாங்கும் பொழுது அல்லது பல பொருட்களின் விலையைக் கேட்டறியும் பொழுது ஏற்படும் நிகழ்வுகள் யாவும் தற்காலிக நினைவுகள் எனலாம். சான்றாகத் தொடு உணர்வு மூலம் மனிதரை, பொருட்களை அடையாளம் காணும் குழந்தை பின்னர் அப்பொருட்களையோ, ஆட்களையோ காணும் போது இனம் கண்டு கொள்வது இந்நிலையைச் சார்ந்தது எனலாம். அதிகம் பரிச்சயமில்லாத ஒருவருடன் பேசவேண்டிய தேவையாயின் அவரின் தொலைபேசி இலக்கத்தை வாங்கி ஏற்படின் தொலைபேசியின் ஊடாக அவருடன் உரையாடி விட்டு அவரின் இலக்கத்தை மறந்து போகிறோம் இது இரண்டாம் நிலை ஞாபகத்தைச் சார்ந்தது. நம் கவனம் ஆழ்ந்து அதில் செலுத்தப்படாததால் தான் அவ் எண்கள் நம் நினைவில் இருப்பதில்லை. ஆக இரண்டாம் நிலை ஞாபகம் குறைந்த கால அளவினைக் கொண்டதாக உள்ளது. இதனால் இதன் கால அளவு முப்பது நொடிகளுக்கும் குறைவாகவே காணப்படுகின்றது எனலாம்.

அதிக செய்திகள் நீண்ட காலத்திற்கு ஞாபகத்தில் இருத்திக் கொள்ளப்படுவது இவ்வகையைச் சார்ந்தது. இது மிக முக்கியமான மூளை அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்நிலையை அடைய பல பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டியதாக உள்ளது. சான்றாக நிரந்தர ஞாபக சக்தியாக மாற்ற வேண்டுமெனில் ஆழ்ந்த கவனிப்பு, சிந்தித்தல், புரிந்து கொள்ளுதல், நடைமுறை வாழ்க்கையோடு ஒப்புமைப்படுத்தி பார்த்தல், தொடர் பயிற்சி, மீண்டும் மீண்டும் அடிக்கடி நினைவு கூறுதல், எழுதிப் பார்த்தல், ஆர்வம் உண்டாக்கக் கூடிய பயிற்சிகள் முதலானவற்றை மேற்கொள்வது அவசியமாகும்.

ஞாபகத் திறன் நிலைகளில் குறுங்கால மற்றும் நீண்ட கால நினைவாற்றல் நிலைகளை பின்வருமாறு வரைபடத்தை பார்ப்பதன் ஊடாக எளிதாக புரிந்து கொள்ள முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே படத்தில் காட்டப்பட்டவாறு புலன்களில் இருந்து வரும் பல்வேறு தகவல்கள், செய்திகள், புதிய விடயங்கள் எமது மூளையில் நுளைகின்றன. இவற்றில் உடனடியாக தேவையானவை மட்டும் வடிக்கப்பட்டு குறுங்கால நினைவுப் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. ஏனையவை ஒரு செக்கனுக்கும் குறைவான காலப்பகுதியில் அழிந்து போகின்றன. குறுங்கால நினைவிற்குள் அனுப்பப்பட்டவற்றில் தேவைகளுக்கு ஏற்ப மறக்கப்படுவதுடன் தேவையானவை மேலும் முறைப்படுத்தப்பட்டு நீண்ட கால நினைவிற்கு மாற்றப்படுகின்றது எனலாம். ஆகவே தொடர்ந்து தேவையான விடயங்களை நீண்ட கால ஞாபகத்தில் பாதுகாக்கும் முகமாக பல்வேறு பயிற்சிகள் போன்ற மேலே கூறப்பட்ட முறைகள் பயன்படுத்தப்படும்.

## கற்றலின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

நாம் கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது பல்வேறு விடயங்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அந்தவகையில் நாம் நீண்ட நேரம் படிக்கும் போது நரம்புத் தொகுதி களைப்படையும். இடையிடையே ஓய்வெடுத்துப் படிப்பதால் கற்றல் பயனுறுதி உடையதாக அமையும். படிக்கும் போது இடையிடையே ஓய்வெடுத்துக் கொள்வதற்காகச் சற்று நேரம் நித்திரை செய்யலாம், அயற் சூழலின் அழகை இரசிக்கலாம், அமர்ந்திருக்கும் நிலையை மாற்றலாம், எழுந்து வெளியில் சென்று சிறிது உலாவலாம் அல்லது சிறிது நேரம் விளையாடலாம்.

இடைவிடாது தொடர்ச்சியாகப் படிப்பது பயனுறுதி உடைய செயல் இல்லை எனலாம். களைப்பு உணரப்படும் போது இடைவிட்டுப் படிப்பதும் படித்தவற்றை மனதில் பதித்துக் கொள்வதற்கான உத்திகளைக் கையாள்வதும் ஞாபக சக்தியை அதிகரித்துக் கொள்ள உதவும் எனலாம். அத்துடன் நாம் பயணத்தில் ஈடுபடும் வேளையிலும், ஓய்வாக இருக்கும் போதும் கற்ற விடயங்களை மனதினால் நினைவு கூறுவது பயனுறுதி உடையதாக அமையும் எனலாம்.

கற்றலின் போது நாம் படித்தவற்றைக் காலந்தாழ்த்தாது பயிற்சியில் ஈடுபடுத்துதல், வினாக்களுக்கு விடை எழுதுதல், மனதினால் தானும் பயிற்சியில் ஈடுபடுதல், பழைய அறிவை புதிய அறிவுடன் தொடர்புபடுத்தல், ஒழுங்கமைப்பு, இணைப்பு சமிக்ஞைகளை வைத்துக் கற்றல், இடைவிட்டுப் படித்தல், மனப்பாடத்தை ஆக்கிக்கொள்ளல், படித்தவற்றைச் செய்து பார்த்தல், பல புலனுறுப்புக்கள் பங்குபற்றும் வகையில் படித்தல், அமைப்பையும் கோட்பாட்டையும் அறிந்து கொள்ளல், அறிவைத் தனதாக்கி கொள்ளல் போன்றவை கற்றலின் போது ஞாபகத்தில் வைத்திருப்பதற்கான சில உத்தி முறைகளாகும்.

மேலும் பாடத்தின் குறிக்கோளை அறிதல், கலந்துரையாடல், வரிசைக் கிரமமாகப் படித்தல், கற்பதைத் தனதாக்கிக் கொள்ளல், குறியீடுகளை வைத்துக் கொள்ளல், உற்சாகமாக ஈடுபடுதல், எது மறந்து போகும் என்பதை தெரிந்து வைத்திருத்தல், மனனஞ் செய்ய வேண்டியவைகளை அறிந்து கொள்ளல் போன்றவையும் நல்ல ஞாபக சக்திக்கு உதவும் சில வழிமுறைகளாகும்.

இது மட்டுமன்றி ஆசிரியர்களும் கற்பித்தலின் போது சில முறைகளைக் கையாள்வது அவசியமாகும். அந்தவகையில் நினைவில் நிற்கும் வகையில் கற்பித்தலின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையுடன் தொடர்புபடுத்துதல், புரிய வைத்தல், ஒழுங்கமைத்துப் படிப்படியாக பாடத்தை வளர்த்துச் செல்லல், குறியீடுகள் சமிக்ஞைகளை வழங்குதல், தெளிவான உச்சரிப்பு, தேடல், கண்டறிதல் போன்ற ஏற்பாடுகள் மூலம் கற்பித்தல், பயிற்சி வழங்குதல், சுவையாகக் கற்பித்தல், அதிகமான புலன்களை ஈடுபடுத்தும் விடயங்களைப் படங்களாக மாற்றுதல், நிகழ்ச்சிகள் கதைகள் மூலம் கற்பித்தல், கற்றவற்றைச் சுய அனுபவமாக மாற்றுதல், கற்றலைத் தமது பொறுப்பாக ஆக்கிக் கொள்ள உதவுதல் என்பன ஆசிரியர்கள் கையாளக் கூடிய உத்திகளாகும். கற்றலின் பின் அவற்றை ஞாபகத்தில் வைத்திருக்க உதவி செய்வதும் ஆசிரியர்களின் கடமையாகும் எனலாம். அத்துடன் பெற்றோர்களினதும் பங்கும் அவர்களது வழிகாட்டல்களும் ஞாபகம் தொடர்பான எண்ணக்கருவுக்கு முக்கியமானது எனலாம். மனிதர்கள் வயதான காலத்திலும் மனதை உற்சாகமாக வைத்திருப்பதன் மூலம் மறதியை இழிவாக்கலாம். அதற்கான கற்றல் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

இன்று பலர் ஞாபக சக்தியை விருத்தி செய்வதற்காக மருந்து வகைகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கின்றமையை காண முடிகின்றது. எனினும் பல்வேறு வகையான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்ட போதிலும் ஞாபகச் சக்தியை விருத்திச் செய்யக்கூடிய மருந்து வகைகள் இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனலாம். விட்டமின் நு மூலம் அல்ஸைமர் நோய் கட்டுப்படுத்தப் படுகின்றமையால் அதனை ஞாபக சக்தியினை விருத்தி செய்வதற்காக பயன்படுத்த முடியும் என சிலர் கூறுகின்றனர். ஈஸ்ரஜன் எனும் ஓமோன் மூளையின் தொழிற்பாட்டைச் சீர்படுத்துகின்றமையால் அதன் மூலம் ஞாபக சக்தியை விருத்தி செய்யலாம் எனும் நம்பிக்கையும் நிலவுகின்றது. எனவே ஞாபக சக்தியானது மனித வாழ்க்கையில் சிறப்பான முறையில் மனிதன் தொழிற்படுவதற்கும் அவனது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஞாபகம் அத்திவாரமானது எனலாம்.

## உசாத்துணை நூல்கள்

ஜமாஹிர்.பீ.எம் (2009) **"பொது உளவியல் ஓர் அறிமுகம்"** இலங்கை தென்கிழக்கு ஆய்வமையம், கண்டி - இலங்கை.

சீதா சந்தசீலி சமரசிங்ஹ (2005) **"நினைவாற்றலை வளர்த்தல்"** குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

நளினி.ந (2002) **"வளரும் உள்ளம் மாணவர் உளவியல்"** தமிழ்ப் புத்தகாலயம், பாண்டி பஜார், சென்னை-600 017.

ஜி.எஸ்.எஸ் (2006) **"ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!"**
Nalam, An imprint of New Horizon Pvt, Let. Chennai – 600 018.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டு மரத்தினூடான தென்னாபிரிக்க முரண்பாடு பற்றிய ஓர் பகுப்பாய்வு



**லிண்டா பிரசானி எழிலரசு,**
**உதவி விரிவுரையாளர்,**
**அரசறிவியல் துறை.**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**பட உதவி**
**H.L.N.K லியனகே**

**நா**கரீக வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் மனிதன் இருந்தாலும் கூட, அவனது வாழ்க்கை முறையில் முரண்பாடு அல்லது மோதல் என்ற அம்சத்தினைப் பிரிக்க முடியாதுள்ளது. சமூகத்தில் ஒற்றுமை, ஒத்துழைப்பு, உடன்பாடு என்பவற்றிற்குச் சமனாக முரண்பாடு, வேற்றுமை, ஒத்துழைப்பின்மை போன்றனவும் காணப்படுகின்றன. இவற்றில் அதிகளவான விளைவுகள் ஏற்படுவதினையும் அன்றாட வாழ்வில் காண்கின்றோம்.

அந்த வகையில் முரண்பாடு என்பது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினர் (மனிதர்கள், குழுக்கள், அரசுகள்) இடையிலான ஒரு விசேட உறவாகும். இத்தரப்பினர் என்போர் மனிதர்கள், குழுக்கள், அரசுகளாகக் கூட அமையப் பெறலாம். கிறிஸ்தோபர் மிச்சேல் இன் கருத்துப்படி **"ஒத்துவராத இலக்குக்களைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருப்பதாக நினைக்கின்ற இரண்டு அல்லது பல தரப்புக்களுக்கிடையே காணப்படும் உறவாகும்"**. குபின்சி ரைட் என்பவரின் கருத்துப்படி **"மோதல் என்பது ஒன்றுக்கொன்று எதிராக வழிநடத்தப்படுகின்ற சமூக உள்ளடக்கங்களின் எதிர்ப்புத் தன்மை யாகும்"**. இவ்வாறு அறிஞர்கள் பலவாறு தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

குறிப்பிட்ட முரண்பாட்டினை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு முரண்பாட்டில் ஈடுபடும் தரப்பினர், முரண்பாட்டிற்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் என்பவற்றினைத் தெளிவாக புரிந்து கொள்வதற்காக முரண்பாட்டு பகுப்பாய்வு கருவிகள் உதவுகின்றன.

அந்தவகையில் முரண்பாட்டு பகுப்பாய்வுக் கருவிகளாக

- ✓ முரண்பாட்டு மரம்.
- ✓ கல்டூங்கின் முரண்பாட்டு முக்கோணம்.
- ✓ Conflict time line
- ✓ Conflict map
- ✓ Conflict onion
- ✓ Conflict Iceberg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ Conflict pyramids
- ✓ Conflict pillars


போன்றன அமைகின்றன.

உலகளாவிய ரீதியில் அரசுகளின் எல்லைகளின் உள்ளேயும், எல்லைக்கு அப்பாலும் முரண்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான முரண்பாடுகள் பிரித்தானிய காலணித்துவ கால சூழ்நிலையில் ஏற்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. இந்தவகையில் தென்னாபிரிக்காவின் நிற முரண்பாட்டின் தோற்றத்திற்கான காரணிகள், விளைவுகள் ஆகியவற்றை முரண்பாட்டு மரத்தின் மூலம் பகுப்பாய்வு செய்து நோக்குவோமாயின்,

முரண்பாட்டு மரத்தின் அடிப்படையில்

1. மரத்தின் வேர் பகுதி – முரண்பாட்டின் காரணிகள்.
2. மரத்தின் தண்டு – முரண்பாடு.
3. மரத்தின் கிளைகள் – முரண்பாட்டு விளைவு

எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.




முரண்பாட்டு மரம் 01

இவ்வாறு முரண்பாட்டு மரத்தின் மூன்று பகுதிகளாக பிரித்து முரண்பாட்டின் பக்கங்களை அவற்றின் வாயிலாக நோக்குகையில் இலகுவில் பகுப்பாய்வு செய்து விளங்கிக்கொள்ள கூடியதாக அமைகின்றது

முரண்பாட்டு மரத்தின் வேர்ப்பகுதியினை நோக்குகையில் அதாவது தென்னாபிரிக்கா நிற முரண்பாட்டின் காரணங்களை இனங்கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.

## தென்னாபிரிக்க நிற முரண்பாட்டு அறிமுகம்.

ஆபிரிக்கா கண்டத்தினை இருண்ட கண்டம் என வர்ணித்தாலும் கூட தென்னாபிரிக்கா நாடானது தங்கம், வைரம், வாசனைத் திரவியம் மற்றும் இயற்கை வளங்களைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமிகு நாடாகும். இதனாலேயே ஐரோப்பிய நாடுகள் தென்னாபிரிக்காவை ஆக்கிரமிக்கும் நோக்கில் படையெடுத்தனர். 1497இல் வஸ்கோட காம (Vascoda Gama) தென்னாபிரிக்காவை வந்தடைந்தார. இதனைத் தொடர்ந்து 1652 இல் டச்சை சேர்ந்த கிழக்கு இந்திய கம்பனி வர்த்தகத்தினர் தென்னாபிரிக்காவின் தெற்குப் பகுதியை ஆக்கிரமித்து வைன் உற்பத்தியில் ஈடுபட்டனர். பிற்காலத்தில் இவ்வர்க்கத்தினரே "Afrikaner" என அழைக்கப்பட்டனர். இவர்களே ஆபிரிக்காவில் அதிகாரம் மிகுந்த மற்றும் செல்வம் மிகு வர்க்கத்தினராக காணப்பட்டனர்.

டச்சு நாட்டினரைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டினரும், பிரித்தானியரும் தென்னாபிரிக்காவிற்கு வருகை தந்தனர். இதில் பிரித்தானியரின் ஆதிக்கம் அதிகளவில் காணப்பட்டது. இவர்கள் டச்சு நாட்டினருடன் அடிக்கடி போர்புரிந்து வந்தனர்.

உண்மையில் தென்னாபிரிக்காவின் பூர்வீகக் குடிகள் Xhosa மற்றும் Zulu எனும் இனத்தவர்களாகும். இவ்வினத்தவர்களை அடிமைகளாக டச்சு மற்றும் பிரித்தானியர் ஏற்றுமதி செய்தும், தம் வேலைகளுக்குப் பணித்தும் வந்தனர். இவர்கள் கொடுமைகளுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாகினர். இதன் பிரகாரம் 1814ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி டச்சு மற்றும் பிரித்தானியரை இணைத்து அடிமைகள் ஏற்றுமதி வியாபாரத்தைத் தடுக்கும் முகமாக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இதன் பிரகாரம் 1910ஆம் ஆண்டு முதல் தென்னாபிரிக்கா பிரித்தானியரின் வசமாகியது. பிரித்தானியர் மற்றும் டச்சுக்காரர்களுக்கிடையிலான போரில் ஆயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டதுடன், சொத்துக்களும் சேதமடைந்தன. பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக குரல் கொடுக்கவும், எதிர்ப்பினைத் தெரிவிக்கவும் என தென்னாபிரிக்காவின் சுதேச வாசிகளினால் The South African Native National Congress (தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ்) 1912ஆம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி உருவாக்கப்பட்டது. பிறகு இது 1923 இல் African National Congress (ANC) என பெயர் மாற்றம் பெற்றது. இவ்வமைப்பு கறுப்பினத்தவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்தும் வந்தது.

இரண்டாம் உலகப் போரிற்குப் பின்னர் பிரித்தானியர் காலனித்துவ அரசுகளை படிப்படியாக விடுவிக்கத் தொடங்கினர். ஆகவே 1948ம் ஆண்டு தென்னாபிரிக்காவும் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்டது. இதன் பின்னர் 1948 இல் இடம்பெற்ற தேர்தலில் National Party (தேசிய கட்சி) பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியை அமைத்துக் கொண்டது.

இவ்வரசாங்கத்தின் (National Party) ஆட்சியில் மூன்று விடயங்கள் பிரதானமாகக் காணப்பட்டன.

1. அரசியல் விடயங்களில் வெள்ளையர் அல்லாத இனத்தினரைப் புறந்தள்ளுதல்.
2. பொருளாதார நலன்களில் வெள்ளையர் அல்லாத இனத்தவர்களின் குறைந்த சலுகைகளை பொருளாதார நலன்களில் அல்லது விடயங்களில் பெற்றுக்கொள்ளல்.
3. சமூக, உளவியல் ரீதியான நிற வேறுபாடுகள் மற்றும் சமூக பாதுகாப்பு இன்மை.

இம் மூன்று விடயங்களையும் உள்ளடக்கியே "Apartheid" எனும் கொள்கை மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர் அல்லாத ஏனைய இனத்தவர்கள் பாரபட்சம் காட்டப்பட்டதோடு புறந்தள்ளப்பட்டனர். Apartheid கொள்கை மூலம் கொண்டுவரப்பட்ட பாரபட்ச ஏற்பாடுகள்.

- ✓ வெள்ளையர்களுக்கு மட்டுமான வாக்குரிமை.
- ✓ கலப்புத் திருமணத் தடை – 1949/1950
- ✓ நிற அடிப்படையில் காணியுரிமைகள்.
- ✓ தென்னாபிரிக்க தேசியவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட Apartheid எதிர்ப்பு நடவடிக்கைகள் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்டது. – 1950
- ✓ வெள்ளையர் அல்லாத ஏனைய இனத்தவர்கள் உயர் கல்வி கற்பதற்கான பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் - 1957

இத்தனை பாரபட்ச ஏற்பாடுகளால் வெள்ளையர் அல்லாத ஏனைய அனைத்து தென்னாபிரிக்க வாழ் இனத்தவர்கள் பாதிக்கப்பட்டனர். (இவை முரண்பாட்டு மரத்தின் வேர் பகுதிக்குரியவை)


முரண்பாட்டு மரத்தின் தண்டு பகுதி முரண்பாட்டினை குறிக்கின்றது. தென்னாபிரிக்க முரண்பாட்டிற்கான காரணங்களாக மேலே குறிப்பிட்ட வேர் பகுதியின் விடயங்களின் விளைவால் தென்னாபிரிக்காவில் வெள்ளையர் மற்றும் வெள்ளையர் அல்லாத இனத்தவர்களுக்கிடையில் நிற முரண்பாடு ஏற்பட்டுள்ளது. பாரியளவு விளைவுகளினையும் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது மரத்தின் கிளைகள் என்ற அடிப்படையில் தென்னாபிரிக்கா முரண்பாட்டு விளைவுகளை நோக்குகின்ற போது.

- இனப்படுகொலைகள்.
- பாரபட்சம் காட்டப்படுதல்.
- சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கப்பட்டமை.
- பொருளாதார நிலமை பாதிக்கப்பட்டமையுடன் பொருளாதார சமநிலை பாதிக்கப்பட்டமை.
- சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் பொதுநலவாய அமைப்புக்கள் தென்னாபிரிக்காவின் அங்கத்துவத்தினை இரத்துச் செய்வதாக அழுத்தம் கொடுத்தமை.
- வறுமை.
- Apartheid கொள்கைக்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்றமை.
- அவசரகால நிலமை பிரகடனம் செய்யப்பட்டமை.
- உயிர்கள் மற்றும் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை.
- உளவியல் பாதிப்புக்கள் ஏற்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(வரைபடம்- 02)

நிற முரண்பாட்டினை தீர்ப்பதற்கான முயற்சிகள்

- 1991ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் சர்வ கட்சி மாநாடு இடம் பெற்றமை.
- 1994ம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை.
- முதன் முறையாக கறுப்பினத்தவரான நெல்சன் மண்டேலா அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை.
- 1996ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டமை. இதன் மூலம் Apartheid கொள்கை நடைமுறையில் இருந்து நீக்கப்பட்டமை.
- 1995ம் ஆண்டு 34ம் இலக்கச் சட்டத்தின் படி Truth & Reconciliation Commission (TRC) உருவாக்கப் பட்டமை.
- இவ்வமைப்பானது தென்னாபிரிக்கர்கள் மத்தியில் முரண்பாட்டுக்கு அப்பால் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
- இவ்வாணைக் குழுவானது (TRC)
  1. மனித உரிமைகள் மீறல்கள் கமிட்டி
  2. இழப்பீட்டு புனர்வாழ்வுக் கமிட்டி
  3. மன்னிப்புக் கமிட்டி

இம் மூன்று குழுக்கள் வாயிலாக நியாயமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டது.

- இவ்வாணைக் குழுவின் (TRC) விசாரணைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டது.
- குற்றம் செய்தவர்களுக்கு பொதுமன்னிப்பினையும் வழங்கியது.
- TRC அமைப்பு நல்லிணக்க செயற்பாடு சர்வதேச ரீதியில் அனைவராலும் வரவேற்கப்பட்டது.

TRC அமைப்பின் நல்லிணக்க செயற்பாட்டின் வெற்றியால் தென்னாபிரிக்காவில் கறுப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர் என்ற நிற அடிப்படையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டதால் இன்று தென்னாபிரிக்காவில் முரண்பாடற்ற சூழ்நிலை நிலவுகின்றது. இந்நிலைமையானது அபிவிருத்தியை நோக்கிய பயணத்தை மேற்கொள்ளவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

## Reference

Kirkwood,K.(1965) ***Britain And Africa***. Cox & Wyman Ltd London, Fakenham and Reading.

**Web sites**

Vasu Gounden and Hussein Solomon. (2006) *Conflict resolution in Africa: a comparative analysis of Angola and south Africa.* [Internet] Available from: http://www.usc.edu/dept/LAS/ir/cews/database/SouthAfrica/southafrica.pdf. [Aceesed 17th September 2015].

Katabaro Miti. *South Africa and Conflict Resolution in Africa: From Mandela to Zuma* [Internet] Available from: http://www.saccps.org/pdf/1-1/SAPSS%201%281%29%20Miti.pdf . [Aceesed 19th September 2015]

*The Causes of Conflict in Africa.* [Internet] Available from: http://webarchive.nationalarchives.gov.uk/+/http:/www.dfid.gov.uk/pubs/files/conflict-africa.pdf. [Aceesed 20th September 2015]

*Boer War: 1899-1902.* [Internet] Available from: http://www.historyworld.net/wrldhis/PlainTextHistories.asp?ParagraphID=otw#ixzz3mJYCmg8H_. [Aceesed 20th September 2015]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மெய்யியல்

## சில அறிமுகக் குறிப்புக்கள்



ஆர். நிரோகரன்
உதவி விரிவுரையாளர்
உளவியல் மற்றும் மெய்யியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

இந்திய மெய்யியல் வரலாற்றினை நோக்குகின்ற போது இங்கு சமயங்களானவை வைதீக சமயங்கள், அவைதீக சமயங்கள் என இருகிளைகளாக விளங்குகின்றது. இதிலே அவைதீக சமயங்களில் ஒன்றாகவே பௌத்த சமயம் காணப்படுகின்றது. பௌத்தம் அல்லது பௌத்த சமயம் (Buddhism, பாளி/சமசுகிருதம் புத்த தருமம்) என்பது கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையிலான ஒரு சமயமும், தத்துவமுமாகும். பௌத்த மரபின் படி, புத்தர் 6 ஆம், 4 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே இந்தியத் துணைக்கண்டத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்தவர் ஆவார்.

பௌத்த சமயத்தில் முக்கியமான இரண்டு பிரிவுகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தேரவாத பௌத்தம் "முதியோர் பள்ளி", மற்றும் மகாயான பௌத்தம் "பெரும் வாகனம்" தேரவாத பௌத்தம் இலங்கை மற்றும் தென்கிழக்காசியாவில் கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. மகாயானம் சீனா, கொரியா, யப்பான், வியட்நாம், சிங்கப்பூர், தாய்வான் போன்ற கிழக்காசிய நாடுகளில் பின்பற்றப் படுகிறது. இந்த இரண்டைவிடத் திபெத்து, மற்றும் மங்கோலியாவில் பின்பற்றப்படும் வச்சிரயான பௌத்தம் மூன்றாவது வகையாகக் குறிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகின் தோற்றம் பற்றிப் பல சமயங்களில் உறுதியுடன் தகவல்கள் தரப்பட்டுள்ளன. பொதுவாக, பிற சமயங்கள் உலகைத் தோற்றுவித்த ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கின்றன. பௌத்தம் இக்கேள்வியைத் தேவையற்ற ஒன்றாகக் கருதி, விடையை நோக்கிக் கற்பனைக் கதைகளைத் தர மறுக்கின்றது. உலகம் இருக்கின்றது, அதுவே பௌத்தத்தின் முடிவு. தேவையேற்படின், இவ்வுலகம் முந்தி இருந்த உலகத்தில் இருந்து கர்ம விதிகளுக்கமைய வந்தது எனக் கொள்ளலாம். எப்படி ஒரு மரம் விதையில் இருந்து வந்ததோ, எப்படி விதை மரத்தில் இருந்து வந்ததோ அப்படியே உலகமும் தோன்றியது என்கின்றது.

பௌத்த உலகப் பார்வையில் கடவுள் இருப்பதை அனுமானிக்கவில்லை, அப்படி இருந்தாலும் அதற்கான தேவை அங்கு இல்லை. கர்ம விதிகளுக்கு அமையவே உலகம் இயங்குகின்றது, அதை மீறிய மீவியிற்கை ஒன்றிருப்பதைப் பௌத்தம் மறுக்கின்றது. அப்படி இருந்தால் எந்த ஒரு பொருளுக்குமான இருப்பை நோக்கிய பௌத்தத்தின் அடிப்படை மூன்று விதிகளான Anicca, Anatta, Dukkha மீறியே கடவுள் என்ற ஒன்று இருக்க வேண்டும், அது பௌத்தத்தின் உலகப் பார்வைக்கு ஒவ்வாது.

அனைத்தையும் உருவாக்கும், நிர்வகிக்கும், அழிக்கும் குணங்களைக் கொண்ட ஒருமிய சக்தி போன்ற கடவுள் என்ற ஒன்று உண்டு என்பதைப் புத்தர் மறுத்தார். எனினும் பௌத்தத்தில் தேவர்கள் என்ற ஒரு வகைப் பிறவிகள் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு உயர்ந்த நிலையில் அல்லது வேறு பரிணாமத்தில் கர்ம விதிகளைப் புரியக் கூடியவர்கள் அல்லது அனுபவங்களைப் பெற அல்லது அனுபவிக்கக் கூடியவர்கள், ஆனால் அவர்களும் கர்ம விதிகளுக்குக் கட்டுபட்டவர்களே.

கடவுள் அல்லது ஒரு ஒருமிய சக்தி உலகைத் தோற்றுவிக்கவில்லை என்பது பௌத்தத்தில், புத்தர் போதனைகளில் முக்கிய ஒரு கொள்கை. இக்கொள்கையைத் தமிழில் "சார்பிற்றோற்றக் கொள்கை" என்றும் சமஸ்கிருதத்தில் "பிரதித்தியசமுப்பாதம்" என்றும் ஆங்கிலத்தில் "Dependent Origination" என்றும் கூறுவர். இக்கொள்கையை சோ.ந.கந்தசாமி பின்வருமாறு விளக்குகின்றார்:

> **"எப்பொருளும் தோன்றச் சார்புகள் (ஸ்ரீநிதானங்கள்) காரணமாக உள்ளன. ஆதலின், ஒருபொருளை உண்டென்றோ இல்லையென்றோ உரைப்பது பிழை. எப்பொருளும் சார்பினால் தோன்றி மறைந்து தோன்றி மறைந்து தொடர்தலின் நிலைபேறான தன்மை இல்லை. தோன்றி மறைதல் என்பது இடையறவு படாமல் விளக்குச்சுடர் போலவும் ஓடும் நீர்போலவும் நிகழ்தலின் தோன்றுதல் மறைதல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்ற இரண்டிற்கும் இடையே நிறுத்தம் என்பது இல்லை. ஆதலின், புத்தரின் சார்பிற்றோற்றக் கொள்கை, முதற் காரணத்தை உடன்பட்ட கடவுட் கொள்கையினைப் புறக்கணித்து, ஒன்று தோன்ற ஒன்று சார்பாக உள்ளது என்ற சார்புக் காரணத்தைக் கொண்டது."**

## புத்தர் கண்ட நான்கு உண்மைகள்

1. துன்பம் "துக்கம்":- மனிதர்களால் துன்பத்தைத் தவிர்க்க முடியாது. பிறப்பு, நோய், முதுமை, இறப்பு ஆகியவை மனிதருக்குத் துன்பத்தைத் தருபவை. பசி, பகை, கொலை, வெகுளி, இழப்பு, மயக்கம் போன்றவையும் துன்பம் தருபவையே.
2. துன்பத்துக்கான காரணம்:- ஆசை அல்லது பற்று.
3. துன்பம் நீக்கல்:- ஆசையை விட்டுவிடுவதுவே
4. துன்பத்தை நீக்கும் முறைமை.

## எட்டு நெறிகள்: எட்டு நெறிகளும் துக்கத்தைப் போக்க உதவும் வழிமுறைகள் ஆகும்.

1. நற்காட்சி - Right View
2. நல்லெண்ணம் - Right Thought
3. நன்மொழி - Right Speech
4. நற்செய்கை - Right Conduct
5. நல்வாழ்க்கை - Right Livelihood
6. நன்முயற்சி - Right Effort
7. நற்கடைப்பிடி - Right Mindfulness
8. நற்தியானம் - Right Meditation

## பிறவிச் சுழற்சியின் பன்னிரு சார்பு நிலைகள்

1.

2. அறியாமை - Ignorance

2. செய்கை - Impressions

3. உணர்வு - Consciousness

4. அருவுரு - Mind-Body Organism

5. ஆறு புலன்கள் - Six Senses

6. ஊறு - Sense contact

7. நுகர்ச்சி - Sense Experience

8. வேட்கை - Craving



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பற்று - Mental Clinging
10. பவம் - Will to born
11. பிறப்பு -Rebirth
12. வினைப்பயன் - Suffering

## பௌத்த எண்ணக்கருக்கள்

1. அகிம்சை
2. கர்மம்
3. சம்சாரம்
4. ஆத்மன்
5. தர்மம்
6. நிர்வாணம்
7. புத்தம்
8. மீள்பிறவி

## பௌத்தம் கூறும் சீலங்கள் (ஒழுக்கங்கள்)

சீலம் என்றால் ஒழுக்கம் என்று பொருள். இது மூவகைப்படும். அவை பின்வருமாறு, புத்த மதத்தில் அழைக்கப்படுகின்றன.

- ❖ பஞ்ச சீலம் (பஞ்சம் என்பது ஐந்து என்ற எண்ணைக் குறிக்கிறது)
- ❖ அஷ்டாங்க சீலம் (அஷ்டம் என்றால் எட்டு என்பதைக் குறிக்கிறது.)
- ❖ தச சீலம் (தசம் என்றால் பத்து என்பதைக் குறிக்கிறது.)

## பஞ்ச சீலம்

இல்லற வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் என பின்வருவன குறிக்கப்படுகின்றன. கீழ்கண்ட ஐந்து ஒழுக்கங்களைக் கூறுவது பஞ்சசீலம் என்றழைக்கப்படுகிறது.

1. ஓர் உயிரையும் கொல்லாமலும், தீங்கு செய்யாமலும் இருத்தல்.
2. பிறர் பொருளைக் களவாடாது இருத்தல்.
3. முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல்.
4. பொய் பேசாது இருத்தல்.
5. மது வகைகளை உண்ணாது இருத்தல்.

## அஷ்டாங்க சீலம்

இல்லற வாழ்க்கையில் சற்று உயர்ந்தோர் பின்பற்ற வேண்டியவைகள் என பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கங்கள் குறிப்பிடப்படுகின்றன. கீழ்கண்ட எட்டு ஒழுக்கங்களைக் கூறுவது அஷ்டாங்க சீலம் என்றழைக்கப்படுகிறது.

1. ஓர் உயிரையும் கொல்லாமலும், தீங்கு செய்யாமலும் இருத்தல்.
2. பிறர் பொருளைக் களவாடாது இருத்தல்.
3. முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல்.
4. பொய் பேசாது இருத்தல்.
5. மது வகைகளை உண்ணாது இருத்தல் ஆகிய மேற்கூறிய பஞ்சசீலங்களும் இதில் அடங்கும். இவற்றோடு, கீழ்கண்டவைகளும் இவற்றின் கீழ் வருகின்றன.
6. இரவில் தூய்மையான உணவைக் குறைவாக உண்ணல்.
7. பூ, சந்தனம் உள்ளிட்ட வாசனைப் பொருள்களைப் பயன்படுத்தாமை.
8. பஞ்சணை(பஞ்சைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மென்படுக்கை) முதலியவற்றை பயன்படுத்தி உறங்காமல், தரையில் பாய் என்ற விரிப்பைப் பயன்படுத்தி உறங்கல்.

## தச சீலம்

இவை துறவிகள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் ஆகும். இந்த பத்து ஒழுக்கங்களைக் கூறுவது தச சீலம் என்று அழைக்கப்படுகிறது.

1. ஓர் உயிரையும் கொல்லாமலும், தீங்கு செய்யாமலும் இருத்தல்.
2. பிறர் பொருளைக் களவாடாது இருத்தல்.
3. முறை தவறிய சிற்றின்பத்தை நீக்குதல்.
4. பொய் பேசாது இருத்தல்.
5. மது வகைகளை உண்ணாது இருத்தல் ஆகிய மேற்கூறிய பஞ்ச்சீலங்களும் இதில் அடங்கும். அதோடு கீழ்கண்டவைகளும் இவற்றின் கீழ் வருகின்றன.
6. இரவில் தூய்மையான உணவைக் குறைவாக உண்ணல்.
7. பூ, சந்தனம் உள்ளிட்ட வாசனைப் பொருள்களைப் பயன்படுத்தாமை.
8. பஞ்சணை (பஞ்சைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மென்படுக்கை) முதலியவற்றை பயன்படுத்தி உறங்காமல், தரையில் பாய் என்ற விரிப்பைப் பயன்படுத்தி உறங்கல் ஆகிய மேற்கூறிய அஷ்டாங்க சீலங்களும் இதில் அடங்கும். இவற்றோடு, கீழ்கண்டவைகளும் இவற்றின் கீழ் வருகின்றன.
9. இசைப்பாட்டு, கூத்து, நாடகம் முதலியவற்றைப் பார்க்காமல் இருத்தல்.
10. பொன், வெள்ளி முதலியவற்றைத் தொடாது இருத்தல்.

இவ்வகையில் நோக்கினால் அவைதீக நெறிகளில் ஒன்றாகக் கருதப்படும் பௌத்தம் மனிதர்களுக்கு நன்மை பயக்கும் ஒழுக்க விடயங்களை எடுத்தியம்புவதனையும் அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் அதிகரிக்கும் சமூகசீர்கேடுகளும், அதைத் தடுப்பதற்கான தனிநபர் ஆளுமையில் சமூகமயமாக்கல் முகவர்களின் வகிபங்கும்



அ.யோகேஸ்வரன்
விடுகை வருடம்
சமூகவியற் துறை.
பேராதனைப் பல்கலைக்கழகம்

இன்றைய அறிவியல் யுகத்தின் நாயகர்களாக உலகினை வலம் வரும் மனித குலத்தினர் வெவ்வேறுபட்ட துறைகளில் சாதனைகளையும், புரட்சிகளையும், கண்டுபிடிப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றமை நிகழ்கால தரிசனம் ஆகும் . ஆனாலும் இன்று பரவலாகப் பேசப்படும் விடயமாக சமூகத்தின் வன்முறைச் சம்பவங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆறறிவு கொண்ட மனித குலம் அநாகரிகமாக வன்முறைகளில் ஈடுபடுவதானது அறிவியல் புரட்சியினைப் புரட்டிப்போடும் சோதனையாகவே காணப்படுகிறது. அந்த வகையில், இலங்கையில் கடந்த சில வருடங்களாக நிகழ்த்தப்படுகின்ற பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்கள், கடத்தல் மற்றும் கொலை போன்ற குற்றச்செயல்கள் போன்றன எதிர்கால சந்ததியினரின் வாழ்வியல் இருப்பிலும் வளர்ச்சியிலும் எதிர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது என்பதே உண்மையாகும். இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் நலனில் அக்கறைகொண்டு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி வந்தாலும் கூட மேற்குறிப்பிட்ட துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றச் செயல்களினால் இவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிட்டது.

குறிப்பாக சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் ரீதியிலான துஷ்பிரயோக நடவடிக்கைகள் அப்பிள்ளைகளின் வளர்ச்சியில் மட்டுமல்லாது பிள்ளைசார் சமூகத்தில் பய உணர்வையும் இயல்பாக வாழ முடியாத ஒரு நிலையினையும் உருவாக்கியுள்ளமையினை இன்று எம் கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, அண்மையில் இடம்பெற்ற சிறுமி சேயாவினுடைய கொலைச் சம்பவத்தினைச் சுட்டிக்காட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது ஆண் சிறார்களை ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்துகின்ற அல்லது துஸ்பிரயோகம் செய்கின்ற நடவடிக்கையானது அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்து வருவதனை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இதனை செய்பவர்களாக சமூகத்தின் உயர் அந்தஸ்தில் உள்ள மதகுருமார், மற்றும் ஏனையோர் இருப்பது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். அத்துடன் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. எடுத்துகாட்டாக பாடசாலை மாணவி "வித்தியாவினை" கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம், கஹவத்தையில் தொடர்ச்சியாக 13 பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்தமை போன்ற சம்பவங்களினூடாக சமூகத்துள் வாழ்பவர்களுக்கான பாதுகாப்பு நிலைமை கேள்விக்குள்ளாகியுள்ளதுடன் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலைமை இலங்கையில் அதிகரித்து வருகின்றமையானது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறான சம்பவங்கள் தனியே ஓர் இனத்தைச் சார்ந்தவர்களையோ அல்லது மதத்தினரையோ சாராமல் பல்லின சூழலைக் கொண்ட இலங்கைத் தீவினுள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மற்றும் இலங்கையை நோக்கி வருகின்ற வெளிநாட்டவர்களையும் பாதிப்படைய வைக்கின்றது என்பதே வெளிப்படையாகும்.

பாலியல் துஸ்பிரயோகங்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டாலும் கூட துஸ்பிரயோகங்களின் எண்ணிக்கை கூடிய வண்ணமே இருக்கின்றமையானது சமூகத்தின்பால் அக்கறையுடைய சமூக ஆர்வலர்களை யோசிக்கவே வைக்கின்றது. ஏனெனில் இவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் போதாதா? அல்லது குற்றங்களில் ஈடுபடுபவர்கள் சமூகத்தில் வளர்ந்த சூழல்தான் காரணமா? என்கின்ற வினாக்கள் இன்று முன்வைக்கப்படுகின்றன. அந்த வகையில் தண்டனைகள் மூலம் திருந்தாத போதும் சமூகத்துள் ஒரு தனிநபர் வளர்த்தெடுக்கப்படுகின்ற முறையிலும் குற்றங்கள் செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் ஒரு தனிநபர் ஆளுமையில் சமூகமயமாக்கல் முகவர்களின் மூலமாகவே ஒரு சிறந்த மனிதனாக ஒருவன் வளர்த்தெடுக்கப்படுகின்றான்.

தனிநபர் ஒருவர் சமூகத்தினுள் நற்பிரஜையாக வாழ்வதற்கு, வளர்வதற்கு சமூகமயமாக்கலின் பங்களிப்பு அளப்பரியது. ஆகவே இது தொடர்பான எண்ணக்கருவை விளங்கிக் கொள்ளலும் அவசியமாகிறது. தனியாளின் ஆளுமை விருத்தியில் பல்வேறு அம்சங்கள் வகிபங்கினைக் கொண்டுள்ளன. அவற்றுள் சமூகமயமாக்கல் என்பது மிகவும் செல்வாக்குமிக்கதாகும். ஏனெனில், சமூகமயமாக்கல் முகவர்கள் மூலமாக, அறியாப் பருவக் குழந்தையாக வாழ்வை ஆரம்பிக்கும் ஒரு தனிநபர் சுயவிழிப்புணர்வும் அறிவும் பெறுகின்றார். தனது சமூகத்தின் கலாசார நடைமுறைகளை அறிந்து அவற்றைப் பேண முயற்சிக்கின்றார். இதன் மூலம் அவரது ஆளுமை விருத்தி பெறுகின்றது.சமூகமயமாதல் எனும் போது **"ஒரு மனிதன் தன்னை சமுதாயத்தில் இருந்து அப்புறப்படுத்திக் கொண்டு ஒதுங்கி விடாமல் தனது கலாச்சார சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் நடை, உடை, பாவனைகளையும் உணர்ந்து அறிந்து ஏற்று வாழ்தலே** சமூகமயமாக்கல் ஆகும் . **மக்கள் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவில் உறுப்பினர்களாகச் செயற்படுகின்ற வகையில் செயல் நோக்கம், அறிவு, மொழி, பல்வேறு திறன்கள், விழுமியங்கள், விதிமுறைகள் வாழ்வின் பல்வேறு நிலைகள் ஆகியவற்றைப் பெறும் வகையிலான ஒரு செயற்பாடே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகமயமாக்கல்"** ஆகும் என சமூகவியலாளரான Emile Durkhem குறிப்பிடுகின்றார். சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கு வயதுவந்தோர் தமது அதிகாரத்தின் மூலம் எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் கற்பிக்கும் சூழ்நிலையே குழந்தை தனது துருவிக் காணும் ஆற்றல் மூலமாகவும் சிறுவர் சிறுமிகளுக்கிடையேயான தொடர்பினாலும் கற்றுக் கொள்ளும் முறையே சமூகமயமாக்கல் ஆகும் என Piaget குறிப்பிடுகின்றார். ஆகும்.மேலும் ஒரு தனியாளை அல்லது ஒரு உயிரினை அல்லது நபரை சமூகத்திற்கு ஏற்றவாறு உருவாக்குவது ஆகும்.

ஒரு குழந்தையானது கருவில் இருந்து தோற்றம் பெறும் போது அது தானாகச் செயற்பட முடியாத நிலையில இன்னொரு உயிரின் உதவியுடன் அவனை வளர்த்துச் சமூகத்திற்கு ஏற்ற விதத்தில் உருவாக்குதல் சமூகமயமாக்களாகும். சமூகமயமாக்கல் என்பது தனிநபர்கள், சமூக உறுப்பினர்கள் ஆவதற்கு அல்லது சமூகத்தின் கூறுகளின் உறுப்பினர்கள் ஆவதற்கு நிகழ்த்தப்படும் செயன்முறை என்று பரந்த கருத்தில் பொருள் கொள்ளலாம். வாழும் கலாசாரத்தின் அல்லது உபகலாசாரத்தின் விழுமியங்கள், வழக்கங்கள், நோக்குகள் என்பவற்றைத் தனிநபர்கள் எவ்வாறு கைக்கொள்கிறார்கள் அல்லது விலக்கி வைக்கிறார்கள் என்பதுடன் இது தொடர்பானது. (ஸ்ரேர்மன், 1998). **"தனிநபர்கள் தாம் சார்ந்த சமூகத்தின் கலாசாரத்தைக் கற்றறிந்து கொள்ளுகின்ற செயன்முறையே சமூகமயமாக்கல்".** சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்படாத எவரும், அவர் வாழுகின்ற சமூகம் விதித்த நியமங்களுக்கேற்ப இயல்பான மனிதராகக் கருதப்படமாட்டார்".

அது ஒருபுறமிருக்க, அறிவு மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியினால் எவையெல்லாம் நவீன கலாசாரமென்று அறிமுகப்படுத்தப்படுகிறதோ, அவையெல்லாம் அநாகரிகமாக மாறி, நாளைய தலைமுறையினரை அழித்துக்கொண்டிருக்கின்றன. நவீன கலாசார மோகத்திற்குள் தள்ளப்பட்டுள்ள மாணவ சமூகமும், இளைஞர், யுவதிகளும் தங்களைத் தாங்களாகவே அழித்துக்கொள்வதையறியாது அழிந்துகொண்டிருக்கிறார்கள். பேஸ்புக் என்றும், சமூக வலைத்தளங்கள் என்றும், தொலைபேசிப் பாவனை என்றும் போதைவஸ்துப் பயன்பாடு என்றும் அவைகளுக்குள் மூழ்கி கால நேரங்களையும் பணத்தையும் வீண்விரயம் செய்து அழிவினதும் ஆபத்தினதும் விளைவுகளை விளங்கிக் கொள்ளாமல் அல்லது விளங்கியும் அவற்றிலிருந்து விடுதலை அடைந்து கொள்ள முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். சமூக மயமாக்கலில் ஏற்படும் தவறுகள் இளைய தலைமுறையினரை இவ்வாறான படுபாதாளத்தில் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

வாழும் சூழல் மற்றும் சமூகத்திற்கு ஏற்ற வகையில் வாழப் பழகிக் கொள்ளும் நெடுங்கால செயன்முறையை சமூக மயமாக்கல் என்று கூறலாம். ஒரு பிள்ளையின் சமூக மயமாக்கலில் குடும்பம், சம வயதுக் குழுக்கள், பாடசாலை, கல்வி நிறுவனங்கள், மத வழிபாட்டுத்தலங்கள் என்பவற்றிற்கு மேலாக ஊடகமும் தாக்கம் செலுத்துகிறது. ஒரு பிள்ளை ஒழுக்க விழுமியமுள்ள பண்பாட்டுக் கலாசாரத்துடன் வீட்டுச் சூழலில் வளர்க்கப்படுமாயின் அப்பிள்ளை பாடசாலைச் சூழலில் ஏற்படும் பண்பாட்டு மாற்றத்தினாலும் சம வயதுக் குழுக்களின் அழுத்தங்களினாலும் வழிதவறிச் செல்வதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படும். பிள்ளையின் நடத்தை, மனவெழுச்சிச் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர்களும் குடும்பத்தாரும் கவனத்திற்கொள்ளாது செயற்படுகின்றபோது அப்பிள்ளை சம வயதுக் குழுக்களினால் திசைமாற்றப்படுவதைத் தடுக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாகரிக கலாசாரத்திற்குள் மூழ்கித் தத்தளிக்கும் மாணவர்கள் போதைதரக்கூடிய பாவனைப் பொருட்களின் பயன்பாட்டுக்கும் ஆளாகி தங்களைத் தாங்களாவே அழித்துக் கொண்டிருக்கிறார்கள். உலக பிரபல்யங்கள், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் கையடக்கத் தெலைபேசிகளின் பெயர் போன்று தற்காலத்தில் சில போதையை ஏற்படுத்தும் பொருளின் பெயரும் மாணவர்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

அந்தவகையில், தற்காலத்தில் இளைஞர், யுவதிகள் ஒரு வித போதைப்பொருள் பாவனைக்கு தங்களை அடிமைப்படுத்தி வருவதாக அறிய முடிகிறது. நகரப் புறங்களில் மாத்திரமின்றி, கிராமப் புறங்களிலும் இந்நிலை விரைவாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் போதைப்பொருள் பாவனையற்ற நாடாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில், போதைப் பொருள் நாட்டிற்குள் கொண்டு வரப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும். பயன்படுத்தப்படுவதையும் இன்னும் தடுக்க முடியாமலே உள்ளமை துரதிஷ்டவசமாகும். சட்டம் முறையாகச் செயற்படுத்தப்படாமையும், சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களின் பணியில் காணப்படும் வழுக்களுமே போதைப்பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதையும், பயன்படுத்தப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் தடுக்க முடியாமல் உள்ளதாக சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்போது நமது இளைஞர்கள் மத்தியில் பாபுல், பீடா, பன்பராக், மாவா போன்றவற்றின் பாவனைகள் அதிகரித்துவிட்டதாக அறிய முடிகிறது. சில பாடசாலை மாணவர்கள் வகுப்பறைகளுக்குள்ளேயே இவற்றைப் பயன்படுத்துவதாகவும் தெரிய வருகிறது.

புகையிலையைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற சிகெரட் போன்ற பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற உடற்பாதிப்பு போன்றே இந்த மாவாவைச் சப்புவதாலும் ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. இந்திய இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே அதிகளவில் காணப்படும் இத்தகைய போதை தரக் கூடிய பொருட்களின் பயன்பாட்டின் விளைவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் மாவாவை பயன்படுத்து-பவர்களிடையே இதய மற்றும் சுவாசப் பிரச்சினைகள் காணப்படுவது கண்-டறியப்பட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் இணையத்தளம் குறிப்பிடுகிறது. பணத்தை மாத்திரம் மையப்படுத்தி போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோர். வளரும் இளம் சந்ததியினரை ஆண்மையற்றவர்களாக, பிள்ளைப் பேற்றில் பலவீனமானவர்களாக இன்னும் பல்வேறு உடல் உபாதைக்கு தளப்படக் கூடியவர்களாக மாற்றுகிறார்கள் என்பதை மறந்து இவர்கள் பணத்தில் கொண்ட பேராசையினால் இத்தகைய போதைப் பொருட்களின் விற்பனையில் ஈடுபடுகிறார்கள். இத்தகையவர்களின் பண ஆசைக்கு பலியாகும் அப்பாவி இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டியது பெற்றோர்களினது கட்டாயப் பொறுப்பாகவுள்ளது.

தங்களது பிள்ளைகளின் செயற்பாடுகளில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்துவதோடு பிள்ளையின் சமவயதுக் குழுக்கள் மற்றும் நண்பர்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு, பாடசாலைகளில் மாணவர்களின் இத்தகைய பொருட்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு குறித்துப் பாடசாலைச் சமூகம் அசமந்தப் போக்கில் செயற்படாமல் ஒவ்வொரு ஆசிரியரும் தங்களது பிள்ளைப் போன்று ஏனைய பாடசாலை மாணவர்களையும் கவனத்திற் கொண்டு உரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்க வேண்டும். பாடசாலைகளில் உள்ள வழிகாட்டல் ஆலோசனைச் செயற்பாடானது வினைத்திறன் மிக்கதாக காணப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் காணப்படுகிறது. இதைத் தவிர்த்து, தொழில்வாண்மை உளவளத் துணையாளர்களின் உதவி கொண்டு இந்த வழிகாட்டல் ஆலோசானைச் செற்பாடுகள் தொடர்ச்சியாக வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இவை தவிர, வழிபாட்டு தலங்களிலும் போதை வஸ்த்துப் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் பெற்றோர்களையும் மாணவர்களையும் நல்வழிப்படுத்தும் வகையில் ஆன்மீக ரீதியாக விழிப்புணர்வூட்டப்படுவதும் அவசியமாகும். அத்துடன், சட்டத்தை அமுல்படுத்துகின்ற பொலிசாரும் அதிகாரிகளும் தயவு தாட்சண்யமின்றி, சட்டத்தை மீறி இத்தகைய போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஒரு தனிநபரின் ஆளுமையில் சமூகமயமாக்கலில் தாக்கம் செலுத்துகின்ற ஊடகம் உட்பட ஏனைய சமூகமயமாக்கல் முகவர்கள் தமது பொறுப்பை முறையாக செயற்படுத்தும் போதுதான் இளம் சமூகத்தின் சிறந்த எதிர்கால ஆரோக்கியததைக் கெடுக்கும் குற்றச்செயல்கள், பாலியல் வன்முறைகள் மற்றும் போதைப் பொருட்களின் பாவனையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதோடு விழுமியங்களை மதிக்கும், விழுமியங்களைப் பாதுகாக்கும். விழுமியங்களோடு வாழக் கூடிய சமூகப் பிரஜைகளாக மாற்ற முடியும். அதற்காக சமூகமயமாக்கல் முகவர்கள் தங்களது பொறுப்பை காலத்தின் அவசியம் உணர்ந்து நிறைவேற்றுவதும் அவர்களின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் சமகாலத்தின் கட்டாயத் தேவையாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உறவில் சமூக வலைத்தளங்களின் வகிபாகம்



எம்.எம்.எப். நாஸீகா

இரண்டாம் வருடம்

தமிழ்துறை

கலைப் பீடம்

அறிவியல் முன்னேற்றத்தின் உச்சக்கட்டத்தில் வாழ்கின்ற இன்றைய மனிதன் இயந்திரமயமான வாழ்க்கைக்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளான். சமூகவியலாளர் கூறுவதுபோல மனிதன் ஒரு சமூகப் பிராணி அவனால் தனித்து வாழ முடியாது. அதனால்தான் மனிதன் சமூகத்தோடு ஒன்றிணைந்து இனிமையாக வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறான். தனது உறவுகளோடும், நண்பர்களோடும் தன் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள எத்தனிக்கின்றான்.

கணினியுகத்தில் வாழ்கின்ற இன்றைய மனிதன் இணையத்தோடு ஒன்றிணைந்து வாழ்கின்றான். மனித வாழ்வில் இன்று இணையம் இல்லாத துறையே இல்லை எனலாம். இணையக் கலாசாரம் இன்று அதீத வளர்ச்சியடைந்துள்ளதைக் காண முடிகின்றது. கடல் கடந்து,மொழி கடந்து மக்களுடன் வலையமைப்புகளை உருவாக்குவதற்கான உந்துதல் இணையம் எனும் அதி உன்னத தொழிநுட்பத்தின் மூலம் கிடைத்து விட்டது. இதனால் மக்களின் தேவைகள் சமூக வலைத்தளங்களை உருவாக்குவதற்கான கேள்வியை உணர்த்தியது. இதனால் உருவான சமூக வலைத்தளங்கள் இணையம் பெற்றுக்கொண்ட வெற்றி என்றே கூறமுடியும்.

சமூக வலைத்தளம் என்பது ஒருமித்த கருத்து மற்றும் செயற்பாடுடைய சமூகத்தை ஒன்றிணைக்கவும், அவர்களிடையே சமூகப் பிணைப்புகளை வெளிப்படுத்தவும் வழிசெய்கின்ற ஓர் இணையச் சேவையாகும். பெரும்பாலான சமூக வலைத்தளங்கள் இலவச சேவை வழங்குவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவேதான் இதன்பால் ஈர்க்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் அதிகமானதாகும். இதனடிப்படையில் இன்று சமூக வலைத்தளங்கள் இளம் சமுதாயத்தின ரோடு நின்றுவிடாமல் முதியவர்களையும் இணைத்திருப்பது புதியதோர் யுகத்தையே வெளிக்காட்டுகிறது.

இன்று உலகில் பரவலாகப் பயன்படுத்தப் படும் பிரசித்த சமூகவலைத் தளங்களாக முகநூல் (Facebook), டுவிட்டர் (Twitter), லிங்ட்இன்(Linked in), நிங்(Ning), கூகுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளஸ் (Google+) போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இதில் 936 மில்லியன் முகநூல் பாவனையாளர்களையும், டுவிட்டர் 302.2 மில்லியன் பாவனையாளர்களையும் கொண்டியங்குவது சமூகத்தில் சமூக வலைத்தளங்களின் வெற்றியையே பறைசாற்றி நிற்கின்றது.

இன்றைய நவீன காலகட்டத்தில் சமூக உறவுகளும், சமூக வலைத்தளங்களும் நகமும் சதையும் போன்று ஒன்றித்திருப்பதைக் காணமுடிகிறது. சமூக உறவில் சமூக வலைத்தளங்களின் வகிபாகம் எந்த அளவில் இயங்குகின்றது என்பதைச் சிந்திப்போமானால் சமூக வலைத்தளங்களின்றிச் சமூக உறவுகள் இல்லை எனலாம். இயந்திரமயமான இன்றைய உலகில் சமூக உறவுகளைக் கட்டிக் காக்கவும், உறவுகளின் பிணைப்பை உறுதிப்படுத்தவும், ஊடகமாகச் செயற்படும் சமூக வலைத்தளங்களின் வகிபாகம் போற்றத்தக்கதாகக் காணப்படுகின்றது. சமூக உறவுகளுக்கிடையே கருத்துக்களைப் பரிமாறவும், சமூக உறவுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூகத்தை ஒன்றிணைக்கவும், தகவல் பரிமாற்றத்துக்கும் சமூக வலைத்தளங்களின் பங்கு அளப்பரியகதாகும் .குடும்ப உறவுகளைப் பிரிந்து சென்று வெளிநாடுகளில் வாழும் உறவுகள் சமூக வலைத்தளங்களின் ஊடாகவே தமது உறவுகளைப் பேணி வருகின்றனர். புகைப்படங்கள் மற்றும் காணொளிகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்களின் போது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இதன் மூலம் குடும்ப உறுப்பினர்களிடையே காணப்படும் பிணைப்புச் சிதையாமல் பாதுகாக்கப்படுகின்றது. இன்னும் தமக்கான ஒரு நட்பு வட்டத்தைப் பெருக்கி நட்பை வளர்க்கிறார்கள். முகநூல், டுவிட்டர் என்பவற்றில் இடப்படும் பதிவுகள் கணப்பொழுதிலே நட்பு வட்டத்தைச் சென்றடைகின்றன. இதனால் நண்பர்களுக்கிடையிலான தொடர்புகள் வலுப்பெறகின்றன. இன்னும் தொலைந்து போன உறவுகளையும், நண்பர்களையும் மீட்டெடுப்பதில் சமூகவலைத் தளங்களின் பங்கு அளப்பரியது.

செய்திகளை உலகம் முழுவதும் கொண்டு செல்லவும், சமுதாயத்தை விரிவாக்கவும், அறிவை ஆழமாக்கவும், பிரியமானவர்களுடன் தொடர்பில் இருக்கவும் சமூக வலைத்தளங்கள் ஆற்றும் பணியைச் சொல்லிலடக்க முடியாது. அது மட்டும் இல்லை. இன்று உலகில் நடக்கும் பல்வேறு மக்கள் புரட்சிகளும், உரிமைப் போராட்டங்களும் சமூக வலைத்தளங்களின் ஊடாகவே நடத்தப்படுகின்றன. "2011ஆம் ஆண்டு "அராபிய வசந்தம்" என அழைக்கப்படும் எழுச்சிப் போராட்டத்தின் போது அங்கத்தவர்களை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளைச் சமூக வலைத்தளங்களான முகநூல் மற்றும் டுவிட்டர் என்பனவே முக்கிய ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் சமூக வலைத்தளங்கள் சமூக உறகளை இணைப்பதற்கான சக்தி வாய்ந்த ஊடகம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சமூக வலைத்தளங்கள் கத்தி போன்றன. பழத்தை அறுத்துப் புசிப்பதும், கழுத்தை அறுத்துக் கொலை செய்வதும் அதைப் பிடிக்கும் கையைப் பொறுத்தது. சமூக வலைத்தளங்கள் சமூக உறவுகளை எவ்வாறு இணைத்து வைக்கின்றதோ அதே போல சமூக உறவுகள் சீரழிந்து போவதற்கும் காரணமாய் அமைகின்றது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி இன்று பலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். தகாத உறவுகளை வளர்த்தல், ஆபாசமான புகைப்படங்கள் காணொளிகளைப் பார்வையிடல் மற்றும் பகிர்தல் போன்ற பல விடயங்கள் இடம்பெறுகின்றன. இதனால் இளம் சமுதாயங்களுக்கிடையில், கணவன்-மனைவிக்கிடையில் விரிசல்கள் ஏற்பட்டுக் குடும்பங்கள் சிதைந்துபோகக் காரணமாகின்றன. ஏமாற்று வேலைகளும் சமூகவலைத்தளங்கள் மூலம் அரங்கேறத்தான் செய்கின்றன. இன்று பல ஆண்கள் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்கின்றனர். இதன் மூலம் பலரது குடும்ப வாழ்வு சீரழிந்து போவதை நிதர்சனமாகக் காண முடியும் இன்னும் பலர் மன உளைச்சலுக்கு ஆளாகித் தற்கொலை செய்துகொள்வதும் அன்றாடத் தலைப்புச் செய்தியாகிவிட்டது. இன்றைய இளம் சமுதாயத்தினரின் பொன்னான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்கள் சமூகவலைத்தளங்களில் வீணாகிப் போகின்றன. தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமலே சமூக வலைத்தளங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். இதன் காரணமான உண்மையான உறவுகளை இழக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர் என்பது உண்மையான செய்தியாகும்.

சந்தோஷம் தரக்கூடியவை என்று சமூகவலைத்தளங்களில் இணைந்தவர்கள் கடைசியில் சங்கடத்திற்கு ஆளாகின்றனர் என்றும், மன அமைதிக்காக என்று இணைந்த இளைஞர்கள் கடைசியில் மன உளைச்சலுக்கு ஆளாகித் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்றும் இலண்டனில் இயங்கும் "நோ த நெட்" (No the net) என்னும் நிறுவனம் அண்மையில் செய்தி வெளியிட்டது.

நாணயத்திற்கு இரு பக்கம் உள்ளது போலச் சமூக வலைத்தளங்களிலும் நன்மை, தீமை என்ற விடயம் இருக்கத்தான் செய்கின்றது. எனினும் சமூக உறவுகளைச் சமூக வலைத்தளங்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளன என்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். எது எவ்வாறாயினும் சமூகவலைத்தளம் இன்றிய இன்றைய உறவுகளை எம்மால் கற்பனை பண்ணக்கூட முடியாது. ஏன் சமூக வலைத்தளங்களின் செயற்பாட்டில் இருந்து விலகி நிற்க முடியாத நிலை காணப்படுவதோடு வர வர சமூக வலைத்தளங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்வதில் இதன் முக்கியத்துவம் புலனாகின்றது.

தண்ணீர் கலந்த பால் போன்றதுதான் சமூகவலைத்தளங்கள். இதில் நாம் அன்னமாகச் செயற்பட வேண்டியது அவசியம்.

(போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கட்டுரை)

**தாமரை பூத்த குளத்தினிலே — முகத்**

**தாமரை தோன்ற முழுகிடுவாள் — அந்தக்**

**கோமள வல்லியைக் கண்டு விட்டான் — குப்பன்**

**கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை!**

**— பாரதிதாசன் —**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்முக நாடுகளின் பண்பாட்டம்சங்களில் உலகமயமாதலின் தாக்கம்.



தி.திலகராஜ்
அரசறிவியல் துறை
விடுகை வருடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்

உலக நாடுகள் அனைத்தும் தமக்கேயுரிய பண்பாட்டம்சங்களைக் கொண்டிருக்கின்ற அதேவேளை அவற்றின் இருப்பானது மனித சமூகத்தின் முன்னேற்றத்தில் பாரிய பங்காற்றி வருகிறது. ஒரு நாட்டின் தனித்துவமானது அந்நாடு கொண்டிருக்கின்ற அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார பண்பாட்டம்சங்கள் மூலம் வெளிப்படுத்தப் படும் மனித ஒழுங்கமைப்புகளின் மூலம் பேணப்படுகிறன என்று சொன்னால் மிகையாகாது. பண்பாடு என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல். ஆங்கிலத்தில் culture என்னும் சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. கலாச்சாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்தசொல்லாக பயன்படுகின்றது. இது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாடுக்ளுக்குச் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது. இருப்பினும் மனித சமூகமானது ஒரு இயங்குநிலைத் தளத்தைக் கொண்டுள்ளது என்ற வகையில் அதன் முன்னேற்றத்தில் பண்பாட்டம்சங்கள் பல்வேறு காரணிகளின் தாக்கத்திற்கு உட்பட்டு மாறுதலடைவதும் தவிர்க்க முடியாதுள்ளது. இது ஒரு வகையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற அதே வேளை பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் காரணிகளில் மிகவும் பிரதானமான காரணியாக உலக மயமாதல் நிகழ்வை நாம் குறிப்பாக குறிப்பிட முடியும்.

20ம் நூற்றாண்டின் பின்னர் உலக ஒழுங்கில் உருவான புதிய நிகழ்வு உலகமயமாதல் (Globalization) என்கின்ற சிந்தனையாகும். உலக மயமாதல் என்பதன் பொருள் தடைகளற்ற முதலீட்டுப் பாய்ச்சல் என்பதாகும். அதாவது ஒரு நாட்டின் மூலதனம் மற்றுமொரு நாட்டில் முதலீடு செய்யப்படுவதற்குத் தடைகள் ஏதும் இருக்கக் கூடாது என்பதாகும். நாடுகளில் உருவான விஞ்ஞான வளர்ச்சியும், புதிய கண்டு பிடிப்புகளும் இயந்திர மயமாக்கலை அதிகரிக்கச் செய்துள்ளன. இது தவிர கணினிகளின் வருகை, செய்மதிகளின் தொடர்புச் சேவை, உலக நாடுகளுக்கிடையில் வலைப்பின்னல் அமைப்பிலான இணையத் தொடர்பாடல் சேவையை ஏற்படுத்தி நாடுகளுக்கிடையிலான இடைவெளியைக் குறைவடையச் செய்து முழு உலகத்தையும் ஒரு கிராமம் என்ற நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

உலகமயமாதல் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள்

- தொலைவிலிருக்கும் இடங்களை இணைக்கின்ற பல மைல்களுக்கு அப்பால் நிகழும் நிகழ்வுகள் உருவமைக்கப்படுகின்ற உலகளவிலான சமூக உறவுகளின் தீவிரப்படுத்தலை உலகமயமாக்கல் எனலாம்.. Antony Gidoss, London Economy College.
- நவீனத்தன்மையின் ஆரம்ப காலங்களிலிருந்ததை விட அதிக நடைமுறை சாத்தியமாகவும், உடனடியாக நிகழ்வதாகவும் பெருமளவில் தெரியக்கூடியதான உலக தொலைத் தொடர்பின் பெருக்கத்தையும், உலக சந்தை எல்லையின் பெருக்கத்தையும் உலகமயமாக்கல் எனும் சொல் பிரதிபலிக்கின்றது. Fredric Jonson, Deluge University.
- தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு, ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கிடையேயான அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படுத்தப்பட்டுவரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழ் நிலையையும் உலகமயமாதல் எனலாம். (Wikipedia)

தற்கால உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் உலகமயமாதல் நிகழ்வானது அனைவரும் முணுமுணுக்கும் சொல்லாக மாறியுள்ளது. உலகளாவிய, பிரதேச, வட்டாரச் சமூக வாழ்க்கையின் கூறுகளை உள்ளடக்கிய பன்முகப்பட்டதொரு செயன்முறையாக இதனை விவரிக்கின்றனர். வணிக நோக்கில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயன்முறை பொருளாதார, அரசியல் ரீதியிலான எல்லைகளை தகர்ப்பதோடு, ஒவ்வொரு நாட்டினதும் சுதேச பண்பாடுகளை மோசமாக பாதித்து வருகின்றது. அதுவும் வளர்முக நாடுகளின் பண்பாடுகளை முற்றுமுழுதாக சிதைத்து வளர்ந்த நாட்டின் பின்பற்றல்களுக்குள் அடிபணிய வைக்கின்றது. இது நாடுகளின் பண்பாட்டைப் பல்வேறு பாதிப்புக்களுக்குள்ளாக்குகின்றது.

## பண்பாட்டம்சங்களில் உலகமயமாதலின் தாக்கம்.

உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளின் அரசியல் பண்பாட்டில் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. உலகமயமாக்கலை முன்னெடுக்கும் அமெரிக்காவின் நலனைப் பொறுத்தே இந்நாடுகளின் அரசியல் நிலமைகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஜனநாயக நாடுகளாக வளர்முக நாடுகள் தம்மை அடையாளப்படுத்துகின்ற போதிலும், சுதேச மக்களின் சுயாதீன அரசியல் தெரிவுகளுக்கும், சுதந்திரமாய் வாழ்வதற்கும் இடையூறாகவே உலகமயமாக்கல் அமைந்துவிடுகிறது. எப்போதும் அமெரிக்கா போதிக்கின்ற அரசியல் சிந்தனைகளையும், திறந்த பொருளாதார முறைமைகளையும் செயற்படுத்தவல்ல தலைவர்களே வளர்முக நாடுகளின் மக்களது அரசியல் தலைவிதியை தீர்மானிப்பவர்களாக மாறுகின்றனர். சுதேச மக்கள் விரும்பும் அரசியலும், அதனை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் தலைவர்களும் அரசியல் அரங்கிலிருந்து ஓரங்கட்டப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் ஈழத்தமிழர் அரசியல் நிராகரிப்புக்கும், லிபிய ஆட்சித் தலைவரின் உயிர் பறிப்பும் இந்தப் பின்னணியிலேயே நிகழ்ந்தேறியவை. எனவே உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளது அரசியலை பாதிக்கின்றது அதன் மூலம் அவர்களின் தனித்துவமான அரசியல் பண்பாடும் பாதிக்கப்படுகின்றது.

அடுத்து உலகமயமாக்கலின் முக்கிய அம்சமான பொருளாதார முன்னெடுப்புக்கள், வளர்முக நாடுகளின் பொருளியல் ஈட்டங்களைப் பின்தள்ளுகின்றது. உலகமயமாக்கல் நடைமுறைப்படுத்தும் திறந்த பொருளாதாரக் கொள்கை வளர்முக நாடுகளை நுகர்வுச் சந்தையாக மாற்றுகின்றது. எல்லைகளற்ற வணிகமயம், மூலவளங்களை இந்நாடுகளில் மலிவாக பெறவும், முடிவுப் பொருட்களை அதிகவிலையில் விற்பனை செய்வதற்குமான சூழலை ஏற்படுத்துகின்றது. இதனால் வளர்முக நாடுகளின் மக்களது பொருளாதார ஈட்டங்கள் சுரண்டப்படுவதோடு வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, வேலையின்மை போன்றனவும் ஏற்படுத்துகின்றது. இது சுதேச மக்களது பொருளாதார வளர்ச்சியை நிலைகுலையச் செய்கின்றது. இவ்வாறாக சுதேசப் பொருளாதார வளப் பண்பாடு பாதிப்புள்ளாகின்றது.

உலகமயமாக்கல் அரசியல், பொருளாதார அம்சங்களை மேற்கண்டவகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதித்தாலும் மிக மோசமான பாதிப்புக்குள்ளாவது வளர்முக நாடுகளின் சமூக பண்பாட்டு அம்சங்களே அந்த வகையில் வளர்முக நாடுகளின் மக்கள் பின்பற்றுகின்ற மதம் பல்வேறு சீர்குலைவுகளை இன்று சந்தித்து வருகின்றது. மனிதனது பண்பாட்டு விருத்திக்கு மதங்கள் மிக காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளன. அதனாலேயே ஒவ்வொரு இனமும் தன் பண்பாட்டுக்கு இசைவான மத நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கின்றன. சடங்கு நிலையிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட நிலைவரைக்கும் வளர்முக நாடுகளில் மதம் செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆனால் காலனித்துவ காலத்துடன் குறிப்பிட்ட நாடுகளின் மதப்பாரம்பரியங்கள் (கிறிஸ்தவம், புரட்டஸ்தாந்து போன்றன) வேர்கொள்ள வழியேற்படுத்திக் கொடுத்தது. அது கல்வி, மற்றும் மனித நேயம் போன்ற வியடங்களில் சாதகத் தன்மையை ஏற்படுத்தினாலும், தற்காலத்தில் உலகமயமாக்கல் பின்னணியில் மேற்கொள்ளப்படும் அதிகளவிலான கிறிஸ்தவ மத பிரிவுகளை வளர்முக நாடுகளில் பரப்புகின்றது. இதனால் வறுமைப்படும் மக்கள் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுகின்றனர். இந்நிலையில் மறைமுகமாக சுதேச மதங்கள் புறந்தள்ளப்படுவதோடு அந்நிய மதம் உலகம் முழுவதற்கும் பரப்பப்பட்டு வருகின்றது. இந்நிலை தொடர்ந்தால் மூன்றாம் உலகநாட்டு மக்கள் அடையாளமற்றவர்களாக, தமது சுயத்தை இழந்தவர்களாக விரைவில் மாற்றப்படுவார்கள்.

வளர்முக நாடுகளின் மொழிசார்ந்த பண்பாட்டம்சங்களையும் உலகமயமாக்கல் பாதித்து வருகின்றது. இன்றைய நிலையில் உச்சமானளவில் வளர்ந்து விட்ட தொழில்நுட்பத்தையும், கல்வியையும் பெற்றுக்கொள்ள ஆங்கில மொழி அவசியமாகின்றது. வளர்முக நாடுகளின் மொழிகள் அந்நாட்டு மக்களாலேயே பின்தள்ளப்படுகின்றது. ஆங்கில மொழிப் பாவனை கட்டாயமான சூழலில் ஒவ்வொரு வளர்முக நாடும் தனது மொழிவழிப் பண்பாட்டை மாற்றி வருகின்றது. இந்நாடுகளின் மக்களது பெயர்கள், இருப்பிடப் பெயர்கள், பாவனைப் பொருட்களின் பெயர்கள், அன்றாட பாவனைச் சொற்கள் என அனைத்துமே ஆங்கில மொழியின் செல்வாக்கிற்குள்ளாகியுள்ளன. இந்த அதிதீவிரமான ஆங்கில ஆதிக்கம் உலகளவில் மொழி விருத்தியில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

உணவு, பழக்க வழக்கம், கலை, ரசனை என அனைத்து சமூக பண்பாட்டு விழுமியங்களையும் தீர்மானிப்பதாக உலகமயமாக்கல் மாறியிருக்கின்றது. வளர்முக நாட்டு மக்கள் இயற்கை உணவுகளையும், பானங்களையும் தமது உணவுக் கூறுகளாக காலம் காலமாக கொண்டிருந்தவர்கள். ஆனால் இன்று அவ்வாறில்லை. விரைவு உணவுப் பொதிகளும், குளிர் குடிபானங்களின் ஆதிக்கமும் இல்லாத சாப்பாட்டு மேசைகளை காண்பதரிது. இது திடீர் மாற்றமாக நிகழ்ந்துள்ளது. இப்புதிய உணவுப் பழக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமானது நுகர்வு கலாசாரத்தை வளர்ப்பதோடு, பல்வேறு நோய்கள் ஏற்படவும் வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. அதுமட்டுமின்றிச் சொந்த உணவுகளையும் மறக்கச் செய்துள்ளது. உடை மற்றும் அலங்கார வடிவமைப்பிலும் மேற்கு நாடுகளில் வாழும் மக்களது பாரம்பரியத்தை வளர்முக நாட்டு மக்கள் அரைகுறையாக பின்பற்றுகின்றனர். இப்பிராந்தியத்து மக்களுக்கென தனித்துவமான ஆடைகளும், அலங்காரங்களுமுண்டு. ஆனால் அவை இன்று கைவிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற ஆடைகளும், அலங்காரப் பொருட்களும் இந்நாடுகளில் வாழும் மக்களுக்கு அவசியமானவையாக மாறியிருக்கின்றன. அதனைப் பெற்றுக்கொள்கின்றன. அதிகளவு பணம் செலவிடவும் படுகின்றன. இவ்வாறு உடை சார்ந்த நடைமுறையிலும் உலகமயமாக்கல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளின் வரலாற்றில்கூட பாதிப்பை செலுத்தி வருகின்றது. உலகில் காணப்படும் பெரும்பாலான வளர்முக நாடுகள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளின் நேரடி மேலாதிக்கத்ததிற்குட் பட்டவையாக இருந்துள்ளன. அப்போது அந்த ஆட்சியாளர்களால் நிறுவப்பட்ட கட்டடங்கள் இன்று தொல்லியல் எச்சங்களாக இருக்கின்றன. இப்போது மீண்டும் அவற்றை புனரமைத்து சுற்றுலா மையங்களாக மாற்றுவதற்கு அந்நாடுகள் அக்கறை காட்டி வருகின்றன. அவ்விடத்தில் சுற்றுலா பயணிகளால் கிடைக்கும் வருமானத்தின் பெரும்பகுதி புனரமைத்த நாடுகளுக்கு சென்று சேரக்கூடிய வகையிலேயே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இத்தோடு வளர்முக நாடுகளின் முக்கிய வரலாற்று மையங்களை தேர்ந்தெடுத்து அதனை புதுப்பித்து சுற்றுலா பயணிகளை ஈர்க்க வைப்பதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனூடாக வளர்முக நாடுகளின் வரலாறு கூட விற்றுக் காசாக்க கூடிய நிலையை உலகமயமாக்கல் சூழல் உருவாக்கியுள்ளது.

ஒரு சிறந்த பண்பாட்டைஉருவாக்குவதில் கலைக்கும், கலை ரசனைக்கும் முக்கிய பங்குண்டு. வளர்முக நாடுகளின் சுதேச கலைமரபுகள் இவ்வகைப்பட்டன. ஆனால் உலகமயமாக்கலின் விளைவால் அறிமுகமாகிய மேற்கு நாட்டின் அரங்கும், நாடகமும், இசையும், சினிமாவும் அதனை இல்லாமலாக்கிவிட்டது. பரதநாட்டியமோ, கர்நாடக சங்கீதமோ, கூத்தோ இன்று அதிகமானவர்கள் ரசனையை ஈர்ப்பதில்லை. மேற்கு நாடுகளின் நவீன கலைகளே இன்று கலையாகப் பார்க்கப்படுகின்றன. இது வளர்முக நாடுகளின் மக்களது ரசனையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றது.

மிதமிஞ்சிய தொடர்பு சாதனங்களின் வருகையும் எல்லையற்ற குடியேற்ற வசதிகளும் குடும்ப உறவை அந்நியப்படுத்துகின்றது. பெற்றோரை விட்டுப் பிள்ளைகள் திருமணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி போன்ற நோக்கங்களுக்காக தூரதேசம் சென்று விடுகின்றனர். இதனால் கட்டுக்கோப்பான குடும்பங்கள் கூட இன்று சிதைவடைகின்றன.

எது எவ்வாறாயினும் தற்காலத்தில் உலகமயமாதல் நாடுகளின் முன்னேற்றத்தின் இயங்கு நிலைக்கருவி என்றவகையில் இன்றைய நவீன அரசுகள் உலகமயமாதல் செயன்முறைக்குள் தம்மை விரும்பியோ விரும்பாமலோ உட்படுத்திக் கொள்கின்றன. இதன்போது உலகமயமாக்கல் வளர்முக நாடுகளின் பண்பாட்டம்சங்களில் பாதகமான பாதிப்புக்களை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாக உள்ளது. இருப்பினும் தவிர்க்க முடியாத பொருளாதார கட்டமைப்புக்கள் அதனை வலிந்து ஏற்க வைக்கின்றன. ஒரு நாட்டின் பல்நாட்டு வாணிபம், சர்வதேச உறவுகள் மற்றும் சர்வதேச சங்கங்களில் உள்ள அங்கத்துவம் போன்றவை உலகமயமாதல் செயன்முறையின் மூலமான அனுகூலங்களாகக் காணப்படினும் இவற்றினூடாகவும் நாடுகளின் பண்பாடுகள் ஏதோவொரு வகையில் பாதிக்கப்படுவதும் இயல்பாகவே இடம்பெறுகிறது. ஆகவே சுதேச பண்பாடுகள் பாதிப்படைவதானது மறைமுக காலனித்துவத்தை ஒரு நாடு ஏற்றுக் கொள்வதனையே சுட்டிக் காட்டுவதாக அமைகின்றது என்றவகையில் சுதேச நாடுகளின் பண்பாடுகளைப் பேணவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு நாட்டு அரசாங்கத்தினதும், மக்களினதும் பொறுப்பாகும்.

## உசாத்துணை


இரயாகரன்,பி.(2007) **"உலகைச் சூறையாடும் உலகமயம்"**, கீழைக்காற்று வெளியீட்டகம்.

https://ta.wikipedia.org/s/a1g; what is globalization

http://nidur.info/old/index.php?option=com_content&view=article&id=6010www.kur uhttp://mbasiddyweb.com/index.php

http://valaiyukam.blogspot.com/2012/04/blog-post_17.html

sociology.emory.edu/.../globalization/issues.html

http://www.globalization101.org/what-is-globalization

http://issues.tigweb.org/globalization

https://ta.wikipedia.org/wiki




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளும் கடப்பாடுகளும்



**தாஹிர் வசிம் அக்ரம்**
**இணைப்பாளர்,**
**மனித உரிமைகள் கற்கை நிலையம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

இன்றைய உலகில் மனித உரிமைகள் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஓர் அரசாங்கத்தின் செயற்பாட்டினை அளவிடும் ஓர் அளவு கோலாக மனித உரிமைகள் உணரப்படுகின்றன. இந்த வகையில் மனித உரிமைகள் என்பது தனிப்பட்ட மனிதனுக்கு வழங்கப் படுகின்ற குறைந்த பட்ச உரிமைகள் ஆகும். அதாவது எந்த தனிப்பட்ட மனிதனும் மனித வர்க்கத்தின் ஒரு உறுப்பினரே, யாருக்கும் பாகுபாடு காட்டுதலாகாது. என்பதைக்கருத்தில் கொண்டு மனித உரிமைகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென ஒரு கௌரவமான, பாதுகாப்பான வாழ்கையை எதிர்பார்க்கிறான்.

மேற்கத்தைய அரசியல் மற்றும் தத்துவ சிந்தனை படி மனித உரிமை என்பது தனிமனிதனின் உடன் பிறந்தவொன்று என்றும் மனித தரத்தைக் கொண்டமையும் இயற்கையான காரணகாரணி என்றும் கூறப்படுகின்றது. எல்லா மனிதர்கள் மீதும் கடவுள் நியமித்திருக்கும் இயற்கைச் சட்டத்தின் எல்லைக்குள்ளாகத் தங்கள் உடைமைகளையும் தங்களையும் எது அதிக மகிழ்ச்சிக்குள்ளாக்க கூடும் என்று நினைக்கின்றார்களோ, அந்த வழியில் உபயோகித்துக் கொள்ளும் படியாகத் தான் இயற்கை மனிதனுக்கு உரிமைகளை அளித்திருக்கின்றது. இந்த வகையில் தனிமனிதனின் தனது ஆளுமையை அபிவிருத்தி செய்து முழுமையாகத் திகழ்வதற்கும், சமுதாய வாழ்விற்கும், அரசியல் வாழ்விற்கும் உரிமைகள் இன்றியமை யாதவையாகும்.

இந்த மனித உரிமைகள் ஒடுக்கப் படுவதன் வெளிப்பாடே மக்கள் கிளர்ச்சி, போராட்டங்களில் ஈடுபடுதல் இதன் விளைவானதே புதிய தேசிய அரசுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் என்று கூட கூறலாம். மேலும் தீவிரவாதத்தைக்கூட தூண்டும் ஒரு சக்தியாக இது அமைகின்றது. இதனால் மனித உரிமையானது சகல மனிதப் பிறவியையும் தடையின்றி சென்றடைய வேண்டும். இந்த மனித உரிமைகள் 07 வகைப்படும்.

1. குடியியல் உரிமைகள்
2. அரசியல் உரிமைகள்
3. இயற்கை உரிமைகள்
4. அடிப்படை உரிமைகள்
5. பொருளாதார உரிமைகள்
6. குழு உரிமைகள்
7. ஆதிவாசிகள்

இயற்கை, பொருளாதார, அரசியல், குடியியல் உரிமைகள் என்ற பல கோணங்களில் இருந்து மனித உரிமைகளை நோக்கினாலும் அவற்றின் மிகவும் இன்றியமையாத உரிமை அடிப்படை உரிமையாகும் (Fundamental Rights). அடிப்படை உரிமையானது மனிதனின் ஆளுமையை வளர்ப்பதற்கு மிகவும் தேவையான உரிமையாகும் இந்த உரிமையின்றி எந்தவொரு மனிதனும் சமூக அந்தஸ்தினை பெற முடியாது என்பதனால் இதனை அரசியல் அமைப்பு உரிமைகள் என்றும் கூறலாம். பொதுவாக நாட்டின் அடிப்படைச்சட்டமாக விளங்கும் அரசியல் அமைப்பின் மூலமாக அடிப்படை உரிமைகள் வழங்கப்பவதுடன். இதனை அரசாங்கம் கூட மீறி செயற்பட முடியாது. (உ+ம்) இலங்கையின் 2வது குடியரசு யாப்பிலும் உறுப்புரை 10-14 வரையானவை அடிப்படை உரிமைகள் தொடர்பாக குறிப்பிடுகின்றது. இதன் விளைவாகவே கடந்த வருடம்(2014)ல் அளுத்கம, பேருவளை நகரில் முஸ்லிம்கள் மீது பொதுபலசேனா அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை பொலிஸார் முறையாக அடக்கவில்லை என்பதனால் இதனையும் மனித உரிமை மீறல் என்ற வகையில் தீர்ப்பு வழங்குமாறு முஸ்லிம் தரப்பு சட்டத்தரணிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் உரிமைகள் இவ்வாறு அமைய உரிமைகளை முழுமையாக அனுபவிக்க வேண்டுமாயின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். கடமைகளைச் செய்யாது உரிமைகளை மட்டும் அனுபவிக்கும் போது அங்கு குழப்பங்கள் ஏற்பட்டுவிடும். மேலும் ஒருவனுக்கு உரிமைகளை வழங்காது கடமைகளை மட்டும் சுமத்தினால் அவன் அடிமையாகி விடுவான், அதேவேளை கடமைகளை சுமத்தாமல் உரிமைகளை மட்டும் வழங்கினால் அவன் சர்வதிகாரியாவான். அதனால் மனித உரிமைகள் பற்றிய கல்வியில் அவற்றோடு இணைந்துள்ள கடமைகளையும், கடப்பாடுகளையும், பொறுப்புகளையும் (Duties, Obligations, Responsibilities) அறியாது செயற்படுதல் பயனற்றதாகும். உரிமைகள் கடமைகளைத் தொடர்கின்றன. ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று உரிமைகளோடு கடமைகளும் இணைந்துள்ளன.

## கடப்பாடுகளின் வகைகள்

மனித உரிமைகளோடு இணைந்த கடமைகளை அல்லது மனித உரிமைகளுக்கும் கடமைகளுக்குமிடையிலான தொடர்பினை இரு வழிகளில் காணலாம்.

1. மனித உரிமைகள் தொடர்பாக அரசுக்குள்ள பொறுப்புகளும் கடப்பாடுகளும். (மனித உரிமைகளும் அரசும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மனித உரிமைகள் தொடர்பாக தனிமனிதனுக்குள்ள பொறுப்புகளும் கடப்பாடுகளும். (மனித உரிமைகளும் தனிமனிதர்களும்)

## 1. மனித உரிமைகளும் அரசும்.

அனைத்து மனிதனும் மனிதப்பிறவி என்ற வகையில் அவனுக்கான உரிமைகளை முழுமையாகவும், தயக்கமின்றியும் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அவ் உரிமைகள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இப் பொறுப்பினை அரசினால் மட்டுமே நிறைவேற்ற முடியும். இந்த வகையில் அவற்றை வழங்கி, பாதுகாத்து, நடைமுறைப் படுத்தும் மனித உரிமை சார்ந்த பாரிய பொறுப்பினை அரசே மேற்கொள்கின்றது (Duty holder). இங்கு பாதுகாப்பு என்பதன் பொருள் அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை(oppression and suppression) என்பவற்றிலிருந்து மனித சுதந்திரத்தையும் கௌரவத்தையும், மதிப்பையும் (dignity) உரிமைகளையும் பாதுகாப்பதாகும்.

அடக்குதல் மற்றும் ஒடுக்குதல் என்பதன் பொருள் மனிதனை ஒரு குறிப்பிட்டநிலையிலிருந்து தாழ்த்திவிடுதல் அல்லது மனிதரின் அடிப்படை அந்தஸ்தையும் நடைமுறைத் தேவைகளையும் திருப்தியையும் பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி அளிக்காமை என்பதாகும். இந் நிலை ஏற்படுமாயின் அங்கு **உரித்தில்லாதொழிதல்** அல்லது தாழ்வடைதல் என்ற நிலை ஏற்படும்.

வரலாற்று ரீதியாக உரிமைகளை ஒழித்தல் அடக்குதல் என்ற செயற்பாடு அரசோடு இணைத்தே அடையாளம் காணப்படுகிறது. மனித உரிமைகளின் எண்ணக்கரு ரீதியானதும் வரலாற்று ரீதியானதுமான தோற்றம் அரசின் அடக்குமுறைக்கும் பலம்வாய்ந்த நலன்களின் ஒடுக்குதலுக்கும் எதிரான செயற்பாடுகள் மூலமே உருவாகியுள்ளது. அதனால் மனித உரிமைகள் என்பது அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்டதும் அரசின் மூலம் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதுமான உரித்துக்கள் என்ற வகையிலும் அறிமுகம் செய்யப்படுகிறது. எனவே தான் மனித உரிமைகள் பற்றிய கலந்துரையாடலில் அரசே உரிமைகளை மீறுகின்றதும் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்பதுமான நிறுவனமாகக் கருதப்படுகிறது.

மனித உரிமைகள் என்பது தனிநபர்களுக்கிடையிலான தொடர்பு சம்பந்தமாக முன்வைக்கப்படும் ஒரு நடத்தை ஒழுங்கு முறையன்று. அது அரசுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை ஒழுங்குபடுத்துவதையும் அவர்கள் தொடர்பான அரசின் பொறுப்புகளை இனங்காண்பதையும் இலக்காகக்கொண்டு அமைக்கப்பட்ட ஒருமுறைமையாகக் கருதப்படுகிறது. இதன்படி மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கே ஒப்படைக்கப்படுகிறது. அரசே மனித உரிமைகள் பற்றிய பொறுப்பை ஏற்கும் பொறுப்பாளராகும்.

## அரசின் பொறுப்பும், கடப்பாடும்

மனித உரிமைகள் மனிதனுக்கு வழங்கும் அடிப்படை அந்தஸ்தை (basic status) நிறைவு செய்வதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கடப்பாடு அரசின் மீதே விதிக்கப்படுகிறது. இது அரசின் பிரதான பொதுக்கடப்பாடாகும் (Generic Obligation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல வகையான மனித உரிமைகளும் அரசின்மீது 3 வகையான கடப்பாடுகளைச் சுமத்துகிறது.

1. கௌரவம்/ மதிப்புசார் கடப்பாடு(Respect- Bound Obligation)
11. பாதுகாப்புசார் கடப்பாடு (Protective- Bound Obligation)
111.பூர்த்தி செய்தல் சார்ந்த கடப்பாடு(Fulfillment -Bound Obligation)

ஒவ்வொரு உரிமையின் கீழ் அரசின் பொறுப்பு யாது? என்பதனை விளக்குவதற்கு இவ் வகையீடு பயன்படுத்தப்படுகிறது. இவை அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேறுபடுகிறது. உதாரணமாக:

1. வாழ்வதற்குள்ள உரிமையை அரசு பாதுகாக்க வேண்டும்.
2. பேச்சுச்சுதந்திரத்தை அரசு மதிக்க வேண்டும்
3. சகலரும் வேலை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நிலைகளை அரசு பூர்த்தி செய்யவேண்டும். அடிப்படை உரித்து இல்லாதுள்ள ஒரு ஜனக்குழு அவ்வுரித்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமாயின் அது, பூர்த்தி செய்யும் பொறுப்பை அரசு நிறைவேற்றுகிறது என்று கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட பொறுப்புகளின்படி அரசு தன்னால் இயன்றதை மேற்கொள்ளாதிருக்கும் நிலையோ அல்லது அரசு தனது பொறுப்பினை தட்டிக்கழிப்பதன் மூலம் ஏதேனும் ஒரு உரிமை மீறப்படும் நிலையோ மனித உரிமை மீறல் என்று கருதப்படும்.

எவ்வாறாயினும் மனித உரிமைகள் மீதான அரசின் கடப்பாடுகள் அரசின் அதிகார பூர்வமான வெளியீடோ அல்லது அரசு தனது கருணையின் அடிப்படையில் மேற்கொள்வதோ அன்று. அது மனித உரிமைகள் தொடர்பாக மனிதர் முன்வைத்த கோரிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டவையாகும்.

## மனித உரிமைகள் தொடர்பாக அரசின் எதிர்பார்க்கை

அரசு மனித உரிமைகளை வழங்குகிறது, நடைமுறைப்படுத்துகிறதுஇ பாதுகாக்கிறதுஇ என்ற பொறுப்புகளை நிறைவேற்றுவதனால் அதற்குப்உபகாரமாக அவற்றிலிருந்து பயன்பெறுவோரிடமிருந்து பொறுப்புகளையும் கடமைகளையும் எதிர்பார்க்க முடியாது. அரசு தனது ஊழியர்களின் சம்பளத்தை கூட்டுதல். ஓர் உரிமையினை வழங்குவதாயினும் அவ்வாறு வழங்குவதன் மூலம் அடுத்த பொதுத்தேர்தலில் தனக்கு வாக்களிக்கவேண்டும் என்றோ தான் விதிக்கும் ஏனைய நிபந்தனைகளுக்கு உடன்படவேண்டும் என்றோ எதிர்பார்க்க முடியாது. அது பயன்பெறுவோரின் பொறுப்புமாகாது.

ஆனால் இதற்கு பதிலாக அரசு வழங்கும் உரிமைகளில் இருந்து பயன் பெறும் அந்த அரசின் குடிமகன் என்ற ரீதியில் தங்கள் கடமைகளை வெளிப்படுத்தலாம். அதாவது ஒரு பிரச்சினைக்குச் சட்டம் கூறுகின்ற நெறி முறையில் முடிவெடுத்தல் அரசுக்கு செலுத்த வேண்டி வரியைச் செலுத்துதல், சட்டங்களை மதித்து நடத்தல் இவற்றக்கு மேலாக ஒரு அரசின் பாதுகாப்பிற்கு குந்தகம் நேரிடுமேயானால் அவ் அரசிற்காக இராணுவச் சேவை செய்தல் போன்றவற்றின் மூலம் தமது கடமையை உணர்வினை வெளிப்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகளும் தனிமனிதர்களும்

மனித உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் மனிதன் ஒழுங்கு முறையின் அடிப்படையிலும் சட்டரீதியாகவும் பெற்றுக்கொள்ளும் உரிமைகளுக்குப் உபகாரமாக அவன் சில கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும். உரிமைகள் மனிதனால் சரியாகப் பயன்படுத்தப்படும் போது தான் அவை பொருளுடையவையாகின்றன. அதனால் கடமைகளைச் சரியாக செய்யுமாறு தனிமனித உரிமைகள் மனிதனைத் தூண்டுகின்றன. உதாரணமாக, எனக்குள்ள பேச்சுரிமையானது அதனைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற கடமையை என் மீது சுமத்துகிறது. அப்போது தான் நான் மட்டுமன்றி பிற மனிதரும், சமூகமும், நாடும் பயன்பெறுகின்றன.

மனித உரிமைகள் சட்டம் சார்ந்தவை, ஒழுக்கம் சார்ந்தவை என பிரிக்கப்படுவது போன்று கடமைகளையும் சட்டம் மற்றும் ஒழுக்கத்தின் பாற்பட்டவை என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சட்டக் கடமைகள் நீதிமன்றுகளால் வலியுறுத்தப்படுபவை. அவற்றை நிறைவேற்றாவிட்டால் அவன் தண்டனைக்குள்ளாவான். ஒழுக்ககடமைகள் நீதிநெறியடிப்படையில் எழுந்தவையாகும். சமூகத்தினதும் பிறமனிதரினதும் ஒப்புதல் அல்லது ஒப்புதலின்மையின் அடிப்படையில் அது இயங்குகிறது. பெற்றோருக்கு மரியாதை செய்தல், அவர்களைப் பராமரித்தல், ஏழைகளிடம் பரிவு காட்டுதல் போன்றவை நீதிநெறிக்கடமைகளாகும்.

மனித உரிமைகள் மனிதன் மீது சுமத்தும் கடமைகளை மூன்றாக வகுக்கலாம்.

1. பிற மனிதர் மீது மனிதனுக்குள்ள கடமை.
2. சமுதாயத்தின் பால் மனிதனுக்குள்ள கடமை.
3. அரசு தொடர்பாக மனிதன் நிறைவேற்ற வேண்டிய கடமை.

### பிற மனிதர் தொடர்பாக மனிதனுக்குள்ள கடமை

தனிமனிதன் பெற்றுள்ள உரிமைகள் சமுதாயத்திலுள்ள பிற மனிதர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்ற கடமையை அவன் மீது சுமத்துகிறது. ஒருவர் தமது உரிமைகளாகவும் ஏனையோரின் பார்வையில் நோக்கினால் அவை கடமைகளாகவும் இருக்கின்றன. அவ்வாறாயின்

1. அரசிடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளும் உரிமைகளும் சுதந்திரங்களும் சமூகத்தில் பிறருக்கும் உரித்தானவை என்று நடைமுறை ரீதியாக உறுதிப்படுத்துவதற்கு நாம் தயாரா?
2. எனக்குள்ள உரிமைகள் ஏனையோருக்கும் உண்டு அவற்றை நான் மதிக்கிறேன் என்ற மூலக்கொள்கையை எந்தளவு பின்பற்றுகிறேன்?

என்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் போது உரிமைகளுக்கும் கடமைகளுக்குமிடையிலான தொடர்பை நன்கு விளங்கிக்கொள்ளலாம். கருத்து வெளியீட்டு உரிமை பற்றி "வோல்டேயர்" வெளியிட்ட கருத்து இத்தொடர்பை நன்கு விளக்குகிறது.

**"நீர் வெளியிடும் கருத்தை நான் முழுமையாக எதிர்க்கின்றேன். அதனை நான் வெறுக்கின்றேன். ஆனால் அக்கருத்தை வெளியிடுவதற்கு உமக்குள்ள உரிமையை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயிரைப்போன்று மதிக்கின்றேன்.**

இக்கூற்றில் இரு அம்சங்கள் பொதிந்துள்ளன.

1. சுதந்திரமாக கருத்து வெளியிடுவதற்கு ஒருவனுக்குள்ள உரிமையை மதிக்க வேண்டும்.
2. தனக்கு ஒப்புதல் இல்லாவிட்டாலும் அக்கருத்தை வெளியிடுவதற்கு பிறருக்குள்ள உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் நடைமுறையில் நாம் ஏனையோரின் உரிமையை எந்தளவு மதிக்கிறோம்? பிறரின் கருத்துக்களை, சகித்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்து வெளியீட்டு உரிமையோடு இணைந்துள்ள ஒரு கடமையாகும்.

## 1. சமுதாயத்தின் பால் மனிதனுக்குள்ள பொறுப்பு

ஒழுங்கமைந்த சமூகத்தில் கூட்டாக வாழும் மனிதன் ஒருசமூகப் பிராணியாவான். ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களோடு தொடர்பு கொண்டு ஒவ்வொருவரினதும் திறமையின் பயன்பாடுகளை பிறரின் நன்மைக்காகப் பயன்படுத்திக்கொண்டு மேற்கொள்ளும் சமூக வாழ்க்கையிலிருந்து எவரும் தனித்து வாழ முடியாது.

சமூகத்தின் நிலைபேறான இருப்புக்காக ஒவ்வொரு மனிதரும் பல பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றவேண்டும். இப்பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் போது சகலரினதும் மனித கௌரவத்தையும்.'.மதிப்பையும் சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொண்டு ஒரு கௌரவமான சமூக வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான சமூகச்சூழலை உருவாக்கும் வகையில் செயற்படவேண்டும். இது ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள பொறுப்பாகும்.

மனிதனால் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் இரு வகைப்படும்.

1. மனிதன் தனது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்துக்கொண்டு வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்

2. அவ்வடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் போது சமூகத்தின் பிற மனிதரின் சுதந்திரத்துக்கும் கௌரவத்துக்கும் வாழ்க்கைக்கும் உள்ள உரிமைக்குப் பங்கம் ஏற்படாதவாறு செயற்படும் சமூகப் பொறுப்புக்குக் கடமைப்படவேண்டும்

இவ்விரு அம்சங்களிலும் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுதல், உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுத்தல் என்ற விடயங்கள் பொதிந்துள்ளன. எனவே சமூகத்தின் பொது நன்மைக்கும் பொது இருப்புக்கும் பங்கம் ஏற்படாதவாறு ஒவ்வொருவரும் தமது உரிமைகளை அனுபவிக்கவேண்டும். இதனை நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயி, அதனைப் பங்கீடு செய்யும் வியாபாரி, அரிசியை உணவுக்காகக் கொள்வனவு செய்யும் நுகர்வோன் என்போருக்கிடையிலான தொடர்பு மற்றும் பொறுப்பு, அது தொடர்பாக அரசின் பங்கு என்பவற்றினூடாக விளக்கலாம். இங்கு விவசாயியும் வியாபாரியும் நுகர்வோனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசும் சமூகத்தின் உணவுக்கான உரிமையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமது பொறுப்பை நிறைவேற்றவேண்டும்.

## அரசு தொடர்பாக மனிதன் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள்.

ஒவ்வொரு குடிமகனும் அரசுக்காகத் தன் கடமைகளைச் செய்யவேண்டும் என்று எதிர்பார்ககப்படுகின்றான். இது மனித உரிமைகள் தொடர்பாக அரசுக்குள்ள பொறுப்பை நிறைவு செய்வதோடு இணைந்து காணப்படுகிறது. அரசின் சட்டங்களும் அரசியல் யாப்பும் அரசாங்கத்திடமிருந்தும் பிற மனிதரிடமிருந்தும் தனிமனித உரிமைகளைப் பாதுகாக்கின்றன. அதற்குப் பரிகாரமாக தனிமனிதன் அரசுக்கெனச் சில கடமைகளைச் செய்யவேண்டும்.

1. ஒவ்வொரு குடிமகனும் அரசுக்கு விசுவாசமாக இருந்து பணியாற்றுபவனாக இருக்கவேண்டும். மொழி, சமயம், இடம் என்பவற்றுக்கு விசுவாசமாக இருப்பதை விட அரசுக்கு விசுவாசமாக இருப்பது மிக முக்கியமானதாகும் என்றும் கூறப்படுகிறது. அரசின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது அதனைப் பாதுகாக்கவேண்டும். அதனால் தான் போர்க்காலங்களில் இராணுவப் பணி கட்டாயமாக்கப்படுகிறது.

2. அரசுக்கும் அரசின் சட்டங்களுக்கும் கீழ்ப்படிதல் பிறிதொரு கடமையாகும் . மக்கள் சட்டத்துக்கு மதிப்பளிக்கவில்லையெனில் சமுதாயம் முன்னேறாது. கீழ்ப்படியாமை சமூக அழிவுக்குக் காரணமாக அமையும். சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் கீழ்ப்படியாவிட்டாலும் சாதாரண காலங்களில் சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும்

3. அரசுக்கு விதிக்கும் வரிகளைச் செலுத்துதல். நாட்டின் அபிவிருத்திக்கு அதிக நிதி தேவைப்படுவதால் மக்கள் வரிகளைச் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்

4. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அரசோடு இணைந்து செயற்படுதல். குற்றச் செயல்களைத் தடுப்பதில் அதிகாரிகளுக்கு உதவ வேண்டும். வாக்குரிமையில் வாக்களிக்கும் கடமையும் தங்கியுள்ளது.

5. பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்

6. மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டு அவற்றை மக்களுக்குப் பெற்றுத்தருமாறு போராட்டம் நடாத்தி அரசாங்கத்தை நல்வழிப்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

உரிமைகள் மீதான கடப்பாடு என்பது தனிமனிதன், சமூகம், அரசு என்பவற்றின் இணைந்த செயற்பாடாகும். அது ஓய்வு, கௌரவம் என்ற பொது மனிதத்துவத்தோடு இணைந்த கடப்பாடாகும். தற்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள மனித உரிமைக் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் ஒரு சமூகத்தில் மனித உறவுகளை அரசியல் சமூக ஒழுக்கத் தளத்தில் மனிதத்தன்மை பொருந்தியதாக ஆக்குதல், அரசை ஜனநாயக மயப்படுத்தல், தனிமனிதனை ஒழுக்கம் நிறைந்தவர்களாக ஆக்குதல் என்ற பிரதான நோக்குகளைக் கொண்டதாக உரிமைகளுக்கும் கடமைகளுக்குமிடையிலான தொடர்பு காணப்படுகிறது.

## எனக்குள்ளும் எண்ணற்ற...!!!!!!

இலையுதிர் காலமதை
வெறுத்தொதுக்கும் சந்தையில்
நான் மட்டும் விதிவிலக்கு....!!!!

பட்ட மரங்கள் தான் என்
பார்வைக்கு பளிச்சிடுகின்றன
அவைகளும் என்போல்
என்பதாலோ....???

ஏமாற்றங்களை
ஏற்றுக்கொள்கிறேன்
எதிர்பார்ப்புக்கள்
என்னிடம் அதிகம்
என்பதால்...!!!!

கற்பனையில்
கப்பல்
கட்டுகிறது
கனாக்களில்
கரையேறுகிறது
வாழ்க்கை.....!!!!

கடவுளும் என்
கற்பனையும்
ஒன்றுதான்
இரண்டும் என்றுமே
எட்டாது....!!

கருத்தரிக்கும் வார்த்தைகளை
பிரசவிக்கும் முன்னரே
கருக்கலைத்துக் கொள்கிறேன்
காயங்களின் வலி
தெரியுமெனக்கு..!!!

நான் படிக்க
ஆசைப்படும் புத்தகம்
நான்..!!!!

பூரணமாய் வாழ
புதுப்புது திட்டங்கள்
பூரணமில்லாதவளிடம்..!!!

அரிதாரங்கள்
அவமதிக்கப்பட்டு
முகமூடிகள்?
முகமலர்வுடன்
வரவேற்கப்படுகின்றன...!!

தானாக வந்த
தனிமை கற்றுத்தந்தது
தாராளமாய்...!!

ஒருவரின் வெறுக்கத்தக்க வாழ்க்கை
இன்னுமொருவரினால்
வரமாக வேண்டப்பட்டுக்
கொண்டிருப்பதில் தான்
தொடர்ந்து கொண்டிருக்கிறது
வாழ்க்கை...!!!

எண்ணற்ற
எல்லாவற்றுடனும்
நகர்ந்து செல்லும்
இந்த வாழ்க்கையை
பழக்கப்படுத்திக் கொண்டவர்களுள்
இவளும் ஒருத்தி.......!!!!

**கஸ்தூரி**
**உளவியல் மற்றும் மெய்யியல் துறை**
**விடுகை வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் சான்றோர் விருது பெறும் எழுத்தாளர்

## நந்தினி சேவியர்



இவ்வாண்டுக்கான தமிழ்ச் சங்கத்தின் சங்க சான்றோர் விருதினை ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்கள் பெற்றுக்கொள்கிறார். தேவசகாயம் சேவியர் எனும் இயற்பெயர் கொண்ட நந்தினி சேவியர் அவர்கள் 25-05-1949 அன்று மட்டுவில் சாவகச்சேரியில் பிறந்தவர். 1967 ம் ஆண்டில் எழுத்துலகம் பிரவேசித்த அவர் அன்று தொடக்கம் ஈழத்திலக்கியப் பரப்பிலும், இடதுசாரி அரசியல் இயக்கத்திலும் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டவர். சிறுகதை நாவல் கட்டுரை பத்தி எழுத்து எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களின் ஊடாக தன் ஆளுமையை வெளிப்படுத்திவருபவர். ஈழத்து சிறு சஞ்சிகை களிலும் தேசிய பத்திரிகைகளிலும் காத்திரமாக எழுதிவருபவர்.

இதுவரை அவரது படைப்பில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இதில் **அயற் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்** என்ற இவரது நூல் சுதந்திர இலக்கிய விருது, தமிழின்பக் கண்காட்சி விருது, போன்ற பல விருதுகளை பெற்றுக் கொண்ட நூலாகும்.

அத்துடன் இவரது சிறுகதைத் தொகுப்பான **நெல்லிமரப் பள்ளிக்கூடம்** இரண்டாம் பதிப்புக் கண்டது. இத்தொகுப்பு 2012ம் ஆண்டுக்கான கொடகே சாகித்திய விருது, மற்றும் தேசிய சாகித்திய விருது, வடமாகாண சிறந்த நூல் விருது போன்ற பல விருதுகளை பெற்றுக்கொண்டது. மேலும் இவரது பல படைப்புக்களுக்காக தேசிய வாசிப்பு மாத எழுத்தாளர் கௌரவ விருது, கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, தமிழ் விழா கௌரவ விருது, கலாபூசணம் அரச விருது எனபல விருதுகளைப் பெற்றுக்கொண்டவர் நந்தினி சேவியராவார்.

சமீபத்தில் இந்தியாவில் தமிழகத்தின் பிரபல பதிப்பகமான விடியல் பதிப்பகம் இவரது எல்லா படைப்புக்களையும் தொகுத்து **"நந்தினி சேவியர் படைப்புக்கள்"** எனும் பெரும் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றியும் உழைக்கும் வர்க்கத்தினரைப் பற்றியும் முற்போக்குச் சிந்தனையுடன் கலையம்சம் குன்றாமல் படைப்புக்களை தருவதில் இவர் வல்லவர். எந்த விதமான ஆர்ப்பாட்டமும் இன்றி, அதே வேளை காத்திரமான முறையில் யாருடனும் சமரசம் செய்து கொள்ளாத நிலையில் நீண்ட காலமாக இலக்கியப் பணியாற்றிவரும் நந்தினி சேவியர் அவர்களுக்கு 2015ம் ஆண்டின் சங்கச் சான்றோர் விருதினை வழங்குவதில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பெருமையடைகின்றது.

இடம் : திருகோணமலை
நிகழ்வு : குறிஞ்சிச்சாரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் கௌரவம்

## மூத்த எழுத்தாளர் மு.பொன்னம்பலம்



தந்தை முருகேசு, தாய் மாரிமுத்து ஆகியோருக்கு மகனாக புங்குடுதீவில் பிறந்தவர் **மு.பொ** என எழுத்துலகில் அறியப்படும் மு.பொன்னம்பலம் ஆவார். ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாசாலையிலும், உயர்தரக்கல்வியை இரத்தினபுரி புனித லூக்கா கல்லூரியிலும் பயின்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவருமாவார்.

1955ல் எழுத்துலகில் பிரவேசித்த இவர் தனது சகோதரர் பிரபல எழத்தாளர் மு.தளையசிங்கம் அவர்களுடன் சர்வோதய இயக்கத்தில் பணிபுரிந்ததுடன் சாதி எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாகப் போராடியவருமாவார். இவரால் 1970ம் ஆண்டில் சத்தியம் என்னும் பத்திரிகையும் வெளியிடப்பட்டது.

மு.பொ அவர்களின் முதல் கவிதைத் தொகுப்பான "அது" வில் இருந்து இன்றுவரை இருபதுக்கும் அதிகமான நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் "காலிலை"யில் இடம்பெற்ற **'பேரியல்பின் சிற்றொலிகள்'**, "சூத்திரர் வருகையில்" இடம்பிடித்த **'துயரி'** நெடுங்கவிதை, **"காட்டிக் கொடுத்தவர்கள்"** என்ற பாநாடகம், இவற்றுடன் **பொறியில் அகப்பட்ட தேசம், யதார்த்தமும் ஆத்மார்த்தமும்** ஆகிய படைப்புக்கள் இவருக்கு புகழைத் தேடித்தந்தவையாகும். மேலும் இவரின் நோயில் இருத்தல் மற்றும் ஆங்கில கவிதை நூலான A country entrapped போன்றவை பரந்தளவில் பேசப்பட்டவையாகும். இவரின் எழுத்தாற்றலுக்கு இலங்கை அரசால் வழங்கப்பட்ட சாகித்திய விருது, வடகிழக்கு மாகாண விருது, வி.ப.வி விருது ஆகியவை கிடைத்தன. அத்துடன் "கடலும் கரையும்" சிறுகதை தொகுப்பிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட விருது மலேசிய நிறுவனத்தால் "திறனாய்வின் புதிய திசைகள்" நூலுக்காக வழங்கப்பட்ட விருது போன்றவற்றைப் பெற்றுக் கொண்டவராவார். இவ்வாறாக எழுத்துத் துறையில் தடம் பதித்த இவருக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் எழுத்தாளர் கௌரவத்தை வழங்குதல் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் கௌரவம்

## மூத்த எழுத்தாளர் தி.ஞானசேகரன்



1941-04-15 அன்று பிறந்த எழுத்தாளர் தி.ஞானசேகரன் அவர்கள் கடந்த 50 வருடங்களாக சிறுகதை, குறுநாவல், நாவல், கட்டுரை, விமர்சனம், பயணஇலக்கியம், நூல் பதிப்பு வெளியீடு, இதழியல் என ஈழத்து இலக்கிய உலகில் இடையறாது இயங்கி வருகின்றார்.

1964ம் ஆண்டு கலைச்செல்வி என்னும் சஞ்சிகையில் 'பிழைப்பு' என்னும் தலைப்பில் எழுதிய சிறுகதையே இவரின் முதல் இலக்கியப்பிரவேசமாகும். அன்று தொடக்கம் இன்று வரை இவரால் காலதரிசனம், புதியசுவடுகள், குருதிமலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து, புரிதலும் பகிர்தலும், அவுஸ்ரேலிய பயணக்கதை, அல்சேஷசனும் பூனைக் குட்டியும், ஞானசேகரன் சிறுகதைகள், வடஇந்தியப் பயண அனுபவங்கள் என பத்து வரையான நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

இவருடைய **குருதிமலை, புதிய சுவடுகள்** ஆகிய நாவல்கள் இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருதைப் பெற்றன. அத்துடன் **லயத்துச் சிறைகள், கவ்வாத்து** ஆகிய நாவல்களும் மத்திய மாகாண சாகித்திய விருதினைப் பெற்றவையாகும். குருதிமலை நாவல் 1992-1993 வரை மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுமாணிப்பட்டத்துக்கான பாடநூலாகவும், அல்சேஷசனும் பூனைக்குட்டியும் என்ற நாவல் தற்போது இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழக கலைமாணிப்பட்டத்துக்கான பாடநூலாகவும் உள்ளமை இவரின் எழுத்துக்களின் உயர்தரத்தைக் காட்டுவனவாகும்.

தி.ஞானசேகரன் அவர்கள் ஆற்றிய இலக்கியப் பணிக்காக 2000ம் ஆண்டில் மலையக கலாசார நிறுவனம் **"ரத்தின தீப"** விருதையும், 2005ம் ஆண்டு இலங்கை அரசு **"கலாபூசணம்"** விருதையும் வழங்கிக் கௌரவித்தன. அத்துடன் இவரின் எழுத்துக்களைக் கௌரவித்து மடகே சிந்தனை வட்டம் 2008ல் **"இலக்கிய வித்தகர்"** என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்தது.

இவருடைய எழுத்துக்களில் மலையகம்சார் எழுத்துக்கள் முத்திரை பதித்தவையாகும். இவரது கதைகள் யாவும் சமூகமயமானவையாகவும், சமூக யதார்த்தத்தைக் காட்டுவனவாகவும், பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பனவாகவும் அமைந்துள்ளன. சமூக அக்கறை எப்போதும் இவரின் எழுத்துக்களில் இருப்பதை அவதானிக்கலாம். இவரின் இலக்கியப் பணிகளில் ஞானம் சஞ்சிகை வெளியீடு ஈழத்து இலக்கியப்பரப்பில் நிரந்தர இடம்பிடித்ததுள்ளமையும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். இவ்வாறாக இலக்கியப் பயணத்தில் தனது தடத்தை ஆழப்பதித்த தி.ஞானசேகரன் அவர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் எழுத்தாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமையடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளர் கௌரவம்

## பேராசிரியர் இரா. சிவகணேசன்



1949ம் ஆண்டு தந்தை இராமையா, தாய் அமராவதி ஆகியோருக்கு மகனாகப் பிறந்த பேராசிரியர் இரா. சிவகணேசன் அவர்கள் இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கற்று 1968ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக விலங்கு மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகி 1972ல் தனது முதலாவது விலங்கு மருத்துவ விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1973ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டு தனது கல்விப்புலத்தை விசாலித்து தொடர்ந்து பல பட்டங்களைப் பெற்ற இவர் தனது கலாநிதிப்பட்டத்தை (University of hall UK) 1979ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். பின்னர் 1980ம் ஆண்டு உயிரியல் வேதியல் துறை விரிவுரையாளராக இணைந்து கொண்டு 2015ம் ஆண்டுவரை செயற்திறனுடன் பணியாற்றினார்.

பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கான சிறந்த விரிவுரையாளரான இவர் மருத்துவ பீடத்திலும் விவசாயப் பீடத்திலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். கல்வியியல் ரீதியில் பல சாதனைகளுக்கு உரித்துடையவரான இவர் மருத்துவ சஞ்சிகைகள் சிலவற்றுக்கு ஆசிரியராக இருந்ததுடன் விலங்கு மருத்துவம் தொடர்பான பல்வேறு நூல்களையும் எழுதியுள்ளார். இவர் தனது துறையில் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் இலங்கை மருத்துவ உலகிற்கு நிரப்பவேண்டிய இடைவெளிகளை நிரப்புவனவாக அமைந்தன.

இவருடைய பெரும் அறிவியல் ஆய்வுச் சேவையை கவனத்தில் கொண்டு **ஆய்வுக்கான ஜனாதிபதி விருது (2004, 2013) பொதுநலவாய மருத்துவக் கூட்டுறவுக்கான விருது (uk) 1986-1987** மற்றும் ஊவா மாகாணக் கல்வித் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக ஊவா மாகாண சாகித்திய விருது போன்ற பல விருதுகளை பெற்றுக் கொண்டார்

இவற்றுடன் இவர் மிக நீண்ட காலமாக எமது தமிழ்ச் சங்கத்தின் பெரும் பொருளாளராக பணியாற்றி எமது சங்கத்தின் பெரும் சொத்தாக விளங்கிய வருமாவார். இவ்வாறாக பல தசாப்தங்களாக ஆய்வுப் பணிகளிலும், கல்விச் சேவையிலும் ஆழமாக தனது தடத்தைப் பதித்த பேராசிரியருக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் கல்வியியலாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளர் கௌரவம்

## பேராசிரியர் எம். ஏ. எம். சித்தீக்

பாடசாலை அதிபரும் நாடறிந்த தமிழ் இலக்கிய அறிஞரும் பின்னர் பிரசித்த நொத்தாரிசுமாகத் திகழ்ந்த திரு. ஜே. எம். எம் அப்துல் காதர், திருமதி அப்துல் காதிர் தம்பதிகளின் மகனாகப் பிறந்த பேராசிரியர் சித்தீக் அவர்கள் 1968ல் பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகி தனது முதலாவது பட்டத்தை 1972ல் பெற்றுக்கொண்டார். 1977ல் பிரித்தானிய தேசிய சுகாதார சேவையில் இணைந்த பேராசிரியர் அச் சேவையினிடையே Royal college of physicians and surgeons of Glasgow என்ற மருத்துவ பட்டப்பின்கற்கை நிறுவனத்தில் தனது துறையின் அதிஉயர் தகைமையான GDSRCS பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சவுதி அரேபிய சுகாதார அமைச்சிலும் வாய் மருத்துவ நிபுணராகச் சேவை செய்தார்.

பேராசிரியர் எம். ஏ. எம். சித்தீக் பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவ பீடத்தில் வாய் மருத்துவப் பேராசிரியராகவும், பல் மருத்துவப் போதனா வைத்தியசாலையின் வாய் மருத்துவ நிபுணராகவும் ஏறத்தாழ கால் நூற்றாண்டுகள் செய்தசேவை மகத்தானது. வாய் மருத்துவத்துறைத் தலைவராக பல வருடங்கள் பதவி வகித்த பேராசிரியர் சித்தீக், பல்மருத்துவ பீட ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். தொடர்ந்து 2008ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி அமர்வுகளின் (Purse 2008) ஏற்பாட்டுக்குழுத் தலைவராகவும், 2010, 2013ம் ஆண்டுகளில் மலேசியா விஞ்ஞான பல்கலைக்கழகத்தில் வருகை நிலைப் பேராசிரியராகவும், சில ஆண்டுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனத்தின் பல்மருத்துவ கல்விச் சபையின் தலைவராகவும் சேவையாற்றினார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த இவர் 25க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளை விஞ்ஞான, மருத்துவ ஆராய்ச்சிச் சஞ்சிகைளில் எழுதியுள்ளார். இதன் நிமித்தம் 2006, 2008, 2010, 2012 ஆகிய வருடங்களில் **விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது** பேராசிரியர் சித்தீக் அவர்களுக்குக் கிடைத்தது. அத்துடன் Oxford University Press இனால் பிரசுரிக்கப்பட்ட oral complications of cancer and its management என்ற நூலில் வாயில் ஏற்படும் பங்கசு நோய்கள் பற்றிய அத்தியாயத்தை கூட்டாக எழுதியுள்ளார். இவற்றுடன் இவர் 1999-2001 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் பெரும் பொருளாளராகக் கடமை புரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனவே ஆய்வுலகிலும், கல்வி மற்றும் நிர்வாகத் தளங்களிலும் தனது தடத்தை ஆழமாகப் பதித்த பேராசிரியர் அவர்கட்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் கல்வியியலாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளர் கௌரவம்

## பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ்



பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ் அவர்கள் 1986ம் ஆண்டு தனது முதுமானிக் கற்கையை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்து அதே ஆண்டு உளவியல் மற்றும் மெய்யியல் துறையின் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். தொடர்ந்து தனது அறிவுப்பரப்பை விரிவாக்கிக் கொண்ட இவர் 2000ஆம் ஆண்டில் முனைவர் பட்டத்தைப் (Phd) பெற்றுக்கொண்டார். 2005 -2011 வரைக்கும் உளவியல் மற்றும் மெய்யியல் துறைத்தலைவராகச் செயற்பட்ட இவர் அக்காலப்பகுதிக்குள் அத் துறையின் விருத்திக்காகவும், செயற்றிறனுக்காகவும் பல்வேறு தளங்களில் செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

பேராசிரியர் அவர்களின் பணிகளும், அறிவுப்புலமையும் மிக ஆழமானவை. இவரால் உளவியல் மற்றும் மெய்யியல் துறையில் சில பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. உலக சமயங்கள், கலை, மனித மனம், நீதி, உலக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், திருக்குர்ஆனின் மூலமும் உரைகளும், இஸ்லாமிய நாகரிகம், அனர்த்த முகாமைத்துவத்தில் பால்நிலை, முஸ்லிம்களின் நாட்டுப்புறவியல், அழகியலும் நயப்பும், கிரேக்க மெய்யியல் அறிமுகங்கள், அளவையியலும் விஞ்ஞான முறைகளும், அரபு இசை போன்றன தொடர்பான இவரின் உரையாடல்களும், கருத்துக்களும் மெய்யியல் உலகில் என்றும் மறக்க முடியாதவையும் நிலைத்து நிற்பவையும் ஆகும்.

பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ் அவர்கள் பல உள்நாட்டு மாநாடுகளிலும், இஸ்லாமிய கற்கை நெறிகள் நிலையத்தினால் லண்டனில் நடாத்தப்பட்ட மாநாடு போன்ற சில வெளிநாட்டு மாநாடுகளிலும், ஊழியர் விருத்திசார் நிகழ்வுகளிலும், இந்து சமய விவகார அமைச்சு போன்ற பல அமைச்சுக்கள் நிகழ்த்திய பயிற்சிப் பட்டறைகளிலும், திணைக்களங்களினால் நிகழ்த்தப்பட்ட கருத்தாடல்களிலும் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தது மட்டுமல்லாது வளவாளராகவும் கலந்து தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். களனிப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் வருகைதரு விரிவுரையாளராகவும், பிற்பட்டப்படிப்பு மாணவர்களுக்கான விரிவுரையாளராகவும் செயற்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், களனிப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ச்சங்கம் போன்ற சங்கங்களுக்கு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

ஆங்கிலம், சிங்களம் போன்றவற்றில் சிறப்புப்பயிற்சி பெற்றுள்ள இவர் பல்வேறு மொழிபெயர்ப்புச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார். இவரால் எழுதப்பட்ட பல நூல்கள் இன்று தமிழ்மொழிமூல மாணவர்களுக்கு அறிவை விருத்தி செய்துகொள்ளவும், உசாத்துணை நூல்களாகவும் பயன்படுகின்றன. இந் நூல்களில் இவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் உளவியல் மற்றும் மெய்யியல் ஆய்வுப்புலத்துக்கு வளம் சேர்ப்பனவாகும். இவ்வாறாக கல்வித்துறையிலும், நிர்வாக நிலையிலும் தனது ஆழ்ந்த தடத்தைப் பதித்த பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ் அவர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் கல்வியியலாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளர் கௌரவம்

## வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி



திரு இ.தில்லையம்பலம், திருமதி தி.நாகம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்த கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்று 1972ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகினார்.

1975ம் ஆண்டு தனது முதல் பட்டமான B.D.S பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர், தொடர்ந்து தனது உயர்பட்டமான F.D.S.R.C.P.S பட்டத்தைப் 1985ல் பெற்றுக்கொண்டார். 1976ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவபீடத்தின் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர் தனது கல்விப்புலத்தை விரிவாக்கிக் கொண்டார். இவர் தனது துறையில் காட்டிய ஆழத்தால் செயற்கைப் பல்கட்டும் துறைத்தலைவராக 1993-2005 வரை பதவி வகித்தார். இக்காலப் பகுதியில் இவர் தனது துறையின் வளர்ச்சிக்காகப் பல்வேறு தளங்களிலும் செயற்பட்டதுடன், ஆய்வுப்பணிகளிலும் ஈடுபட்டார்.

தொடர்ந்து 2006-2009 வரையும் குறிஞ்சிக் குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழுத் தலைவராகவும், இந்துப் பட்டதாரிகள் மன்றச் செயலாளராகவும் பணியாற்றினார். பல கட்டுரைகளை எழுதிய இவர் எமது இளங்கதிர் இதழுக்காக "பால்லுப் போனால்", "எல்லாம் போலிகள்", "தீ" போன்ற கட்டுரைகளையும், இந்து மாணவர் சங்க வெளியீடான 'இந்துதர்மத்தில்' "உடம்பே ஆலயம்", "பிறவிப் பெருங்கடல்" போன்ற கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இக்கட்டுரைகளை இன்று வரையும் பலர் உசாத்துணைகளாகப் பயன்படுத்தி வருகின்றமை இவற்றின் தனித்துவத்தைக் காட்டுவனவாகும்.

இவ்வாறாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல தலைமுறையினரிடையே அறிவுப்பயிர் வளர்த்து, ஆய்வுப் புலத்திலும், நிர்வாக நிலையிலும் தன் தடத்தைப் பதித்த வைத்தியக் கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி அவர்களுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் கல்வியலாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமைகொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளர் கௌரவம்

## கலாநிதி ஏ. எஸ். எம். நவ்பல்

கலாநிதி ஏ. எஸ். எம். நவ்பல் அவர்கள் தனது ஆரம்ப மற்றும் உயர்நிலை கல்வியை மாவனெல்ல மயூரபாத மகாவித்தியாலயத்தில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி 1979ம் ஆண்டு தனது புவியியல் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் தனது முது கலைமாணிப்பட்டதையும் (1987) கலாநிதிப் பட்டத்தையும் (1990) ஜப்பான் நாட்டில் பெற்றுக்கொண்டார்.

1987ல் விரிவுரையாளராகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட இவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் ஜப்பானிய மொழிகளில் சிறப்பாக கற்பிக்கவும், எழுதவும் கூடியவர். இவரின் கண்டி மற்றும் திருகோணமலை மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட புவியியல் ஆய்வுகள் மிகக் காத்திரமானவை

மேலும் உலகளாவிய தகவல் முறைக் கற்கை நெறிக்கான (GIS) வளவாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் ராஜரட்டைப் பல்கலைக்கழகத்திலும் கடமையாற்றினார் அத்துடன் இலங்கை நகர அபிவிருத்தி சபை வளவாளராகவும் கண்டி மாநகர சபைக்கான வளவாளராகவும் இருந்து இவர் ஆற்றிய பணிகள் சிறப்பானவை.

ஜப்பானிய மொழியில் எழுதுதல், வாசித்தல், கதைத்தல் போன்றவற்றில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவரான இவர் உலகளாவிய தகவல் முறைக்கற்கை முறைக்கான (GIS) மென்பொருளைப் பயன்படுத்துவதில் கைதேர்ந்தவருமாவார். இதனால் இவர் இலங்கை வரைப்படச் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும் (1995-1996) பல்கலைக்கழக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்குழு உறுப்பினராகவும் பணி புரிந்துள்ளார். இவரால் இலங்கையை மையப்படுத்தி எழுதப்பட்ட புவியியல் மற்றும் சமூகம் தொடர்பான ஆய்வுகள் புவியியற் துறைக்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியவையாகும். இவ்வாறாக இவர் ஆற்றிய பணிகளுக்காகவும் கல்விச் சேவைகளுக்காகவும் பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் இவருக்கு கல்வியியலாளர் கௌரவத்தை வழங்குவதில் பெருமையடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிரின் அஞ்சலிகள்

## பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை



பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் 1936-11-29 அன்று யாழ்ப்பாணம் புலோலியில் ஆழ்வாப்பிள்ளைக்கும், உமையாத்தைப் பிள்ளைக்கும் மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை புலோலி ஆரம்பப்பாடசாலையிலும், உயர்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று 1955ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி 1959ம் ஆண்டு தமிழ்த்துறையில் முதல்நிலைச் சித்தி பெற்று இளங்கலைமாணிப் பட்டப்படிப்பை முடித்தார்.

பேராதனைத் தமிழ்த்துறையின் பண்ணையில் உருவாகிய தமிழாய்வுப் புலமைகளில் மிகப் பெரும் ஆளுமையாக உருவெடுத்தவர் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்களாவார். ஈழத்தில் மூன்று கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்ட பெருந்தகையாளர். இவர் கல்வெட்டியல் தொடர்பாகவும், கல்வெட்டியலையும் தமிழையும் தொடர்புபடுத்தியும் மேற்கொண்ட புலமைசார் உரையாடல்கள் ஆய்வுலகில் மிகப்பெறுமதிவாய்ந்தனவாகும். பழந்தமிழ் இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் பெரும் ஈடுபாடுகொண்டிருந்த பேராசிரியரவர்கள் இலக்கியங்களில் காலம் செலுத்தும் செல்வாக்கு, மற்றும் தமிழர் சமயநிலை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகளும் எழுத்துக்களும் இவரை உலகத் தமிழர்களிடையே பேச வைத்தது. இவரின் ஆய்வுத் திறமையும், அறிவியல் ரீதியாக கூர்ந்து நோக்கி கருத்துக்களை முன்வைக்கும் போக்கும் இவற்றைக்கொண்டு இவர் தமிழன்னைக்குச் சூட்டிய இயல்மகுடங்களும் காலத்தால் அழியாதவையாகும்.

பேராசிரியர் ஈழத்தைத்தாண்டி தமிழ்பேசும் நாடுகளெங்கும் அகலக்கால் பதித்தவர். திருவானந்தபுரம் திராவிடமொழியியல் கழகத்திலும், கேரளப் பல்கலைக்கழகத்திலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் இவர் செய்த ஆய்வுகளும், முன்மொழிந்த கருத்துக்களும் இவரை ஒதுக்கிவிட முடியாத முழுஆளுமைகளுள் ஒருவராக அறிவுலகுக்குக் காட்டியது. சுவிடன் உப்சலாப் பல்கலைக்கழகத்திலும், இங்கிலாந்தின் எடின்பார்க் பல்கலைக்கழகத்திலும் உலகப்புகழ் பெற்ற ஆய்வாளர்களுடன் இணைந்து பணியாற்றிய இவர் தமிழ் அறிவையும், உலக அறிவையும் தன்னுள் மோதவிட்டுப் பட்டைதீட்டி தமிழன்னையின் கரங்களுக்கு குற்றமறச் செதுக்கிய பல அறிவணிகலன்களை அணிவித்தார். குறிப்பாக சுவீடன் உப்சலாப் பல்கலைக்கழகத்தில் உலகப்புகழ் பெற்ற அறிஞர் பீற்றர் சார்க், எடின்பார்க் பல்கலைக்கழக அறிஞர் ஆசர் ஆகியோர்களுடன் நெருக்கமான உறவைப் பேணிய இவர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பட்டறிவுடன் தமிழுலகில் முன்மொழிந்த பல்வேறு கருத்தாடல்களால் தமிழ்ச் சூழல் தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டது எனில் தவறிருக்காது.

பல்வேறு துறைகளிலும் புலமை முன்னெடுப்புகளில் ஈடுபட்ட இவர் இறுதியாக அமெரிக்க அரிசோனாப் பல்கலைக்கழகத்தில் சமயவியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கையில் 2015-11-01 அன்று தமிழுலகைவிட்டுப் பிரிந்தார். இவர் 1979-1981 வரைக்கும் எமது தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராகவும் செயற்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழ்ச் சங்கம் அவரின் தமிழ்ப்புலமைக்கும், பணிக்கும் தலைவணங்குவதுடன் இளங்கதிர் தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கதிரின் அஞ்சலிகள்

## பேராசிரியர் க. அருணாசலம்



பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் அல்லாரை என்னும் கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை அல்லாரை தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்று 1967ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகினார். 1972ல் இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து பேராதனை இவரின் திறனுக்கு களமமைத்துக் கொடுக்க 1979ல் கலாநிதிப் பட்டத்தையும் மேலும் பல பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். இவர் வளர்ச்சியின் இன்னொரு படியாக 1995–1998 வரை பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார்.

பேராசிரியர் தமிழியலின் ஆய்வுப்பரப்பில் தனது ஆழ்ந்த புலமையால் பங்காற்றியவர்களுள் ஒருவர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளில் தாய்த்தமிழ்த் துறையான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் புலமைப் பாரம்பரிய முன்னெடுப்புகளில் முக்கிய பங்காற்றியவர். பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிய பேராசிரியர் தமக்கென தகைசான்ற ஒரு மாணவப் பரம்பரையையும் உருவாக்கியவர். இலங்கைத் தமிழியல் ஆய்வு முயற்சிகள் தொடர்பாகவும், மலையக இலக்கியப் பாரம்பரியம் தொடர்பாகவும், பாரதி ஆய்வியல் தொடர்பாகவும் அவர் நிகழ்த்திய புலமைசார் உரையாடல்கள் தமிழ் உலகில் என்றும் மறக்க முடியாதவை.

தமிழகத்து ஆய்வுப் புலமை மரபிலும் தமது தமிழ்ப் புலமையால் செல்வாக்குச் செலுத்தி ஈழத்தமிழ் அறிவுலகை உயர்த்தியவர்களில் ஒருவர். தமிழ் கூறும் நல்லுலகின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ஆய்வுகளில் தனக்கென தனி முத்திரை பதித்த பேராசிரியர், வரலாற்று நாவல் தொடர்பான தனது கலாநிதிப்பட்ட ஆய்வேட்டுக்காக பேராதனைப் பல்கலைக் கழகத்தால் முதன் முதலில் வழங்கப்பட்ட 'பொன்னம்பல முதலியார்' பரிசினையும் பெற்றுக் கொண்டார். தனது நூல்களுக்காக இலங்கை அரசின் விருதான "சாகித்திய" விருதினையும், இலக்கிய உயர் விருதான "சாகித்தியரத்தினா" விருதையும் பெற்றுக் கொண்ட பெருந்தகையாளர். மேலும் இலங்கை அரசின் தமிழ்க்கல்வி மற்றும் கலை இலக்கியச் செயற்பாடுகளைத் தனது ஆளுமை மிக்க பணிகளால் செழுமைப்படுத்தியவராவார். அத்துடன் சங்கீத நாட்டிய சபையின் பெருந்தலைவராக இருந்த இவர், தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக 1995 – 1998 வரைக்கும் பணியாற்றினார். இவ்வாறாக தமிழன்னைக்குப் பெருமை சேர்த்த இப்பெருந்தகை 2015.04.27 அன்று தமிழுலகை விட்டு நீங்கினார். எனவே இப்பெருந்தகையின் தமிழ்ப்பணிக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் தலைவணங்குவதுடன் இளங்கதிர் தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கம் - நாடகப் போட்டி 2015

முதலாமிடம் : எங்கே போகிறோம் (கலைப்பீடம் - முதலாம் வருடம்)

இரண்டாமிடம் : நல்லதோர் வீணை செய்து (கலைப்பீடம் - மூன்றாம் வருடம்)

மூன்றாமிடம் : கல்வியா கனடா மாப்பிள்ளையா (பொறியியற் பீடம்)

சிறந்த நடிகர் : நல்லதோர் வீணை செய்து - த. ஜனோஜ்

சிறந்த நடிகை : கல்வியா கனடா மாப்பிள்ளையா - செ. சாருஜா

நினைவில் நின்ற நடிகர் :

நல்லதோல் வீணை செய்து - செ. சுமதி செல்வக்குமார்

கல்வியா கனடா மாப்பிள்ளையா - சி.கீர்த்தனன்

முகப்புத்தகம் - ச.கார்த்திகாயினி

எங்கே போகிறோம் - வி.கலாதரன்

ஒப்பனை : நல்லதோர் வீணை செய்து - சி.அமல்ராஜ், ந.பிந்துலன்

சிறந்த பிரதி : - த.அருள்விழி

மேடை முகாமைத்துவம் : எங்கே போகிறோம் - வ. சதுர்சன், ப. சோபினி

இசை எங்கே போகிறோம் - கு.தயாளினி, கு.மிதுனா

சிறந்த நெறியாள்கை : கல்வியா கனடா மாப்பிள்ளையா - சு.கஜதரன்

## நடுவர்கள் :

விரிவுரையாளர் - செல்லத்துரை சுதர்சன்
விரிவுரையாளர் - ஆன் யாழினி சதீஸ்வரன்
ராமகிருஷ்ண மத்திய கல்லூரி நாடக ஆசிரியை - ஹறோசனா ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கம் - விவாதப் போட்டி 2015

முதலாமிடம் - பொறியியற் பீடம்

1. சிவலிங்கம் துஷான்
2. இலட்சுமனன் லவன்
3. சண்முகநாதன் கந்தோஷன்

இரண்டாமிடம் - கலைப்பீடம் (இரண்டாம் வருடம்)

1. நா.சுஜீவன்
2. க.நவகீதா
3. தே.கஜீபன்

மூன்றாம் வருடம் - கலைப்பீடம் (விடுகை வருடம்)

1. க.கனகதுர்கா
2. வினோஜா
3. சுமதி

சிறந்த பேச்சாளர்கள்

1. சிவலிங்கம் துஷான் (பொறியியற் பீடம்)
2. சண்முகநாதன் கந்தோஷன் (பொறியியற் பீடம்)
3. நா.சுஜீவன் (கலைப்பீடம்)
4. தே. சுஜீவன் (கலைப்பீடம்)

## நடுவர்கள் :

விரிவுரையாளர் - செல்லத்துரை சுதர்சன்
உதவி விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாக்கப் போட்டி

### கட்டுரை

1ம் இடம் M. M. F. நாஸிகா (கலைப்பீடம்)
2ம் இடம் மு. டிலோசன் (கலைப்பீடம்)
3ம் இடம் ஷப்னா (கலைப்பீடம்)

### கவிதை

1ம் இடம்:- க. கனகதுர்க்கா (கலைப்பீடம்)
**உயிர் போகும் முன் ஊர் போய்ச் சேர்வேனா**
2ம் இடம்:- கஜீபன் (கலைப்பீடம்)
**பெண்பாவம்**
3ம் இடம்:- கு. தயாளினி (கலைப்பீடம்)
**தப்புத் தாளங்கள்**

### சிறுகதை

1ம் இடம்:- தே. தேலக்ஷன் (விவசாயபீடம்)
**உடைந்து போன கண்ணாடி**
2ம் இடம்:- க. கனகதுர்க்கா (கலைப்பீடம்)
**மூத்தவள்**

**நடுவர்கள் :**

உதவி விரிவுரையாளர்கள் செல்வி. றிஸ்மியா செல்வி. ஜஸ்மினா

## தமிழ்ச் சங்கம் - பேச்சுப் போட்டி 2015

முதலாமிடம் - தயாழினி குமாரசாமி

இரண்டாமிடம் - சிவலிங்கம் துஷன்

மூன்றாமிடம் - தீபிகா பஞ்சாட்சரம்

**நடுவர்கள் :**

விரிவுரையாளர் - செல்லத்துரை சுதர்சன்
உதவி விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் ஆண்டறிக்கை

## வருடாந்த பொதுக்கூட்டம்

இடம்:-புதிய சிற்றுண்டிச்சாலை மண்டபம், கலைப்பீடம்
காலம்:- 08.01.2015
நேரம்:- மாலை 5.00

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், ஆலோசகர் கலாநிதி றொசான் றாகல், கணக்காய்வாளர் கலாநிதி ம.அல்பிரட் முன்னிலையில் 2013-2014 செயற்குழுவின் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பாக புதிய செயற்குழுத் தெரிவும் அவர்களுக்கான பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

## தைப்பொங்கல் விழா

இடம்:-குறிஞ்சிக்குமரன் ஆலயம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
காலம்:-15.01.2015
நேரம்:- காலை 5.00
தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் தமிழச்சங்க பெருந்தலைவர், உள்ளிட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் என அனைவரும் பங்குபற்றினர்.

## சிவராத்திரி நிகழ்வு

இடம்:-குறிஞ்சிக்குமரன் ஆலயம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
காலம்:-17.02.2015
நேரம்:- காலை 5.00
தமிழ்ச் சங்க செயற்பாட்டின் இன்னொரு அங்கமாக குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் வருடா வருடம் நடைபெறும் சிவராத்திரி விழாவில் தமிழ்ச்சங்கம் சார்பாகப் "பக்தி இசைக்கானங்கள்" எனும் நிகழ்வு இடம்பெற்றது.

## புதுவசந்தம் 2015

இடம்:- ஈ. ஓ. ஈ. பெரேரா அரங்கு, பெறியியற்பீடம்
காலம்:- 06-05-2015
நேரம்:- மாலை 6.00
பேராதனைப் பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்களைத் தமிழ்ச்சங்கத்தினர் வரவேற்கும் நிகழ்வாகவும், அவர்களது திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்வாகவும் இந்நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்ச்சங்கத் தலைவர் தலைமைதாங்க, மாலை 6.30 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சி ஆரம்பித்தது. இதில் புதுமுக மாணவர்களின் நடனம், நாடகம், கவியரங்கம், பாடல் என்பன இடம்பெற்றன.

## பிரியாவிடை நிகழ்ச்சி

இடம்:- புதிய சிற்றுண்டிச்சாலை மண்டபம், கலைப்ப்பீடம்
காலம்:- 20.05.2015
நேரம்:- மாலை 7.00
தமிழ்ச்சங்கத்தின் 2013-2014 செயற்குழுவிற்கான விருந்துபசாரமும், பிரியாவிடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியும் 2014-2015 செயற்குழுவின் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது தமிச்சங்க பெருந்தலைவர், பங்குபற்றியதுடன், கடந்த வருடச் செயற்குழு உறுப்பினர்களுடன், 2014-2015 செயற்குழுவினரும் கலந்து கொண்டனர். மேலும் கலந்துகொன்ட முன்னாள் செயற்குழு உறுப்பினர்களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## தமிழ்ச்சங்கப்போட்டிகள்

கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிக்கு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர்களான செல்வி.ஜெஸ்மினா, செல்வி றிஸ்மியா போன்றோர் நடுவர்களாகப் பணியாற்றினர். போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கலைவிழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## விவாதச்சுற்றுப்போட்டியும், பேச்சுப்போட்டியும்

இடம்:- புதிய சிற்றுண்டிச்சாலை மண்டபம், கலைப்பீடம்

காலம்:- 14.09.2015

நேரம்:- மாலை 4.00

தமிழ்ச்சங்கத் தலைவர் தலைமையில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாகவும், பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்காகவும், தொடர்ந்து மூன்று நாட்களாக, பேராதனைப்பல்கலைக்கழக விரிவுரையாளர் செ.சுதர்சன், உதவி விரிவுரையாளர் பா.சுமன் முதலியோர் நடுவர்களாகக் கடமையாற்ற விவாதச் சுற்றுப்போட்டி, பேச்சுப்போட்டி என்பன புதிய சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் நடைபெற்றது. விவாதப்போட்டியில் முதலாம் இடத்தை பொறியியற்பீடமும், இரண்டாம் இடத்தை கலைப்பீடமும் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## நாடகத்திருவிழா

இடம்:- ஈ. ஓ. ஈ. பெரேரா அரங்கு, பொறியியற்பீடம்

காலம்:- 02.10.2015

நேரம்:- மாலை 6.00

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் நடிப்பு ஆற்றலை வெளிக்கொணரும் முகமாக, நாடகப்போட்டிகள் மீளவும் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டிக்கு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர்களான திரு.செ. சுதர்சன், திருமதி.ஆன்.யாழினி சதீஸ்வரன், நாடக ஆசிரியை திருமதி. ஹறோசனா ஜெயசீலன் முதலியோர் நடுவர்களாகப் பணியாற்றினர். பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் விமர்சன உரையினை நடாத்தினார். இதில் “எங்கே போகின்றோம்” எனும் கலைப்பீட நாடகம் முதலாமிடத்தைப் பெற்றது.

## ரி-சேட் விற்பனை

தமிழ்ச்சங்கத்தினால் திருகோணமலையில் நடைபெற்ற குறிஞ்சிச்சாரல் விழாவிற்கு நிதி சேகரிக்கும் முகமாக தமிழ்ச்சங்கத்தின் இலச்சினை பொறிக்கப்பட்ட ரிசேட் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிஞ்சிச்சாரல்

இடம்:- சென் மேரிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, திருகோணமலை
காலம்:- 31-10-2015
நேரம்:- மாலை 6.00

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களின் கலையாற்றலை இலங்கையின் பல்வேறு பகுதியிலும் வெளிப்படுத்தும் முகமாக வருடாந்தம் நிகழ்த்தும் குறிஞ்சிச்சாரல் விழாவானது, 2015ம் ஆண்டு திருகோணமலை, சென் மேரிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை அரங்கில் வெகு விமர்சையாக நிகழ்த்தப்பட்டது. இதன் போது தமிச்சங்க பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், பெரும் பொருளாளர் கலாநிதி வ.தர்மதாசன் , கணக்காய்வாளர் கலாநிதி ம.அல்பிரட் பங்குபற்றியதுடன், சிறப்பு விருந்தினராக சங்கச் சான்றோர் விருது பெறும் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக முகாமைத்துவப் பீட பீடாதிபதி பேராசிரியர் மில்டன் ராஜரட்ன அவர்களும், கலைப்பீட பீடாதிபதி கலாநிதி ஓ.ஜி. தயாரத்ன பண்டார அவர்களும கலந்து கொண்டனர். அத்துடன் பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களின் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும், திருமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவர்களின் நடன நிகழ்வும் அரங்கேற்றப்பட்டன.

## கலைவிழாவும் இளங்கதிர் நூல்வெளியீட்டு விழாவும்

இடம்:- ஈ. ஓ. ஈ. பெரேரா அரங்கு, பெறியியற்பீடம்
காலம்:- 06-04-2016
நேரம்:- மாலை 6.00

தமிழ்ச்சங்க 2014-2015 செயற்குழுவின் கலைவிழாவும் இளங்கதிர் நூல்வெளியீட்டு விழாவும் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், பெரும் பொருளாளர் கலாநிதி வ.தர்மதாசன் , கணக்காய்வாளர் கலாநிதி ம.அல்பிரட் ஆகியோர் பங்குபற்றியதுடன், சிறப்பு விருந்தினராக பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசியர் உபுல் B.திஸ்ஸாநாயக்க அவர்கள் பங்குபற்றினார். மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஓய்வுபெற்று கல்வியலாளர்கள் கௌரவம் பெறும் பேராசிரியர் எம். எஸ்.அனஸ், பேராசிரியர் M.A.M. சித்தீக், பேராசிரியர் இரா.சிவகணேஷன், கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி, கலாநிதி A.S.M. நவ்ப்பல் அவர்களும் இவர்களோடு எழுத்தாளர் கௌரவம் பெறும் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் அவர்களும் மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னம்பலம் அவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சங்கச் செயற்குழு
# 2014 - 2015

| | |
|---|---|
| **பெருந்தலைவர்** | : பேராசிரியர். வ. மகேஸ்வரன் |
| **பெரும் பொருளாளர்** | : திரு. வ. தர்மதாசன் |
| **கணக்காய்வாளர்** | : கலாநிதி. ம. அல்பிரட் |
| **ஆலோசகர்** | : கலாநிதி. க. ரெசான் ராகல் |
| **தலைவர்** | : செல்வன். அ. சஞ்சீவன் |
| **செயலாளர்** | : செல்வன். ம. கஜநேசன் |
| **உபதலைவர்** | : செல்வன். நா. ரவீஸ் |
| **உபசெயலாளர்** | : செல்வன். இ. சயந்தன் |
| **இளம் பொருளாளர்** | : செல்வன். த. திருவரன் |
| **இதழாசிரியர்கள்** | : செல்வன். செ. பிறைசில்<br>: செல்வி. உ. நிவேதிகா |
| **வெளியீட்டாளர்** | : செல்வன். ச. கமலகாந்தன் |
| **செயற்குழு உறுப்பினர்கள்** | : செல்வன். கு.கனேந்திரன்<br>: செல்வன். ந.நிறோஸ்<br>: செல்வன். ந.சகிந்தன்<br>: செல்வன். கௌதமன்<br>: செல்வி. செ.வர்மிலா<br>: செல்வன். நிராச்<br>: செல்வன். ஜனலக்சன்<br>: செல்வி. து.டிலக்சனா<br>: செல்வன். தி.திலகராஜ்<br>: செல்வி. ஜெ.கம்சிகா<br>: செல்வன். த.தினேஸ்<br>: செல்வி. அ.கோகிலவாணி<br>: செல்வன். சி.கேசவன்<br>: செல்வன். சி.சிவசக்திகரன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க செயற்பாடுகளின் நிழற் படங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்கச் செயற்குழு 2014-2015
## பேராதனைப் பல்கலைக் கழகம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) : தலைவர் - செல்வன். அ. சஞ்சீவன், கணக்காய்வார் - கலாநிதி ம. அல்பிரட், பெருந்தலைவர் - பேராசிரியர் வ. மகேஸ்வரன், துணை வேந்தர் பேராசிரியர் உபுல் திஸ்ஸாநாயக்க, பெரும் பொருளாளர் - திரு. வ. தர்மதாசன், ஆலோசகர் - கலாநிதி க. ரெசான் ராகல், செயலாளர் - செல்வன். ம. கஜநேசன்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : செல்வி. உ. நிவேதிகா (இதழாசிரியர்) செல்வி. அ.கோகிலவாணி, செல்வி. ஜெ.கம்சிகா, செல்வன். சி. சிவசக்திகரன், செல்வன். ச. கமலநாதன், செல்வன். கு. கனேந்திரன், செல்வன். த.தினேஸ், செல்வன். த. திருவரன் (இளம் பொருளாளர்), செல்வன். செ. பிறைசில் (இதழாசிரியர்), செல்வன். ந. நிரோஸ், செல்வன். நா.ரவீஸ் (உபதலைவர்), செல்வன். தி. திகலராஜ், செல்வன். நிராச், செல்வன், ந.சகிந்தன், செல்வி. து.டிலக்சனா.

படத்தில் இல்லாதோர் : இ.சயந்தன் (உபசெயலாளர்), செல்வி. செ.வர்மிலா, செல்வன். கௌதமன், செல்வன். ஜனலக்சன், செல்வன். சி.கேசவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

இளங்கதிரின் இவ்விதழை வெளியிட தன் இன்னருளைப் பொழிந்த தமிழ்க் தாய்க்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் எம் மன, மொழி, மெய்களால் வணங்கி நன்றியுரைக்கின்றோம்.

வாழ்த்துச் செய்திகளை வழங்கி இதழுக்கு சிறப்புச் சேர்த்த பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் உபுல் பி. திஸ்ஸாநாயக்க, தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன், பெரும் பொருளாளர் வ. தர்மதாசன் ஆகியோருக்கும்,

ஆய்வியல் நோக்கில் கட்டுரைகளை வழங்கி இதழை மெருகூட்டிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உதவி விரிவுரையாளர்களுக்கும்,

பல்வேறு துறைசார் வரைபுக் கட்டுரைகள், புனைவுச் சிறுகதைகள், புனைவுக் கவிதைகள் வழங்கிய விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும்,

விளம்பரங்கள் தந்துதவி இவ் இதழை வெளியிட உதவிய வர்த்தகப் பெருமக்களும்,

தமிழ்ச் சங்கப் போட்டிகளின்போது நடுவர்களாகக் கலந்து சிறப்பித்த பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் விரிவுரையாளர்கள் திரு. செ. சுதர்சன், திருமதி. யா சதீஸ்வரன், உதவி விரிவுரையாளர் திரு. பா. சுமன் மற்றும் செல்விகளான ரிஸ்மியா, ஜஸ்மினா மற்றும் ஆசிரியர் ஹறோசனா ஜெயசீலன் ஆகியோருக்கும்,

இவ் இதழை அச்சுக்கலையால் அழகு செய்த டைனமிக் நிறுவன அதிபருக்கும் நிறுவனத்தில் கடமை புரிபவர்களுக்கும்

இவ் இதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பும் ஒத்தாசைகளும் வழங்கிய தமிழ்மேல் தீராபற்றுக்கொண்ட நண்பர்கள் குறிப்பாக பரமலிங்கம் பிரசாந், கு. தர்மேந்திரன், கனேந்திரன், புஸ்பராசா ஆகியோருக்கும் நண்பி ம. நர்மியா அவர்களுக்கும் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**செ.பிறைசில்**
**உ. நிவேதிகா**

**இதழாசிரியர்கள்**
**தமிழ்சசங்கம்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complement from

# LINK CONSTRUCTION

**National Construction Contractors in Government,**
**Private Building, Highway Construction and Earth Moving Equipments,**
**Buildings Materials Suppliers and Transporter**

ICTAD No. 9481, B.R.No.DS/TG/TCO/BR/1490,
VAT REGD.No. 662281565-7000, NCASL Membership No. R-5676




**No. 14 A, 4th Lane,**
**Orr's Hill, Trincomalee.**

**T.P 026-2225359**
**071-6109184**
**077-8887900**

With Best Complement from

# TECHNO LANKA VIDEO WORLD

***Specialist in Sales of original DVD, VCD s***
***Whole sale and Retail***
***Old & New - Tamil, Hindi, English, Telungu movies***
***Tamil, Hindi, English, Sinhala Video songs & mp3 songs***
***Kids Collections - Cartoons, Kids stories***
***DVD Players, Blank DVD, CD***




**No 16A, Kandy road,**
**A Pura Junction,**
**Trincomalee**

**T.P 0766108926**
**0779771152**
**0775771152**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Complement from*




*With Best Complement from*

**கமலா புத்தகசாலை**

பான்சி மற்றும் புத்தகங்கள்



ஆ. சிவராஜன்

பிரதான வீதி, பருத்தித்துறை
யாழ்ப்பாணம்.

**T.P : 077 9184193**

*With Best Complement from*

உரிமையாளர் : பத்மநாதன்
தொலைபேசி : 07777 41303

# நியூ லாவண்யா ஜுவல்லரி
# New Lavanya Jewellery



**74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




JPKL
Constructions Pvt. Ltd

**JPKL Constructions Pvt. Ltd**

2B, Siripala Road, Mount Lavinia, Sri Lanka.
Contact Person: Thirukumar 077 1340080 | Email: thiru@jpklconstructions.com

**Singapore**
Contact Person: Kiri - +65 97970763

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org